by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி நூல்கள் பதிப்பு வரலாறு

சீனி. விசுவநாதன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

D-7973

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி நூல்கள் : பதிப்பு வரலாறு

DONATION

DONATION

पुस्तकालय

7973

சீனி. விசுவநாதன்

Forwarded free of cost, and with the compliments of the Department of Education, Government of India, NEW DELHI.

வெளியீட்டாளர் :

சீனி. விசுவநாதன்

2, மாடல் ஹவுஸ் லேன்,
சி.ஐ.டி. நகர்,
சென்னை - 600 035.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற் பதிப்பு : நவம்பர் 1989

(C) ஆசிரியர்

விலை : ரூ. 40-00

தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டத்தின் கீழ் இந் நூல் நிதியுதவி பெற்றுள்ளது.

மாருதி பிரஸ்
173, பீட்டர்ஸ் ரோடு
சென்னை - 14

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னுரை

தமிழ் மறுமலர்ச்சிக்குக் கட்டியங் கூறிய மகாகவி பாரதியின் திறம் பேசும் நூல்கள் பல உண்டு; விமர்சன நோக்கில் எழுந்த நூல் களுக்கும் குறைவில்லை. கவிஞர் பெருமானைப் பற்றிப் பல்வேறு கோணங்களில் மதிப்பீடு செய்கின்ற ஆய்வு நூல்கள் நாளும் நாளும் பெருகி வருதலும் கண்கூடு. இந்த நிலையில் ''பாரதி நூல்கள் : பதிப்பு வரலாறு'' என்னும் இந் நூல் வெளிவருகின்றது.

நூற்றாண்டு கண்ட கவியரசர் பாரதியின் இலக்கியப் படைப்புகள் நூல் வடிவம் பெற்ற வளர்ச்சி வரலாற்றை எடுத்துரைக்கும் விரிவான நூல் இது.

நடுநிலை ஆய்வு, விஞ்ஞானப் பார்வை ஆகியன வெல்லாம் பாரதி ஆராய்ச்சிகளை வளப்படுத்தும் நேரத்தில், இந்த நூலும் வெளிப் படுகிறது.

வளர்ந்துவரும் பாரதி நூல் திறனாய்வுக்கு இது போன்ற புதிய முயற்சிகள் வளமூட்டும் என்பது என் நம்பிக்கை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி நூல்களின் பதிப்பு வரலாறு மிக நீண்ட நெடிய புகழ் மணக்கும் வரலாறு ஆகும்.

பாரதி நூல்களின் பதிப்பு வரலாற்றை இதுவரையும் யாரும் முறையாக ஆராயவில்லை. தனித்த ஆய்வுக்குரியது என்று கருதிய ஆய்வாளர்களும் உண்டு. ஆனால், திட்டமிட்டு இப் பணியில் எவரும் ஈடுபட முன்வராத நிலையில், நான் என்னளவில் பாரதி நூல்கள் பதிப்புச் சிந்தனைகள் பற்றி அவ்வப்போது ஒருசில கட்டுரைகள் எழுதி வெளியிட்டதும் உண்டு. நிறைவுதரும் முறையில் நூல் எழுத வேண்டும் என்கிற காரணத்தால், முறைப் படுத்தி, பல்வேறு காலப் பகுதிகளில் பலரும் மேற்கொண்ட முயற்சிகளையும், அவர்கள் ஆற்றிய பணிகளைப் பற்றிய செய்திகளையும் சேகரிக்க முற்பட்டேன்.

நவீன தமிழ் இலக்கிய உலகில் பாரதி பல்வகைத் துறைகளிலும் வழிகாட்டியாகவே விளங்கி யுள்ளார் என்பது எவரும் ஏற்கும் உண்மை. அவ் வகையில் நூல் பதிப்புத் துறை யிலும் புதுமை காண முற்பட்டவர் அப் புரட்சிக் கவிஞர். இந்த உண்மையை மனங்கொண்டே, இந்த நூலில், பதிப்பு முறையில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு, அக் காலப் பகுதிகளில் அவரடைந்த அனுபவங்கள், அவருடைய எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை இயன்ற அளவு தொட்டுக் காட்டி யுள்ளேன்.

சுமார் முக்கால் நூற்றாண்டுக்கும் மேலாகப் பாரதி நூற் பதிப்புப் பணிகள் எவ்வெவ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முறைகளில், யார் யாரால் மேற்கொள்ளப்பட்டு, செயல் உருவம் பெற்றன என்பதை இந் நூல் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

ஆதாரபூர்வமான — நம்பகமான, அரிய செய்திகளைக் கொண்ட இந் நூல், பாரதி இயலுக்கு ஒரு புதிய பங்களிப்பு ஆகும். எனவே, ஆக்க பூர்வமான பாரதி ஆய்வுகளுக்கு இந் நூலும் உதவும் என நம்புகிறேன்.

இந் நூலுள் என்னை அறியாமலோ, என் சக்தியையும் மீறியோ ஏதேனும் பிழைகள் நேர்ந்திருக்கலாம். அன்பர்கள் அவற்றைச் சுட்டிக் காட்டினால், திருத்திக் கொள்ளக் காத்திருக்கிறேன் என்பதையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாரதிக்குப் புகழ் சேர்க்கும் நூல் பணியில் ஈடுபட்டுள்ள எனக்கு எந்நாளும் உதவி புரியும் இனிய நண்பர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

குறிப்பாக, இந் நூல் மாநில அரசின் நிதி உதவியுடன் பிரசுரிக்கப்படுகின்றது என்பதை நான் மிக்க நன்றியுடன் நினைவுகூர்கிறேன். கைப்பிரதியைப் பரிசீலித்து, உரிய காலத்தில் நூல் வெளிப்பட துணை நின்ற தமிழ் வளர்ச்சித் துறையினருக்கும் என் நன்றி உரியது.

நூலை வாங்கி ஆதரித்து, என் பணி மென் மேலும் சிறக்கத் துணை நிற்கக் கேட்டுக் கொள்கிறேன்.

— சீனி. விசுவநாதன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளுறை

1. பாரதி - யார்? ... 9
2. பாரதி வகுத்துக் கொண்ட புது வழி ... 21
3. பாரதி படைப்பு இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் ... 29
4. பாரதி மேற்கொண்ட தொடக்க கால நூல் வெளியீட்டு முயற்சிகள் ... 50
5. பரலி சு. நெல்லையப்பர் ஆற்றிய பதிப்புப் பணிகள் ... 119
6. சுதேச மித்திரன் புத்தக சாலைப் பிரிவு மேற்கொண்ட செயல்களும் பாரதியின் திட்டங்களும் ... 132
7. செல்லம்மாள் பாரதியின் முயற்சிகள் ... 192
8. பாரதி பிரசுராலயம் ஆற்றிய அரும் பணிகள் ... 263
9. தமிழக அரசின் பங்களிப்பு ... 340
10. தற்கால பதிப்பாசிரியர்களின் சீரிய பணிகள் ... 386
11. முடிவுரை ... 400
சில முக்கிய நினைவுக் குறிப்புகள் ... 406
பின்னிணைப்புகள் ... 413

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



தியாக சீலரும் பாரதிக்குப் புகழுடம்பை அளித்து
அவருடைய பெயரும், நினைவும்
என்றென்றும் நிலைத்திருக்கச்
செயற்கரும் செயல்களை
மேற்கொண்டவருமான
சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு
இந்த நூலைக்
காணிக்கை யாக்குகிறேன்.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூலாசிரியரின் பிற நூல்கள்

பாரதி நூல்கள்: விவரக் கோவை

மகாகவி பாரதி : சில புதிய உண்மைகள்

பாரதி ஆய்வுகள் : சில சிக்கல்கள்

கட்டுரை மணிகள்

மறுமலர்ச்சிக் கவிஞர்

பதிப்பு வரலாற்று நூலுக்கு அணி செய்கிற வகையில், பாரதிப் பணிகளில் ஈடுகொடுத்த பெரியவர்களின் படங்களும், அவசியங் கருதி அந்தக் காலத்திலும், சமீப காலத்திலும் பிரசுரமான முக்கியமான நூல்களுக்கான முகப்பு அட்டைச் சித்திரங்களும் பட அச்சு மூலம் பிரதி யெடுத்துச் சேர்க்கப் பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1

பாரதி—யார் ?

எளிய சொற்கள், சின்னஞ்சிறு வாக்கியங்கள், இனிய நடை—இவற்றிலே கள்ளையும் தீயையும் நல்ல காற்றையும் வான வெளியையும் சேர்த்துத் தம் தீஞ்சுவைப் படைப்புகளை வழங்கியவர் பாரதியார்.

பாரதியின் பெருமையையும், மேன்மையையும் குறித்துப் பரலி சு. நெல்லையப்பர் தாம் வெளியிட்ட கண்ணன் பாட்டு (1917) என்னும் நூலின் முகவுரையில்,

> "ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியாரைத் தமிழ் நாட்டார் அறிவார்கள். ஆனால், அவர் பெருமையை உள்ளபடி அறிந்தவர்கள் மிக மிகச் சிலரே யாவர். ஸ்ரீமான் பாரதியார் ஒரு பெரிய மேதாவி; மகா பண்டிதர்; தெய்விகப் புலவர்; ஜீவன் முக்தர். இவர் தமிழ்நாட்டு 'ரவீந்திரநாதர்'. இவர் எனது தமிழ்நாட்டின் தவப்பயன்.
>
> "இவ்வாறு கூறுவதால், யான் எனது நண்பரை மிகுந்த உச்ச ஸ்தானத்தில் ஏற்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைப்பதாக எவரும் கருத வேண்டாம். அவருக்கு யான் கொடுக்கும் உச்ச ஸ்தானம் நிச்சயமானது. இதனைத் தற்காலத்தில் அறியாதவர்கள் பிற்காலத்தில் அறிவார்கள்.

"ஒரு வார்த்தை மட்டும் கூறுகின்றேன்: இந்த ஆசிரியன் காலத்திற்குப் பின், எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின், இவர் பாடல்களைத் தமிழ்நாட்டு மாதர்களும், புருஷர்களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை இப்பொழுதே காண்கிறேன்''

என்று மதிப்பீடு செய்தார்.

உண்மையில், ஆரம்ப நாளில் பாரதியின் திறனை மதித்தவர்கள் வெகு சிலரே யாவர். ஆனால், அக் காலத்தில் பாரதியை இனங் கண்டு மதிப்பீடு செய்தவர் வரிசையில் நெல்லையப்பர் முதன்மையானவர் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

பாரதி எத்தகைய சூழ்நிலையில் தோன்றினார் என்பதைப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தம் பாடல் வரிகளால் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

> ''உய்வகை காட்டும் உயர் தமிழுக்குப்
> புது நெறி காட்டிய புலவன் பாரதி
> ....
> தமிழரின் உயர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இமை திறவாமல் இருந்த நிலையில்
தமிழகம், தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங் கிடக்கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்".

'புதிய அறம் பாட வந்த' கவியரசர் பாரதியை நெல்லையப்பர் 'தமிழ்நாட்டின் தவப்பயன்' என்று புகன்றதற்குப் பாரதிதாசன் தம் பாடல் வரிகளால் சொல்லோவியம் தீட்டிய பாங்கு எண்ணியெண்ணி மகிழத் தக்கதாகும்.

'நல்ல கவி யினிமை நம் தமிழர் நாளும் நாட' வழி வகுத்த கவிக் குலக் கோன் பாரதி தாம் யார் என்பதையும், தம்முடைய படைப்பு எத்தகைய தனித்தன்மை கொண்டது என்பதையும் எட்டயபுரத்து ஜமீந்தார் வெங்கடேசு ரெட்டப்ப பூபதி அவர்களுக்கு எழுதிய சீட்டுக் கவிதைப் பகுதியிலே நன்கு புலப்படுத்தி யுள்ளார்:

வாச மிகு துழாய்த் தாரான் கண்ணனடி
மறவாத மனத்தான் சக்தி
தாச னெனப் புகழ்வளர் சுப்பிரமணிய
பாரதி தான் சமைத்த பாட்டு

புவி யனைத்தும் போற்றிட வான் புகழ் படைத்துத்
தமிழ்மொழியைப் புகழி லேற்றும்
கவி யரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே!

'சுவைபுதிது நயம்புதிது வளம்புதிது
சொற்புதிது ஜோதி கொண்ட
நவகவிதை யெந்நாளு மழியாத
மஹா கவிதை' யென்று நன்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரான் ஸெனனு முயர்ந்த புகழ் நாட்டிலுயர்
புலவோரும் பிறரு மாங்கே
விராவுபுக ழாங்கிலத் தீங் கவியரசர்
தாமுமிக வியந்து கூறிப்
பராவி யென்றன் தமிழ்ப் பாட்டை மொழிபெயர்த்துப்
போற்றுகிறார்.

உள்ளபடியே, திறமையான கவியை - பாரதிப் புலவரை - வாழ்ந்த காலத்தில், தமிழகத் தவர்களே புரிந்துகொள்ளத் தவறிவிட்ட நிலையில், பிறநாட்டு நல்லறிஞர்கள் பாரதியின் கவிதைச் சிறப்பை உணர்ந்து கொண்டனர்; வியந்து பாராட்டிப் போற்றினர்.

ஆக, பாரதிக்கு அவர் வாழ்ந்த காலத்திலேயே அவருடைய புலமைக்கும், இலக்கியப் படைப்புக் கும் உரிய புகழும் பாராட்டுதல்களும் கிடைக்கவே செய்திருக்கின்றன.

தமிழ்நாட்டில் மட்டுமே யன்றிக் கடல் கடந்தும் பாரதியின் கவிப்புகழ் பரவி இருந்தது என்று நாம் அறிகிறோம்.

பாரதி வெளி நாட்டில் பிறந்திருப்பாரே யானால், அங்கு அவருக்கு ஏற்பட்டிருக்கும் சிறப்பே தனித்தன்மை கொண்டு இலங்கும் எனச் சத்தியமூர்த்தி அவர்களும், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களும் மனக் குறையுடன் எழுதியதும் உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஸ்ரீமான் பாரதியார் ஐரோப்பாவிலேனும் அமெரிக்காவிலேனும் பிறந்திருப்பாராயின் அவருக்கு இதுகாலை எத்தனையோ ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்பதை நாம் கூற வேண்டுவதில்லை"

என்று திரு. வி. க. அவர்கள் தம்முடைய நவசக்தி இதழிலே குறிப்பிட்டுள்ளார்.

1928ஆம் ஆண்டிலே பாரதியார் பாடல்கள் தொகுதிகள் தடை செய்த நிலையில், சட்டப் பேரவையில் சத்தியமூர்த்தி அவர்கள்,

"......அவர் எந்த சுதந்திர நாட்டில் பிறந் திருந்தாலும் - ஏன், இந்தியா தவிர உலகில் எந்த தேசத்தில் பிறந்திருந்தாலும் - அவரை அந் நாட்டின் ஆஸ்தான கவி ஆக்கி இருப்பார் கள்; மக்களின் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்க அறிந்த எந்த அரசும் அவருக்கு கௌரவங் களையும், பட்டங்களையும் வழங்கியிருக்கும்; அவர் தமது நாட்டிலே தலையான மதிப்புப் பெற்றோருள் ஒருவராக வாழ்ந்து மரித் திருப்பார்"

என்று பேசினார்.

தமிழ் மறவாத புலவர் பாரதியை அவருடைய இளமைக்கால நண்பர் - பிற்காலத்தில் 'நாவலர்' என்ற பெயரால் அழைக்கப்பட்ட சோமசுந்தர பாரதியார் அவர்கள், பாரதி மலர் ஒன்றில்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"கம்பருக்குப் பிறகு தமிழ்ப் பாக்களிலே கற்பனையை வாய்மை வரம்பு இகவாமல் இயற்கையொடு முரணாமல் நிற்க வைத்த நற்புலவர் பாரதியார். இளங்கோவின் எளிய இனிய ஒழுகு நடை எழில் வளமும், வள்ளுவரின் கொள்ளரிய உண்மையறத் திட்பமொடு அறிவு தரு ஒட்பம் மிளிர் பொருள் ஒளியும் வாய்ந்த தமிழ்ப்பா மழையை வழங்கும் கொண்டல்.

"பழந்தமிழில் புத்தொளியும், செத்து வரும் புலமைக்குப் புத்துயிரும் படைத்துதவி, இறவாத தமிழியல்பைத் தன் கவிகள் சான்று சொலப் புலமை யறம் ஆற்றியவர். பலர் மறந்து புறக்கணித்த தமிழணங்கின் சீர் இளமைத் திறம் வியந்து பாராட்டி, பாப்பாப் பாட்டால் அவள் மழலை மிழற்ற வைத்து, நாட்டுப்பாட்டால் நல்லிளமை வளம் காட்டி முரசாலே விடுதலைப் போர்ப்பறை முழக்கி, அடிமை உள அளறாழ்ந்து உணர்விழந்து உறங்கிய தமிழர்தமைத் துயிலுணர்த்தி, குயில் பாட்டால் பண்ணிசைத்து, கண்ணன் 'பா' அமுதருத்தி, பாஞ்சாலி சூளுரையால் தணியாத விடுதலையின் தாகத்தை அவர்க் கெழுப்பி, வீரராக்கி, வெற்றி விளைத்து, குறவை யாடி, பள்ளுப் பாடப் பண்ணிய பாவலர் பாரதியாரைப் பார்ப்பனத் தமிழர் என்பதினும் தமிழப் பார்ப்பனர் என்பதே சாலப் பொருந்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"......பலரறியாச் சிறு வாழ்வில் வாடாத பாமாலை பல புனைந்து மூவாத தமிழ் மகளுக் கணிந்து தானும் இறவாமை எய்தியவர் இப் பெரியார்"

என்று பாராட்டுரை வழங்கி யுள்ளார்.

'தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டும்' என்ற கங்கணம் கட்டி உழைத்த பாரதியின் திறம் குறித்து மூதறிஞர் ராஜாஜி அவர்கள் எட்டயபுர பாரதி விழாவில்,

"......நம் காலத்தில் பாரதியார் பிறந்து பாடியதனால், இந்தத் தமிழ்ச் சாதியின் சக்தி அழிந்து விடவில்லை யென்று நிச்சய மாய்த் தெரிகிறது. அப்பேர்ப்பட்ட கவிஞன் ஞாபகத்தை நாம் என்றென்றும் போற்ற வேண்டும்"

என்று பேசியதை நாம் நினைவுகூர்வோமாக.

எட்டயபுர மணி மண்டபத் திறப்பு விழா நிகழ்ச்சி பற்றி "பாரதி பாதை" என்றவோர் கட்டுரையை அறிஞர் அண்ணாதுரை அவர்கள் எழுதினார். அதில் அவர்,

"பாரதியாரின் கவிதைத் திறன், அதனாலாய பயன் மறுக்க முடியாதன. பாரதியாரின் தனிப்பண்புகளை அவரை, அந்நாளில் அறிந்தவர்கள் கூறிடக் கேட்டால், புது உலகு காண விழைபவர்களின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அகமெலாம் மகிழும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பாரதியாரைக் குறித்துப் பேச ஆரம்பித்தால் அவருடைய கண்களிலே ஓர் புத்தொளி தோன்றிடக் காணலாம்”

என்றே குறிப்பிட்டுள்ளார்.

பாரதியைப் பாமர மக்களுக்கு இனம் காட்டிய திரு. ப. ஜீவானந்தம் அவர்கள்,

“......இயற்கை வாழ்வு, சமுதாய வாழ்வு, மன வாழ்வு என்ற முக்கூறு கொண்ட வாழ்க்கை நூலைப் பாரதி தனக்கே உரிய முறையில் படித்தான். அதன் விளைவாக, கலை இலக்கியத் தத்துவங்களை — கோட்பாடுகளைத் தனக்கு உகந்த முறையில் புதுமை செய்து கொண்டான். உருவத்திலும், உள்ளடக்கத்திலும் தமிழ் இலக்கியத்தில் பாரதி ரகம் புது ரகம்—தனி ரகம். காலம் பெருமைப்பட படையல்களை அருளினான்”

என்று பெருமிதம் கொண்டார்.

ஆக, பாரதியை நாம் மகாகவி என்று போற்றுகிறோம்; மகான் என்று மதிக்கிறோம்; நாட்டுக்கு உழைத்தவர் என்று பாராட்டுகிறோம். இப்படி எல்லாத் தகுதிகளையும் பெற்ற பாரதியை உலகமே கொண்டாடி மகிழ்கிறது.

பாரதி ஆரம்ப காலங்களில் கவிதைகளை மாத்திரமே அதிகமாகப் புனைந்தளித்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்பாக, காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு தேசிய கீதங்களையே இயற்றினார். 'ஒரே வார்த்தையில் கூற வேண்டுமெனின், வீர சுதந்திர வெறியே பாரதி பாடல்களின் ஜீவநாதம் என்போம்' என்பார், திரு. சொ. முருகப்பா அவர்கள்.

> "......சுப்பிரமணிய பாரதியாரைத் தேச பக்தர் சுப்பிரமணிய பாரதியார் என்று சொல்வது வழக்கம். தேச பக்தி இஃது எனும் உண்மை கண்டவருள் பாரதியாரும் ஒருவர். ஸ்ரீ பாரதியார் தேச பக்தியின் இயல்பைப் பலவாறு பாக்களால் ஓதி யிருக்கிறார்.
>
> "......மொழிப் பற்று, கலை வளர்ச்சி, சமத்துவம், பெண்ணடிமை நீக்கம் முதலியவற்றைப் பொருளாகக் கொண்ட துறைகள் வழி நின்று, பாட்டு வாயிலாகத் தேச பக்தி செலுத்தி வந்தவர் நம் பாரதியார்"

என்று சொற் சித்திரம் தீட்டி மகிழ்ந்தார் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்கள்.

பாரதியை நாளும் போற்றிய திருலோக சீதாராம் அவர்கள், 'புதுயுகக் கவிஞர்' என்கிற தொடர் கட்டுரைகளினிடையே ஓரிடத்தில்,

> "பாரதியை நமது தேசீய கவி என்று கூறும்போது, நாட்டின் அரசியல் அதிகார ஆதிக்கப் புரட்சியைப் பற்றிச் சில

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போரெழுச்சிப் பாடல்களைப் பாடி விட்டார் என்ற காரணத்திற்காக மட்டும் நாம் போற்றவில்லை. அவர் பிறவியில் ஒரு பெருங் கவிஞராகத் திகழ்கின்ற உண்மையினால், சாதாரண மக்கள் அறிந்திராத மேலான அளவில் இந்த நாட்டின் ஜீவ சக்தி இன்ன தென்று தெளிவாக அறிந்து, அதை நமக்கும் உணர்த்திய உயிர்க் கவிதைகளைப் பாடினார் என்பதே அவரை நமது தேசீய கவி என்று நாம் போற்றுகின்ற அடிப்படை.

"முதலில் அவர் நமது கவி. நமது புது வாழ்வின் வருகையை நமக்கு உணர்த்தி விழிப் புறச் செய்த புதுயுகக் கவி. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நமது தாய் தந்தையரும், அவரின் மூதாதையரும் வாழ்ந்து சிந்தனை யாலும் செயலாலும் உயர்ந்து விளங்கிய உண்மையை உணர்ந்து, நாம் உணருமாறு நமது தேசீய ஜீவசக்தியின் புகழைப் பாடிய தேசீய கவி"

என்று குறிப்பிட்டுள்ளதைக் காண்க.

ஆரம்ப காலத்தில், தேச பக்திப் பாடல் களைக் காலத்தின் தேவையை முன்னிட்டு இயற்றிய காரணத்தால் தேசீய மகாகவி என்று பாரதி குறிக்கப்பெற்றார். காலப் போக்கில், தெய்வ பக்தி, தெய்வ நம்பிக்கை ஆகியனவற்றை ஊட்டும் தோத்திரப் பாடல்களையும், சமுதாய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சீர்திருத்தத்தை வற்புறுத்தும் பாடல்களையும், பெண்களின் சீரையும், சிறப்பையும் புலப்படுத்தும் பாடல்களையும், நீதி நெறிமுறைகளை விளக்கும் பாடல்களையும், ஞானத் தெளிவு தரும் பாடல் களையும் வழங்கினார்.

சொல்லப்போனால்,

"...சிறு குழந்தைகள் முதற் பெரிய பண்டிதர்க ளீறாக அனைவரும் படித்து இன்புறுதற்குரிய அழகிய தமிழ்ப் பாடல் களைத் தந்தமையாற் கல்வி யில்லாதோரும் தாய்மொழிப் பாடல்களைப் படித்தின்புறுஞ் சுதந்திரத்தை அவர்களுக்குக் கொடுத் துள்ளார்"

என்ற சுவாமி விபுலாநந்தர் வாக்கிலே பாரதியின் கவி நயத்தை ஓரளவு உணரலாம்.

தமிழ் மொழிக்கு என்றும் அழியாத உயிரை அளித்த பாரதி, சமூகத்தின் பல்வேறு துறை களிலும் சிந்தனையைச் செலுத்தி, அவற்றைக் குறித்துப் பாடியும், வசனமாக எழுதியும் உள்ளார். ஆம்; தமிழ்மொழியை வாழ்க்கையின் முன்னணிக்குக் கொணர்ந்த பெருமை பாரதிக்கு உண்டு.

சுவை புதிதும், நயம் புதிதும், வளம் புதிதும் மிகுந்த ஜோதி கொண்ட நவ கவிதைகளையும், வசனங்களையும் வாரி வழங்கியவர் பாரதி எனக் கண்டோம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மக்களின் இதயத்தை வளர்த்து, அறிவைப் பெருகித் தந்து, அன்பை ஊட்டிய பாரதியை "எங்கள் கவி" என்று தமிழர்கள் ஏற்றிப் போற்றுகின்றனர்.

சூழ்கலியை நீக்கி, தொல்லை இகழ்ச்சிகளைத் தொலைத்துத் தமிழ்மொழியைப் புகழிலேற்றிய மகாகவி பாரதியைத் "தமிழினத்தின் சொத்து" என்றும், "மறுமலர்ச்சிக் கவிஞர்" என்றும், "வித்தகச் சித்தன்" என்றும் அறிஞர் உலகம் கொண்டாடுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2

பாரதி வகுத்துக் கொண்ட புது வழி

7973

"ஊருக்கு நல்லது சொல்வேன் — எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்"

என்று "முரசு"ப் பாட்டிலே தம் கொள்கையைக் குறிப்பால் உணர்த்தியவர், பாரதி.

தாழ்வுற்று, விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டு நின்ற மக்களை வாழ்விக்க வந்த மகாகவியே பாரதி.

தம் உள்ளத்தின் உண்மை யொளியால் வாக்கினிலே ஒளி வீசிடச் செய்திட்ட மானுடத்தின் மகாகவி பாரதி, தமக்கென ஓர் வழியை இலக்கிய நெறியில் வகுத்துக்கொண்டார்.

சிறியன சிந்தித்தறியாத - புதியன விரும்பிய - பாரதிக் கவிஞர் பெரிதினும் பெரிது வேண்டியவர்.

தமிழ் உணர்வையும், தேசீய பற்றையும், பெண்களின் உயர்வையும் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட பாரதி - முன்னர் நாடு திகழ்ந்த பெருமையையும், அந்நாளில் மூண்டிருந்த இகழ்ச்சியையும் கண்டு சீறி எழுந்து 'புதிய அறம்' பாடிய பாரதி - தமக்கென புது வழி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்டு, அதன் வழி ஏறுநடை போட்டார் எனலாம்.

பாரதி தம்முடைய இளமைப் பருவத்திலும் சரி - பத்திரிகையில் பணியாற்ற முற்பட்ட காலத்திலும் சரி - பாக்களையே மிகுதியாகப் புனைந்தார் எனக் கருதலாம்.

'கவிதை எப்படி இருத்தல் வேண்டும்?' என்ற கொள்கை விளக்கத்தைக் கவி வாக்காலேயே காணுதல் சிறப்புடைத்து எனலாம்.

'புனர் ஜென்மம்' என்ற கட்டுரையிலே "கவிதை" பற்றிய தம் தெளிவான கொள்கையை இப்படி எழுதியுள்ளார், பாரதி :

"நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று; ருசி குறைந்தது. கரடு முரடான கல்லும் கள்ளி முள்ளும் போன்ற பாதை நமது கவிகளுக்கு நல்ல பாதையாகத் தோன்றலாயிற்று. கவிராயர் 'கண்' என்பதைச் 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினார். ரஸம் குறைந்தது; சக்கை அதிகப்பட்டது. உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிகப்பட்டன.

'சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதாவரியினை
வீரர் கண்டார்'

என்று கம்பன் பாடி யிருக்கின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"'சவி' என்பது ஒளி; இது வட சொல்; கம்பன் காலத்தில் அதிக வழக்கத்திலிருந்தது போலும். "ஒளி பொருந்தும்படி தெளிவு கொண்டதாகி, தண்ணென்ற (குளிர்ந்த) நடை யுடையதாகி, மேலோர் கவிதையைப் போலக் கிடந்தது கோதாவரி நதி" என்று கம்பன் வர்ணனை செய்கிறான். எனவே, கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டுமென்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை.

"மேலும், நெடுங்காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக்காலத்துப் பாஷையைத் தழுவினவை. காலம் மாற மாற, பாஷை மாறிக்கொண்டு போகிறது; பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன புலவர் அந்த அந்த காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்கவேண்டும். அருமை யான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை. ஆனால் சென்ற சில நூற்றாண்டுகளாக, புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு ஸாதாரண விஷயங்களை அஸாதாரண அலௌகிக அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித் திறமை என்று தீர்மானம் செய்து கொண்டார்கள்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருங்கவியரசர் கம்பருடைய கொள்கையால் - கவிதைக்குரிய இலட்சணங்களாக அக் கவியரசர் காட்டிய முறையால் - பாரதி ஈர்க்கப்பட்டார் என்பது தெளிவு.

ஆனால், அதே சமயத்தில், கவிதையில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை—ஆகிய இம் மூன்று அம்சங்களும் இருக்க வேண்டுமென்ற கம்பருடைய கொள்கையை ஏற்றுக்கொண்ட பாரதி, கவிவாணர்களும் மக்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய சொற்களை வழங்க வேண்டும் என்பதிலும், அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவதுதான் நல்ல கவிதையாகும் என்பதிலும் தெளிவு பெற்று விளங்கினார்.

காலத்தின் சூழலை மனதில் கொண்டு தம் படைப்புகளைப் படைக்கவேண்டும் என்று பிறர்க்கும் அறிவுரை புகன்றவரும் பாரதியே யாவார்.

தாம் வழிகாட்டியாகக் கொண்ட கம்பர் வழியில் - தாம் வகுத்துச் சொன்ன கருத்துகளின் அடிப்படையில் - பாரதி தம்முடைய கவிதைச் செல்வங்களை வழங்கினார். தம் காலத்து பாமர மக்களுக்கு எளிதில் விளங்கக் கூடிய சொற்களைப் பயன்படுத்தி, உள்ளத்திலே கவிதை உணர்வை எழுப்பக் கூடிய முறையில் பாரதி எழுதினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்னும் சொல்ல வேண்டுமானால், எதுகை மோனைகளுக்காகச் சொல்ல வந்த பொருளை மாற்றிச் சொன்ன புலவரில்லை பாரதி. யமகம், திரிபு முதலான சித்திரக் கட்டுகளை விரும்பிச் சொல்லுக்குத் தக்கபடி பொருளைத் திரித்துக் கொண்டு சென்ற புலவர் குழாத்தைச் சார்ந்தவரு மல்லர்; அவசியமில்லாத அடைமொழிகள் சேர்த்து வாணித் தெய்வத்தின் மீது புழுதியைச் சொரிந்த வருமல்லர்.

ஆக, இலக்கியத்துக்குத் தெளிவும், உண்மையுமே உயிரெனத் தேர்ந்து, திறமான கவிதைகளை இயற்றி, தமிழகத்திலே கவிதையின் புகழ் சிறக்கச் செய்தவர்களுள் பாரதிக்குத் தனி இடம் உண்டு.

"பாட்டைக் காட்டிலும் ரஸமான தொழில் வேறில்லை" என்று எழுதிய பாரதி, தம் உரை நடையால் தமிழ் வசனத்தையும் வளப்படுத் தினார்.

உரைநடையிலும் புதுவழியையே பாரதி மேற் கொண்டார்; பெரும்பாலும், பேச்சு மொழியையே கையாண்டார்.

தமிழ் வசன நடை எங்ஙனம் அமைந்திருக்க வேண்டும் என்பது குறித்தும் பாரதிக்குத் தெளிவான — தீர்க்கமான கருத்து உண்டு.

தமிழ் "வசன நடை" குறித்துப் பாரதியின் கோட்பாடுகள் இவைதாம்:

பா.—2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"தமிழ் வசன நடை இப்போதுதான் பிறந்து பல வருஷமாகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால், இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்யவேண்டும். கூடிய வரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமமென்பது என்னுடைய கக்ஷி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம், எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது.

"பழக்க மில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து, அதாவது ஜனங்களுக்குச் சற்றேனும் பழக்க மில்லாமல் தனக்கும் அதிக பழக்க மில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து எழுத ஆரம்பித்தால் வாக்கியம் தத்தளிக்கத்தான் செய்யும், சந்தேகமில்லை. ஆனாலும், ஒரு வழியாக முடிக்கும்போது, வாய்க்கு வழங்குகிறதா என்று வாசித்துப் பார்த்துக் கொள்ளுதல் நல்லது; அல்லது ஒரு நண்பனிடம் படித்துக் காட்டும் வழக்கம் வைத்துக் கொள்ளவேண்டும். சொல்ல வந்த விஷயத்தை மனதிலே சரியாகக் கட்டி வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு கோணல், திருகல் ஒன்று மில்லாமல், நடை நேராகச் செல்ல வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன் யோசனை யில்லாமலே நேராக எழுதும் திறமையை வாணி கொடுத்துவிட்டால், பின்பு ஸங்கட மில்லை. ஆரம்பத்திலே, மனதிலே கட்டி முடிந்த வசனங்களையே எழுதுவது நன்று. உள்ளத்திலே நேர்மையும் தைர்யமு மிருந்தால், கை பிறகு தானாகவே நேரான எழுத்து எழுதும். தைர்யம் இல்லா விட்டால் வசனம் தள்ளாடும். சண்டி மாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக்கொள்ளும். வாலைப் பிடித்து எவ்வளவு திருகினாலும் எழுந்திருக்காது. வசன நடை, கம்பர் கவிதைக் குச் சொல்லியது போலவே, தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்கு முடைய தாக யிருக்க வேண்டும். இவற்றுள், ஒழுக்க மாவது தட்டுத் தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை.

"நமது தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலைநிறுத்திக் கொண்டால், கை நேரான தமிழ் நடை யெழுதும்."

"எழுதுகோல் தெய்வ மிந்த எழுத்தும் தெய்வம்" என்று உள்ளதாம் பொருளை உணர்த்திய கவிஞர் பாரதி, பேச்சு மொழியைக் கையாண்டு வசன நடையை வளம் பெறச் செய்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இங்கும் கம்பர் கவிதைக்குச் சொன்ன இலக்கணத்தையே வசன நடைக்கும் இலக்கியம் ஆக்குகிறார் பாரதி.

'உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலைநிறுத்திக் கொண்டால், கை நேரான தமிழ் நடையெழுதும்' என்பது பாரதி கண்ட உண்மை. இதுவே கவிதை நடைக்கும் சரி, வசன நடைக்கும் சரி பாரதி வகுத்த நெறி முறை; புது வழியுமாகும்.

முப்பத்தொன்பது ஆண்டுக் காலங்கூட முடிவு பெறாத வாழ்க்கையிலே, பாரதி ஆற்றிய இலக்கிய சாதனையை வார்த்தைகளிலே வரையறுத்துக் கூறிடவும் முடியுமோ?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3

பாரதி படைப்பு இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

மாயாப் பெரும்புகழ் கொண்ட கவியரசர் பாரதியின் கவித்திறம் குறித்து, பின்னாளில் நினைவுகூர்ந்த நாவலர் சோமசுந்தர பாரதியார்,

"......பாரதியார் தமது ஏழாவது பிராய முதலே அருமையான தமிழ்க் கவிகளை விளையாட்டாக விரைந்து கவனஞ் செய்வதைக் கண்ட வித்வான்கள் நமது கவியின் தந்தையாரைப் புகழ்ந்திருப்பதை நான் நேரில் அறிவேன். எட்டு, ஒன்பதாவது ஆண்டுகளில் சர்வ சாதாரணமாய், கொடுத்த ஸமஸ்துக் களை வைத்து அற்புதமான கவிகளைப் பூர்த்தி செய்து பெரிய புலவர் கூட்டங்களைப் பிரமிக்கச் செய்த பல காலங்களிலும் நான் கூட இருந்திருக்கிறேன். காளிதாசன், கம்பன் முதலிய வரகவிகளுக்குக் காளி வாக்கில் எழுதிய கால முதல், அநாயாசமாய்க் கவி சொல்ல வாய்ந்ததென்று நாம் கேட்கும் கதை களையும், குமரகுருபரர் ஐந்தாவதாண்டில் அரும் பாக்கள் இயற்றினர் என்ற கதையினை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> யும் அபூர்வ கற்பனைகளென்று புறக்கணித்த நான், பாரதியார் ஏழாவது வயது முதல் எளிதில் பாடலியற்றித் தமிழ்வாணர்கள் மெச்சும்படி காட்டிய திறமையை நேரில் கண்ட பொழுதுதான் கேவலம் படிப்பினால் பாவன்மை வராது, கவிகள் பிறப்பிலேயே அமைய வேண்டுமென்று அறிந்தேன். பாரதியார் பதினோராவது ஆண்டில், புலவர்கள் கூடியதோர் பெருஞ் சபையில், புதிது புதிதாகக் கொடுத்த அடிகளைக் கொண்டே பூர்ண கவிகளை விரைந்தியற்றிச் சபையோரை வியப்பித்தபோது, அவருடைய கவித் திறமையையும், அமிர்த வாக்கையும் கண்டு சந்தோஷப்பட்ட புலவர்களால் முதல் முதல் "பாரதியார்" என்ற பட்டமும் கொடுக்கப் பெற்றார். அன்று முதல், இவரை யாவரும் பாரதியா ரென்றே அழைக்க ஆரம்பித்தார்கள்"

என்று அழகாக எழுதியமை இங்குக் கருதத் தக்க செய்தியாகும்.

பாரதி சிறு வயது முதற் கொண்டே பாடல்களை விரைந்து இயற்றித் தமிழ்வாணர்களின் ஒருமுகமான பாராட்டுதலைப் பெற்ற வரகவியாகத் திகழ்ந்தார் என்பதை நாம் நாவலரின் சொற்களாலே அறிந்தோம்.

இளமைப் பருவத்திலும், ஆரம்ப நாட்களிலும் பாரதியார் எழுதியதாகக் கூறப்படும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுத்துகள் பலவும் இன்றளவும் நமக்குக் கிடைக்கவில்லை.

குறிப்பாக, 1924ஆம் ஆண்டில் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களே "பாரதியார் தமிழ்ப் புலமை" என்ற ஒரு கட்டுரையைப் பஞ்சாமிர்தம் என்னும் மாதப் பத்திரிகையில் எழுதி இருக்கிறார். அவர் அக் கட்டுரையில்,

> "......அச்சேறாத 'சேற்றூர் உலா' அன்ன சில ஒருதுறைக் காதற் பனுவல்களும் இவர் செய்த துண்டு"

என்று குறித்திருக்கிறார்.

வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் அவர்களும் கலைக்களஞ்சியம் — மூன்றாம் தொகுதியுள்,

> "......கவி சுப்ரமண்ய பாரதியார் ஒரு காவடிச் சிந்து பாடியதாகக் கூறுவர். அந்த நூல் இப்போது கிடைக்கவில்லை"

என்றே தாம் கேள்விப்பட்ட செய்தியைத் தெரிவித்துள்ளார்.

நாவலரும், வாகீச கலாநிதியும் தெரிவித் திருக்கிற செய்திகள் பாரதீய உலகிற்கு வருத்தம் அளிப்பனவாக இருந்தபோதிலும், சில ஆண்டு களுக்கு முன்னர் காலமான பாரதியின் இளைய சகோதரர் சி. விசுவநாத ஐயர் அவ்வப்போது தமக்குக் கிடைத்த — தேடி எடுத்த — ஒருசில

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிதைகளைப் பத்திரிகைகளில் வெளியிட்டுப் பேருதவி புரிந்திருக்கிறார் என்பது சற்று ஆறுதல் தருவதாக உள்ளது.

குறிப்பாக, பாரதி தம் பதினைந்தாம் — பதினாறாம் வயதளவில் புனைந்த பாடல்களான "வெங்கடேசு ரெட்ட மன்னருக்கு எழுதிய விண்ணப்ப"க் கவிதையையும், காந்திமதி நாத பிள்ளை யவர்கள் பேரில் பாடிய "பாரதி சின்னப் பயல்" என்கிற கவிதையின் முழு வடிவத்தையும் வெளியிட்டுதவி யுள்ளார், அப் பெரியவர்.

பாரதியின் சகோதரரைப் போன்றே, காலப் போக்கில் வேறு பலரும் பாரதியாருடைய படைப்புகளை — அச்சில் வெளிவந்தும் நூலாக்கம் பெறாத எழுத்துகளை — முனைந்து நின்று தேடிக் கொடுத்துள்ளனர்.

ஆக, பாரதி இலக்கியப் பணிகளுக்குப் பற்பலரும் காலந்தோறும் தத்தம்மால் இயன்ற அளவில் ஒத்துழைப்பு நல்கி யுள்ளனர் என்பது நினைவில் கொள்ள வேண்டிய செய்தியாகும்.

பாரதி இலக்கியங்களின் வளர்ச்சி குறிப்பிட்ட கால எல்லைக்குள் குறுகி நிற்காமல், சங்கிலித் தொடர்போல் தொடர்ந்து நடைபெற்று வருகிற அரும் பணி என்பதை நாம் பெருமையுடன் நினைவுகூரவும் கடமைப்பட்டுள்ளோம்.

* * *

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி எட்டயபுர சமஸ்தானத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த சமயத்தில், திருநெல்வேலியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "சர்வ ஜனமித்திரன்" என்ற இதழில் அவர், செல்வந்தர்களின் அட்டூழியங்களைக் குறித்துக் கட்டுரையொன்று எழுதியிருந்ததாகத் தெரிகிறது. ஆனால், அக் கட்டுரை வெளியான 'சர்வ ஜனமித்திரன்' இதழ் இன்றுவரையும் எவருக்கும் கிடைக்கவில்லை. என்றாலும், இதே சமயம், மதுரையினின்றும் பெரும்புலவர் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "விவேக பாநு" என்னும் மாத இதழுக்குத் "தனிமை இரக்கம்" என்ற தலைப்பில் ஓர் பாடலைப் பாரதி அனுப்பி வைத்திருந்தார். அப் பாடல் 1904 ஜூலை மாத இதழில் வெளியாயிற்று. அச்சில் வெளியான முதல் பாடல் என்ற பெருமையை இப் பாடல் பெற்றது.

பிறவிக் கவிஞரான பாரதி, எட்டயபுர சமஸ்தான அரசருடன் ஒற்றுமை குறைந்து, வேறு எங்கேனும் சென்று வேலை தேடலாம் என்றெண்ணி, சேற்றூர் முதலான ஊர்களுக்குச் சென்று மதுரையை வந்தடைந்தார்.

மதுரை வந்த பாரதிக்கு, அந் நகரின் சேதுபதி ஹைஸ்கூலில் தமிழாசிரியராகப் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தது.

மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் பணியிலும் பாரதி நெடுநாள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீடிக்கவில்லை. சுமார் மூன்று மாத காலமே அங்குப் பணியாற்றினார்.

1904 நவம்பர் மாதத்தில் பாரதி "சுதேச மித்திரன்" இதழில் துணையாசிரியர் பணியை ஒப்புக்கொண்டார்.

'சுதேசமித்திரன்' இதழில் சேர்ந்த புதிதில் பாரதி சில மொழிபெயர்ப்புகளைச் செய்தார் என்று வரலாற்றாசிரியர்கள் தெரிவித்துள்ளனர். அந்த மொழிபெயர்ப்புப் பகுதிகள் எவை என்பதைத் தெளிய வழியில்லை; பாடல்களை மட்டும் புனைந்தனவற்றிற்கு விவரம் கிடைத் துள்ளது.

சொல்லப் போனால், 'சுதேசமித்திர'னில் சேர்ந்த காலப் பகுதியில், பாரதி தேசீய கீதங் களையே அதிகம் புனைந்தளித்தார் என்று அறிகிறோம். அதற்குக் காரணம், 'சுதேச மித்திரன்' இதழ் தேசீய இயக்கத்தை வளர்க்கும் மாபெரிய பணியில் ஈடுபட்டிருந்தமை யாகும். இது மட்டுமில்லை. பாரதியும் தம்மைத் தேசீய இயக்கத்தோடு மனமாரப் பிணைத்துக்கொண்டும் விட்டார்.

'சுதேசமித்திர'னில் சேர்ந்த ஒன்பது மாதங் களுக்குள்ளாகவே, அந்த இதழில் உதவி ஆசிரிய ராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே, பெண்களின் முன்னேற்றத்தின் பொருட்டு துவக்கப் பெற்ற "சக்ரவர்த்தினி" ஆசிரியர் பொறுப்பையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி ஏற்றுக்கொண்டார்; இந்தப் பத்திரிகையில் பதின்மூன்று மாதங்களே பணியாற்றினார்.

சுதேசமித்திர'னில் முழுக்க முழுக்கத் தேசீய சிந்தனைகளுக்கு முதலிடம் அளித்த பாரதி, 'சக்ரவர்த்தினி' மாத இதழைப் பொறுத்த மட்டில், தேசீய சிந்தனைகளுக்கு உரமூட்டிய தலைவர்களுடைய வாழ்க்கை வரலாறு, பெண் கல்வி, சமூக முன்னேற்றம் ஆகிய துறைகளிலும் தீவிர கவனமும், அக்கறையும் காட்டினார்.

'சுதேசமித்திர'னின் இதழ்களில் பாரதியின் பெயர் கவிதைகளில் மட்டுமே காணப்படுகிறது. ஆனால், 'சக்ரவர்த்தினி' இதழில் பாரதியின் எழுத்துகள் எவையெவை என்பது ஐயத்திற்கிட மின்றி அமைந்துள்ளன.

பாரத நாடு முழுதும் எழுச்சி பெற்ற தேசீய இயக்கத்திற்கு வலுவும் வனப்பும் கூட்டும் முகத்தான் 'சுதேசமித்திர'னில் பாடல்களைப் புனைந்து அளித்த பாரதி, 'சக்ரவர்த்தினி' இதழைப் பொறுத்த வரை உரைநடை வசனங் களுக்கே தனியிடம் தந்துள்ளார் என்பதை நாம் மறத்தல் கூடாது. விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய அளவில் நான்கு பாடல்களே 'சக்ரவர்த்தினி'யை அணி செய்கின்றன. 'ஷெல்லி தாஸ்' என்ற புனைபெயரில் கதையொன்றையும் எழுதி யுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதனிடையில், 1906ஆம் ஆண்டின் துவக்கத்தில் பாரதி, தேசீய இயக்க எழுச்சிக்கு ஆதரவு திரட்டும் பணிக்கான அடிப்படைச் செயற்பாடுகளை மேற்கொள்கிறார்.

பாரத மணித் திருநாட்டின் பெருமை பாடும் பாக்களை — மக்கள் நாவிலும் நெஞ்சிலும் என்றும் நிலைக்கத்தக்க தேசீய திருப்பாடல்களை— ஒருங்கிணைத்துப் பதிப்பிக்கக் கருதினார், பாரதி.

எனவே, பாரதி தம் ஆசை எண்ணத்தை விண்ணப்பம் என்றே தலைப்பிட்டு, 13-2-1906 'சுதேசமித்திரன்' இதழில் வெளியிட்டார்.

பாரத சமுதாயத்தைப் பாடிப் பரவும் புனித செயலில் ஈடுபட்ட பாரதியின் விண்ணப்ப அறிக்கையின் வாசகம் வருமாறு :—

"எமது தாய்நாடாகிய பாரதாம்பிகையின் பெருமையை வருணித்து ஆங்கிலத்திலும், தமிழிலும் பல்வேறு காலத்துப் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதி யிருக்கிறே னாதலின் பண்டைத் தமிழ் நூல்களில் பாரத நாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார்க ளாயின் அவர் - மாட்டு மிக்க கடப்பாடுடையவனாவேன். தமிழ்ப் புராணங்களிலும் இதிகாசங்களிலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டுப் படலங்களில் நிடதம் கோசலம் முதலிய பகுதிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வருணனைகள் பயன்படமாட்டா. தற்காலத்தே தமிழ்ப் புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக 'தேசபக்தி'ப் பாக்கள் புனைந்தனுப்புவராயின் அவையும் நன்றி யறிவுடன் ஏற்றுக்கொள்ளப்படும். சிறிய ஆற்றலுடையோனாகிய யான் இப் பெரிய தொழிலை நிறைவேற்றுவதன்கண்ணே எவ்வாற்றானும் துணை புரிய விரும்புவோர் கால பரியயம் செய்யலாகாதென்று பிரார்த்திக்கின்றேன்...''

(பாரதி தமிழ் : பக்கம் - 12)

ஆம்; தேசாபிமானத்தை வளர்க்கக் கூடிய பாடல்களை இயற்றி மக்களை ஈர்த்த பாரதி தமக்கு முன்னரே பல்வேறு புலவர்களால் பாடப் பெற்ற பாமணிகளை ஒருங்கிணைத்துச் சேர்த்து மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதினார். தவிர, ஆங்கில மொழியிலுங்கூட, நம் பாரத தேசத்தை வாழ்த்திப் பாடல்கள் பாடப் பெற்றிருந்தாலும் அவையும் ஏற்றுக் கொள்ளப் பெறும் என்றும் அறிவித்தார். அது மட்டுமில்லை. தமிழ்ப் புலமையில் சான்று விளங்கும் பெரு மக்களைப் 'புதியன'வாகத் 'தேச பக்தி'ப் பாடல்களைப் புனைந்தனுப்புமாறும் வேண்டினார். தம்முடைய திறமை சிறிதென்றும், மேற்கொண்ட தொழிலோ மிகப் பெரிதென்றும் சொல்லி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எப்படியேனும் இத் துறையில் தமக்குத் துணை நிற்க விரும்புவோர் காலத் தாழ்ச்சி செய்தல் கூடாதென்றும் பணிவுடன் தெரிவித்துக் கொண்டார்.

பாரதி விடுத்த வேண்டுகோளின்படி— எதிர்பார்த்து நம்பியபடி — பாரத அன்னையின் புகழ் பேசும் — பெருமை அறிவிக்கும் பாமணி களைத் தெரிந்தெடுத்தோ — புதியனவாகப் புனைந்தோ தமிழ்ச் சான்றோர்கள் அனுப்பினரா என்பது பற்றிய செய்தி இல்லை. ஆமாம் — பாரதி யாருடைய இதயப் பாங்கையும், இலட்சிய நோக்கத்தையும் புரிந்துகொண்டு, அவருக்குத் துணை புரியக் கூடிய அளவுக்கு எவரும் முன் வந்ததாகத் தெரியவில்லை.

தாம் எடுத்துக்கொண்ட பெரு முயற்சிக்கு எவரும் துணை புரிய முன்வரவில்லை என்பதைக் கண்ட பாரதி, தாமே பாரதநாடு முழுவதையும் ஒருங்கே புகழும் சுதேச பக்திப் பாடல்களைப் புனைந்தளிக்கும் திருப்பணியில் ஈடுபட்டுவிட்டார். அதனால்தான் பாரதியின் தீஞ்சுவைப் பாடலின் தேசியக் குரல் முதலில் ''சுதேச மித்திர''னில் ஒலிக்கின்றது. இதன் பின், தாம் தொடர்பு கொண்ட இதழ்களிலெல்லாம் அவர் தமிழ் வீரச் சொல்லின் சாரத்திலே தேசீய மணம் வீசும் கவிதைக் கனியைப் பிழிந்து தர முற்பட்டு விட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எவ்வாறு தெய்வ பக்தியுடன் வேத பாராயணங்களும், தேவார, திருவாசகப் பாடல்களும் பாடப்பட்டனவோ, அவ்வாறே தேச பக்தியுடனும், பாரதமாதா என்னும் ஆவேசத்துடனும் தேச கீதங்கள் பாடப்படவேண்டும் என்பதை நடைமுறைப்படுத்திய பெருமையில் பாரதிக்குப் பெரும் பங்குண்டு.

இந்த நிலையில், அதாவது—'சுதேச மித்திரன்', 'சக்ரவர்த்தினி' ஆகிய இரு இதழ்களில் பணியாற்றிக் கொண்டிருந்த பாரதிக்கு, "இந்தியா" என்னும் வாரப் பத்திரிகையுடனும் தொடர்பு ஏற்படுகின்றது. 'இந்தியா' இதழின் குறிக்கோளும், பாரதியின் குறிக்கோளும் ஒன்றாக இருந்த காரணத்தால், பாரதி 1906ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 'இந்தியா' இதழுக்கே பணிபுரியச் சம்மதித்து, மேற்குறித்த இரு பத்திரிகைகளில் தமக்கிருந்த பொறுப்புகளை நீக்கிக் கொண்டு விட்டார்.

'சுதேச மித்திரன்' இதழ் தேசீயத்தை வளர்க்கும் திருப்பணியில் முன்னணியில் நின்ற இதழாகும்; 'சக்ரவர்த்தினி' பெண்கள் கல்வி முன்னேற்றத்தின் பொருட்டு எழுந்து தொண்டு செய்த இதழாகும். ஆனால், 'இந்தியா' இதழோ நாட்டுப் பற்றிலும், பெண்கள் முன்னேற்றத்திலும், இலக்கிய வளர்ச்சியிலும் அக்கறை கொண்டிருந்த இதழாகும். அதனால், பாரதி இதில் பணிபுரிய ஒப்புக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டதில் வியப்பேது மில்லை. 'இந்தியா' இதழில் பாரதி பெயர் போட்டுக் கொள்ளாத ஆசிரியராகவே பணியாற்றினார் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

'இந்தியா' இதழில் பாரதி ஏராளமாக எழுதினார்; பல்துறை அறிவைப் புலப்படுத்தும் கட்டுரைகளை எழுதினார்; நெஞ்சில் கனல் மணக்கும் கவிதைகளை இயற்றி அருளினார்; தேசத் தலைவர்களின் சொற்பொழிவுகளை மொழிபெயர்த்து வெளியிட்டார்; உள்நாட்டு - வெளிநாட்டுச் செய்தி இதழ்களில் நம்மவர்க்குத் தேவைப்பட்ட கருத்துச் செல்வங்களை மொழி பெயர்த்து வெளியிட்டார்; சிறு கதைகளைப் புனைந்தளிக்கவும், பாரதி தவறவில்லை. இவ்வாறான படைப்புகளில் பாரதியின் பெயர் கவிதைகளில் மட்டுமே காணப்படுகின்றது; ஒருசில கதைகளிலும் பாரதியின் பெயர் இடம் பெற்றுள்ளது.

சுதந்திர தாகத்தை மக்களிடையே கவிதை, வசனம் - ஆகியவற்றின் வாயிலாக வளர்த்த பாரதி, அவசியமானபோது மேடையேறிப் பேசி யுள்ளார்; புதியனவாகப் புனைந்த - வீரரசம் செறிந்த - பாடல்களைப் பாடிப் பலருடைய கவனத்தையும் பாரதி கவரவே செய்தார்.

மற்றும், பாரதி 'இந்தியா' பத்திரிகையின் பொறுப்பாசிரியர் பணியை விரும்பி ஏற்றுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டதன் பின்னர், 'இந்தியா' அலுவலகமே ஆங்கிலத்தில் வெளியிட்ட வார இதழான Bala Bharat (பால பாரத்) என்கிற இதழுக்கும் ஆசிரியராக இருந்திருக்கின்றார். இதிலும் பாரதியின் படைப்புகள் வெளிவந்தன.

சற்று காலந் தாழ்த்திய நிலையில், வார இதழே உரிமையாளர் கை மாறி, பின்னர் "Bala Bharata or Young India" (பால பாரதா அல்லது யங் இந்தியா) என்கிற சிறு பெயர் மாற்றத்துடன் மாத இதழாக வெளியானது. இதற்கும் பாரதியே ஆசிரியர். இதிலும் பாரதியின் கைவண்ணம் சிறந்தே யிருந்தது.

இவ்வண்ணமாகப் பாரதி நாட்டு மக்களி னிடையே நாட்டுப் பற்று, நாட்டுக் கல்வி ஆகிய தர்மங்களை வளர்த்து வருவதைப் பிரிட்டிஷ் அரசினர் விரும்பவில்லை; பாரதியின் நாட்டு நலப் பணியை 'அரசு நிந்தனைக் குற்ற'மாகவே கருதி னர். அதனால், 'இந்தியா' இதழ்மீது 1908 ஆகஸ்டு மாதம் நடவடிக்கையைச் சென்னை மாகாண அரசாங்கம் மேற்கொண்டது. இதன் காரணமாக 'இந்தியா' இதழ் வெளிவருவதும் தடைப்பட்டது.

பத்திரிகையின் மீது நடவடிக்கையை மேற் கொண்டதோடு அரசு நில்லாமல், அதன் பதிவு பெற்ற ஆசிரியரையும் கைது செய்தது. இதன் தொடர்பாகப் பாரதியும் கைது செய்யப்படலாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று நண்பர்கள் எதிர்பார்த்து, பாரதியை இக்கட்டான சூழலில் சிக்க வைக்க அவர்கள் நினைக்கவில்லை. அதனால், அவர்கள் பாரதியை வற்புறுத்தி, புதுச்சேரி நகருக்குச் செல்லும்படி செய்துவிட்டனர்.

1904 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னைக்கு வந்த பாரதி, 1908ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் புதுச்சேரியைத் தஞ்சமெனக் கொண்டார்.

1904 நவம்பர் முதல் 1908 ஆகஸ்டு முடிய சென்னையில் வாழ்ந்த குறுகிய காலத்தில் பாரதி ஆற்றிய பணி ஈடு இணையற்றதாகும். இக்காலப் பகுதியில் இதழ் துறையிலும், இலக்கியத் துறையிலும், பேச்சு மேடைத் துறையிலும் பாரதி படைத்த சாதனை மிகப் பெரிது.

அரசியல் சூழ்நிலை காரணமாகப் புதுச்சேரி சென்றடைந்த பாரதி, அங்குச் சுமார் பத்தாண்டுக் காலம் வசித்தார். புதுச்சேரியிலும் பாரதி சும்மா இருக்கவில்லை. தம் மனதுக்குப் பிடித்த எழுத்துப் பணிகளைத் தொடர்ந்து ஆற்றி, அரசியல் - இலக்கியப் பரப்பை விரிவாக்கினார்.

சென்னையில் நின்று போன 'இந்தியா' இதழ் மீண்டும் புதுச்சேரியினின்றும் புதுப்பொலிவுடன் 1908 அக்டோபர் 10ஆம் தேதி முதற்கொண்டு வெளிவரலாயிற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தம் நெஞ்சத்து எழும் கருத்துகளை—அதாவது சமூக, சமய, ஆன்மிகக் கொள்கைகளை—எடுத்துரைக்க ஓர் 'இந்தியா' இதழ் மட்டும் போதாது என்று பாரதி கருதினார் போலும்!

அதனால், 1909 செப்டம்பர் 7 ஆம் தேதியன்று தொடங்கப் பெற்ற "விஜயா" என்னும் தினசரி இதழுக்கும் பாரதி ஆசிரியர் ஆனார்.

இதனைத் தொடர்ந்து பாரதியே 1910 சனவரியில் தொடங்கி நடத்திய "கர்மயோகி" மாத இதழில் பாரத நாட்டின் பெருமை, கலை, பண்பாடு, இந்து தருமத்தின் சிறப்பு — ஆகிய பொருள்கள் குறித்தும் எழுத முற்பட்டார்.

மற்றும், இதே சமயத்தில் ஆங்கிலத்தில் "Bala Bharata" என்னும் இதழையும் ஆரம்பித்து, தம் எழுத்தாற்றலைக் காண்பித்தார்.

இவை தவிர, சைகோன் சின்னையா நாயுடு அவர்களை ஆசிரியராகக்கொண்ட "சூரியோதயம்" என்கிற வார இதழுடனும், நாகசாமியை ஆசிரியராகக் கொண்ட "தர்மம்" என்னும் மாத இதழுடனும் பாரதி தொடர்பு கொண்டிருந்தார்.

ஒரே சமயத்தில் பற்பல இதழ்களில் பாரதி எழுதிக் குவித்துக்கொண்டிருந்தார். ஒரு புறம் அரசியலில் தீவிரம் காட்டினார்; இன்னொரு புறம் கலை, பண்பாடு சிறக்கப் பெரிதும் உழைத்தார். எங்கும் பாரதி — எதிலும் பாரதி என்ற நிலை இதுவேளை நிலவியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால், புதுச்சேரியிலும், பிரிட்டிஷ் அரசு கையாண்ட முறைகள் காரணமாகவும், பொருளாதார நிலை காரணமாகவும் பாரதியின் இதழ்ப் பணிகள் அனைத்தும் 1911ஆம் ஆண்டின் முற்பகுதியோடு அடியோடு தடைபட்டுப் போயின.

தம்முடைய இதழ்ப் பணிகள் யாவும் தடைப் பட்டுப் போயினமை கண்டு பாரதி நெஞ்சம் கலங்கவில்லை

வயிரமுடைய நெஞ்சு படைத்த பாரதி தம்முடைய முழு நேரத்தையும் எழுதுவதிலேயே செலுத்தினார்; நூல்கள் வெளியீடு செய்வதிலும் முனைந்தார்.

*1913-1915*ஆம் ஆண்டுகளின் காலப் பகுதி களில் தியாகசீலர் சுப்பிரமணிய சிவா அவர்களின் "ஞான பாநு" மாத இதழில் பாரதி கவிதைகள், வேதாந்தக் கட்டுரைகள், கதை, மொழி வளர்ச்சி— ஆகியன பற்றி எழுதி யுள்ளார். இந்த இதழில் பாரதி தம் சொந்தப் பெயரால் மட்டும் அல்லாமல் 'சாவித்திரி', 'நித்திய தீரர்', 'ஓர் உத்தம தேசாபிமானி' என்பன போன்ற புனை பெயர்களாலும் எழுதியதும் குறிப்பிடத்தக்க சேதியாகும்.

1914-1915 ஆகிய காலப் பகுதியில் அரவிந்தரின் Arya (ஆர்ய), அன்னிபெசன்ட் அம்மையாரின் New India (நியூ இண்டியா), common

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Weal (காமன் வீல்) ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகளிலும் பாரதியின் படைப்புகள் இடம் பெற்றுள்ளன; The Hindu (ஹிந்து) பத்திரிகையிலும் இதே காலப் பகுதியில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து எழுதியுள்ளார். இதே வேளையில் பாரதிக்குச் "சுதேச மித்திரன்" இதழோடும் மீண்டும் தொடர்பு ஏற்படுகிறது.

மற்றும் The Madras Standard (மெட்ராஸ் ஸ்டாண்டர்டு) இதழிலும் கட்டுரைகள் எழுதியிருப்பதாகத் தம்முடைய குறிப்பில் குறித்துள்ளார், பாரதி.

இப்படி இன்னும் பல உண்டு.

புதுச்சேரி வனவாசம் நீங்கி, தாய்த் தமிழகம் திரும்பிய பாரதி, சொற்பொழிவுகள் புரியவும், வாழ்க்கையின் தேவைக்காகவும் அவ்வப்போது பொட்டல்புதூர், எட்டயபுரம், காரைக்குடி, கானாடு காத்தான், சென்னை ஆகிய ஊர்களில் பயணம் மேற்கொண்டதும் உண்டு.

இதன் பின், 1920 சூலை — ஆகஸ்டு மாத வாக்கில் இரண்டாம் முறையாக மீண்டும் "சுதேச மித்திரன்" பத்திரிகையின் துணையாசிரியர் குழுவில் பணியாற்றச் சென்னை வந்துவிட்டார், பாரதி. இச்சமயம் அவர் கதைகள், கட்டுரைகள், பாடல்கள், உலகச் செய்திகள், பிற செய்திகள் ஆகிய இன்னபிற துறைகளில் தம்முடைய கவனத்தைச் செலுத்தலானார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காளிதாஸன், சக்திதாஸன் எனும் புனை பெயர்களும், இச்சமயத்தில்தான் பாரதி சூட்டிக் கொண்டார்.

மற்றும், சுதேச மித்திரன் அலுவலகமே நடத்திய "கதா ரத்னாகரம்" என்னும் மாத இதழிலும் பாரதியின் கைவண்ணம் பதிந்துள்ளது.

மொழிபெயர்ப்புத் துறையிலும், மொழி ஆக்கத் துறையிலும் தமக்கென தனி வழியை அமைத்துக்கொண்டவர், பாரதி.

தம்முடைய தமிழ்ப் பாடல்களையே சில சமயம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்; அறிஞர் பெருமக்கள் கட்டுரை, கதை, கவிதை ஆகியவற்றைத் தமிழ்ப்படுத்தி யுள்ளார்; சமஸ்கிருத மொழி நூல்களிலுள்ள சில சிறப்புமிக்க செல்வங்களையும் தமிழுக்குக் கொடையாக வழங்கிய பெருமையும் பாரதிக்கு உண்டு.

கால தேச வர்த்தமானங்களைக் கருத்தில் கொண்டு பாட்டு, வசனம், மொழிபெயர்ப்பு, மொழி ஆக்கம் - ஆகியன போன்ற இன்ன துறைகளில் உள்ளத் தூய்மையுடன் ஈடுபட்டு, வெற்றி கண்டார் பாரதி.

உள்ளத்தின் உண்மையொளியால் வாக்கினிலே ஒளியைப் பாய்ச்சிய பாரதியின் வெற்றியை நாம் களிப்போடு எடுத்துரைக்கிற போதில், அடிப்படையான ஓர் உண்மையை மறப்பதற் கில்லை; மறைப்பதற்கு மில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வசதிகளற்ற சூழலில், கவலை நிறைந்த வாழ்வில், வறுமையை உரம் போட்டே பாரதி தம்முடைய கலைச் செல்வங்களைப் படைத்தார் என்பது உண்மை; உண்மை; முக்காலும் உண்மை.

பாரதி எழுத்துகள் தாங்கிய இதழ்களில் பல பார்வைக்குக் கிட்டாத நிலை இன்னமும் நீடிக்கிறது.

பாரதியை முழு வடிவத்தில் கண்டு மகிழ வேண்டுமாயின், அவருடைய படைப்புகளைக் கால நிரல்படுத்தி ஆய்வதே நேரிய முறையாகும்.

காலமுறைப்படி ஆராய்ந்தால்தான் நாம் "பாரதி - யார்?" என்பதைத் தெளிவுற அறிந்து கொள்ள இயலும்.

நவநவமான படைப்புச் செல்வங்களை வழங்கிய பாரதி ஒரு சமயம், உண்மைக் கவிஞனுக்குள்ள இலக்கணத்தை வகுத்துக் காட்டிய ஜப்பானியக் கவிராயர் உயோநே நோகுச்சி அவர்களின் கருத்தினை எடுத்துக் காட்டி, "நோகுச்சி சொல்வதிலே அருமையான உண்மை யிருக்கிறது" என்று பாராட்டிக் கொண்டாடினார்.

ஜப்பானியக் கவிராயர் நோகுச்சி சொன்ன அருமையான உண்மை (மெய்ப் பொருள்)தான் என்ன?

"......'கூடை கூடையாகப் பாட்டெழுதி அச்சிட வேண்டும்' என்று ஒரே ஆவலுடன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எப்போதும் துடித்துக் கொண்டிருப்பவன் புலவனாக மாட்டான். கவிதை யெழுதுபவன் கவி யன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன் - வாழ்க்கையையே கவிதை யாகச் செய்தோன் - அவனே கவி. புலவனுக்குப் பணம் ஒரு பொருளன்று. வானத்து மீன், தனிமை, மோனம், மலர்களின் பேச்சு - இவற்றிலே ஈடுபட்டுப்போய் இயற்கை யுடனே ஒன்றாக வாழ்பவனே கவி."

மேற்குறித்த வசனப் பகுதிகள் கவிஞன் எத்தகைய பண்பு நலன்கள் கொண்டிலங்க வேண்டும் என்பது பற்றிப் பாரதி மிக ஆழமாகச் சிந்தித்து இருக்கிறார் என்பதைப் புலப்படுத்து கின்றன.

ஒருவகையில் பாரதியும் கவிதையையே வாழ்க்கையாகக் கொண்டார்; வாழ்க்கையைக் கவிதையாக மலரச் செய்தார்; இயற்கையுடனே ஒன்றி வாழ்ந்தார்; பணத்தை ஒரு பொருளாக - பொருட்டாக எண்ணாமலே வாழ்ந்தார் எனலாம்.

பொருட் பயன் கருதிப் பாடல் புனைவதை விரும்பாத பாரதி மக்களுக்காக, மக்கள் நலத்துக் காகக் கவிதை படைப்பதையே பெரிதும் விரும்பினார். இக் கருத்தைப் பாரதி,

"......பிறர் துன்பத்தைக் காணும்போது தனது துன்பம்போல் எண்ணி வருந்தும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயல்புடைய ஒருவனும் பிறர் துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துக் கவிதை செய்யப் பழகுவராயின், முந்தியவன் உண்மையான கவிதை எழுதுவான்; பிந்தியவன் பதங்களைப் பின்னுவான்; இவனுடைய தொழிலிலே கவிதை யிராது"

என்னும் பகுதியாலே தெளிவாக்குகிறார்.

பாரதியின் பாட்டிலே மட்டுமில்லை. பிற படைப்புகளிலும் மக்கள் நல்வாழ்வு பெற வேணவாக் கொண்டு பாடுபட்ட தன்மையை உணரலாம்.

நாட்டு மக்கள் நலமுற்று வாழவும், நானிலத்தவர் மேனிலை எய்தவுமே பாரதி தம்முடைய படைப்புகளைப் படைத்தார்.

இதுவரை பாரதி இலக்கியங்களின் தோற்றத் தையும் வளர்ச்சியையும் ஒருவாறு கண்டோம்.

பாரதியின் எழுத்து வளர்ச்சியையும், எண்ண முதிர்ச்சிகளையும், அரசியல் ஈடுபாட்டையும், சமூக சீர்திருத்த பாங்கையும், வேதாந்த ஞான அறிவையும் தெளிவாக அறியவேண்டுவோர் பாரதி யின் எழுத்துலக — அரசியல் உலக பிரவேசத்தைக் கருத்தில் கொண்டு வரலாற்று அறிவுடன் ஆராய வேண்டுவது, காலத்தின் தேவையாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4

பாரதி மேற்கொண்ட தொடக்க கால நூல் வெளியீட்டு முயற்சிகள்

பாரதி 'சுதேச மித்திரன்' இதழில் பணி யாற்றிய காலத்தில், பாட்டு வழியாகத் தேச பக்தியை வளர்க்க முற்பட்டு, 'பாரத மாதா' வுக்குத் தேச பக்திப் பாடல்களைப் பாமாலை யாக்கி அணிவிக்க ஆசைகொண்ட செய்தியை முன்னரே பார்த்தோம்.

'இந்தியா' இதழில் பாரதி பணியாற்றிய காலத்திலும் தம்முடைய பாடல் நூலை வெளியிட வேண்டும் என்பதிலும் தீரா ஆவல் கொண் டிருந்தார்.

தற்காலப் பதிப்புகளில் சத்ரபதி சிவாஜி என்ற தலைப்பில் காணப்படும் பாடலுக்குப் பாரதியே தந்த தலைப்பு சிவாஜி தனது சைநியத்தாருக்குக் கூறியது என்பதாகும்.

தேசீய எழுச்சிக்கு வலிமைதரும் பொருட் டாகச் சரித்திரத் தொடர்பான செய்திகளை இணைத்து 'இந்தியா' இதழில் 17.11.1906 இதழ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொடங்கி 8.12.1906 தேதியிட்ட இதழ் வரையி லான நான்கு வார இதழ்களில் தொடர்ச்சியாகப் பாரதி 'சிவாஜி தனது சைநியத்தாருக்குக் கூறியது' என்னும் பாடலை வெளியிட்டார். 'இன்னும் வரும்' என்று தெரிவிக்கப்பட்டிருந்தும் 15.12.1906 இதழில் தொடராமல், பாடல் முற்றுப் பெறாத அரைகுறை வடிவிலேயே நின்றுவிட்டது.

அரைகுறை வடிவிலே நின்றுவிட்டமைக்குக் காரணம் யாதாக இருக்கமுடியும்?

பாடல் ஆரம்பமான இதழில்,

> "...... சரித்திர சம்பந்தமான செய்யுட்கள் புனைவதில் இக்காலத்துத் தமிழர்கள் சாதாரணமாகப் பிரவேசிப்பதில்லை. எனினும், சுதேசப்பற்று மிகுதிப்படுவதற்கு மேற்கூறிய விதமான செய்யுட்கள் மிகவும் அவசியமானவை... இந்தச் செய்யுள் முடிந்தவுடன் புஸ்தக ரூபமாய் வெளியிடக் கருதியிருக்கின்றோம்"
>
> (இந்தியா : 17.11.1906)

என்ற செய்தி பிரசுரமாகியுள்ளது.

மேற்சொன்னவாறு, அறிவிப்புச் செய்திருந்தும், செய்யுளும் முடிவு பெறவில்லை; நூலாகவும் வெளிவரவில்லை.

செய்யுள் முடிவு பெறாமல் இடையில் நின்றதற்கான செய்தி 'இந்தியா' இதழ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8.12.1906ஆம் தேதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது வருமாறு:

"'சிவாஜி தனது சைநியத்தாருக்குக் கூறியது' என்ற தலைப்பின்கீழ் சென்ற 4 வாரங்களாக இப் பத்திரிகையிலே எழுதி வரப்பட்ட அகவற்பாவின் தொடர்ச்சி அடுத்த முறை பிரசுரிக்கப்படமாட்டாது. ஆசிரியரின் நண்பர்கள் சிலர் அதனை ஓர் புத்தக ரூபமாக வெளியிட வேண்டுமென்று விரும்பிக்கொண்டபடியால், அதற்கிணங்க, இன்னும் பின்னுமுள்ள தொடர்ச்சியையும் சேர்த்து முழுப் புத்தகமாகப் பிரசுரம் செய்யப்படும். இதிலே அரும் பதவுரை, முகவுரை, சிவாஜி மகா ராஜாவின் சரித்திரம், சிவாஜியின் சித்திரம் என்ற பல புதுமைகள் சேர்த்து மிகவும் உயர்ந்த கிளேஸ் (பளபளப்புக்) காகிதத்திலே அமெரிக்கா தேசத்துக் கவிப் புஸ்தகங்களின் மாதிரியாக அச்சிடப் பெற்று வருகின்றது. இம் மாத கடைசிக்குள் வெளியாகிவிடும்.

இதன் விலை அணா 6. 'இந்தியா' பத்திரிகை சந்தாதார்களுக்கு மாத்திரம் குறைந்த விலையாக 4 அணாவுக்குக் கொடுக்கப்படும். குறைந்த தொகையுள்ள பிரதிகளே அச்சிடப் பெறுவதால் வேண்டுவோர் 'இந்தியா' பத்திரிகை மானேஜருக்கு வெகு சீக்கிரத்தில் எழுதித் தெரிவித்துக் கொள்ள வேண்டும்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

17.11.1906 ஆம் தேதியிட்ட இதழில் செய்யுள் முடிந்தவுடன் நூலாக வெளிடக் கருதி யிருப்பதாக அறிவிப்புச் செய்தி வெளி வந்ததைத் தொடர்ந்து, 8.12.1906 ஆம் தேதியிட்ட இதழில், நான்கு வாரங் களாக வெளிப்பட்ட செய்யுள் தொடர்ச்சி இனி வெளிவராது என்றும், ஆசிரியரின் நண்பர்கள் நூலாக வெளியிடவேண்டும் என்று மிக விரும்பிக் கேட்டுக் கொண்டதன் காரணமாக எஞ்சிய பகுதி களுடன் முழு நூலாக வெளியிடப்படும் என்றும், அந் நூல் பதிப்பிக்கும்முறை இன்ன விதம் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆம்; பாரதியின் நண்பர்கள் கேட்டுக் கொண்டதற் கிணங்க நூல் முயற்சியை மேற்கொள்கிற காரணத்தால், செய்யுளின் தொடர்ச்சி பிரசுரமாகவில்லை என்பதை நாமறி கிறோம்.

புதுமைகள் கொண்ட இச் செய்யுள் நூல் 1906 டிசம்பர் மாத இறுதிக்குள் அறிவிப்புச் செய்தபடி வெளிவரவில்லை; 1907 ஜனவரி மாதமும் கடந்துவிட்டது.

1907 பிப்ரவரி 9 ஆம் தேதிய 'இந்தியா' இதழில் பின்கண்ட முறையில் விளம்பரம் ஒன்று பிரசுரமானது. விளம்பரம் தரும் தகவல் யாது?

சிவாஜியின் படை யழைப்பு

பெப்ருவரி மாதம் 15ம் தேதிக்குள் வெளியாகிவிடும்.

ஸ்ரீ. C. சுப்பிரமணிய பாரதியால் இயற்றப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(1) இந்து சிவாஜி மகாராஜா தனது விரோதிகளை போர் செய்தழிக்கும்படி தனது படைகளைத் தூண்டுமாறு கூறியதாக வரையப்பட்டுள்ளது.

(2) மிகுந்த வீர ரஸம் பொருந்தியது.

(3) தக்க பண்டிதர்களால் வியந்து கூறப்பட்டுள்ளது.

(4) பாரத நாட்டின் புராதன மாண்பையும், வீரத் தன்மையையும் மதிப்போர் அனைவராலும் அவசியம் படிக்கத்தக்கது.

சிவாஜியின் சித்திரம், சரித்திரம், முகவுரை, அரும்பத வுரை முதலியவை சகிதமாகப் பிரசுரிக்கப்படும்.

விலை அணா 8.

'இந்தியா' என்னும் வாராந்த தமிழ்ப் பத்திரிகையின் சந்தாதார்களுக்கு மாத்திரம் விலை அணா 6.

வேண்டியவர்கள் உடனே சென்னை ஜார்ஜ் டவுன் பிராட்வே இந்தியா ஆபீசு மானேஜருக்கு எழுதிக் கொள்ள வேண்டும்.

இவ் விளம்பரத்தில் அறிவித்திருந்தபடி 1907 பெப்ரவரி 15ஆம் தேதியன்று மட்டுமன்று - அதற்குப் பின்னரும் நூல் வெளிவந்ததாகச் செய்தி இல்லை.

முற்றிலும் வீர ரசம் கொண்டதும் சிவாஜியின் சரித்திரத்தைத் தெள்ளத் தெளிவாகப் புலப் படுத்திக் காட்டுவதுமான நூல் பாரதியார் விரும்பியபடி - ஆசையாக எதிர்பார்த்தபடி - புதுமைகள் பல சேர்க்கப்பட்டும், உயர்ந்த தாளிலே அமெரிக்க தேசத்துக் கவிஞர்களின் நூல்களுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இணையாகச் சொல்லும்படியாக அச்சிடப்பெற்று பிரசுரமாகவில்லை. நூல் முயற்சி துவக்கக் கட்டத்திலேயே கைவிடப்பட்டது.

ஆக, பாரதி விரும்பியபடி, விளம்பரச் செய்திகளில் தெரிவித்திருந்தபடி சிவாஜி பாடல் நூலாக்கம் பெறவில்லை.

பாடல் நூல் வடிவம் பெறாமல் போனதற்கான காரணத்தைப் பாரதியுடன் நன்கு பழகியவரும், முதிர்ந்த பத்திரிகையாளருமான திரு. எஸ்.ஜி. ராமாநுஜலு நாயுடு என்பவர் தம்முடைய "சென்று போன நாட்கள்" என்னும் தொடர் கட்டுரையில் 1928ஆம் ஆண்டில்,

> "......'இந்தியா' பத்திரிகை வரவரக் காரமாகிவிட்டது. 'சிவாஜி தன் சைன்யத்தாருக்குக் கூறியது' என்று அகவல் ரூபமாய் 'பாஞ்சாலி சபதம்' போல் பெருங் காவியமாகத் தொடர்ச்சியாய் பத்திரிகையில் எழுதிவந்தார். அது முற்றும் வீர ரஸமாய் இருந்தது. அதனைத் தனிப் புஸ்தக உருவமாய் வெளியிடுவதற்குப் பாரதியார் விரும்பினார். அது ஆபத்தென அவரது நண்பர்களால் தடுக்கப்பட்டது"

என்று குறிப்பிட்டுள்ளார்.

சிவாஜி பாடல்களை நூலாக்கி வெளியிட வேண்டும் என நண்பர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இதழில் சிவாஜி பாடலின் எஞ்சிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதிகள் வெளிவரவில்லை; நூல் வடிவில் வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலும் நண்பர்கள் தடுத்துவிட்டனர். இது வருத்தப்படக் கூடிய சேதியாகும்.

இதே காலப் பகுதியில் பாரதி மேற்கொண்ட பிறிதொரு நூல் வெளியீட்டு முயற்சியும் உடனடியாகக் கைகூடவில்லை என்னும் சேதியும் வேதனையைத் தருவதாக உள்ளது.

எந்த சிவாஜி பாடல் நூல் 1907 பெப்ருவரி 15ஆம் தேதிக்குள் வெளியாகிவிடும் என்று விளம்பரம் செய்யப்பட்டதோ, அதே இதழில் அந்த விளம்பரத்தின் தொடர்ச்சியாக,

> அச்சிலிருக்கின்றது. உடனே வெளியாகிவிடும்.
>
> சொற்பப் பிரதிகளே போடப்படுகின்றன.
>
> புஸ்தகம் வேண்டுவோர் இதுகண்ட தக்ஷணமே எழுதிக் கொள்ளவேண்டும்.
>
> மகரிஷி பால கங்காதர திலகரால் செய்த "புதிய கட்சியின் கோட்பாடுகள்" என்ற உபந்நியாசம்.
>
> இங்கிலீஷ் உபந்நியாசமும் ஸ்ரீ C. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய தமிழ் மொழிபெயர்ப்பும். திலகரின் சித்திர சகிதமாகப் பிரசுரிக்கப்படும்.
>
> நமது ஆபீசில் பிரசுரமாகும் "சிவாஜியின் படையழைப்பு" என்ற புத்தகத்தை வாங்கும் நமது சந்தாதாரர்களுக்கு இப் புத்தகம் இனாமாக அனுப்பப்படும்.
>
> மற்றவர்களுக்கு விலை அணா-2.

என்கிற தகவலும் காணப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள 'புதிய கட்சியின் கோட்பாடுகள்' என்ற நூலும் அதுசமயம் வெளிவரவில்லை; பின்னரே வெளிவந்தது.

ஆக, 1906ஆம் ஆண்டில் பாரதி மேற்கொண்ட நூற் பதிப்புப் பணியும் நூல் வெளியீட்டு முயற்சியும் கைகூடவில்லை.

தம் காலத்திய தமிழ் நூலாசிரியர் நிலை, அவர்களின் தரம், மக்களின் ரசனை ஆகியன குறித்துப் பாரதி பின்னொரு சமயம் குறிப்பிடும் போது,

"......இக் காலத்தில் தமிழ் நூலாசிரியர் படுங் கஷ்டங்களை ஈசனே தீர்த்து வைக்க வேண்டும். உண்மையான கவிதைக்குத் தமிழ் நாட்டில் தக்க மதிப்பில்லை. இங்கிலீஷ் பாஷையிலிருந்து கதைகள் மொழிபெயர்த்துப் போட்டால் பலர் வாங்கி வாசிக்கிறார்கள்; அல்லது இங்கிலீஷ் முறையைத் தழுவி மிகவும் தாழ்ந்த தரத்தில் பலர் புது நாவல்கள் எழுது கிறார்கள்; அவர்களுக்குக் கொஞ்சம் லாப மேற்படுகிறது. தமிழில் உண்மையான இலக்கியத் திறமையும் தெய்வ அருளும் பொருந்திய நூல்கள் எழுதுவோர் ஒருசிலர் தோன்றி யிருக்கிறார்கள். இவர்களுடைய தொழிலை அச்சடிப்பாரில்லை; அச்சிட்டால் வாங்குவாரில்லை. அருமை தெரியாத ஜனங்கள் புதிய வழியில் ஒரு நூலைக் காணும் போது அதில் ரஸமனுபவிக்க வழியில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இங்கிலீஷ் படித்த ''ஜனத் தலைவர்'' காட்டும் வழியையே மற்றவர்கள் பிரமாணமென்று நினைக்கும்படியான நிலைமையில் தேசம் இருக்கிறது. இந்தப் 'பிரமாணஸ்தர்கள்' தமிழ் நூல்களில் புதுமையும் வியப்பும் காணுவது சாத்தியமில்லை என்ற நிச்சயத்துடனிருக்கிறார்கள். ஆகவே, நூலாசிரியர், தமக்குத் தெய்வம் காட்டிய தொழிலிலே மேன்மேலும் ஆவலுடன் பாடுபட வழியில்லாமல், வேறு தொழில் செய்யப் போய் விடுகிறார்கள்.

காலஞ்சென்ற ராஜமையர் புதிதாகத் தமிழ்க் கதை எழுதுவதில் உண்மையான திறமை காட்டி யிருக்கிறார். அவருக்குத் தகுந்த ஸம்மானமில்லை. ஆதலால், அவர் அந்தத் திறமையை மேன்மேலும் வளர்த்துக் கொண்டுபோக இடமில்லாமல், ஆரம்பத்திலேயே கைவிட்டு, இங்கிலீஷ் மாதப் பத்திரிகை நடத்தப் போய்விட்டார். ஜமீன்தார்கள் மீதும், பிரபுக்கள் மீதும் 'காமா சோமா' என்று புகழ்ச்சிப் பாட்டுக்கள் பாடினால், கொஞ்சம் ஸம்மானம் கிடைக்கிறது. உண்மையான தொழிலுக்குத் தகுந்த பயன் கிடைக்கவில்லை. மேற்படி 'பிரமாணஸ்தர்' தமிழ் மணத்தை விரும்பாமல் இருந்ததால், இந்த நிலைமை உண்டாய் விட்டது''

என்று தெளிவாக எழுதியுள்ளமையைக் காண்க.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி காலத்தில் தமிழ் நூலாசிரியர்கள் தகுந்த வருமானம் கிடைக்கப்பெறாமல் கஷ்டப் பட்டிருக்கிறார்கள். ஒருசிலர் தரம் குறைந்த நடையில் ஆங்கில மொழியைத் தழுவி எழுதிய தால் ஓரளவு சம்பாதிக்கவும் முடிந்தது. ஆங்கில மொழியிலுள்ள நாவல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டால், அவற்றை வாங்கிப் படிக்க வாசகர்கள் ஆசை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள்.

தமிழில் உண்மையான இலக்கியத் திறமை கொண்டோருடைய நல்ல நூல்களை அச்சிட முன்வருகிறவர்கள் இல்லை. தப்பித்தவறி அச்சிடப் பட்டால்கூட வாங்கிப் படிப்பவர்கள் கிடையாது. இந்தக் காரணங்களால் தமிழ் நூலாசிரியர்கள் தம்முடைய தொழிலில் தொடர்ந்து நீடிக்காமல், வேறு தொழில் செய்யப் போய்விட்டார்கள்.

செல்வந்தர்கள்மீது ஏதோ 'காமா சோமா' என்று புகழ்ச்சியாக எழுதினால் வரும்படி (வருமானம்) கிடைக்கும் என்ற போக்கு நிலவியதைப் பாரதி வெறுத்தார். அதோடு மட்டு மில்லை - உண்மையான தொழிலுக்குத் தக்க மதிப்பில்லாத போக்கைக் கண்டு மனம் வெதும்பினார். தமிழ் மணத்தை விரும்பாமல் இருந்த ஆங்கிலம் கற்ற படிப்பாளிகளால்தாம் மேற்குறித்த அவலநிலை நீடிக்கிறது என்பதையும் பாரதி சுட்டிக்காட்டினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திறமான தமிழ்க் கவிதைக்குத் தமிழ்நாட்டில் தக்க மதிப்பில்லாத காலத்தில் - இலக்கியத் திறமையும், தரமும் கொண்ட நூலாசிரியர்களை மக்கள் ஆதரிக்க முன்வராத காலத்தில் - ஆங்கில நாவல்களைத் தழுவி மிகவும் தாழ்ந்த தரத்தில் எழுதிப் பொருள் சேர்க்கும் நோக்கமுடைய நூலாசிரியர்கள் பெருகியிருந்த காலத்தில் - பாரதி பூமண்டலம் முழுதிற்குமான புதிய விழிப் பொன்றை ஆரம்பம் செய்வதற்கான எழுத்துப் பணியில் ஈடுபட்டார்; தமிழரசியைத் தமது வாக்கிலும் மனதிலும் கொலுவிருக்கும்படி செய்து, படித்த படிப்பாளிகள் வணங்க வேண்டுமென்பதற் காகவும் பாரதி படாதன பட்டார்.

இன்னும் சொல்லப்போனால், பாரதி இதழ்ப் பணி புரியத் துவங்கிய காலத்தில், தமிழ் நாட்டிலே நூல் வெளியீட்டுத் தொழில் அவ்வளவாகச் சிறந்து விளங்கவில்லை. நூல் பதிப்புத் துறையையும் தொழிலெனக் கருதி, மதித்துத் தொழிற்படப் பணம் படைத்தோர் முன்வரவில்லை. அதே வேளையில், தமிழகத்தில் இன்னுமொரு விசித்திர மும் விநோதமும் கொண்ட போக்கும் நிலவியது. தமிழிலே உண்மையான திறமை காட்டி, தமிழிலே எழுதுவோர்க்குச் சம்மானம் கிடைக்காத நிலை ஒருபுறம் இருக்க, அவர்களும் தங்களுடைய தரமான படைப்புகளை வெளியிடக் கைம் முதல் இல்லாத காரணத்தால் மிகவும் அவதிப்பட்டனர்; படைப்பாளிகள் பொருளாளிகளாகவும் இருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விட்டால் சங்கடமில்லை. அவர்கள் தம்முடைய பணத்தைக் கொண்டு சொந்தமாகத் தம் நூல்களைப் பதிப்பித்து வெளியிடவே செய்தனர்.

இனி, பதிப்புத் தொழில் பற்றிய கருத்தைப் பாரதி வாய்மொழியாகவே கேட்போம்:

"தமிழ்நாட்டிலே புஸ்தகம் எழுதுவோரின் நிலைமை இன்னும் சீராகவில்லை. பிரசுரத் தொழிலை ஒரு வியாபாரமாக நடத்தும் முதலாளிகள் வெளிப்படவில்லை யாதலால், சங்கடம் நீங்காம லிருக்கிறது. புதிய புஸ்தகங்களைப் படித்துப் படித்து, 'பயன்படுமா படாதா'வென்று தீர்மானம்செய்யவேண்டும். 'நன்றாக விலையாகுமா விலையாகாதா' என்பதை ஊகித்தறிய வேண்டும். ஆசிரியரிடமிருந்து புஸ்தகத்தை முன்விலையாகவோ, வேறுவித உடன்பாடாகவோ வாங்கிக் கொண்டு தாம் அச்சிட்டு லாபம் பெற வேண்டும். இந்த வியாபாரத்தை நமது தேச முதலாளிகள் தக்கபடி கவனியாம லிருப்பது வியப்பை உண்டாக்குகிறது. புஸ்தகங்கள் வெளிவரத்தான் செய்கின்றன. பெருந் தொகையான ஜனங்கள் வாங்கிப் படிக்கத் தான் செய்கிறார்கள். ஒரு ஒழுங்கான பிரசுர வியாபாரம் நடந்தால் ஜனங்களுக்கு நல்ல புஸ்தகங்கள் கிடைக்கும். இப்போது அச்சிடப் பணமுள்ளவர் எழுதும் புஸ்தகங்களே பொது ஜனங்களுக்குக் கிடைக்கின்றன. பெரும்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாலும் பழைய புஸ்தகங்களிலே ஆச்சரியமானவை பல எழுதப்பட்ட காலத்தில், ஆசிரியர் தனவந்தராக இருந்ததில்லை. மேன் மேலும் ஊக்கத்துடன் நடத்தினால் பிரசுர வியாபாரத்தில் நிறைய லாபம் உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை."

ஆக, பதிப்புத் தொழிலை நமது நாட்டுச் செல்வந்தர்கள் தக்கபடி கவனியாதிருந்த சூழலில், பாரதி தம்முடைய எழுத்துகளை நூல் வடிவாக்க விரும்பினார்.

பாரதி சற்றும் எதிர்பாராத நிலையில், 1907ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில், அவருடைய மூன்று பாடல்களைச் சிறு வெளியீடாக - இலவசமாகவே அச்சிட்டு வழங்கினார் திரு. வி. கிருஷ்ணசாமி அய்யர். இலவச வெளியீட்டின் பெயர் "ஸ்வதேச கீதங்கள்" என்பதாகும்.



வி. கிருஷ்ணசாமி அய்யர்

நூலாக்கம் பெற்ற முதல் சிறு வெளியீடு என்ற பெருமை இதற்குண்டு. "ஸ்ரீ சுப்பிரமணிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியால் இயற்றப்பட்டவை” என்ற வாசகம் கொண்ட 'ஸ்வதேச கீதங்கள்' எனும் சிறு நூலில்,

வந்தே மாதரம் [வந்தே மாதரம் என்போம்]
நாட்டு வணக்கம் [எந்தையுந் தாயு மகிழ்ந்து]
எங்கள் நாடு [மன்னுமிமய மலை]

ஆகிய மூன்று பாடல்கள் இடம் பெற்றன.

அரசியல் காரணங்களுக்காகப் பாரதி பல்வேறு சந்தர்ப்பங்களில் கிருஷ்ணசாமி அய்யரைக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

அரசியல் கருத்துகளில் பாரதியும், கிருஷ்ணசாமி அய்யரும் வேறுபட்டவர்கள்.

திலகரின் அச்சமற்ற தேசாவேசத்தால் ஈர்க்கப்பட்ட பாரதி, அவரைக் “குரு” என்றே ஏற்றுக்கொண்டவர். அவருடைய கொள்கைகளைப் பரப்புவதும், அவரை எவரேனும் கொள்கை மாறுபாடு காரணமாகப் பழித்துப் பேசினால் மறுப்புரை அளிப்பதும் தம்முடைய தலையாய பணி என்றே பாரதி கருதியவர்; அதன்படி செயலாற்றியவருங்கூட.

கிருஷ்ணசாமி அய்யரோ மிதவாதக்கொள்கைகளைப் பற்றி நின்றவர்; கோகலே அவர்களின் தலைமையிலே நம்பிக்கை கொண்டவர்; சூழ்நிலை காரணமாகத் திலகரைச் சாடியவர்.

திலகர் பெருமகனாரைக் கிருஷ்ணசாமி அய்யர் சாடிய நேரத்திலும், பழித்து எழுதிய போதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி சற்றும் தயங்காமல் அவரை மிகக் கடுமையான வாசகங்களால் வருணிக்கவும் செய்தவர்.

ஆனால், பாரதியின் கவிதை யழகிலே சொக்கிப் போன கிருஷ்ணசாமி அய்யர் அரசியல் விமர்சனங் களை மனத்திடைக் கொள்ளாமல், 'ஸ்வதேச கீதங்கள்' என்னும் சிறு நூலை வெளியிட்டார்.

இச் சிறு நூல் எழுந்த சூழல் பற்றிக் கிருஷ்ணசாமி அய்யரின் புதல்வர் திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர் என்பார் 1936ஆம் வருடத்திய "ஆனந்த விகடன் தீபாவளி மல"ரில் "நம் கவிச் சக்கரவர்த்தி" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி யுள்ளார்.

அக் கட்டுரையில்,

"இருபத் தொன்பது வருஷங்களுக்கு முன் ஒரு நாள் - வெள்ளிக்கிழமை - மாலை என் தகப்பனார், தம்மைப் பார்க்க வந்த சிலரோடு வீட்டு வெளி வாசலில் பேசிக்கொண்டிருந் தார். அச் சமயம் அவருடைய நண்பரான ஸ்ரீமான் ஜி.ஏ. நடேச அய்யர் இளமைப் பருவத்தினரான ஒருவரை அழைத்துக் கொண்டு அவ்விடம் வந்தார். என் தந்தை யாரிடம், 'இவர் நல்ல தமிழ்ப் பாட்டுப் பாடக் கூடியவர்; தாமே சில தமிழ்க் கவிகள் செய்திருக்கிறார்; தங்களுக்குத் தற்சமயம் ஸௌகரியமானால் அவரைப் பாடச் சொல் கிறேன்' என்று சொன்னார். கச்சேரியில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாதம் செய்து களைத்து வீட்டிற்குத் திரும்பி வந்ததும் தமிழ்ப் பாடல்களைக் கேட்டு மகிழும் வழக்கம் என் தகப்பனாருக்கு உண்டு. ஆகையால், அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி, அப்படியே ஆகட்டும் என்றார். ஸ்ரீமான் நடேச அய்யர் கெட்டிக்காரரானதால் அவ் விளைஞரின் பெயர் இன்னதென்று சொல்லவில்லை; என் தந்தையாரும் அவர் பெயரைக் கேட்கவில்லை. அனுமதி கொடுத்தவுடன் அந்த இளைஞர் கம்பீரமான சக்தி வாய்ந்த குரலில் இன்னிசையுடன் சொற்களைக் கேட்போருக்குப் பொருள் விளங்கும்படி நன்குரைத்துத் தாம் இயற்றிய கீதங்களுள் இப்பொழுது பிரஸித்தமாய் விளங்கும் "வந்தே மாதரம் என்போம்" என்னும் பாடலைப் பாடினார். ஒன்றிரண்டு பாட்டுகள் முடிந்தவுடனேயே அந்த கீதத்தின் சுவையினாலும் தேசத்தின் அன்பை ஊட்டும் இனிய தமிழ்

ஜி. ஏ. நடேச அய்யர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழிகளாலும் என் தந்தை மனங் களித்து, அவர் இயற்றியுள்ள மற்றுமுள்ள தேசீய கீதங்கள் எல்லாவற்றையும் பாடவேண்டு மென்று உற்சாகத்துடன் அவரைத் தூண்ட லானார். வீடு முழுவதும் இவர் கீதங்களின் ஒலி பரவ, ஆங்காங்கே விளையாடிக்கொண் டிருந்த நானும் என் போன்ற சிறுவர்களும் அதைக் கேட்க ஆவலுடன் அங்கு வந்தோம். அப்பொழுது நடந்த யாவும் நன்கு என் மனத்தில் பதிந்தன. எத்தனையோ காலத் துக்குப் பிறகு இப்பொழுது நினைத்தாலும் அப் பாடல்களின் ஒலியும் பாடினோரின் உருவமும் நன்கு நினைவிற்கு வருகின்றன.

'நாட்டு வணக்கம்', 'எங்கள் நாடு' என்ற இரண்டு கீதங்களையும் அப்பொழுது அவர் பாடினார். இதற்குள் அப் பாடல்களைக் கேட்டு மனமுருகி அவருடைய கல்விச் சிறப்பில் ஆச்சரியமடைந்த என் தகப்பனார் நடேச அய்யரிடம், "இவர் யார்? இவர் பெயரென்ன? இவருக்கு எந்த ஊர்? இவர் எந்த வேலையில் இருக்கிறார்?" என்று வேகமாகக் கேட்கத் தொடங்கினார். அந்தச் சமயம் சிறிது பயந்து மெல்ல மெல்ல ஸ்ரீமான் நடேச அய்யரவர்கள் "இவர்தான் சுப்பிரமணிய பாரதி என்பவர். சூரத்தில் நடந்த காங்கிரஸ் மஹாஸபையில் சென்னையிலிருந்து வந்த மிதவாதிகளை எதிர்த்துப் பேசினவர்களில் முக்கியமானவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவர். கீர்த்தி வாய்ந்த ஜி. சுப்பிரமண்ய அய்யரவர்களுக்கு மிகவும் வேண்டியவர். தங்களைச் சில சமயம் ஏசி எழுதியிருக்கிறார். அதனால் கொஞ்சம் பயத்துடனேதான் அவரை இங்கே அழைத்து வந்தேன்'' என்று நகைப்புடனும் வெட்கத்துடனும் பதிலளித்தார். அப்பொழுது என் தந்தை, "அது எப்படி யிருந்தாலும் இருக்கட்டும். இவரைப் போன்ற தமிழ்க் கவியை நான் கண்டதில்லை. இக் காலத்திற்குத் தக்கவர் இவர்தான். இவர் பாடல்களை அச்சிட வேண்டும். தேச முழுவதும் பரவச் செய்யவேண்டும். பள்ளிக் கூடத்தில் ஒவ்வொரு மாணவனும் நன்குணர்ந்து பாடும்படி செய்து தேசபக்தி உண்டாக்க வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே, "என்ன செலவாகும்? அதற்குத் தக்க உதவியை இப்பொழுதே நான் செய்கிறேன்'' என்று வாக்களித்தார்.

அவர் விரும்பியபடியே அம் மூன்று கீதங்களும் சீக்கிரம் ஒரு சிறு புத்தகமாக அச்சிடப் பட்டன. அதன் பல பிரதிகளை அநேகம் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி வைத்தார்''

என்று நினைவுகூர்ந்துள்ளார்.

பாரதியின் உற்ற நண்பரும், நல்ல ரசிகருமான திரு.வி. சக்கரை செட்டியார் அவர்கள் மொழியில் சொல்வதானால், "பாரதியாரின் கவிதை உருக்கந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தான் ஒரு ராஜீய எதிரியிடமும் இந்தப் புகழ்ச்சியை வெளியாக்கியது" எனலாம்.

ஆக, பாரதியை அரசியல் காரணங்களுக்காகப் பகைத்தவர்களுங்கூட, அவருடைய கவிதைகளைப் புகழ்ச்சி செய்யாமல் இருக்க இயலவில்லை என்பதை நாம் உணர்கிறோம்.

மூன்று பாடல்களே கொண்ட "ஸ்வதேச கீதங்கள்" நூலைக் கண்ட பலர், பாரதியின் கொஞ்சு தமிழ்ப் பாடல்களிலே தங்கள் உள்ளங்களைப் பறிகொடுத்தனர். ஒரு சிலர் இத் துறையில் பாரதியை ஊக்கிவிட வேண்டும் என்கிற எண்ணங் கொண்டு, உதவி செய்யவும் முன் வந்தனர். அங்ஙனம் உதவி செய்ய முன் வந்தவர்களின் துணையோடு பாரதி 1908 ஜனவரியில் "ஸ்வதேச கீதங்கள்" (முதல் பாகம்) என்னும் நூலைப் பதிப்பித்து வெளியிட்டார்.


VANDE MATARAM

NATIONAL SONGS.

வந்தே மாதரம்.

ஸ்வதேச கீதங்கள்

ஸ்ரீ. சுப்பிரமணிய பாரதியால்,

இயற்றப்பட்டவை.

இதன் விலை அணா 0 2

1908.

All Rights Reserved

THE INDIA STEAM PRINTING WORKS, MADRAS.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நம் நாட்டவர்க்குப் புதுவழியையும், நல்வழியையும் கற்பிக்க வந்த இத் தொகுதியில் பாரதியின் பாடல்கள் பதினாறு இடம் பெற்றன.

பாரதியின் பாடல்களே யன்றி, மதுரை முத்து குமாரப் பிள்ளை என்பவர் இயற்றிய 'என் மகன்' என்றவொரு பாடலும் இத் தொகுதியுள் காணப் படுகின்றது. அப் பாடலை அவரது அனுமதி பெற்றுத் தாம் வெளியிட்டுள்ளதாகவும் பாரதி குறித்துள்ளார்.

"ஸ்வதேச கீதங்கள்" என்னும் நூல் பின்வரும் சமர்ப்பணத்தோடும் முகவுரையோடும் கூடியது.

ஸமர்ப்பணம்

ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவ ரூபம் காட்டி ஆத்தும நிலை விளக்கிய தொப்ப, எனக்குப் பாரத தேவி யின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேச பக்தி யுபதேசம் புரிந்தருளிய குருவின் சரணமலர்களில் இச் சிறு நூலை ஸமர்ப்பிக்கின்றேன்.

ஆசிரியன்

முகவுரை

ஒருமையும் யௌவனத் தன்மையும் பெற்று விளங்கும் பாரத தேவியின் சரணங் களிலே யான் பின்வரும் மலர்கள் கொண்டு சூட்டத் துணிந்தது எனக்குப் பிழை யென்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோன்றவில்லை. யான் சூட்டி யிருக்கும் மலர்கள் மணமற்றன வென்பதை நன்கறிவேன். தேவலோகத்துப் பாரிஜாத மலர்கள் சூடத் தகுதி கொண்ட திருவடிகளுக்கு எனது மணமற்ற முருக்கம் பூக்கள் அணிக்குறைவை விளைக்குமென்பதை நான் தெரிந்துள்ளேன். ஆயினும் உள்ளன்பு மிகுதியால் இச் செய்கையிலே துணிவு கொண்டு விட்டேன். சாக்கியன் எறிந்த கற்களையும் சிவபிரான் மலர்களாகக் கருதி அங்கீகரிக்கவில்லையா? அதனை யொப்ப, எனது குணமற்ற பூக்களையும் பாரத மாதா கருணையுடன் ஏற்றருளுக!

C. சுப்பிரமணிய பாரதி

குறிப்பு : இந்தப் பாடல்களை பிரசுரிக்குமாறு என்னைத் தூண்டி, இவை வெளிப்படுவதில் மிகுந்த ஆவல் காட்டி உதவிகளியற்றிய மித்திரர்களிடம் மிக்க நன்றி பாராட்டுகின்றேன்.

ஜனவரி மீ 10உ 1908ளு
மைலாப்பூர்.

இனி, இப் பாடல் தொகுதியில் இடம் பெற்றுள்ள பாடல்களுக்கான விவரத்தைக் காண்போம்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. வந்தே மாதரம்
2. வந்தே மாதரம்
3. நாட்டு வணக்கம் - ஸ்வதேச வந்தனம்
4. எங்கள் நாடு
5. புது வருஷம்
6. லாஜபத்ராய் துதி
7. பூபேந்திர விஜயம்
8. கிளிக் கண்ணிகள் - நடிப்புச் சுதேசிகள்
9. லாஜ்பத்ராய் பிரலாபம்
10. ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாஸிக்கு ஆங்கிலேய உத்தியோகஸ்தன் கூறுவது
11. மாயையைப் பழித்தல்
12. ஆரிய தரிசனம் - ஓர் கனவு
13. சுதந்திரப் பெருமை
14. தாதாபாய் நவுரோஜி
15. மேத்தா திலகருக்குச் சொல்வது
16. மாஜினி என்ற இத்தாலி தேசத்து தேசாபிமானி தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட ''யௌவன இத்தாலி'' என்ற சங்கத்திலே செய்துகொண்ட பிரதிக்கினை

இந்தப் பதினாறு பாடல்களுள் 1,3,4 ஆகிய எண்கள் கொண்ட பாடல்கள் 1907ஆம் ஆண்டில் வெளிப்பட்ட சிறு பிரசுரத்திலும் காணப்படுகின்றன.

இந் நூலில் காணப்படும் பாடல்களின் நயமும், இன்பமும் குறித்து திரு மு. ராகவையங்கார் எழுதிய மதிப்புரை படித்து இன்புறத்தக்கதாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இப் பெயர் கொண்ட பாடற்றிரட்டொன்று சென்னையினின்று சிறக்க வெளிவரும் "இந்தியா" பத்திராதிபர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியவர்களால் இயற்றி வெளியிடப்பட்டுள்ளது. இதன் பெயரைக் கேட்கும் போதே இத் திரட்டு நம்மவர்க்கு ஒரு புது வழியைக் கற்பிக்க வந்ததென்பது விளங்கும்.

நம் தமிழ் மொழியில், ஈசுவர சம்பந்தமான பாடல்களும், காவியங்களும், புராணங்களும், பிறவும் நிரம்ப உண்டாயினும், நம்மவர்க்குத் தற்காலம் இன்றியமையாது வேண்டத்தக்கனவும் தேசாபிமானத்தை உண்டாக்கவல்லனவுமான உயர் கவிகள் கிடைத்தில.

வங்காள நாட்டார், இந்திய மக்கள் ஏனையரினும் விசேடமான தேசாபிமானமும் உள்ளக் கிளர்ச்சியும் பெற்றிருப்பதற்குரிய முக்கிய ஏதுக்களில் ஒன்று, அந் நாட்டில் சமீபத்திற் றோன்றிய கவிஞர் சிகாமணிகளது அருமை பெருமை வாய்ந்த தேசீய கீதங்கள் அந் நாடெங்கும் பரவிப் பேரெழுச்சியை உண்டாக்கி வருதலாம்.

மேனாட்டார்களெல்லாம் தம் நாட்டுக் கவிஞர்கள் இயற்றிய தேச கீதங்களைப் பாராட்டிப் போற்றி வருதலை இயற்கையாக வுடையராய் விளங்குதலுங் காணலாம். அத்தகைய பாடல்களும் கீதங்களும் தமிழ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மக்கட்கும் இன்றியமையாதனவா யிருத்தலோடு, அவை நாடெங்கும் பரவி ஊக்கத்தை விளைக்கக் கூடியனவாகவு மிருத்தல் வேண்டும்.

சிற்சிலர் 'சுதேச மித்திரன்', 'இந்தியா' முதலிய பத்திரிகைகளில் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுதேசியப் பாடல்கள் மிக வுயர்ந்தனவா யிருந்தமை கண்டு, அவை யாவரு மறியத் திரட்டித் தொகுக்கப்படின் பெரிதும் உபயோகமாம் என்று கருதியதுண்டு.

இப்போது, பாரதியார் தாமியற்றிய தேச கீதங்களைத் திரட்டிச் சிறு புத்தகமாக வெளியிட்டிருப்பது எமக்குப் பெருமகிழ்ச்சி விளைத்தது. இவர்கள் வந்தே மாதரம், நாட்டு வணக்கம், எங்கள் நாடு, பூபேந்திர விஜயம், கிளிக்கண்ணிகள் முதலாக அநேக விஷயங்களைப் பற்றிப் பாடி யிருக்கும் செய்யுள்களும், கீதங்களும் சொன்னயம், பொருணயங்க ளுடையனவா யிருத்தலோடு, படிப்போர் மனதில் மகிழ்ச்சியை உண்டாக்க வல்லனவாகவும் விளங்குகின்றன.

இயற்கையில் இனிய கவிகள் பாடவல்ல பாரதியார் தம் சக்தியை இத்தகைய புது வழியில் திருப்பி உபயோகப்படுத்தி யிருப்பது, நம்மவர்க்கு ஒரு நல்ல வழியைக் கற்பிக்கின்றது. இத்தகைய கீதங்களை, தேசாபிமானிக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ளான நந் தமிழ் நாட்டா ரெல்லாம் படித்து மகிழ்வதுடன், முக்கியமாகத் தம் மக்கட்கு இவற்றை மனப்பாடம் பண்ணும்படி செய்வித்தல் மிகவும் வேண்டப்படுவது என்போம்.

இதுபோலவே, நம் நாட்டுப் பெண்பாலா ரெல்லாம் விரும்பி மனப்பாடம் பண்ணிக் கொள்வதற் கேற்றபடி கும்மி முதலான கீதங்களை அமைத்து வெளியிடுதல் மிக்க பயனளிக்கக் கூடியது. பெண்பாலாரிடம் அத்தகைய பாடல்கள் பரவுதல் எளிதா யிருப்பதோடு, அதனால் உண்டாகும் நன்மை களும் அனந்தமாம்.

பாரதி யவர்களும், அவர்களை யொத்த தேசாபிமானிகளும் இது விஷயமான முயற்சி யைச் செய்து புகழும் புண்ணியமும் அடையத் தவறார்க ளென்றே நம்புகிறோம்."

(செந்தமிழ் : தொகுதி 6 ;
பக். 105-106)

பாரத தேவியின் சரணங்களிலே, உள்ளன்பு மிகுதியாலே துணிவுகொண்டு பாரதி சூட்டிய மணமிக்க பாமாலைக்குச் செந்தமிழ் வித்தகர் மதிப்புரையாக வழங்கிய பாராட்டுரையைக் கண்டோம். பாரதியின் தேசபக்திக் கவித்திறத்தை நெஞ்சாரப் பாராட்டிய சொற்கள் நெஞ்சைவிட்டு நீங்காத் தன்மை கொண்டனவாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயற்கையில் இனிய கவிகள் பாடவல்ல சக்தி படைத்த பாரதி தேச கீதங்களை இயற்றி, அவற்றின் வாயிலாக நாடெங்கும் தேசாபிமான பேரெழுச்சியை ஊக்கி வந்தார்.



பால கங்காதர திலகர்

பாரதி தம்மை அரசியல் களத்தில் பணியாற்றப் பிணைத்துக் கொண்ட நாள் முதலாகவே திலகரின் தலைமையை ஏற்றுக் கொண்டவர். 'பாரததேவியின் அடிமை' என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் பாரதி அதே வேளையில்,

"இலகு பெருங்குணம் யாவைக்கு மெல்லையாம்
திலக முனிக்கொத்த அடிமைக்காரன்"

என்றும் நாட்டு மக்களுக்கு அறிவித்துக் கொண்டவர்.

திலகர்வழி தம்மை அரசியல் கொள்கையில் பிணைத்துக்கொண்ட காரணம் பற்றி, பாரதி தமிழ்நாட்டில் அப் பெரியாரின் கொள்கைகளை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யும் கருத்துகளையும் பரப்பும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அதனால், தாம் பெயர் போட்டுக்கொள்ளாமலே ஆசிரியப் பணியாற்றிய 'இந்தியா' இதழில் லோக மான்ய பால கங்காதர திலகர் குறித்த செய்திகளையும், அவர் ஆற்றிய சொற்பொழிவுகளின் சுருக்கத்தையும் வெளியிட்டு ஆக்கபூர்வமான பணிகளை ஆற்றி யுள்ளார் என்பதும் அரசியல் உலகம் அறிந்த செய்தியே!

'இந்தியா' பத்திரிகையில் திலகர் பற்றிய செய்திகளை வெளியிட்டதோடு பாரதியின் உள்ளம் மனநிறைவு அடையவில்லை. அதன் காரணமாக, 1907ஆம் ஆண்டு திலகர் செய்த 'The Tenets of the New Party' என்னும் ஆங்கிலச் சொற்பொழிவைப் பாரதி "புதிய கட்சியின் கொள்கைகள்" என்று தமிழ்ப் படுத்தி, நூலாக வெளியிட்டார்.

இங்கே ஓர் குறிப்பை நாம் கவனத்தில் கொள்ள வேண்டுவது அவசியமாகின்றது. அதாவது, புதிய கட்சி என்பது அன்னிய ஆட்சி யாளர்க்கு விண்ணப்பம் செய்யும் முறையை வெறுத்து, 'நமக்கு நாமே துணை' என்னும் துணி வுடைய கொள்கையில் பிடிப்புள்ள கட்சி ஆகும்.

பாரத நாட்டின் புன்மை போக்கும் பெருந் தொழிலில் உள்ளத் தூய்மையுடன் ஈடுபட்ட திலகர்பிரான் நெஞ்சுறுதியுடன் 'சுயராஜ்ஜியம் எமது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவோம்' என்று வீர முழக்கமிட்டவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தீவிர தேசபக்தியும், விடுதலையில் அசைக்க முடியாத நம்பிக்கையும், கொள்கைப் பிடிப்பும், உணர்ச்சிபூர்வமான துடிப்பும் மிக்க பாரதியின் நெஞ்சமும்,

> "நாமிருக்கு நாடு நமதென்ப தறிந்தோம்—இது
> நமக்கே யுரிமையா மென்ப தறிந்தோம்"

என்று விடுதலைப் பண் இசைத்தது.

திலகர் காட்டும் வழிதான் சிறந்தது என்பதைத் தேர்ந்த பாரதி, தமிழகத்தைப் பொறுத்த மட்டில் திலகர் தலைமைக்கு ஆதரவு தேடும் முயற்சியாளர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

தமக்குள்ள கொள்கைப் பிடிப்பையும், திலகர் மீது தாம் கொண்டுள்ள பேரன்பையும் புலப் படுத்திக் காட்டும் பொருட்டாக மட்டும் பாரதி "புதிய கட்சியின் கொள்கைகள்" என்னும் நூலைப் பதிப்பித்து வெளியிடவில்லை. வடநாட்டில் உள்ள தலைவர்களைப் போன்றே, தமிழகத்திலும், 'பிரிட்டிஷ் அரசுக்கு உட்பட்டே நாம் சுயாட்சி பெற வேண்டும்' என்கிற ஆசையைக் கொண்டவர் கள் இருந்தனர். அப்படிப்பட்ட ஆசை முற்றிலும் வீணான ஆசை என்பதை விளக்கியும், தம்மை எதிர்ப்போரின் வாதங்களைத் திலகர் பிரான் மறுதலித்தும் ஆற்றிய சொற்பொழிவுதான் மேற் குறித்த நூல். தமிழக மக்களுக்கு உண்மை நிலையை எடுத்து உரைக்கப் பயன்படும் என்றே கருதிய பாரதி தம் அரசியல் தலைவரின் ஒரு மணி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நேரச் சொற்பொழிவைத் தமிழாக்கித் தந்தார் எனலாம்.

இச் சிறு கொள்கை வெளியீட்டு நூலைத் தொடர்ந்து பாரதி, 1907 டிசம்பரில் நடைபெற்ற சூரத் காங்கிரஸ் மகாநாட்டிற்குத் தாம் தம் நண்பர்களுடன் சென்னையிலிருந்து புறப்பட்டது முதல், மறுபடியும் சென்னை வந்து சேர்ந்தது வரையில் நடைபெற்ற செய்திகளை யெலாம் விவரித்து, 1908ஆம் வருடம் மார்ச்சு மாதம் "எங்கள் காங்கிரஸ் யாத்திரை" என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டார்.

இந் நூல் பக்க அளவைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் சிறு நூலாக அமைந்திருப்பினும், வரலாற்று நூலாகவே இது திகழ்கிறது. ஆம்; யாத்திரை நூல் போலே இல்லாமல், பாரதி உயிருள்ள செய்திகளைத் தந்து, வரலாற்று நூலாகவே ஆக்கி யுள்ளார்.

சூரத் காங்கிரஸ் மகாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த அஜித்சிங் என்பவருடைய சரித்திரத்தையும் பாரதி இச் சிறு நூலில் எழுதி யுள்ளார்.

இந்த நூலுள்ளும் தாம் திலகரிடம் கொண் டிருந்த 'பக்தி'யைப் பாரதி வெளிப்படுத்தி யுள்ளார்.

வரலாற்றுப் புகழ்கொண்ட கவிதை — வசன நூல்களை வெளியிட்ட பாரதிக்கு அரசியல் தீவிர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போக்குக் காரணமாக — அரசு கையாண்ட போக்கின் காரணமாகப் பாரதி 1908 செப்டெம்பர் முதல் வாரத்தில் புதுச்சேரி சென்று, அங்கு அடைக்கலம் புகுந்து கொண்டார் அன்றோ?

பாரதிக்குப் புகழ் நாளுக்கு நாள் கூடி வருகின்ற நிலையில், அவர் சென்னையை விட்டுப் புதுச்சேரி சென்றடைய வேண்டியவ ராகிறார்.

சென்னையின் முதல் கட்ட பாரதியின் வாழ்வில், விரல்விட்டு எண்ணும் அளவிலான நூல்களே வெளிவந்தன.

1907இல் திரு. வி. கிருஷ்ணசாமி அய்யர் வெளியிட்ட சிறு நூலான இலவச வெளியீட்டைக் கணக்கில் கொள்ளாமல் பார்த்தோமே யானால், 1908இன் பிற்பகுதி வரை மூன்று நூல்கள் மட்டுமே வெளிவந்தன என்பதே உண்மை.

"ஸ்வதேச கீதங்கள்" நூல் பாடல்களின் திரட்டாகவும், "புதிய கட்சியின் கொள்கைகள்" நூல் மொழிபெயர்ப்பாகவும், "எங்கள் காங்கிரஸ் யாத்திரை" உரை நடை வசனமாகவும் அமைந்து விட்டன.

* * *

புதுச்சேரியில் தஞ்சம் புகுந்து கொண்ட பாரதி, தம் அருமை நண்பர்களுடன் இணைந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பத்திரிகைப் பணிகளுடன் நூல் வெளியீட்டு முயற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டார்.


ஜன்மபூமி.

(ஸ்வதேச கீதங்கள் — இரண்டாம் பாகம்)

ஸ்ரீ. சுப்பிரமணிய பாரதி

விலை அணா 0—3—0

1909

All Rights Reserved.

SAIGON SINNAYA PRESS. PONDICHERRY.

1909ஆம் ஆண்டின் முற்பகுதியில் "ஜன்ம பூமி" (ஸ்வதேச கீதங்கள் — இரண்டாம் பாகம்) என்ற நூல் வெளியிடப்பட்டது. புதுச்சேரியில் பாரதி தஞ்சம் புகுந்த பின்னர் பதிப்பித்த முதல் நூல் இதுவே யாகும்.

இந் நூல் பற்றிய விளம்பரம் 6·2·1909 ஆம் தேதியிட்ட 'இந்தியா' இதழில் காணப்படுகின்றது.

விளம்பரம் தெரிவிக்கும் செய்தி வருமாறு:

ஜன்ம பூமி

(ஸ்வதேச கீதங்கள் — இரண்டாம் பாகம்)

'ஸ்வதேச கீதங்கள்' என்ற நூல்
வெளியேறிய பிறகு ஸ்ரீ சுப்பிரமணிய
பாரதியால் எழுதப்பட்ட பாடல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களும் கீர்த்தனங்கள் முதலியனவும் அடங்கியது. முதற் பாகத்தைவிட மாதுரியத்திலும் சுதேச பக்தியிலும் சிறப்பு வாய்ந்தது. அச்சடித்துத் தயாராய்விட்டது. வேண்டியவர்கள் புதுச்சேரி 'இந்தியா' ஆபீசில் ஸ்ரீ ஸ்ரீனிவாஸாசாரியாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்க. இதன் விலை அணா 3.

(இப் புத்தகத்தில் எங்கள் தாய், சிதம்பரம் பிள்ளைப் பாடல்கள், ஸ்வதந்திரப் பள்ளு, ரவிவர்மா மீது பாடல், அபேதாநந்தர் துதி, ஸ்வதந்திர தாகம், திருத்தசாங்கம், நந்தனார் சரித்திரத்தினின்றும் அனுகரணப் பாடல்கள் முதலிய பல புதிய கீதங்கள் நிறைந்திருக்கின்றன.)

விளம்பரத்தில் குறித்துள்ளவாறே இந் நூலில் பல புதிய பாடல்கள் காணப்பட்டன. முதற் பாகத்தைப் போன்றே படிப்போரைக் களிப்புறச் செய்யும் கீதங்கள் நிறைந்திருந்தன.

பாடல் இனிமையிலும், சுதேச பக்தியிலும் சிறப்பு வாய்ந்த இத் தொகுதியில் அமைந்துள்ள முகவுரையும், சமர்ப்பணமும் வருமாறு:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முகவுரை

"இனிய நிலவின் ஒளியால் விழுங்கப்பட்டு, உலகம் அவாங் மன கோசரமாகிய ஸௌந்தர்யத்தைப் பெற்றிருக்கும் சமயத்தில், ஒவ்வொரு கவிஞனுடைய உள்ளமும் தன்னை யறியாது குதூஹலமடைகின்றது. சூரியன் உதித்தவுடனே சேதனப் பிரகிருதி மட்டுமே யன்றி, அசேதனப் பிரகிருதியும் புதிய ஜீவனையும், உற்சாகத்தையும் பெற்றுத் திகழ்கின்றது. இவற்றினை யொப்பவே, நாட்டில் ஓர் புதிய ஆதர்சம் - ஓர் கிளர்ச்சி - ஓர் தர்மம் - ஓர் மார்க்கம் - தோன்றுமே யானால், மேன் மக்களின் நெஞ்சமனைத்தும், இரவியை நோக்கித் திரும்பும் சூரிய காந்த மலர்போல, அவ்வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன. சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில், ஸர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய 'தேச பக்தி' என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தை யெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறைவுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால் அப் புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ் வன்பு காரணமாகச் சென்ற வருஷம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நான் எதிர்பார்த்திராதவண்ணமாக மெய்த் தொண்டர்கள் பலர் "இம் மலர்கள் மிக நல்லன" என்று பாராட்டி மகிழ்ச்சி யறிவித்தார்கள். மாதாவும் அதனை அங்கீகாரம் செய்து கொண்டாள். இதனால் துணிவு மிகுதியுறப் பெற்றேனாகி, மறுபடியும் தாயின் பத மலர்க்குச் சில புதிய மலர்கள் கொணர்ந்திருக்கின்றேன். இவை மாதாவின் திருவுள்ளத்திற்கு மகிழ்ச்சி யளிக்குமென்றே நினைக்கின்றேன்; "குழலினிது யாழினிதென்ப தம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர்" என்பது வேதமாதலின்."

இங்ஙனம்

ஸி. சுப்பிரமணிய பாரதி

குறிப்பு: முதற் பகுதியிலே யிருந்த ஓரிரண்டு பாடல்கள், இதனிடையே பொருத்த நோக்கிச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

ஸமர்ப்பணம்

எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மெய்த் தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும் சொல்லாம லுணர்த்திய குருமணியும், பகவான் விவேகாநந்தருடைய தர்மபுத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந் நூலை ஸமர்ப்பிக்கின்றேன்.

ஸி. சுப்பிரமணிய பாரதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஜன்மபூமி' கவிதைத் தொகுதியில் மொத்தம் பதினேழு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

1. வந்தே மாதரம் - ஜாதீயத் திருப்பாடல்
   வந்தே மாதரம் - மொழிபெயர்ப்பு
2. சுதந்திர தேவியின் துதி
3. எங்கள் தாய்
4. பாரத தேவியின் திருத்தசாங்கம்
5. ஜய பாரத
6. ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்
7. மாதாவின் துவஜம்
   பாரத நாட்டுக் கொடியினைப் புகழ்தல்
8. ஸ்வதந்திர தாகம்
9. நிதானக் கட்சியார் கூட்டம் - சுதேசியத்தைப் பழித்தல்
10. பாரத தேவியின் அடிமை
11. கலெக்டர் வின்ச் - ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லுதல்
12. கலெக்டர் வின்சுக்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை சொல்லிய மறுமொழி
13. சுதந்திரப் பெருமை
14. ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாஸிக்கு ஆங்கில உத்தியோகஸ்தன் கூறுவது
15. அபேதாநந்த ஸ்வாமிகளின் மீது ஸ்தோத்திரக் கவிகள்
16. ஸ்வதந்திரப் பள்ளு (பள்ளர் களியாட்டம்)
17. (ஓவியர் மணி) ஸ்ரீ ரவிவர்மா

மேற்குறித்த பாடல்களுள் பெரும்பாலானவை "இந்தியா" வார இதழில் வெளி வந்தனவாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சுதந்திரப் பெருமை', 'ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாஸிக்கு ஆங்கில உத்தியோகஸ்தன் கூறுவது' ஆகிய இரு பாடல்களே இந் நூலில் பொருத்தம் நோக்கிச் சேர்க்கப்பட்டனவாகும்.

இந் நூலுக்கும் மதிப்புரையொன்றை திரு. மு. ராகவையங்கார் எழுதினார். அம் மதிப்புரைப் பகுதி வருமாறு:

> "இது ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியவர்களால் ஸ்ரீ பாரத தேவி விஷயமாகவும் பிறவினிய விஷயமாகவும் பலவிதமான கவிதைகளால் பாடப்பெற்ற ஒரு செய்யுட் டிரட்டு. இவர் வாக்குத் தமிழ் நாட்டார் பலரும் பல முறை அறிந்து சுவைத்ததே யாதலின், நாம் பலபடப் புனைதல் மிகையாம். முன்பு இவர் வெளியிட்ட செய்யுட் டிரட்டினும் அதிகமாகச் சில பகுதிகள் இதனிடைக் காணப்படுகின்றன. இந் நூலை, நம்மவர் மகிழ்வுடன் எதிர் கொள்வார்க ளென்பதில் ஐயமில்லை. இதன் சில பகுதிகளை எம் நண்பர்கள் முன் படித்து வரும்போது உள்ளபடியே அவை, உரோமஞ் சிலிர்க்க எம்மைப் பெரிதும் உருக்கிவிட்டன."

(செந்தமிழ்: தொகுதி 7;பக். 174)

செந்தமிழ் வித்தகர் கருத்தின்படி மெய் சிலிர்த்திடச் செய்யும் பாக்கள் இந் நூலுள் இடம் பெற்றுள்ளன என்பது மெய்யே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லப்போனால், அரசாங்க அந்தரங்க அறிக்கையில் சேர்க்கும் பொருட்டாக ஒருசில பாடல்களும், நீதிமன்றத்தில் மேற்கோள் காட்டுவதன் பொருட்டாக ஒருசில பாடல்களும் ஆங்கிலத்தில் அரசுத் தரப்பில் மொழிபெயர்க்கப் பட்டன என்பதும் மெய்யே.

பாரதியின் பாடல்களில் பல அவர் அறியாமலே மொழிபெயர்க்கப்பட்டன என்பது வரலாறு தரும் செய்தியாகும்.

'ஜன்ம பூமி' நூலில் இடம் பெற்ற பாடல்கள் பலருடைய கருத்தைக் கவர்ந்தன.

'ஜன்ம பூமி' பாடல் நூலை யடுத்து, சுமார் ஓராண்டுக் கால இடைவெளிக்குப் பின்னர் 1910 ஜனவரி மாதம் இயற்கையின் அழகுகள், தேசத்தின் செய்திகள், மக்களின் நடையுடை பாவனைகள் ஆகியன பற்றி விளக்கும் "ஞானரதம்" என்ற ஒரு கதை நூல் வெளிவந்தது.

படிக்கப் படிக்க இன்பம் தரும் இந் நூலைப் பற்றி "ஞானரதம்போல் ஒரு நூல் எழுதுதற்கு நானிலத்தில் ஆளில்லை" என்று பாவேந்தர் பாரதிதாசன் வருணித்தார்.

பாரதி எழுதிய முதல் கதை நூல் இதுவாகும். இக் கதையின் முன்பகுதி சென்னையிலிருந்து வெளிவந்த 'இந்தியா' வில் பிரசுரமாகியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதன் பின்னர் புதுச்சேரியிலிருந்து வெளிப்பட்ட 'இந்தியா' இதழில் - சிறிது கால இடைவெளியின்பின் 1909 பிப்ரவரி 13ஆம் தேதிய இதழில் - முன்கதைச் சுருக்கத்துடன் கதையின் தொடர்ச்சி ஆரம்பமானது. 'கந்தர்வ லோகம்' என்னும் இரண்டாம் அத்தியாயத்துடன் 1909 மே 8ஆம் தேதியிட்ட இதழோடு கதை நிறுத்தப்பட்டுவிட்டது.

1909 பிப்ரவரி 13ஆம் தேதிய இதழில் 'ஞான ரத'த்தின் முன் தொடர்ச்சி ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இடையில் இரு வாரங்கள் வெளிவரவில்லை. இதைக் குறித்துப் பாரதி 13.3.1909ஆம் தேதிய 'இந்தியா' இதழில் எழுதிய குறிப்பு வருமாறு:

> "ஆரம்பத்திலே எனது ஞானரதம் சிறிது செப்பனிட வேண்டிய நிலைமையி லிருக்கிறதென்று தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். எனது ரதத்திலே பயிற்சி, தெளிவு என்ற சக்கரத்திலும், அச்சாணியிலும் சில பிழைபாடுகள் இருக்கின்றன. ஊக்கம் என்னும் குதிரைக்கு முன்னங் கால்கள் கொஞ்சம் முடம். திட சங்கற்பனாகிய சாரதி நோயாளி. இவ்வளவுக்கும் மேலாக இந்த ரதத்திற்கு வேறொரு இடையூறிருக்கின்றது. பாலைவனம் போலா யிருக்கும் "பாரத ஜனநிலை" என்ற பிரதேசத்தை ஆறும், ஓடையும், குளிர் பொழிலுமுள்ள ஓர் நகரமாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிர்மிக்க வேண்டுமென்று பூலோகத்தில் ஓர் பெரிய முயற்சி நடந்து வருகிறது. அங்கே அனேக நல்லோர்கள் பெரிய பெரிய வயிரத் தேர்களை நிறுத்திக்கொண்டு இரவும் பகலும் இடைவிடாமல் பாடுபடுகிறார்கள். அந்த இடத்திற்கு நமது முடத்தேர் ஆசை மிகுதியால் போய் ஏதோ கொஞ்சம் வேலை செய்து அடிக்கடி ஆயாசமடைந்து போய்விடுகிறது. ஆகவே, நமது கதாநாயகனையும் கந்தர்வ யுவதியையும் கந்தர்வ லோகத்தில் அந்தரத்திலே கொண்டு நிறுத்திவிட்டு இரண்டு வாரம் அவர்களைக் கவனியாமல் இருந்துவிட்டது. இப்போது மீண்டும் அதனை அங்கே செல்ல விடுகின்றேன்."

ஆசிரியருரையாகப் பாரதி மேற்குறித்தவாறு எழுதினாலும், கதையை இரண்டு அத்தியாயங்களுடன் இடையிலே தொடராமல் நிறுத்திக் கொண்டு விட்டார்.

வாசகர்களின் ஆவலைத் தூண்டும் விதத்தில் கதைப்போக்கைக் கொண்டு செலுத்திய பாரதி - இடையே இரு வாரங்கள் கதை தொடராமல் போனமைக்குக் காரணத்தை விளக்கிய பாரதி - காரணத்தை விளக்கிவிட்டு, சில பகுதிகளை மீண்டும் எழுதிய பாரதி - கதையை ஏன் முற்றுப் பெறாமல் நிறுத்திவிட்டார் என்ற கேள்வி எழத் தானே செய்யும்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1909 மே *15*ஆம் தேதிய இதழில் காணப்படும் விளம்பரச் செய்தியானது, கதை பாதியிலேயே நின்று விட்டதற்கான காரணத்தைத் தெரிவிக்கின்றது.

"சில நண்பர்களின் வேண்டுகோளின்படி இந் நூலைத் தனிப் புஸ்தகமாக அச்சிட்டுப் பிரசுரிக்கத் தீர்மானம் செய்திருக்கிறது. இதுவரை 'இந்தியா' பத்திரிகையில் வெளிப்பட்ட உபசாந்தி லோகம், கந்தர்வ லோகம் என்ற பகுதிகளைத் தவிர, ஸத்ய லோகம், தர்ம லோகம், இந்திர லோகம், உபசாந்தி லோகம் (மறுபடி) முதலிய பல பகுதிகள் சேர்த்துப் பிரசுரிக்கப்படும்.

ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதி அவர்கள் எழுதிய இந் நூலின் சொல்லுதற்கரிய பெருமைகளைக் கண்டு களித்தவர்களெல்லாம் உடனே பின்வரும் விலாசத்திற்கு ரிஜிஸ்தர் செய்து கொள்ளவேண்டும். சொற்பப் பிரதிகளே அச்சிடப்படுகின்றன. இதன் விலை அணா எட்டு.

விலாஸம் :
பா. கி. அய்யர்
"பால பாரத மந்திரம்",
22, ஈஸ்வரன் தர்மராஜா
கோயில் வீதி,
புதுச்சேரி".

பா.—6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்கண்ட விளம்பரத்தில் தெரிவித்திருந்தபடி 'ஞானரதம்' நூலானது உடனடியாக அச்சிடப் பெற்று, விற்பனைக்கு வரவில்லை; சுமார் ஏழு மாதங்களுக்குப் பின்னரே வெளிவந்தது.

1910 ஜனவரியில் நூலாக வெளிவந்தபோது உபசாந்தி லோகம், கந்தர்வ லோகம், ஸத்ய லோகம், மண்ணுலகம், தர்ம லோகம் ஆகிய ஐந்து அத்தியாயங்களைக் கொண்டிருந்தது.

விளம்பரத்தில் காணாத 'மண்ணுலகம்' இடம் பெற, விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்த 'இந்திர லோகம்', 'உபசாந்தி லோகம்' (மறுபடி) ஆகிய பகுதிகள் சேர்க்கப்படவில்லை.

நூலுக்கான பாரதியின் 'முகவுரை' பின்வரும் முறையில் அமைந்திருந்தது :

"புஸ்தக மெழுதினால் அதற்கு முகவுரை யெழுதித் தீரவேண்டுமென்ற ஸம்பிரதாயம் ஒன்றிருக்கிறது. உலகத்தில் எந்த வேலை செய்யப் போனாலும் 'ஸம்பிரதாயம்' என்ற தொல்லையொன்று வந்து முன்னே நிற்கிறது. ஆனால், நான் இதை அதிகமாக நீட்டிப் படிப்பவர்களை ஆயாஸப்படுத்த உத்தேச மில்லை. ஒரே வார்த்தை மட்டிலும் இங்கு சொல்ல விரும்புகிறேன்.

அதாவது : இந் நூல் நானாக எழுதின தில்லை. எல்லாம் நடத்தும் பரமாத்மா ஞானதீர மில்லாத ஏழையேனைக் கொண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞானரதத்தில் ஏற்றினான். எத்தனையோ விநோதங்களில் இதுவு மொன்று. எனவே, இதிலுள்ள குற்றங் குறைகளுக்கு நான் பொறுப்பாளி யில்லை.

இன்னு மொரு சிறிய செய்தி : இதில் ஒரு பகுதி பத்திரிகையில் வெளிப்பட்டபோது, எனக்கு மிகுந்த உற்சாக முண்டாகும்படி தூண்டிக் கடித மெழுதிய எனது நண்பர் மஹேச குமார சர்மாவுக்கு பகிரங்கமாக எனது நன்றியும் மதிப்பும் தெரிவிக்க விரும்புகிறேன். இவருடைய கல்வியையும், அறிவுத் தெளிவையும், ரஸிகத் தன்மையையும் தமிழ் நாட்டாருக்குப் பலமுறை நன்கு திருஷ்டாந்தப்படுத்திக் காட்டி யிருக்கிறார். ஆதலின், அதையெல்லாம் பற்றி விரிக்க எனக்கு விருப்பமில்லை. ஆனாலும், இப்படிப்பட்ட பண்டிதர்களைத் தமிழ் நாட்டார் போதியபடி ஆதரவு செய்து அவர்களை வேறு ஸாதாரணப் பிரவிருத்திகளில் மனம் செலுத்தாதபடி காத்துக் கொள்ளவில்லை யென்ற குறை என் மனதி லிருக்கிறது. இந்த ஸந்தர்ப்பத்தை யொட்டி அதனையும் வெளிப்படையாகச் சொல்லித் தீர்த்துவிட்டேன். வந்தே மாதரம்.

ஸௌம்ய ஹூ
தை மீ கரு உ
புதுச்சேரி } சி. ஸுப்பிரமணிய பாரதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந் நூலைக் குறித்து மஹேச குமார சர்மா அவர்கள்,

"இதைப்போல் அற்புதமான கதை தமிழ் பாஷையில் வேறு கிடையாது"

என்றும், அமிர்த குண போதினி ஆசிரியர் திரு. எஸ்.ஜி. ராமாநுஜலு நாயுடு அவர்கள்,

"ஞானரதம் என்ற தலைப் பெயருடன் தமிழ்நாடு என்றும் கண்டிராத துள்ளிக் குதிக்கும் ஒரு புதிய கந்தர்வ நடையில் இயற்கையின் அழகுகளைப் பற்றியும், தேசச் செய்திகளைப் பற்றியும், நெருங்கிய நண்பர்களின் மனமாறுபாடுகளைப் பற்றியும் அற்புதமான கல்பனையுடன் வாரந்தோறும் 'இந்தியா'வில் எழுதி வந்தார். அவற்றை ஒருங்குசேர்த்து ஞானரதம் என்று ஒரு புஸ்தகமாக வெளியிட்டார். இதன் விலை அணா 8. அதற்கு இணையான நூல் தமிழ் மொழியில் இல்லை. சொற் சுவை, பொருட் சுவை நிரம்பியது பாச் சுவை பரவிய நடையாலமைந்தது"

என்றும் பாராட்டு மொழிகள் வழங்கினர்.

'ஞானரத' நூலை மறு அச்சாகப் பாரதி பிரசுராலயத்தார் பதிப்பித்தபோது (1936) ராஜாஜீ அவர்களை அணுகி, முகவுரை ஒன்றினைக் கேட்டபொழுது, அம் மூதறிஞர் தம் கருத்துரையை இவ்வாறு தெரிவித்தார்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இப் புஸ்தகத்தில் பாரதியார் எடுத்த விஷயங்கள் மிகப் பெரியவை. விஷயங்களின் கவுரவம் ஒருபுறமிருக்க, தற்காலத்தில் தமிழ் வாசக நடை எவ்வாறிருக்க வேண்டு மென்பதை, பாரதியார் எழுதிய இச் சிறு புஸ்தகத்தில் கண்டு கற்கலாம். அர்த்த புஷ்டி யில்லாத அரற்றலின்றி, சொன்னதையே சொல்லிப் பக்கங்கள் நிறைப்பதுமின்றி, ஸ்படிகம் போன்ற தெளிவும் வைரம் போன்ற உறுதியும் பெற்று இலக்கணப் பிழைகள் ஒழிந்த பேச்சுத் தமிழையே - எவ்வாறு ஆழ்ந்த கருத்துகளை எழுதவும் சித்தரிக்கவும் உபயோகப் படுத்தலாம் என்பதைப் பாரதியார் வசன நடையில் நாம் பார்க்கலாம். தமிழுக்குள் கிடக்கும் எல்லையற்ற சக்தியை யும் லாகவத்தையும் பாரதியார் எழுத்துகளில் தமிழ்மக்கள் பார்த்து அறிந்து கொள்ள வேண்டும். பயன் கொண்ட கற்பனா சக்தியும், கொழுந்து விட்டெரியும் நாட்டன்பும், விசால மான தரும ஞானமும், நோவாத ஹாஸ்ய ரஸமும், தமிழ்த் தாயின் செல்வக் குழந்தை, வரப்பிரஸாதர் பாரதியார் எழுதிய இந் நூலில் ஜ்வலிப்பதை அனுபவிக்கலாம்."

இவ்வளவு ஏன்?

பாரதியே பொறுப்பேற்று நடத்திய 'கர்ம யோகி' என்னும் மாத இதழில் திரு. லக்ஷ்மண சங்கரன் என்பவர் "தமிழ் ஸாஹித்யத்தில் நவ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மார்க்கம்" என்றொரு கட்டுரை எழுதியுள்ளார். இக் கட்டுரை 1910 மார்ச் மாத இதழில் வெளிப்பட்டுள்ளது.

கட்டுரையில் 'ஞானரதம்' நூலைப் பற்றிய பாராட்டுரை காணப்படுகின்றது. அது வருமாறு:

"........இயலில் ஸ்ரீ பாரதியாரின் 'ஞானரதம்' என்னும் நவீனகம், நவசாகையி னறிகுறியாக விளங்குகின்றது. 'ஞானரதம்' என்னும்நவீனகம் தமிழ் நவீனக சாஸ்திரத்தில் ஓர் நவசகத்தைக் குறிக்கின்றது.

உண்மையான காதற் பெருமையையும், இன்னும் இத்தகைய விஷயங்களையும் தெற்றென விளக்கி நிற்கின்றது. இந்த நவீனகத்தில் ஆசிரியர் உபயோகித்திருக்கும் வங்க சப்த சித்திரங்கள் நவீனகத்திற்கு ஓர் புதுமை கொடுக்கின்றது."

இவ்வாறு பல்வேறு தரப்பட்ட அறிஞர் பெருமக்களின் பாராட்டுதல்களைப் பெற்ற 'ஞானரதம்' நூல் தற்போதுள்ள நிலையில் முழுமை பெற்றதாக இருந்தாலும், பின்னிட்டுப் பாரதி இந் நூலை 'இந்திர லோகம்', 'உபசாந்தி லோகம்' (மறுபடி) ஆகிய இவை போன்ற பகுதி களைச் சேர்த்தெழுதவும் திட்டமிட்டிருந்தார் எனக் கொள்ளவும் பாரதி எழுதி வைத்திருந்த குறிப்புகளே சான்றாக உள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஞானரத' வசன நவீனகத்தைத் தொடர்ந்து, அதே 1910ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 'கனவு' என்னும் காதற் பாடல் நூலும், 'ஆறிலொரு பங்கு' என்னும் சமூக சீர்திருத்தச் சிறுகதை நூலும் பாரதியால் வெளியிடப்பட்டன.

"கனவு" என்னும் நூலுக்குப் பாரதி எழுதிய முகவுரை வருமாறு:

> "இச்சிறிய செய்யுள் நூல் விநோதார்த்தமாக எழுதப்பட்டது. ஒருசில பாட்டுகள் இன்பமளிக்கக் கூடியன. பதர் மிகுதியாகக் கலந்திருக்கக்கூடும். இதன் இயல் தலைவன் கூற்றெனப்படும் — அதாவது, கதாநாயகன் தனது சரிதையைத் தான் நேராகவே சொல்லும் நடை. அச்சு நேர்த்தியாக விழாதிருப்பது எனது பிழை யன்று. நமது நாட்டுச் செல்வர்களின் பிழை. இப் புதிய வழி தமிழறிந்த மேலோர்கள் அங்கீகரிக்கத்தக்கது தானா என்று பார்வையிடும் பொருட்டுச் சிறிய நூலொன்றை முதலில் வெளியிடுகிறேன். இதனைப் பதம் பார்த்து மேலோர் நன்றென்பாராயின், இவ் வழியிலே வேறு பல வெளியாக்குவேன். அனுபவக் குறைவினாலும் ஆற்றற் குறைவினாலும் நேரும் பிழைகளைப் புலவர் பொறுத்தருள் செய்க."

சாதாரண (1910) ஹ
ஆவணி மீ
புதுச்சேரி } ஆசிரியன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவி பாரதியே கூறுவது போன்று, இக் 'கனவு' நூல் கதாநாயகன் தன்னுடைய சரிதையைத் தானே நேரிடையாகச் சொல்வதாக அமைந்துள்ளது. இச் சிறிய செய்யுள் நூலில் பாரதியின் வாழ்க்கைச் சரிதச் செய்திகள் ஆங்காங்கே காணக் கிடைக்கின்றன.

இந் நூலுள் 49 செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன.

அடுத்து, சமூகத்தில் ஆறில் ஒரு பங்கு மக்களைத் தீண்டத்தகாத சாதியாக வைத்துள்ள கொடுமையை மற்றவர் உணர்ந்து கொண்டு திருந்தவும், அரிசன முன்னேற்றத்தில் தமக்குள்ள பாசத்தை வெளிப்படுத்தவும் பாரதி 'ஆறில் ஒரு பங்கு' நூலைக் கருவியாகக் கொண்டார்.

பிறவி மாத்திரத்திலேயே உயர்வு — தாழ்வு என்ற எண்ணம் கூடாது என்ற கொள்கை முழக்கம் செய்த பாரதியின் நூல் 'முகவுரை' பின்கண்ட முறையில் அமைந்துள்ளது :

> "ஒரு ஜாதி ஓர் உயிர்; பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம்; பிறவி மாத்திரத்தாலே உயர்வு—தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மத பேதங்கள் இருக்கலாம்; மத விரோதங்கள் இருக்கலாகாது. இவ் வுணர்வே நமக்கு ஸ்வதந்திர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மும், அமரத்தன்மையும் கொடுக்கும். 'நாந்ய: பந்தா வர்த்ததே அயநாய'; வேறு வழி யில்லை.

இந் நூலை, பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக் கெல்லாம் உணவு கொடுத்து ரக்ஷிப்பவர்களாகிய பள்ளர் பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய் கிறேன்.

ஆசிரியன்

புதுமையும், புரட்சி மனப்பான்மையு முடைய கனவு, ஆறிலொரு பங்கு ஆகிய இரண்டு நூல்களும் புதுச்சேரியில் அச்சிடப்பட்டு வெளியீடு செய்யப் பட்டிருந்த போதிலும், பிரிட்டிஷ் அரசால் 1911ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் தேதியன்று தடை விதிக்கப்பட்டது.

1911சூன் மாதம் 17ஆம் நாள் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷ் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் சம்பந்தப் பட்டவர்களிடம் பாரதியின் 'கனவு', 'ஆறிலொரு பங்கு' ஆகிய இரு நூல்களும் இருந்த காரணத் தால், பாரதியும் சந்தேகிக்கப்பட்டார். பாரதியின் நூல்களில் இராஜத் துவேஷத்தைத் தூண்டக்கூடிய கருத்துகள் இருப்பதாக அரசின் அதிகார வர்க்கத்தினரால் கருதப்பட்டது. அதனால், பாரதியின் இரு நூல்களுக்குத் தடை விதிக்கலாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதாக சி.ஐ.டி. போலீஸ் டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் 1911 ஆகஸ்டு 19ஆம் நாளன்று அரசுத் தலைமைச் செயலருக்குப் பரிந்துரை செய்தார்.

சி.ஐ.டி.போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் பரிந்துரையை யடுத்து, 1911ஆம் ஆண்டு செப்டெம்பர் 8ஆம் நாளன்று 'கனவு', 'ஆறிலொரு பங்கு' — ஆகிய நூல் பிரதிகளுடன் அவற்றிற்கான ஆங்கில மொழிபெயர்ப்புகளையும் இணைத்து 1910ஆம் ஆண்டின் இந்திய அச்சுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கலாமா என்பது பற்றிக் கருத்தறிய அட்வகேட் ஜெனரலுக்கு அரசாங்கக் கீழ்ச் செயலாளர் அனுப்பி வைத்தார்.

அப்போதைய சென்னை மாகாண அட்வகேட் ஜெனரலான சர் பி.எஸ்.சிவசாமி அய்யர் என்பார் அரசின் கருத்துரையைப் பரிசீலனை செய்து, பாரதியின் நூல்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று 26-9-1911இல் கருத்துத் தெரிவித்தார். இதை யடுத்து, நூல்கள் பறிமுதல் செய்ய அரசின் ஆணை 11-10-1911இல் பிறப்பிக்கப்படுகின்றது.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பாரதி மிக வன்மையாகக் கண்டித்தார்; தம்முடைய 'கனவு', 'ஆறிலொரு பங்கு' ஆகிய இரு நூல்கள் தீங்கற்றவை என்றும், அவை காதற் பாட்டு—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமூக சீர்திருத்தக் கதை நூல்களே என்றும் பாரதி வாதாடினார். இதன் தொடர்பாக அரசுக்கு எழுதினார்; பத்திரிகைகள் வாயிலாகவும் தம் நூல் களுக்கு விதித்த தடையை நீக்கி, நியாயம் வழங்குமாறு முறையிட்டார்.

பாரதியைப் பொறுத்த அளவில், தம் நூல் களுக்கு விதிக்கப்பட்ட தடையை, தமக்கு அரசு இழைத்த அநீதியாக மட்டும் கொள்ளாமல் நமது எழுத்துச் சுதந்திரத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி யாகவே கருதினார்.

தம்முடைய முறையீடு பயனற்றுப் போன நிலைமையிலும், சந்தர்ப்பம் வாய்த்த போதெல் லாம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் சட்டத்தின் துணை கொண்டு எழுத்துச் சுதந்திரத்தைக் கட்டுப் படுத்த முனைந்ததைச் சுட்டிக்காட்டிக் கொண்டே இருந்தார். இதனால், 1911ஆம் ஆண்டில் எந்த நூலும் வெளிப்படவில்லை.

என்றாலும், மனம் தளராமல், அரசு விதித்த தடைகளைக் கண்டு மருண்டுவிடாமல், எழுத்துச் சுதந்திரத்தை நிலைநாட்டவேண்டும் என்கிற உணர்வால் உந்தப்பட்டு, நூல் வெளியீட்டு முயற்சி யில் ஈடுபட்டார் பாரதி.

தாம் வாழ்ந்த காலத்தின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தமிழ் மக்கள் யாவருக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருள் விளங்கும்படி எழுதிய "பர்ஞ்சலி சபத" காவியத்தின் முதல் பாகத்தை 1912ஆம் ஆண்டிலே பாரதி வெளியிட்டார்.


உ

பாஞ்சாலி சபதம்.

ஸி. சுப்பிரமணிய பாரதி.

1912.

Vidyabi Vardini Press Pondicherry.

'பாஞ்சாலி சபதம்' வியாச பாரதத்தைத் தழுவியது என்று பாரதியே குறிப்பிட்டுள்ளார்.

இக் காவிய நூல் பல வகைகளிலே சிறப்புற்று விளங்குகின்றது. இந்நூலிலே காணப்படும் சமர்ப்பணம் புதுமையாகவும், புரட்சிகரமானதாகவும் அமைந்திருக்கின்றது. மற்றும், முகவுரையில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துகள் தமிழில் புது இலக்கியம் — குறிப்பாக, மக்கள் இலக்கியம் எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் எனப் பாரதி விரும்பினார் என்பதையும் காட்டுகின்றன.

இந் நூலின் முதற் பாகத்திற்குப் பாரதி பொருள் விளக்கமும் குறிப்புகளும் எழுதியுள்ளார்.

நூலின் சமர்ப்பணமும், முகவுரையும் வருமாறு:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸமர்ப்பணம்

தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள் செய்யப்போகிற வரகவிகளுக்கும் அவர்களுக்குத் தக்கவாறு கைங்கரியங்கள் செய்யப்போகிற பிரபுக்களுக்கும் இந் நூலைப் பாதகாணிக்கையாகச் செலுத்துகிறேன்.

ஆசிரியன்

முகவுரை

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு - இவற்றினையுடைய காவிய மொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்.

காரியம் மிகப் பெரிது; எனது திறமை சிறிது. 'ஆசை'யால் இதனை எழுதி வெளியிடுகின்றேன், பிறருக்கு ஆதர்சமாக அன்று, வழிகாட்டியாக.

இந் நூலிடையே திருதராஷ்டிரனை உயர்ந்த குணங்க ளுடையவனாகவும், சூதில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விருப்ப மில்லாதவனாகவும், துரியோதன னிடம் வெறுப்புள்ளவனாகவும் காட்டி யிருக்கின்றேன். அவனும் மகனைப் போலவே துர்க்குணங்களுடையவன் என்று கருதுவோருமுளர். எனது சித்திரம் வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக, இந் நூலை வியாச பாரதத்தின் மொழிபெயர்ப்பென்றே கருதி விடலாம். அதாவது, 'கற்பனை' திருஷ்டாந்தங்களில் எனது 'சொந்தச் சரக்கு' அதிகமில்லை; தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி.

தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டுமென்று கங்கணங் கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத் தொழிலிலே தூண்டினாளாதலின், இதன் நடை நம்மவர்க்குப் பிரியந் தருவதாகும் என்றே நம்புகிறேன்.

ஓம். வந்தே மாதரம்.

சுப்பிரமணிய பாரதி

'பாஞ்சாலி சபத' நூல் பாரதியின் சிறப்பைப் பன்மடங்கு உயர்த்தியது; அதை இலக்கிய உலகம் அறிந்து கொண்டாடியது. 'அமிர்த குணபோதினி' ஆசிரியர் எஸ்.ஜி. ராமாநுஜலு நாயுடு அவர்கள் "பாஞ்சாலி சபதத்திற்கு நிகர் அதுவே. அதிலுள்ள ரஸத்தை என்னென்போம்" என்று பாராட்டுரை நல்கினார்.

தியாக சீலர் சுப்பிரமணிய சிவா அவர்கள் தம்முடைய கருத்ததை மிக அழகாக,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இது மிக அழகிய வர்ணனைகள் நிறைந்த ஒரு காவியம். பிரம்ஹஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியவர்களால் இயற்றப் பெற்றது. ஆரிய தருமங்கள் நிறைந்த - ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தில் பொறாமையே உருவாக வந்த துரியோதனன் தனது தாய்மாமனாகிய குடிகேடன் சகுனியைக் கொண்டு பஞ்ச பாண்டவர்களில் மூத்தோனாகிய தர்மபுத்திரருடன், அவருடைய ராஜ்யத்தை யெல்லாம் பிடுங்கிக் கொண்டு, அவரையும் அவரது சகோதரர்களையும் அவர்களது தர்மபத்தினியாகிய திரௌபதியையும் ஓட்டாண்டிகளாக்கிக் காட்டுக்குத் துரத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், சூதாடும்படி செய்விக்கின்ற பாகத்தை பிரம்ஹஸ்ரீ பாரதி யவர்கள் செய்யுள் நடையில் எழுதி யுள்ளார்.

பாரதி யவர்களுடைய தமிழ் நடையைப் பற்றியும், செய்யுள் விசேஷத்தைப் பற்றியும் தமிழ் நாட்டினரில் பெரும்பான்மையோரும் அறிவர் என நம்புகிறோம். ஆசிரியர் இப் புஸ்தகத்தில் ஒரு பிரதியைச் சென்னை கவர்னர் அவர்களுக்கு அனுப்பி யிருந்ததாகவும், அவர் தாம் அதை வந்தனத்துடன் ஏற்றுக் கொண்டதாக ஆசிரியர்க்குக் கடிதம் எழுதியதாகவும் கேள்விப்படுகிறோம். பாஷாபிமானிகளும் தசாபிமானிகளும் அவசியம் படிக்கவேண்டிய புஸ்தகம் இது. இதன் விலை அணா எட்டு. தபால் செலவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேறு. வேண்டியவர்கள் நமது ஆபீசுக்கேனும் அல்லது பிரஹ்மஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதி யவர்கள், புதுச்சேரி யென்ற விலாசத்திற் கேனும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்''

(ஞானபாநு-1913 நவம்பர் இதழ்)

என்று எழுதினார்.

ஆம்; மொழிப் பற்றாளர்களும் தேச பக்தர் களும் ஆதரிக்கத்தக்க-அவசியம் படிக்கவேண்டிய-நூல் 'பாஞ்சாலி சபதம்' என்பது தியாக சீலர் சிவா அவர்களின் கணிப்பு ஆகும்.


ஓம்.

'புதிய ஆத்திசூடி.

சி - சுப்பிரமணியபாரதி

இயற்றியது.

புதுவை வித்யா ரத்நாகரம் பிரஸ்.

விலை பை - ,௩

௧௯௧௩.

1912ஆம் ஆண்டில் வெளிப்பட்ட நூல் இது ஒன்றே என்றாலும், பாரதி நூல் உருவாக்கம் பெறத்தக்க வகையில் கைப் பிரதிகளை எழுதிக் குவித்துக்கொண்டிருந்தார்.

1913ஆம் ஆண்டிலே ''புதிய ஆத்திசூடி'' என்னும் சிறிய நூலொன்று வெளிவந்தது. தமிழ் நாட்டு நாகரிகத்திற்குப் பேரடையாளமாக விளங்கும் ஔவைப் பெருமாட்டியின் ஒப்பற்ற நீதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூல் களஞ்சியமான ஆத்திசூடிப் பாடல்களால் பெரிதும் கவரப்பட்ட பாரதி, தம் காலத்துக்குத் தேவையான கருத்துச் செல்வங்களை ஔவையின் முறையைத் தழுவிப் 'புதிய ஆத்திசூடி'யில் பாடினார் என்றாலும், கால தேச வர்த்தமானங்களை மனங்கொண்டு ஔவையின் ஆத்திசூடியினின்றும் சற்றே மாறுபட்டும் சென்றார்.

'புதிய ஆத்திசூடி' சிறு குழந்தைகளுக் கெனவே எழுதப்பட்டது போலத் தோன்றினும், அதன் மூலம் தெளிவாக்கப்படும் நீதிகள் பெரியவர்களுக்கும் ஏற்றனவாகும் பெற்றி வாய்ந்தன.

புதிய அறம் பாட வந்த தமிழ்க் கவிஞர் கோமான் பாரதி, புதுமையும் வியப்பும் பொருந்திய அநேக நவீன மன நிலைகளைப் 'புதிய ஆத்திசூடி' நூலில் புலப்படுத்தி யுள்ளார்.

நூல் அளவால் சிறிதெனினும், விளக்கப் பெறும் கருத்தால் உயர்வுடையது.

1914ஆம் ஆண்டிலே தமிழில் ஒரு நூலும், ஆங்கிலத்தில் ஒரு நூலும் ஆக இரண்டு நூல்கள் வெளிவந்தன.

தமிழில் வெளியான நூலின் பெயர் "மாதா மணிவாசகம்" என்பதாகும். இந் நூல் கவிதைத் தொகுதியாகும். இக் கவிதைத் திரட்டில் பதினான்கு பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தென்னாப்பிரிக்காவில் வெளியானது என்பது குறிப்பிடத்தக்கது.

நூலின் முதற் பக்கத்தில், "ஸ்ரீமத் ஸி. சுப்பிரமணிய பாரதி யவர்களால் டர்பன் சரஸ்வதி விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பட்டது" என்ற வாசகம் காணப்படுகின்றது.


ஓம்
வந்தே மாதரம்

மாதா மணிவாசகம்.

ஸ்ரீமத் ஸி சுப்பிரமணிய பாரதியவர்களால்.

டர்பன்
சரஸ்வதி விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது

ஆரியசகம் 1,960,853,014.
1914

தென்னாப்பிரிக்காவில் இக் கவிதை நூல் வெளியீடு செய்யப் பட்டதால், பாரதிப் பாடல் களுக்குக் கடல் கடந்தும் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது என்பது புலப்படுகின்றது.

நாமகளைப் பற்றியும், மகாசக்தியைப் பற்றியும், இயற்கைப் பொருள்கள் பற்றியும், பாரதி பாடி யுள்ள கவிதைகள் கொண்ட இத் தொகுதி, முன்னர் வெளிவந்த பாடல் தொகுதிகளினின்றும் சற்று வித்தியாசப்பட்டது எனலாம்.

'மாதா மணிவாசக'த்துள் இடம் பெற்றுள்ள பாடல்களுக்கான விவரம் வருமாறு:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. வெற்றி
2. அச்சமில்லை (பண்டாரப் பாட்டு)
3. ஹே, காளீ!
4. சங்கு
5. ஸூர்ய தர்சனம்
6. வெண்ணிலா
7. அறிவே தெய்வம்
8. மஹாசக்தி பஞ்சகம்
9. மஹாகாளியின் புகழ்
10. மஹாசக்தி வாழ்த்து
11. சரஸ்வதி தேவியின் புகழ்
12. பரசிவ வெள்ளம்
13. பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி
14. ஜாதீய கீதம்

(புதிய தமிழ் மொழிபெயர்ப்பு)

இந் நூலுக்குச் சுப்பிரமணிய சிவா அவர்கள் தம்முடைய 'ஞான பாநு' இதழில் மதிப்புரை ஒன்று எழுதினார். அவர் அவ்வாறு மதிப்புரை எழுதுங்கால், நூலின் பெயரை 'மாதா' என்றே குறித்துவிட்டார்.

சிவா எழுதிய மதிப்புரையை இனிக் காண்போம்:

"இது 'இந்தியா' வென்னும் வாரப் பத்திரிகைக்கு ஆசிரியரா யிருந்தவரும், தேச பக்த சிரேஷ்டருமான ஸ்ரீமாந். சி. சுப்பிர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மணிய பாரதி யவர்களால் இயற்றப் பெற்ற அநேக பாடல்கள் அடங்கிய ஒரு நூல்; வெற்றி, வெண்ணிலா, பாரதமாதா திருப் பள்ளி யெழுச்சி, ஜாதீய கீதம் முதலிய பதினான்கு பகுதிகளை யுடையது. சில வருஷங்களுக்கு முன் இவ் வாசிரியர் பாடிய தேச கீதங்களின் அருமையையும் பெருமையை யும் தமிழரில் அறியாதார் இரார். அது போன்றே இதுவும் படிப்பவர்கட்கு உள்ளக் கிளர்ச்சியையும், பூரிப்பையும் உண்டாக்கு மென்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு தமிழரிடத்தும் இருக்கவேண்டிய நூல் இது. வேண்டுவோர் ஸ்ரீமாந். சி. சுப்பிரமணிய பாரதி, புதுச்சேரி என்ற விலாசத்திற்கு எழுதிக் கொள்க."

சிவா அவர்கள் நூலின் அருமை பெருமை களைத் தமது மதிப்புரையில் இனிதே விளக்கி யுள்ளார். பாரதியைத் தேசபக்தரில் உத்தமர் என்றே வருணித்தவர், சிவா.

அடுத்த ஆங்கில நூலின் பெயர் "The Fox with the Golden Tail" என்பதாகும்; நேரடியாக ஆங்கிலத்தில் எழுதிய நூலுமாகும்.

இந்த நூல் அக்காலத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது. முதல் பதிப்பு அதிசீக்கிரத்தில் விற்பனையாகி, மறு அச்சும் வெளிவந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர் காலத்தில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சியைக் கருத்தில் கொண்டு, ஒருசிலரின் போக்கை விளக்க எழுந்த, உருவக முறையில் அமைந்த கதை நூல் இதுவாகும்.

பாரதியே இந் நூல் பற்றி மேலட்டையில் "A Fable with an esoteric significance" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூலின் முதல் பதிப்பு பார்வைக்குக் கிட்டாத காரணம் பற்றி, நூலின் மறு பதிப்புக்குப் பாரதி எழுதிய முகவுரையை இங்கே காண்போம்:

This second edition of the 'fox' is not of my seeking at all. It is, so to speak, forced on me by the importunity of some local friends whom the spirit of the age impels to do something towards knocking down what has been aptly described as the most colossal spiritual fraud of the ages.

It is admitted on all hands that the ancient Hindus had scaled the extreme heights of spiritual realisation. But I think, however, that the Hindus of the last generation, especially the English educated men, have been the biggest gulls of any age or country. And we, of the present generation, are resolved

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

that the swindlers shall no longer pursue their trades peacefully in our country. And this is the "esoteric meaning" of the fable.

C.S. Bharati

Pondicherry
24th February 1914.

விற்பனையில் பரபரப்பையும், படித்த மக்களிடையே மிகுந்த பாராட்டுரைகளையும் பெற்று விளங்கிய நூலைத் தொடர்ந்து அச்சிட விரும்பவில்லை, பாரதி.

முதல் பதிப்பைப் படித்த அறிஞர்களான டாக்டர் நஞ்சுண்ட ராவ் அவர்களும், பேராசிரியர் இராமநாதன் அவர்களும் வழங்கிய பாராட்டு மொழிகள் வருமாறு:

Dr. Nanjunda Rao, B.A., M B C.M., F.C.S. Writes :

"It has a high educational value. A careful study of the booklet will do good to all the children in our country, young as well as old."

Prof. K B. Ramanathan, M A., B.L. L .T., F.M.U. Writes :

"It hits off very cleverly the weaknesses of our men and none of us come off well. And if we should be a self-complacent lot and not have any gift of humour, we should owe you a grudge."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த ஆங்கில நூலைத் தொடர்ந்து 1915-1916 ஆகிய இரு ஆண்டுகளில் எந்தவொரு நூலும் வெளியாகவில்லை என்றாலும், கவிதைத் தொகுதி நூலை வெளியிடத் திட்டமிட்டிருந்தார் பாரதி எனக் கொள்ள அவர் எழுதி வைத்துள்ள குறிப்பு களால் தெரிந்து கொள்ள முடிகிறது.

"The song Book" என்றுள்ள தலைப்பின்கீழ் பாரதி எழுதி யுள்ள குறிப்புகளின் விவரம் வருமாறு.

சங்கு
கவிதாதேவிக்கு வேண்டுகோள்
கடல் (Tr. from Ghose)
குயில் — to be finished
வெடிபடு மண்டம்
காவடிச் சிந்து
ஸரஸ்வதி தேவி
அச்சமில்லை
யோக சித்தி (ஞா)
வெண்ணிலா
ஒளியும் இருளும் (ஞா)
திருவே யுனைக் காதல் செய்தேனே

பாரதி எழுதிய குறிப்பிற்கான விளக்கத்தை இங்கே காண்பது சற்று பொருத்தமாக அமையும்.

மேலே கண்ட குறிப்பினால் பாரதி முன்னமே வெளிவந்த நூல்களில் இருந்த பாடல்களையும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'ஞானபாநு' இதழில் பிரசுரமான பாடல்களையும், சில புதிய பாடல்களையும் சேர்த்து நூல் ஒன்றைப் பதிப்பிக்க முயற்சித்தார் என்று கருதலாம்.

மேற்குறித்த குறிப்பில் சில பாடல்களின் தலைப்புகளையும், ஒருசில பாடல்களின் துவக்க வரிகளையும் பாரதி குறித்துள்ளார்.

இனி, இவைபற்றிய விளக்கத்தைக் காண்போம்:

1. சங்கு: 'செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்' என்று தொடங்கும் பாடலின் தலைப்பு இதுவாகும். தென்னாப்பிரிக்காவில் 1914ஆம் ஆண்டிலே பதிப்பிக்கப்பட்ட 'மாதா மணிவாசகம்'' என்னும் தொகுதியில் இப் பாடல் காணப்படுகின்றது. இத் தொகுதியில்தான் இப் பாடல் முதன் முதலாகவும் பிரசுரமானது.

2. கவிதா தேவிக்கு வேண்டுகோள் : 'வாராய் கவிதையாம் மணிப் பெயர்க் காதலி' என்று தொடங்கும் இப் பாடல் 'இந்தியா' 16.1.1909, 23.1.1909 ஆகிய தேதியிட்ட இரு இதழ்களில் பிரசுரமாகி யுள்ளது. இதழில் இப் பாடலின் தலைப்பு "கவிதா தேவி — அருள் வேண்டல்'' என்று காணப்படுகின்றது. தற்காலப் பதிப்புகளில் இப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடலின் ஒரு பகுதியே காணப்படுகின்றது.

பிரசுரமாகி யுள்ள பகுதியுள்ளும் பாட பேதங்கள் நிரம்ப உண்டு.

இப் பாடலின் முதற் பகுதி பாரதி மரணமடைந்து, சுமார் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர், பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் புதுச்சேரியில் நடத்திய "ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்" என்ற மாத இதழில் வெளியானது.

3. கடல்: அரவிந்த கோஷ் (அரவிந்தர்) கடலுக்கு என்ற தலைப்பின் கீழ் ஆங்கிலத்தில் சில கண்ணிகள் புனைந்து, அவற்றை "மாடர்ன் ரெவியூ" (நவீன பரிசோதகம்) என்கிற கல்கத்தாவி னின்றும் வெளிவந்த மாத சஞ்சிகையில் வெளியிட்டிருந்தார்.

பாரதி இப்பாடலைத் தமிழ்ப் படுத்தி,விளக்கக் குறிப்புடன் புதுச்சேரி "இந்தியா" 12.6.1909ஆம் தேதியிட்ட இதழில் பிரசுரம் செய்தார்.

4. குயில்— to be finished: பூர்த்தி செய்ய வேண்டியது என்றுள்ள இக் குறுங்கதை 1914-1915ஆம் ஆண்டு வாக்கில் எழுதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடிக்கப்பட்டதாகக் கொள்ளப் பாரதி எழுதி யுள்ள குறிப்பொன்றால் அறிய முடிகிறது.

மற்றும், இக் குறுங்கதையை அவர் மீண்டும் சரிபார்த்து, ஓரிரு இடங்களில் திருத்தமும் செப்பமும் செய்திருக்கின்றார்.

இது, *1923*இல்தான் நூல் வடிவமாக உருப்பெற்றது.

5. வெடிபடு மண்டம்: 'வெடிபடு மண்டத்திடி பல தாளம் போட' எனத் தொடங்கும் "ஊழிக்கூத்து" பாடலின் முதல் வரி இதுவாகும். இப் பாடல் கையெழுத்து வடிவில் உள்ளது. *1922*இல் பாரதி ஆச்ரமத்தார் வெளியிட்ட "சுதேச கீதங்கள்" (இரண்டாம் பாகம்) என்ற நூலில்தான் இப் பாடல் முதன்முறையாக இடம் பெற்றது.

6. காவடிச் சிந்து: கிடைக்கப்பெறாத பகுதி. இதுபற்றி வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் அவர்கள் 'கலைக்களஞ்சியம்-மூன்றாம் தொகுதி'யுள் "கவி சுப்பிரமணிய பாரதியார் ஒரு காவடிச் சிந்து பாடியதாகக் கூறுவர். அந்த நூல் இப்போது கிடைக்கவில்லை" என்று குறித்துள்ள செய்தி சிந்தனைக்குரியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. ஸரஸ்வதி தேவி : "ஸரஸ்வதி தேவியின் புகழ்" என்பது பாடலின் முழுத் தலைப்பு ஆகும். "வெள்ளைத் தாமரைப் பூவிலிருப் பாள்" என்று இப் பாடல் தொடங்கும். இந்தப் பாடலும் 1914ஆம் வருடத்திய "மாதா மணிவாசகம்'' என்ற நூலில் முதன் முதலாக இடம்பெற்றது.

8. அச்சமில்லை : "பண்டாரப் பாட்டு" என்ற உட் தலைப்புடன் கூடிய இப் பாடலும் 'மாதா மணிவாசக'த்தில் இடம் பெற்றதாகும்.

9. யோக சித்தி (ஞா): "ஞா" என்பது சுப்பிர மணிய சிவா அவர்களால் நடத்தப்பெற்ற "ஞானபாநு" என்கிற மாத இதழைக் குறிக்கின்றது.

இப் பாடல் 1913 டிசம்பர் மாதத்திய 'ஞானபாநு' இதழில் வெளியானபோது, "யோக சித்தி" என்ற தலைப்புடன் 'வரங் கேட்டல்' என்றவொரு உட் தலைப்பும் காணப் பெறுகின்றது.

இதழில் வெளியானபோது, பாரதியின் புனைபெயரான "உத்தம தேசாபிமானி" என்னும் பெயரால் பாடல் காணப்படு கின்றது.

இதழில் பத்து செய்யுள்கள் காணப் படுவதுடன், பாடலுக்கான சங்கீதக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்பும் தரப்பட்டுள்ளது. இதே பாடல் கைப்பிரதி வடிவிலும் உள்ளது. கையெழுத்துப் பிரதியில் பாடலுக்கான தலைப்பு 'வரங் கேட்டல்' என்றே காணப்படுகின்றது.

மற்றும் பாடலில் ஒன்பது செய்யுள்களே உள்ளன; இதழில் வெளியானபோது இடம்பெற்ற 'தேடிச் சோறு நிதந்தின்று' என்ற செய்யுள் கையெழுத்துப் பிரதியில் இல்லை; சங்கீதக் குறிப்பும் இடம்பெற வில்லை.

பாடலைப் பாரதி ஆச்ரமத்தார் 1922இல் "சுதேச கீதங்கள்" என்னும் தொகுதியில் முதன் முதலாகப் பதிப் பித்தனர்.

10. வெண்ணிலா : 'எல்லை யில்லாதோர் வானக் கடலிடை வெண்ணிலா' என்கிற தொடக்க வரிகளைக் கொண்ட இப் பாடலும் 1914ஆம் வருடத்திய 'மாதா மணிவாசக'த்துள் காணப்படுகின்றது.

11. ஒளியும் இருளும் (ஞா) : இந்தப் பாடல் 1913 ஆம் வருடம் சூலை மாதத்திய "ஞானபாநு" இதழில்தான் முதன்முறை யாகப் பிரசுரமானது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆயின், இப் பாடலும் முதன்முறையாக 1922ஆம் வருடத்திய பாரதி ஆச்ரமத் தாரின் "சுதேச கீதங்கள்" (இரண்டாம் பாகம்) என்னும் நூல் தொகுதியில் அச்சிடப் பெற்றது.

12. திருவே யுனைக் காதல் செய்தேனே: "திருக்காதல்" என்ற தலைப்பில் காணப் படும் பாடலின் முதல் வரியான "திருவே நினைக் காதல் கொண்டேனே" என்பதையே பாரதி "திருவே யுனைக் காதல் செய்தேனே" என்று நினைவுக் குறிப்புக்காக எழுதி வைத்தார் போலும்! இப் பாடல் கையெழுத்து வடிவில் உள்ளது.

கையெழுத்துப் பிரதியிலிருந்த பாடலைப் பிரதி செய்து பாரதி ஆச்ரமத்தார் தம்முடைய பதிப்பில் அச்சு வடிவாக்கி அளித்தனர்.

ஆக, பாரதி ஆங்கில நூலை வெளியிட்டதன் பின்னர் கவிதைத் தொகுதி ஒன்றை வெளியிட விரும்பினார் என்று தெரிகிறது. ஆனால், எண்ணித் திட்டமிட்டபடி நூல் வெளியாகவில்லை என்பதும் தெரிகிறது.

எந்த வகையில் பார்த்தாலும் 1914க்குப் பின்னர் 1915—1916க்கும் உட்பட்ட காலப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதியில் எந்தவொரு நூலும் வெளிப்படவில்லை என்பது உறுதியாகிறது.

1917இல் காரிருளில் ஓர் மின்னல் போல், பாரதிக்குப் பதிப்பாளர் ஒருவர் வந்து சேர்ந்தார். பாரதிக்கு அவர் பதிப்பாளராகக் காட்சியளிக்காமல், "தம்பி" யெனவே திகழ்ந்தார்.

"பாரதி பாடல்களை வாயுள்ள மக்களெல்லாம் பாடவேண்டும்; காதுள்ள மக்களெல்லாம் கேட்கவேண்டும்; கருத்துள்ள மக்களெல்லாம் சிந்திக்க வேண்டும்" என்கிற உறுதிப்பாட்டோடு உடன்பிறவாத் 'தம்பி' உழைத்தார். பாரதிக்காகவே வாழ்ந்து காட்டிய உத்தமரின் பெயர் பரலி சு. நெல்லையப்பர் என்பதாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5

பரலி சு. நெல்லையப்பர் ஆற்றிய பதிப்புப் பணிகள்

7973

நெல்லையப்பரும் திருநெல்வேலிச் சீமையில் பரலிக் கோட்டை என்ற சிற்றூரில் 1889ஆம் ஆண்டு செப்டெம்பர் 19ஆம் நாள் பிறந்தவர். அதாவது, பாரதிக்குச் சுமார் ஏழாண்டுகள் சிறியவர்.

நெல்லையப்பருக்குச் சிறு வயதிலேயே தேசப் பற்று மிகுவதாயிற்று. அவர் தம்முடைய இருபதாம் வயதளவில் சிதம்பரனாரின் சுதேசிக் கப்பல் கம்பெனியில் சில காலம் பணியாற்றினார்; பின்னர் நாட்டு விடுதலைப் போரில் பங்கு கொண்டார். அந்தக் காலத்திலேயே அவர் துணிவுடன் சிறைச்சாலைக்கும் சென்றார்.

1910ஆம் ஆண்டளவில் நீலகண்ட பிரம்மச்சாரியின் யோசனைப்படி புதுச்சேரி சென்றடைந்து, சுமார் நான்காண்டுகள் அங்கே தங்கியிருந்து, பத்திரிகைப் பணியில் ஈடுபட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெல்லையப்பர் புதுச்சேரியில் பாரதியுடன் மிக நெருங்கிப் பழக ஆரம்பித்தார்; பாரதியின் படைப்புத் திறனில் சொக்கிப் போனார். பாரதியுடன் பத்திரிகைத் தொண்டில் ஈடுபடவும் செய்தார். நல்ல கவி பாடும் ஆற்றலும் கொண்ட இவரைப் பாரதிக்கு மிகவும் பிடித்திருந்தது. புதுவையில் தங்கியிருந்த காலத்தில் பாரதியின் கவித்திறனை நன்கறிந்த நெல்லையப்பர் 1913இல் சென்னை திரும்பினார்.

நெல்லையப்பர்

சென்னைக்கு வந்த அவர் தமிழ்ப் பத்திரிகை உலகோடு தொடர்பு கொண்டார். 'லோகோபகாரி' என்ற பெயரில் அந்தக் காலத்தில் பிரபலமாக விளங்கிய பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணிபுரிய முற்பட்டார்.

நெல்லையப்பர் புதுச்சேரியிலிருந்த பாரதியுடன் அவ்வப்போது கடிதத் தொடர்பு கொண்டார். 1913ஏப்ரல் மாத முதற் கொண்டு பாரதி, சென்னையிலிருந்து சுப்பிரமணிய சிவா அவர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடத்தி வந்த "ஞானபாநு"வில் எழுதி வந்தார். 'ஞானபாநு'வின் தொடர்பு பாரதிக்கு 1915 அக்டோபர் மாதம் வரை நீடித்தது.

1915 ஜூன் மாத இதழில் பாரதி எழுதிய. "அக்நி ஸ்தோமம்' ஞானபாநுவில் வெளிவந்தது. இதன்பின்னருள்ள இரு இதழ்களில் — அதாவது, ஜூலை, அக்டோபர் மாத இதழ்களில் "தமிழில் எழுத்துக் குறை" என்னும் கட்டுரைகள் வெளிப்பட்டன. இதன் பின்னர் "ஞானபாநு" இதழில் பாரதியின் எழுத்துகள் இடம்பெற வில்லை.

இந்நிலையில், நெல்லையப்பர் கடிதத்திற்கு மறுமொழி அளித்து 1915 ஜூலை 19ஆம் தேதி பாரதி ஓர் கடிதம் எழுதினார். அக் கடிதத்தில்,

> "இன்று உன் விலாஸத்திற்கு 'நாட்டுப் பாட்டுக்கள்' அனுப்புகிறேன். அவற்றைப் பகுதி பகுதியாக உனது பத்திரிகையிலும் ஞானபாநுவிலும் ப்ரசுரம் செய்வித்திடுக. 'புதுமைப் பெண்' என்றொரு பாட்டு அனுப்பு கிறேன். அதைத் தவறாமல் உடனே அச்சிட்டு அதன் கருத்தை விளக்கி எழுதுக"

என்று உரிமையுடன் குறிப்பிட்டுள்ளதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டியது அவசியம்.

சொல்லப் போனால், பாரதிக்காகவே பதிப்பாளராகவும் பதிப்பாசிரியராகவும் மலர்ச்சி பெற்றவரே நெல்லையப்பர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியின் இலக்கியப் புகழ் ஒளி பரவப் பயன் ஏதும் கருதாமல் பாடுபட்ட சீரிய சீலர் நெல்லையப்பர்.

பின்னொரு சமயத்தில் நெல்லையப்பரின் சிறப்புக் குறித்து எழுதுங்கால் வரலாற்றுப் பேரறிஞர் வெ. சாமிநாத சர்மா அவர்கள்,

"திரு. நெல்லையப்பருக்கு இளமையிலிருந்தே கவி பாடும் ஆற்றல் இருந்தது. பிறவிக் கவிஞர் என்றே சொல்லவேண்டும். இதனால், பாரதியாருக்கு இவர்மேல் அலாதியான ஒரு பிரியம் ஏற்பட்டது. இவருக்கும் பாரதியார்மீது தனியான ஒரு பக்தி ஏற்பட்டது. பல சமயங்களில் பாரதியார் தமது உள்ளத்தை இவருக்குத் திறந்து காட்டி இருக்கிறார். தமது மனதில் அவ்வப்போது எழும் உணர்ச்சிகளைக் கடிதங்கள் வாயிலாக இவருக்குப் புலப்படுத்தி யிருக்கிறார். கடிதங்களில் "தம்பி" என்றுதான் இவரை யழைப்பார். பாரதியார் சில சமயங்களில், 'நீ அதைச் செய்; இதைச் செய்' என்று உத்தரவு போடுவார். இவர் விஷயத்தில் அவ்வளவு உரிமை பாராட்டினார் பாரதியார். அந்தக் காலத்தில் அவருடைய பெருமையை வெளிப்படுத்தியவரே திரு. நெல்லையப்பர்தாம். ஆனால், திரு. நெல்லையப்பர் இதைத் தமக்கே உரிய அடக்கத்தினால் மறுக்கலாம். ஆனால், தமிழ்நாடு உண்மையை மறக்குமா?"

என்று உணர்ச்சிப் பெருக்குடன் குறிப்பிட்டுள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியின் கவிதா சக்தியால் ஈர்க்கப்பட்ட நெல்லையப்பர், அவருடைய கவிதை நூல்களைப் பதிப்பிக்க முன்வந்தார்.

ஆம்; பாரதிக் கவியின் வாக்கை நன்னூல்கள் ஆக்கிப் பரப்பவும் அக் கவிஞரின் மேதைமையைத் தமிழகம் அறிந்து கொள்ளவும் நெல்லையப்பர் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

1917ஆம் ஆண்டிலே நெல்லையப்பர் தொடர்ந்தாற் போன்று கண்ணன் பாட்டு, நாட்டுப் பாட்டு, பாப்பா பாட்டு, முரசு ஆகிய நான்கு நூல்களை வெளியிட்டுப் பாரதியை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்.

மேற்கண்ட நூல்களுக்கான முன்னுரைகள் நெல்லையப்பரின் இதய ஒலியை நமக்கு நன்கு விளக்கிக் காட்டுகின்றன.

இனி, நூல்களுக்கான நெல்லையப்பரின் முகவுரைகளைக் காண்போம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கண்ணன் பாட்டு' நூலுக்கு எழுதிய முகவுரை வருமாறு :

"இந்தச் சிறிய நூலுக்கு ஒரு பெரிய முகவுரை யெழுத யான் விரும்பவில்லை. சில வார்த்தைகள் மட்டும் கூறுகின்றேன்.

இதன் ஆசிரியர் ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதியாரைத் தமிழ் நாட்டார் அறிவார்கள். ஆனால் அவர் பெருமையை உள்ளபடி அறிந்தவர்கள் மிக மிகச் சிலரே யாவர். ஸ்ரீமான் பாரதியார் ஒரு பெரிய மேதாவி; மகா பண்டிதர்; தெய்விகப் புலவர்; ஜீவன் முக்தர். இவர் தமிழ்நாட்டு 'ரவீந்திரநாதர்'. இவர் எனது தமிழ் நாட்டின் தவப்பயன்.

இவ்வாறு கூறுவதால் யான் எனது நண்பரை மிகுந்த உச்ச ஸ்தானத்தில் ஏற்றி வைப்பதாக எவரும் கருதவேண்டாம். அவருக்கு யான் கொடுக்கும் உச்ச ஸ்தானம் நிச்சயமானது. இதனைத் தற்காலத்தில் அறியாதவர்கள் பிற்காலத்தில் அறிவார்கள்.

பாரதியாருக்குக் கண்ணபிரான் மீதுள்ள அதிதீவிர பக்தி காரணமாக இந் நூலிலுள்ள பாடல்கள் வெளியாயின. இவை தமிழர்களுக்கு நல் விருந்தாகும்.

பாரதியாரது பாடல்களின் பெருமையைப் பற்றி யான் விரித்துக் கூறுவதென்றால், இந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முகவுரை அளவு கடந்து பெரிதாய்விடும். ஒரு வார்த்தை மட்டும் கூறுகின்றேன். இந்த ஆசிரியர் காலத்திற்குப் பின் — எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின் — இவர் பாடல்களைத் தமிழ்நாட்டு மாதர்களும் புருஷர்களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை யான் இப்பொழுதே காண்கின்றேன்.

இந் நூல் வாழ்க! என்னவர் வாழ்க! எந்தாய் வாழ்க!

சிந்தாதிரிப் பேட்டை
சென்னை
பிங்கள, ஆவணி 1

நெல்லையப்ப பிள்ளை

உள்ளக் கவர்ச்சியும், பொருள் செறிவும் நிறைந்த இந்தக் கண்ணன் பாட்டு நூலுக்கான வாய்மை மணக்கும் முகவுரையில் நெல்லையப்பர் குறிப்பிட்டதைக் காலம் காட்டிவிட்டது; ஆம்; நூற்றாண்டு கண்ட பாரதியை இன்று உலகமே கொண்டாடி மகிழ்ச்சி யடைகின்றதே!

கண்ண பெருமான் பேரில் பாரதி பாடிப் பரவிய இருபத்திரண்டு பாடல்கள் **'கண்ணன் பாட்டு'** நூலை அணி செய்கின்றன.

கண்ணனைத் தோழன், தாய், தந்தை, சேவகன், சீடன், சற்குரு, குழந்தை, விளையாட்டுப் பிள்ளை, காதலன், காதலி, ஆண்டான்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குலதெய்வம் ஆகிய பல்வேறு நிலைகளில் வைத்துப் பக்திப் பரவசத்துடன் பாடி, இறைவனை அணுகுவதிலும் புதியதோர் நெறியை இந் நூல் பாடல்வழி புகுத்தினார், பாரதி.

கண்ணனின் பாடல்களிலே இடையிடையே பாரதியின் சொந்தப் பாங்கான அநுபவங்கள் இழையோடுவதையும் காணலாம்.

இந் நூலில் இடம் பெற்றுள்ள "கண்ணன் என் தாய்" என்ற பாடல் மட்டும் "ஞானபாநு" 1913 ஆம் ஆண்டைய அக்டோபர் இதழில் வெளி வந்துள்ளது. இப்பாடல் நூலில் இரண்டாம் பாடலாக இடம் பெற்றுள்ளது.

கண்ணம்மா — என் காதலி (பாயுமொளி), கண்ணன் — என் காதலன் (ஆசைமுகம்) ஆகிய இரு பாடல்களும் கைப்பிரதி வடிவில் உள்ளன. இப் பாடல்களும் தற்காலத்திய வழக்கில் உள்ள பதிப்புகளில் 21ஆம் பாடலாகவும், 14ஆம் பாடலாகவும் காணப்படுகின்றன.

1917ஆம் ஆண்டிலே வெளிப்பட்ட "கண்ணன் பாட்டு" நூலுள் இடம் பெற்ற பாடல்களாவன:

1. கண்ணன் — என் தோழன்
2. கண்ணன் — என் தாய்
3. கண்ணன் — என் தந்தை
4. கண்ணன் — என் சேவகன்
5. கண்ணன் — என் சீடன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. கண்ணன் — எனது சற்குரு
7. கண்ணம்மா — என் குழந்தை
8. கண்ணன் — என் விளையாட்டுப் பிள்ளை
9. கண்ணன் — என் காதலன்
10. கண்ணன் — என் காதலன் (உறக்கமும் விழிப்பும்)
11. கண்ணன் — என் காதலன் (காட்டிலே தேடுதல்)
12. கண்ணன் — என் காதலன் (பாங்கியைத் தூது விடுத்தல்)
13. கண்ணன் — என் காதலன்
14. கண்ணன் — என் காந்தன்
15. கண்ணம்மா — என் காதலி (காட்சி வியப்பு)
16. கண்ணம்மா — என் காதலி (பின்னே வந்து நின்று கண் மறைத்தல்)
17. கண்ணம்மா — என் காதலி (முகத்திரை களைதல்)
18. கண்ணம்மா — என் காதலி (நாணிக் கண்புதைத்தல்)
19. கண்ணம்மா — என் காதலி (குறிப்பிடம் தவறியது)
20. கண்ணம்மா — என் காதலி (யோகம்)
21. கண்ணன் — என் ஆண்டான்
22. கண்ணம்மா — எனது குல தெய்வம்

காவிய உலகில் பாரதிக்கு நிரந்தரமான — நிச்சயமான — என்றும் அழியாத—ஸ்தானத்தைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடுக்கவல்ல 'கண்ணன் பாட்டு'ப் பற்றி "அதன் அற்புதத்தைப் பேச நமக்குச் சக்தி யில்லை" என்பார் திரு.எஸ்.ஜி. ராமாநுஜலு நாயுடு.

இனி, அடுத்த நூலான "நாட்டுப் பாட்டு" முதல் பதிப்பு பார்வைக்குக் கிடைப்பது அரிதாக இருப்பதால், அதில் இடம் பெற்றிருந்த முகவுரை, பாடல் விவரம் ஆகிய இன்னபிற செய்திகளை அறிய முடியவில்லை.

1917இலே நூல் வடிவம் பெற்ற "பாப்பா பாட்டு" 1915 மார்ச் மாத 'ஞானபாநு' இதழில் வெளிவந்ததாகும்.

இதழில் வெளிவந்த 'பாப்பா பாட்'டில் பதினான்கு பாடல்களே இருந்தன. ஆனால், நூல் வடிவாக்கம் பெற்றபொழுது, ஒருசில திருத்தங் களுடனும், மாற்றங்களுடனும் பதினாறு பாடல் களாக உருப் பெற்றன.

'வடக்கில் இமயமலை பாப்பா' என்றும், 'வேதமுடைய திந்த நாடு' என்றும் தொடங்கும் பாடல்கள்தாம் நூலில் புதிதாகச் சேர்க்கப் பட்டவை.

இன்னின்ன செயல்களைச் செய்ய வேண்டும், இன்னின்ன செயல்களைச் செய்யக் கூடாது என்று பாப்பாவுக்கு அறிவுரை கூறும் முறையில் அமைந் துள்ளன இப் பாப்பா பாடல்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பாப்பா என்ற பதத்தைப் பாடுவோர் இஷ்டப்படி மாற்றிக் கொள்ளலாம்' என்ற அடிக் குறிப்பும் இந் நூலில் காணப்படுகின்றது.

இந் நூலுக்கு நெல்லையப்பர் எழுதி யுள்ள முகவுரை நூலின் பொருட் சிறப்பையும் பெருமை யையும் இனிது விளக்கும் முறையில் அமைந் துள்ளது.

நூல் கையடக்கப் பதிப்பு முறையில் அமைந்த காரணத்தால், அது பற்றியும் நூல் முகவுரை தெரிவிக்கின்றது.

நூலுக்கான முகவுரைப் பகுதி வருமாறு :

"இச் சிறிய நூலின் ஆசிரியர் ஒரு பெரியவர். அவர் ஓர் அவதார புருஷர். இச் சிறிய நூலைத் தமிழர்கள் வேதமெனக் கொள்வார்களாக.

இந்த நூலுக்கு யான் இப்பொழுது கொடுத்துள்ள உருவத்தை நோக்கி இதன் மகிமையை யாரும் குறைத்துவிடவேண்டாம். இதிலுள்ள பாடல்கள் தங்க ஏடுகளில் நவரத்ன எழுத்துக்களால் பொறித்தற் குரியன.

நெல்லையப்பன்

சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை,
பிங்கள, ஐப்பசி க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

பாப்பா பாடல்களைத் தமிழர்கள் வேதமெனக் கொள்ளவேண்டும் என்றே நெல்லையப்பர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் பாடிய

பாப்பா பாட்டு

பரலி. சு. நெல்லையப்ப பிள்ளையால்
பதிப்பிக்கப் பட்டது.

சென்னை,
இந்தியா அச்சுக்கூடம்.
பிங்கள வருஷம்.

மகிமை பொருந்திய 'பாப்பா பாட்டு' நூலைத் தொடர்ந்து, தமக்கு உண்மை என்றும், ஊருக்கு நல்லது என்றும் கருதிய பாரதி முரசு கொட்டிச் சொன்ன செய்திகளும் பல உண்டு. அவற்றைச் சுருங்கச் சொல்லி விளக்கிக் காட்டும் நூலே 'முரசு'. நூலுள் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன.

தெளிவான சிந்தனை ஓட்டங்களுக்கும், சமுதாய சீர்திருத்தங்களுக்கும் உரமிட்ட இப் பாடல்களின் பாங்கு கண்டு வியந்த அறிஞர்கள் பலராவர்.

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனிதர் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய உத்தம நெறிமுறைகள் இந் நூலில் வலியுறுத்தப்படுகின்றன.

'பாப்பா பாட்டு'க்கு எழுதப்பட்ட முகவுரையே இந்த 'முரசு' நூலிலும் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இவ் விரு நூல்கள் பற்றி "இரண்டும் இரு தங்க விக்கிரகங்கள்தாம்" என்று பெருமிதத்தோடு புகன்றார், திரு.ராமாநுஜலு நாயுடு.

பாரதியின் பெருமையையும் சிறப்பையும் ஊரறிய, உலகறியச் செய்ய மூத்தவராம் நெல்லையப்பர் மேற்கொண்ட பணிகள் யாவும் என்றுமே நிலைபெற்று நிற்கும் தன்மையன.

பாரதிக்காகவே பதிப்பாசிரியராகவும், பதிப்பாளராகவும் உருவெடுத்த தொண்டின் திருவுருவமாம் நெல்லையப்பர் பெயரும் பாரதி பெயருடன் இணைந்தே ஒளிரும் என்பதில் ஐயமில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6

சுதேச மித்திரன் புத்தகசாலைப் பிரிவு மேற்கொண்ட செயல்களும் பாரதியின் திட்டங்களும்

'சுதேச மித்திரன்' நாட்டுக்கும், மொழிக்கும் ஆற்றிய பணிகளைப் பட்டியல் போட்டு விரிக்க இயலாது. நாட்டு மக்களுக்குச் சுதேசியப் பற்றை ஊட்டி, மொழியை மறந்தவர்க்கு நம் தாய் மொழியின் பெருமையை விளக்கி, மற்ற மற்ற துறைகளுக்கு ஆக்கம் அளித்துச் 'சுதேச மித்திரன்' இதழ் செய்துள்ள தொண்டின் பெருமையைச் சொல்லவும் முடியுமோ?

'சுதேச மித்திரன்' இதழ்ப் பணியோடு நூல்கள் வெளியீட்டுக் கெனவும் ஒரு பிரிவை ஏற்படுத்திக் கொண்டது. 'சுதேச மித்திரன் புத்தகசாலை' என்ற தனிப் பிரிவின் மூலம் நல்ல நல்ல தமிழ் நூல்களை வெளியிட்டது; பொழுதுபோக்குக்கான நூல்களே வெளிப்பட்ட காலத்தில், சுதேச மித்திரன் புத்தகசாலைப் பிரிவு அரசியல் விழிப்புணர்ச்சியை ஊட்டத்தக்க நூல்களை வெளியிட்டது; தேசத் தலைவர்களின் உரைகளை வெளியிட்டது; அக்காலத்து அரசியல் தலைவர்களின் வாழ்க்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரலாற்றுச் சுருக்க நூல்களை வெளியிட்டது; நாட்டு நடப்புகளை விளக்கும் கருத்து நூல்களை வெளியிட்டது.

சொல்லப்போனால், மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் பேசித் திரியாமல், தமிழுக்கு இறவாத புகழுடைய நூல்களை அணி செய்யும் பணியில் சிறந்து விளங்கியது.

அது மட்டுமில்லாமல், நம் நாட்டு நல்லறிஞர்களின் சாத்திரங்களைத் தமிழ்மொழியில் பெயர்த்தும் வெளியிட்டது.

தமிழிலே புதுப்புது நூல்கள் வெளியிட்டும், நல்லறிஞர்களின் சாத்திரங்களை மொழி பெயர்த்தும் பதிப்பித்தும் இறவாத புகழுடைய புத்தக சாலையாகத் திகழ்ந்தது சுதேச மித்திரன் புத்தக வெளியீட்டுத் துறை.

பரலி சு. நெல்லையப்பர் பாரதியின் நூல்களை வெளியிட்ட பின்னர் யாது காரணத்தாலோ அப் பணியைத் தொடரவில்லை.

பாரதி நூல்கள் வெளியீட்டுப் பணியை 1917ஆம் ஆண்டிலே மேற்கொண்டு, அந்த ஆண்டின் இறுதிக்குள்ளாக மேலும் மேலும் நூல்களை வெளியிடாமல் இருந்துவிட்டார், அப் பெரியவர்.

பரலி சு. நெல்லையப்பர் மூலமாகவே பல நூல்கள் வெளியிடவும் பாரதி எண்ணியிருந்தார். ஆனால், பாரதியின் எண்ணமும், அதுவேளை ஈடேற வழியில்லாமல் போய்விட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நிலையில் அதாவது 1918இல் சுதேச மித்திரன் புத்தகசாலை பாரதியின் நூல்களை வெளியிட முன் வந்தது. இரண்டு நூல்களை வெளியிடவும் செய்தது; அந்த இரண்டுமே மொழிபெயர்ப்பு நூல்களாக அமைந்தன. அவ்விரு நூல்கள் பாரதியின் விரிந்த ஆங்கில மொழியறிவையும், பரந்துபட்ட மொழிபெயர்ப்புத் திறனையும் தமிழுலகம் அறிய வாய்ப்பளித்தன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதல் நூல் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய கட்டுரைகளின் தமிழாக்கம் ஆகும்.

"மகாகவிஸர் ரவீந்திரநாத் தாகூர் அருளிய பஞ்ச வியாஸங்கள்" என்பது நூலின் தலைப்பு ஆகும்.

தாகூரின் கவிதை நடை கொண்ட கட்டுரைகளைப் பாரதி, மொழிபெயர்ப்பு என்று கருத இடந்தராத முறையில் மொழிபெயர்த்துள்ளார்.

மூல ஆசிரியரின் கருத்துக்கு மாறுபடாமலும், மாசு நேராமலும் மொழிபெயர்த்துள்ள பாரதி, மூல ஆசிரியரின் கருத்தோடு தாம் மாறுபடும் சிற்சில இடங்களையும் குறிப்பிடத் தவறவில்லை.

1918ஆம் வருடத்திய நூலில் காணப்பெறும் முகவுரையாவது:

> இப் புத்தகத்தி லடங்கிய ஐந்து வியாசங்களும் முதன் முதலாக வங்க பாஷையில் மகாகவி ஸர் ரவீந்திரநாத் தாகூரால் எழுதப் பெற்று, பிறகு ஆங்கிலத்தில் அவரது சகோதரரால் மொழிபெயர்க்கப்பட்டு, 'மாடர்ன் ரிவியூ' என்கிற மாதப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு அதனின்றும் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. மாடர்ன் ரிவியூ பத்திராசிரியர் இவ் வியாஸங்களைத் தமிழ் மக்களின் மேம்பாட்டைக் கோரி மொழி பெயர்த்துப் புத்தக ரூபமாக வெளியிட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நமக்கு அனுமதி கொடுத்ததைப் பெரிதும் பாராட்டுகிறோம். இவ்வைந்து வியாஸங்களி லும் ஆழ்ந்து கிடக்கும் அருங் கருத்துக்களை ஸ்ரீமான் பாரதி மிக்க சாதுரியமாக நம் தாய் பாஷையில் விளக்கி யிருப்பதை இங்கே குறிப்பிடுவோம்.

பதிப்பிப்பவர்

தெற்கே தோன்றிய பாரதி வடக்கே தோன்றிய தாகூரின் இலக்கியத்தை மொழிபெயர்த்து வங்கமும், தமிழும் ஒன்றுக்கொன்று வளர்த்த உறவுக்குப் பாலமிட்டார்.

உலகத்து மகாகவிகளில் ஒருவராகிய ரவீந்திர நாத தாகூர் அருளிய பஞ்ச வியாசங்களை நம் தமிழ்நாட்டின் ரவீந்திர நாதர் பாரதி மொழி பெயர்த்த நூலில் காணப்பெறும் கட்டுரைகளுக் கான விவரம்:

1. சிறிதும் பெரிதும்
2. அடங்கி நட
3. ஜாதி
4. ஜப்பானுடைய ஆவி
5. கல்வி கற்பிக்கும் பாஷை

பிறிதொரு நூல், இந்திய விஞ்ஞானியாகிய ஸர் ஜகதீச சந்திர வஸு (ஜகதீச சந்திர போஸ்) என்பார் தம்முடைய விஞ்ஞானக் கூடத்தைத் திறந்து வைத்துப் பேசியபோது ஆற்றிய உரையின் தமிழாக்கம் ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூலின் பெயர் "ஜீவ வாக்கு" என்பதாகும். இந்த நூலுக்கு திருவாளர் எ. ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் அரியதொரு முன்னுரை வரைந்துள்ளார்.


ஜீவ வாக்கு.

ஸர் ஜகதீச சந்திர் வஸு
செய்த பிரசங்கம்.

[illegible]

நூலின் முகவுரையில் ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் ஜகதீச சந்திரரின் பெருமை பற்றியும், பாரதி செய்த மொழி பெயர்ப்பின் சிறப்பு பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

'ஜீ வ வா க் கு' நூலின் மு க வு ரை இதோ:

புராதனப் பெருமையை மீண்டு மடைந்து தம் மக்கள் திரும்பவும் க்ஷேமத்துடன் சுகித்து வாழவே தற்போது ஆவல் கொண்டிருக்கும் பாரத மாதாவிற்குப் புகழும், கீர்த்தியும், ஏற்றமும், இயக்கமும் உண்டுபண்ணி வரும் அருமைப் புதல்வருள் மிகச் சிறந்த கல்விமானும், தேசாபிமானியுமாகிய ஸர். ஜகதீச சந்திர வஸு மிக முக்கியமானவர் என்பதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நான் விளக்கிக் காட்டவும் வேண்டுமோ? மேல்நாட்டுப் பிரகிருதி ரஸாயன சாஸ்திர முதலியவற்றில் தேர்ச்சி பெற்றபின்னர், தம்முடைய மகா முயற்சியாலும், புத்தியின் கூர்மையாலும், பல புதிய தந்திரங்களைக் கண்டு பிடித்து, ஜக முழுதும் பிரசித்தியடைந்த இந்த இந்தியப் பெருமான் தாம் கண்டு பிடித்த ஞானத்தையும் தத்துவங்களையும் தம் தாய் நாடு கைக் கொண்டு மென்மேலும் தம் தேசத்தவர் அனைவரும் அவைகளை விருத்தி செய்து தேசத்திற்கு நிரந்தரமான க்ஷேமங்களை விளைவிக்கும் நிமித்தம் புதிதாக, சாஸ்திராலயத்தைக் கல்கத்தாவில் ஸ்தாபித்து, தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அதற்கு அர்ப்பணம் செய்திருப்பது யாவரு மறிந்த



ஏ. ரங்கசாமி அய்யங்கார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விஷயம். அந்த ஞானக் கோயிலின் கைங்கரி யங்களுக்கு நாட்டிலுள்ள எல்லோரும் உதவி புரிய முன்வரவேண்டு மென்பதை யார் மறுக்க முடியும்? ஆனால், இப்படிப்பட்ட ஆலயத்தில் விக்கிரக ரூபமான தெய்வத்தைத் தொழா விடினும், தூணிலும் துரும்பிலும் குடிகொண்டு எவ்வித உயிர்க்கு முயிராய் சர்வாந்தர்யாமி யாய் இருப்பதாக வேத வேதாதிகள் கூறும் பரம்பொருளைக் கண்டு, அதன் குணங்களை ஆராய்ந்து அறிந்துகொள்வதற்காக ஏற்படுத் தப்பட்ட மகா தேவஸ்தானமென அவர் சாஸ்திராலயத்தை நாம் கருதி, அதில் உழைத்துவரும் அவரையும் பிரம்மமாக அறிய வேண்டும். வேதாந்தியாகவும் அவரை நாம் மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இது காரணம் பற்றியே நமது உத்தமவேதாந்தியும் தேசபக்தருமான ஸ்ரீமான் பாலகங்காதர திலக ரின் பத்திரிகையாகிய "கேஸரி"யில் அவரை உண்மையான "வேத வித்" என்று பெயரிட்டு அவர் ஆதிகாலத்து மகரிஷிகள் எப்படி பிரம்மத்தை அறியப் பாடுபட்டார்களோ, அவ்விதமே இவரும் ஜீவராசிகளிலும் பிரகிருதி ராசிகளிலும் பிரம்மத்தைத் தேடி, அதன் மூல மாய் மனுஷ்ய கோடிகளுக்கு எவ்வித க்ஷேமம் பிறக்கக் கூடுமென்று ஆராய்கிறார் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, ஜகதீச சந்திர வஸு தம்மாலயத்தில் செய்த முதல் பிரசங் கத்தை வங்க பாஷையிலோ ஆங்கிலத்திலோ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படித்து அறிந்துகொள்ள முடியாத நமது தமிழர்களின் பொருட்டு ஸ்ரீமான் சுப்பிரமண்ய பாரதி இனிய நடையில் தமிழில் செய்திருப்பதை அனைவரும் ஆவலுடன் வாசித்து ஆனந்திப்பார்களென் றெண்ணி இப் புத்தகம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கள் யாவரும் இதை அங்கீகரிப்பார்களென நம்புகிறேன்.

எ. ரங்கசாமி அய்யங்கார்

ஆக, அறிஞர் பெருமக்கள் உரைகளை மொழிபெயர்ப்பு நூல்களாக வெளியிட்ட சுதேசமித்திரன் புத்தகசாலை 1918ஆம் ஆண்டிலே பாரதியின் இரண்டு நூல் வெளியீட்டுப் பொறுப்புகளை மட்டுமே ஏற்றுக்கொண்டது.

பாரதிக்கு இச் செயல் மகிழ்வைத் தந்தது என்றாலும், தம்முடைய நூல்கள் நிறைய வெளிவர வேண்டும் என்பதில் அக்கறை செலுத்தினார்.

பாரதி புதுவை வாசத்தின்போது அவருடன் தொடர்பு கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர் வ.ரா. என்று சுருக்கப் பெயரால் அழைக்கப்பட்ட திருப்பழனம் வி. ராமசாமி அய்யங்கார் ஆவார். இவர் புதுவையில் இருக்கும் காலப் பகுதியில், பாரதியின் இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டு, அதன் காரணமாக அவர்மீது மாறாத 'பக்தி'யே பூண்டு திகழ்ந்தவர். சிறிது காலத்துக்குப்பின் திரு. வ.ரா. அவர்கள் புதுவையை விட்டு நீங்கி, தமிழகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்தடைந்தார். வ.ரா. அவர்கள் பாரதியிடம் நூல் வெளியீடு தொடர்பாகத் தம்மால் உதவி செய்ய முடியும் என்று வாக்குறுதி அளித்திருந்தார் போலும்! திரு. வ.ரா. அவர்களின் வாக்குறுதியை நினைவூட்டி, அவருடன் தொடர்பு கொள்ளும்படி பாரதி தம்முடைய இளைய சகோதரர் சி. விசுவ நாதன் அவர்களுக்கு 1918 ஆகஸ்டு 3 ஆம் தேதி கடிதம் எழுதியுள்ளார்.

பாரதி, அக் கடிதத்தில்,

"........திருப்பயணம் வி. ராமஸ்வாமி அய்யங்கார் என்னிடம் விநாயகர் ஸ்தோத்திரம் (தமிழ் நூல்) அச்சிட வாங்கிக் கொண்டுபோனார். இன்னும் அச்சிட்டனுப்ப வில்லை. மேலும் அவர் 'பாஞ்சாலி சபதம்' அச்சிடும் சம்பந்தமாகப் பணம் சேகரித்துப் பட்டணத்துக் கனுப்புவதாகச் சொன்னார். அங்ஙனம் அனுப்ப முடியுமானால், உடனே புதுச்சேரியில் எனது விலாசத்துக் கனுப்பும்படி ஏற்பாடு செய். அது மாத்திரமே யன்றி, 'விநாயகர் ஸ்தோத்திரம்' வேலையை விரைவில் முடித்துப் புஸ்தகங்கள் அனுப்பும் படி சொல்லு"

என்று தெரிவித்திருந்தார்.

கடிதத்தில் பாரதி குறிப்பிட்டெழுதி யிருந்த படி திரு.வ.ரா. உதவி செய்தாரா என்பதைத் தெரிந்துகொள்ள இயலவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுமார் பத்தாண்டுகள் புதுச்சேரியில் வாழ்ந்த பாரதிக்குத் தமிழகம் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. புதுச்சேரியிலிருந்து கிளம்பி, கடலூரில் பாரதி தமிழக மண்ணை மிதித்ததுதான் தாமதம்; உடனே கைது செய்யப் பட்டார். புதுச்சேரியின் அக்ஞாத வாசம் முடிந்து, தமிழகம் திரும்பிய நிலையில் கடலூர் சிறைக் கோட்டத்தில் இருபத்தொரு நாட்கள் சிறைவாச வாழ்க்கையையும் பாரதி அனுபவிக்க நேர்ந்தது. இதன்பின், பிரிட்டிஷ் அரசு விதித்த நிபந்தனை களை ஏற்றுக்கொண்டு, விடுதலையும் அடைந் தார்; நேரே கடையமும் புறப்பட்டுச் சென்று, அங்கே சேர்ந்தவுடன் தமக்கு உதவி செய்தவர் களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கடிதங்களும் எழுதினார்.

விடுதலை பெற்று, கடையம் சேர்ந்த ஒரு வாரத்திற்கெல்லாம் தம் நூல்கள் வெளியீட்டுக் கான பணிகளில் தீவிர கவனம் செலுத்தலானார், பாரதி.

அரசுக்குப் பாரதி அளித்த வாக்குறுதிகளில், தாம் வெளியிட இருக்கும் நூல்களைச் சிறிது காலம் வரை போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் காட்டி, அவருடைய அனுமதி பெற்றுக்கொண்ட பின்னரே பதிப்பிப்பதாக ஒப்புக்கொண்டதும் ஒன்றாகும்.

தம்முடைய அப்போதைய குடும்ப சூழ்நிலை களை மறந்து, அரசுக்கு எழுதிக் கொடுத்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாக்குறுதியையும் மனதில் கொண்டு நூல் வெளியீட்டு முயற்சிகளில் அக்கறை காட்டினார், பாரதி.

1918 டிசம்பர் 21ஆம் நாளன்று பாரதி தம்முடைய உடன்பிறவாத அருமைத்தம்பி பரலி சு.நெல்லையப்பருக்குத் தம்முடைய நூல்கள் வெளிப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திக் கடிதம் எழுதினார்.

பரலி சு.நெல்லையப்பருக்குப் பாரதி எழுதிய கடிதம் இதுதான்:

ஓம் சக்தி

கடையம்,
21 டிஸம்பர் 1918

ஸ்ரீமான் நெல்லையப்ப பிள்ளைக்கு நமஸ்காரம்.

நான் ஸௌக்யமாகக் கடையத்துக்கு வந்து சேர்ந்தேன். இவ்வூருக்கு வந்த மறுநாள் — பாப்பா பாட்டு, முரசு, நாட்டுப் பாட்டு, கண்ணன் இவை வேண்டுமென்று பலரிடமிருந்து கடிதங்கள் கிடைத்தன.

என் வசம் ஷை புஸ்தகங்கள் இல்லை. உன்னிடம் ஷை புஸ்தகங்களிருந்தால் அனுப்பக்கூடிய தொகை முழுதும் அனுப்பும்படி ப்ரார்த்திக்கிறேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"பாஞ்சாலி சபதம்" — இரண்டு பாகங்களையும் சேர்த்து ஒன்றாக அச்சடிப்பதற்குரிய ஏற்பாடு எது வரை நடந்திருக்கிறதென்ற விஷயம் தெரியவில்லை. இனிமேல் சிறிது காலம் வரை நான் ப்ரசுரம் செய்யும் புஸ்தகங்களை போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் காட்டி அவருடைய அனுமதி பெற்றுக்கொண்ட பிறகே ப்ரசுரம் செய்வதாக ராஜாங்கத்தாருக்கு நான் ஒப்பந்தமெழுதிக் கொடுத்திருக்கிறேன்.

ஏற்கெனவே "பாஞ்சாலி சபதம்'' (முதற் பாகம்) வெளிப்பட்டிருக்கிறபடியாலும், ப்ரசுரம் செய்பவன் நானன்றி நீ யாதலாலும் இதை அச்சிடுமுன் ஷ ஒப்பந்த விதியை அனுசரித்தல் அவசியமில்லை யென்று தோன்றுகிறது.

அப்படியே காண்பித்தாலும் தவறில்லை. நமது நூல் மாசற்றது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர் ஹானிங்டன் எனக்கு மிகவும் அன்புள்ள ஸ்நேஹிதர்; தங்கமான மனுஷ்யன். ஆதலால், அநாவசியமான ஆக்ஷேபங் கற்பித்து, நமது கார்யத்தைத் தடை செய்யக் கூடியவரல்லர். நீயே ஷ நூலை அவரிடங் காட்டி அனுமதி பெற்றுக் கொள்ளுக.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாப்பா பாட்டு முதலியன உன்னிடம் இல்லாவிட்டால், உடனே அவற்றை மீட்டும் ப்ரசுரம் செய்தல் மிகவும் அவஸரம்.

இவை முதலிய விஷயங்களைப் பற்றி உன்னிடம் நேரே பேச விரும்புகிறேன். இதன் பொருட்டாக இக் கடிதங் கண்டவுடன் இங்கு நீ நேரே புறப்பட்டு வந்து சேரும்படி வேண்டு கிறேன். ஸ்ரீமான் குவளை க்ருஷ்ணய்யங்கார் முதலிய நம்முடைய நண்பர்களுக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவிக்கும்படி ப்ரார்த்திக் கிறேன். இன்னும் ப்ரசுரம் செய்ய வேண்டிய நூல்கள் என்னிடம் பல இருக்கின்றன. நான் இப்போது ப்ரிடிஷ் இந்தியாவுக்கு வந்துவிட்ட படியால் நமது ப்ரசுரங்களுக்குப் பணம் கொடுக்கக்கூடிய நண்பர்களும் பலர் இருக் கிறார்கள். உன்னை ஸஹாய புருஷனாகக் கொண்டால் ப்ரசுர கார்யம் தீவ்ரமாகவும் செம்மையாகவும் நடைபெறுமென்று தோன்றுகிறது.

எதற்கும், நீ உடனே புறப்பட்டு இங்கு வந்து சேரும்படி. ப்ரார்த்திக்கிறேன்.

உனக்கு மஹா சக்தி அமரத்தன்மை தருக.

உனதன்புள்ள

சி. சுப்பிரமணிய பாரதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியின் கடிதம் கிடைக்கப்பெற்ற நெல்லையப்பர் கடையத்தில் அவரைச் சந்திக்கச் சென்றார். ஆனால், பாரதி கடையத்தில் இல்லை; எட்டயபுரம் சென்றிருப்பதாக அறிந்தார். அதனால், நெல்லையப்பரும் எட்டயபுரம் புறப் பட்டுச் சென்று, அங்கே பாரதியைச் சந்தித்தார். பாரதியுடன் கலந்து பேசிவிட்டுச் சென்னை திரும்பிய நெல்லையப்பர் தாம் முன்னரே பதிப் பித்து வெளியிட்ட நூல்களை - பாரதி கடிதத்தில் குறிப்பிட்டு எழுதியிருந்த பாப்பா பாட்டு, நாட்டுப் பாட்டு, முரசு, கண்ணன் பாட்டு-ஆகிய நான்கு நூல்களையும் மறு அச்சுகளாகவும், மறு பதிப்பு களாகவும் 1919 ஆம் வருடம் வெளியிட்டார்.

மறுபதிப்பு "நாட்டுப்பாட்டு" நூலிலே புதியன வாகச் சில பாடல்களைச் சேர்த்துப் பதிப்பித்தார். "கண்ணன் பாட்டு" நூலிலும் 'கண்ணன் - என் அரசன்' என்னும் புதிய பாடல் ஒன்றைச் சேர்த்த துடன், வ.வெ.ஸு. அய்யர் அவர்களிடம் முன்னுரை யொன்றும் பெற்றுப் பதிப்பித்தார்.

ஆனால், புதிய நூல் என்று சொல்லும் வகையில் எந்த வொன்றையும் நெல்லையப்பர் பதிப்பித்து வெளியிடவில்லை.

பாப்பா பாட்டு, முரசு-ஆகிய இரு நூல்களிலும் பாடல்களிலோ முகவுரையிலோ மாற்றம் ஏதும் மறு அச்சில் காணப்பெறவில்லை எனலாம். எனவே 'நாட்டுப்பாட்டு' நூலின் முகவுரை, இடம் பெற்ற பாடல்கள் வரிசை ஆகியனவற்றையும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கண்ணன் பாட்டு'க்கான முன்னுரைப் பகுதியையும் இங்கே பொருத்தம் கருதிப் பார்ப்போம்.

'நாட்டுப் பாட்டு' நூலுக்காக நெல்லையப்பர் எழுதிய முகவுரை வருமாறு:



இது, முன்னர் யான் வெளியிட்ட நாட்டுப் பாட்டின் இரண்டாம் பதிப்பு. இதில் பல புதிய பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பாரதியாரின் பாடல்களைப் பற்றி ஒரு சிறிய ஆராய்ச்சி எழுதுவதென்றாலும் அது பெரிதாக விரியும். எனவே, அந்தக் கடமையை இங்கு நான் செய்யவில்லை.

பாரதியாரின் பாடல்கள் தமிழர்களுக்குப் புதிய உயிர் அளிப்பன. அவரது பாடல்களெல்லாம் மேலான தேச பக்தியையும், தெய்வ பக்தியையும், உண்மையான கவிகள் விளைக்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும் ஒப்பற்ற இன்பத்தையும்விளைக்கின்றன. அவர் பாடல்களைப் படித்த காசிவாசியான எனது நண்பர் ஒருவர் "அவரது அரிய கவிகளைப் படித்து உடம்பு சிலிர்த்தேன். இத்தகைய சிறந்த கவி வல்லோர்கள் இன்னும் இருந்து பாரத நாட்டைச் சிறப்பித்து வருவதால்தான் தமிழ்மாது விருத்தாப்பிய தசை அடையவில்லை; அடையமாட்டாள் என மகிழ்ந்தேன்" என்று எழுதினார். ஆயினும், இத்தகைய புலவர்களின் பெருமையை அறிந்து, அவர்களை ஆதரித்து, அவர்கள் அறிவும் திறமையும் தமிழ் நாட்டாருக்கு மிகவும் பயன்படும்வண்ணம் செய்யக்கூடிய தமிழர்கள் மிகச் சிலர்கூட இல்லாதிருப்பதை நோக்கும்பொழுது எனக்கு அளவற்ற விசனம் உண்டாகிறது.

இந்த 'நாட்டுப்பாட்'டின் பெருமையைத் தமிழர்கள் நன்றாய் அறிவார்கள். எனது தாய்த் திருநாட்டைப் புகழும் இத்தகைய பாடல்களைப் பாடி மகிழுமாறு, யான் இந்த நாட்டிலே கோடி கோடி பிறப்பு பிறக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அண்ட சராசரங்கள் அனைத்தையும் ஆக்கியும் காத்தும் மாய்த்தும் வரும் பரம்பொருளின் பெரும் புகழை ஒருவன் எவ்வளவு காலந்தான் புகழ்ந்து போற்றினும் ஆவல் தீருமா? அது போல, இந்தத் தெய்விகத் திருநாட்டின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருமைகளை ஒருவன் எவ்வளவு காலந்தான் புகழ்ந்து பாடினும் ஆவல் தீராது.

எந்தாய் வாழ்க! வந்தே மாதரம்!

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை
சித்தார்த்தி: ஆனி } நெ.

இனி, தாய்த்திருநாட்டைப் புகழும் 'நாட்டுப் பாட்டு'த் தொகுதியுள் காணப்பெறும் பாடல்களின் விவரத்தைப் பார்ப்போம்.

*1919*ஆம் வருடப் பதிப்பில் காணப்படும் பாடல்களாவன:

1. வந்தே மாதரம்
2. வந்தே மாதரம்
3. செந்தமிழ் நாடு
4. பாரத தேசம்
5. நாட்டு வணக்கம்—சுதேச வந்தனம்
6. எங்கள் நாடு
7. ஜாதீய கீதம் [மொழிபெயர்ப்புகள்]
8. எங்கள் தாய்
9. மாதாவின் துவஜம்
   பாரதநாட்டுக் கொடியினைப் புகழ்தல்
10. பாரததேவியின் திருத்தசாங்கம்
11. ஜய பாரத
12. சுதந்திர தேவியின் துதி
13. சுதந்திர தாகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

14. பாரதமாதா திருப்பள்ளி யெழுச்சி
15. தமிழ்
16. தமிழ்த்தாய்
17. புது வருஷம்
18. தொழில்

மேற்கண்ட பதினெட்டுப் பாடல்களில் புதிய பாடல்களாக 1. செந்தமிழ் நாடு, 2. பாரத தேசம் 3. தமிழ் 4. தமிழ்த்தாய் 5. தொழில் ஆகிய ஐந்து பாடல்களோ எனக் கருத இடமுண்டு.

1917 ஆம் வருடத்திய முதற் பதிப்புக் கிடைக்குமேயானால் புதிய இரண்டாம் பதிப்பில் சேர்க்கப்பட்ட பாடல்கள் எவை யென்பதைத் திடமாக அறிந்துகொள்ள முடியும்.

1908, 1909 ஆம் ஆண்டுகளில் பாரதியே பதிப்பித்து வெளியிட்ட ஸ்வதேச கீதங்கள், ஜன்ம பூமி ஆகிய இரண்டு நூல்களில் இடம் பெற்றிருந்த பாடல்களுள் பெரும்பான்மை "நாட்டுப் பாட்டு" நூலில் காணப்படுகின்றன.

சொல்லப்போனால், புதிய பாடல்களாகக் கருதத்தகும் ஐந்து பாடல்களை நீக்கிக் கணக்கிட்டால், எஞ்சிய பதின்மூன்று பாடல்களும் மேற்குறித்த நூல்களில் காணப்படுகின்றனவே யாகும்.

பாரதியின் பாடல்களைத் 'தேசீய கீதங்கள்' எனத் தலைப்பிட்டு வெளியிட்டால், பிரிட்டிஷ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசாங்கம் தடை செய்யும் என்று கருதியே நெல்லையப்பர் "நாட்டுப் பாட்டு" என்று தலைப் பெயரிட்டுப் பதிப்பித்து வெளியிடு செய்தார்.

"கண்ணன் பாட்டு" இரண்டாம் பதிப்புக்கு வ. வெ. சு. ஐயர் அவர்களிடம் நட்புரிமை காரணமாக முன்னுரை பெற விரும்பினார் நெல்லையப்பர். அதனால், அவர் தம் விருப் பத்தை வ. வெ. சு. ஐயருக்குத் தெரிவித்தார்.



வ.வெ. சுப்ரமண்ய ஐயர்

நெல்லையப்பரின்வேண்டுகோளுக்கு இணங்கி, அதுவேளை புதுச்சேரியில் தங்கியிருந்த வ. வெ. சுப்ரமண்ய ஐயர் அவர்கள் "கண்ணன் பாட்டு" நூலுக்கு முன்னுரை வழங்கினார். முன்னுரையின் மதிப்பீட்டுச் சொற்கள் ஒவ்வொன்றும் வாய்மை மணப்பதாகும். பாரதியின் கவிதைத் திறனையும், பண்ணழகையும் வ.வெசு. ஐயர் நெஞ்சாரப் பாராட்டி மகிழ்ந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வ.வெ.சு. ஐயர் வரைந்த முன்னுரைச் சித்திரம் வருமாறு:

நம் காலத்துத் தமிழ்க் கவிகளுள் பிரதம ஸ்தானத்தை வகிக்கும் ஸ்ரீமான் ஸுப்ரஹ்மண்ய பாரதியின் நூல்களுக்கு முன்னுரை வேண்டுவதேயில்லை. இருப்பினும், பாயிர மல்லது பனுவ லன்றே என்னும் முதுமொழியை நினைத்தோ அல்லது வேறு என்ன எண்ணியோ, பதிப்பாசிரியர் இக் கண்ணன் பாட்டின் இரண்டாம் பதிப்புக்கு என்னை ஓர் முன்னுரை எழுதித் தரவேண்டு மெனக் கேட்டார். சிறிதளவேனும் சாத்திய மாயிருக்கிற ஓர் காரியத்தை நட்புரிமை பூண்டோர் செய்யும்படி வேண்டினால் மறுத்தல் அழகன்று என நினைத்துச் சம்மதித்தேன்.

பாரத நாட்டின் குல தெய்வமாகிவிட்ட கண்ணனுக்குப் பாமாலை சூட்டாத கவிகள் அருமை. தன்னை நெடுநாள்களாக மறந்திருந்த் பாரத நாடு திடீரென விழித்துக் கொண்டதும், அதன் எதிரே முதலில் தோன்றிய ஒளி கீதா சாஸ்திரத்தைக் கூறிப் பார்த்தனுடைய ரதத்தை வெற்றி பெற ஓட்டிய கண்ணபிரானுடைய உருவமே. அந்த உருவமானது நமது கவியின் இருதயத்திலும் எழுந்து அவருடைய கவிதைக்கு ஓர் சோபையைக் கொடுத்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பத்து வருஷங்களுக்கு முன் அவர் பதிப்பித்த ஜன்ம பூமியிலேயே ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம் என்று இரண்டு செய்யுள்கள் காணப்படுகின்றன. ஆனால், பிற்பட்டுத்தான் கண்ணனுடைய செயல்களும் திருவிளை யாடல்களும் அவர் மனதைப் பூரணமாக ஆகருஷித்தன. இவ் ஆகருஷணத்திற்கு நாலாயிரப் பிரபந்தத்துள் பெரியாழ்வார் அருளிச் செய்த திருப்பாசுரங்களின் அனுஸந்தானம் முக்கிய காரணமாக இருந் திருக்கிறது. இக் கண்ணன் பாட்டானது பாவ விஷயத்தில் அப் பாசுரங்களின் வழியையே தழுவியதாக இருக்கிறது.

இஷ்ட தெய்வத்தைப் பல பாவங்களால் வழிபடலாகும் என்று நமது பக்தி சாஸ்திரங் கள் கூறுகின்றன. நமது ஆசிரியரும் அதை அனுசரித்துக் கண்ணனைத் தாயாகவும், தந்தையாகவும், எஜமானாகவும், குருவாக வும், தோழனாகவும், நாயகியாகவும், நாயகனாகவும் பாவித்துப் பாடுகிறார்.

இவற்றுள் நாயக நாயகி பாவத்தைப் பற்றி இங்குச் சில மொழிகள் கூறாது விட முடியவில்லை. இப் பாவத்தால் பகவானை வழிபடும் முறை, தொன்றுதொட்டு, பக்தர் களாலும், கவிகளாலும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ரோமன் கத்தோலிக் மதத்தில்கூட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடியார் வர்க்கத்தை நாயகியாகவும் கிறிஸ்துவை நாயகனாகவும் பாவித்து எழுதிய ஸ்தோத்திரங்கள் பல உள. நமது பாகவதத்தில் கோபிகளின் உபாக்கியானங்களெல்லாம் இப் பாவத்தை ஒட்டி எழுதப்பட்டுள்ளனவே. மகா பக்திமதியான மீராபாயி உலகத்திலுள்ள ஜீவகோடிகள் அனைத்தும் ஸ்திரீப் பிராயம் என்றும், பகவான் ஒருவனே புருஷன் என்றும் பாவித்துப் பக்தி செய்திருக்கிறார். பரம ஹம்ஸ ராமகிருஷ்ண தேவரும் தம்முடைய அனுபவங்களுள் நாயகி அனுபவத்தையும் அனுபவிக்க எண்ணி, சேலை தரித்துக் கொண்டு, ராதை என்கிற பாவத்தால் கண்ணனை வழிபட்டார் என்று சொல்லப் படுகிறது. திருக்கோவையாரையும், இராமலிங்க சுவாமிகளின் திருவருட் பாவையும் அனுபவித்த தமிழருக்கு இவ்விதம் வழிபடும் முறை புதிதாகப் படாது.

ஆனால், இந்தப் பாவத்தை ஆளுவது கத்தியின் கூர்ப் பக்கத்தின்மீது நடப்பதைப் போன்ற கஷ்டமான காரியம். ஓர் வரம்பு இருக்கிறது; அதற்கு இப்புறம் அப்புறம் போய்விட்டால் அசந்தர்ப்பமாகிவிடும். ஸ்ரீ பாகவதத்திலும்கூட, கோபிகா உபாக்கியானங்களில் சுகபகவான் இவ் வரம்பை அங்கங்கே கடந்து விட்டிருக்கிறார் என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும்
கடல் ஞாலம் ஆவேனும் யானே என்னும்

என்று தொடங்கும் திருவாய் மொழிகளையும்,

கருப்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ் வாய்தான் தித்தித் திருக்குமோ?

என்று தொடங்கும் ஆண்டாளுடைய பாசுரங்களையும் போலச் செயிரின்றி இப் பாவத்தைப் பாடுவது அனேகமாய் அசாத்தியம்.

நமது கவியும் இப் பாவத்தை விரிக்கையில் பரபக்தியைவிடச் சாரீரகமான காதலையே அதிகமாக வர்ணித்திருக்கிறார். ஆனால் சுகப்பிரம்மமே நிறுத்த முடியாததான தராசு முனையை நம் ஆசிரியர் நிறுத்தவில்லை என்று நாம் குறை கூறலாமா?

இந்தக் கீர்த்தனங்களைப் பரபக்திக்குப் பேரிலக்கியமாகக் கொள்ள வேண்டுவதில்லை. ஆசிரியர் இந் நூலில் கவி என்கிற ஹோதாவில் தான் நம்மிடம் வருகிறார் என நினைக்க வேண்டும். கவிதா ரீதியாகப் பார்க்கும்போது இக் கீர்த்தனங்களுள் பெரும்பாலவையிலுள்ள சுவை தேனினும் இனிதா யிருக்கிறது.

இன்னொன்று: கவிதையழகை மாத்திரம் அனுபவித்துவிட்டு இந் நூலின் பண்ணழகை மறந்துவிடக் கூடாது. இதிலுள்ள பாட்டுக்களிற் பெரும்பாலவை தாளத்தோடு பாடுவ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தற்காகவே எழுதப்பட்டவையா யிருக்கின்றன. கடற்கரையில், சாந்தி மயமான சாயங்கால வேளையில், உலகனைத்தையும் மோஹ வயப்படுத்தி நீலக் கடலையும் பாற் கடலாக்கும் நில வொளியில், புதிதாகப் புனைந்த கீர்த்தனங்களைக் கற்பனா கர்வத்தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியன் தன்னுடைய கம்பீரமான குரலில் பாடினதைக் கேட்ட ஒவ்வொருவரும் இந் நூலிலுள்ள பாட்டுக்களை மாணிக்கங்களாக மதிப்பர்.

இந் நூலைத் தமிழுலகம் ஆதரித்துத்தான் இரண்டாவது பதிப்பு வெளிவருகிறது. ஆனால், ஹரீந்திர நாத சட்டோபாத்தியாயர் எழுதிய ஆங்கிலக் கீர்த்தனங்களின் விலை மூன்று ரூபாயாக இருக்க, அளவில் அந் நூலில் குறையாததும், சுவையில் அதற்கு இணையாக இருப்பதுமான இந் நூலின் முதற் பதிப்புக்கு, காகிதம் ஏறிவிற்ற காலத்தில், பதிப்பாசிரியர் விலை கால் ரூபாயாகக் குறிக்க வேண்டியிருந்தது என நினைக்கும்போது, நாட்டில் தமிழபிமானம் வெளிப்படையாக விளங்கவில்லை என்றாவது ஒப்புக்கொள்ள வேண்டும். முன் காலத்தில் ஆசிரியர்களுக்கு அரசர்கள் ஏராளமான பொருளுதவி செய்து, அவர்கள் மனதைச் சிறிய விசாரங்கள் பீடிக்காமல் காத்து வந்து, அவர்களுடைய ஆற்றல் நாளுக்கு நாள் அதிகரிக்கும்படி செய்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்தார்கள். தற்காலத்தில் கல்வி யபிமான முள்ள பொது ஜனங்கள்தாம் அக் காலத்து அரசரின் ஸ்தானத்தை வகிக்கிறார்கள். இவர்கள் தங்கள் அபிமானத்தை விலையைப் பொருட்படுத்தாமல் நூல்களின் யோக்கியதை யைக் கருதி ஆதரித்துத்தான் காட்ட முடியும். நமது ஆசிரியரின் நூல்களை நம் நாட்டவர் சரிவர ஆதரிக்காததனாலே,

"சுற்றி நில்லாதே போ, பகையே!
துள்ளி வருகுது வேல்!"

என்றும்,

"கைதனில் வில்லும் உண்டு:
காண்டீவம் அதன் பேர்!" என்றான்.*

என்றும் உள்ள அக்ஷர லக்ஷம் பெறுமான பாக்களை எழுதி யிருக்கும் அவருடைய உற்சாகம் குன்றிப்போயிருக்கிறது. தமிழபிமானிகள் இப் பதிப்பை ஆதரித்து வாங்கி ஆசிரியனுடைய உற்சாகத்தை உயர்த்தி அவரால் தமிழில் புதிய இலக்கியங்கள் பிறக்கும்படி செய்வார்கள் என நம்புகிறேன்.

புதுச்சேரி, சித்தார்த்தி
ஆவணி உஉ வ — வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயர்

---

* கையெழுத்துப் பிரதியா யிருக்கிற பாஞ்சாலி சபதத்தின் இரண்டாம் பாகத்தில் அருச்சுனன் தன்னுடைய பராக்கிரமத்தைக் கூறும் செய்யுளில் வருகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழபிமானிகள் பாரதி நூல்களை ஆதரித்து, பாரதியினுடைய உற்சாகத்தை உயர்த்தி அவரால் புதிய இலக்கியங்கள் பிறக்கும்படி செய்தல் வேண்டுமென வ.வெ.சு. ஐயர் அறைகூவல் விடுத்த அதே வேளையில், பாரதி எட்டயபுரத்து மன்னவருக்கு ஒரு கடிதம் (6.8.1919) எழுதினார்.

அதாவது, எட்டயபுரத்து ராஜ வம்சத்தின் சரித்திர நூலான 'வம்சமணி தீபிகை' என்பதைத் திருத்தி நல்ல, இனிய, தெளிந்த தமிழ் நடையில் தாம் அமைத்துத் தருவதாகவும், அங்ஙனம் செய்யும் அந் நூலை ராஜாங்க பாடசாலைகளில் தமிழ்ப் பாடமாக வைக்க ஏற்பாடு செய்யலாம் என்பதாகவும் கடித வாசகம் அமைந்திருந்தது.

இம் முயற்சியும் வெற்றி பெறவில்லை. என்றாலும் பாரதி மனம் தளரவில்லை. இடைவிடாது தம் முயற்சிகளைச் செயல்படுத்தும் வழிமுறைகளில் சிந்தனையைச் செலுத்திவந்தார். அதாவது, தாம் புதுச்சேரியினின்றும் கொண்டு வந்திருந்த கைப்பிரதிகளை ஒழுங்குபடுத்தி, நூல்களாக அவற்றை வெளியிடுவதற்கான திட்டங்களை வகுப்பதிலும் அவர் தம்முடைய கருத்தைச் செலுத்தலானார்.

இந்த நிலையில், இதே 1919ஆம் ஆண்டு சுதேசமித்திரன் புத்தகசாலை "பாரத ஜனசபை" (முதல் பாகம்) என்னும் நூலை வெளியீடு செய்தது. இதுவும் மொழிபெயர்ப்பு நூலே யாகும். இந்திய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசீய காங்கிரஸ் அமைப்பையே பலரும் பாரத ஜனசபை என்ற பெயரால் குறித்தனர்.

முதல் பாகத்தில், காங்கிரஸ் மகாசபையின் சரித்திரம், காங்கிரஸ் தோற்றம், வளர்ச்சி, சிறப்பு ஆகியவற்றுடன் சபையின் முதல் பத்து வருட நடவடிக்கைக் குறிப்புகளையும் பாரதி தந்துள்ளார்.

புதிய நூல்களுக்கான திட்டம் மேற்கொண்ட காலப் பகுதியில் பாரதிக்குச் செட்டி நாட்டில் சில நண்பர்கள் ஏற்பட்டனர். பாரதியிடம் மிகுந்த அன்பு கொண்டு ஒழுகிய அன்பர்களில் கானாடு காத்தான் வை.சு.சண்முகம் செட்டியார் குறிப்பிடத் தக்கவர்.

அவருடைய அன்பு அழைப்பை ஏற்று, பாரதி 1919ஆம் வருடம் அக்டோபர் மாத இறுதியில் கானாடு காத்தான் சென்று, அங்கு அவருடைய விருந்தினராகச் சுமார் ஒரு வார காலம் வரை தங்கியு மிருந்தார். பாரதி அச் சமயம் சண்முகம் செட்டியாரின் ஒத்துழைப்புடன் தம் நூல்களை வெளியிட எண்ணங் கொண்டார். அதனால், முதலில் "பகவத் கீதை" நூலை அச்சிட விரும்பினார்; அதன் பின்பு "பாஞ்சாலி சபதம்" (முதல் பாகம்) இரண்டாம் பதிப்பையும், அதனைத் தொடர்ந்து, "பாஞ்சாலி சபதம்" (இரண்டாம் பாகம்) நூலையும் வெளியிடப் பெரிதும் விரும்பினார். இதைப் பற்றி யெல்லாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விரிவாகக் கானாடுகாத்தான் வை. சு. சண்முகம் செட்டியாரிடம் பாரதி கலந்து பேசிவிட்டு ஊர் திரும்பினார்.

ஊர் திரும்பிய பாரதி சில நாட்கள் கடந்தபின், தம் நூல் வெளியீடு தொடர்பாகச் சண்முகம் செட்டியாருக்கு 15.11.1919இல் ஓர் கடிதம் எழுதினார்.

அக் கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு:

"ஸ்ரீமான் வயி.சு.ஷண்முகம் செட்டி யாருக்கு ஆசீர்வாதம்.

பகவத் கீதையை அச்சுக்கு விரைவில் கொடுங்கள். தங்களுக்கு இஷ்டமானால் அதற்கு நீண்ட விளக்கம் எழுதி யனுப்பு கிறேன். நீண்ட முகவுரையும் எழுதுகிறேன்.

கீதைக்கு - புஸ்தக விலை ரூ. 1க்குக் குறைத்து வைக்க வேண்டாம். தடித்த காயிதம்; நேர்த்தியான அச்சு; பெரிய எழுத்து; இட விஸ்தாரம் - இவை கீதைக்கு மட்டுமே யன்றி நாம் அச்சிடப் போகும் புஸ்தகங்கள் எல்லாவற்றுக்கும் அவசியம்.

ஆங்கிலக் கவிகள், ஆசிரியரின் காவியங் களும் கதைகளும் இங்கிலாந்தில் எப்படி அச்சிடப்படுகின்றனவோ, அப்படியே நம் நூல்களை இங்கு அச்சிட முயல வேண்டும். அங்ஙனம் அச்சிட ஒரு ரூபாய் போதாதென்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அச்சுக்கூடத்தார் அபிப்பிராயங் கொடுக்கும் பக்ஷத்தில் புஸ்தக விலையை உயர்த்துவதில் எனக்கு யாதோர் ஆக்ஷேபமு மில்லை.

'பாஞ்சாலி சபத'த்துக்கு முகவுரை (இரண்டாம் பதிப்புக்கு) இன்னும் சில நாட்களில் அனுப்புகிறேன்.

தம்பி, இந்தப் 'பாஞ்சாலி சபதம்' இரண்டாம் பாகம் கையெழுத்துப் பிரதி அனுப்பி யிருப்பதைச் சோம்பலின்றி தயவு செய்து ஒருமுறை முற்றிலும் படித்துப் பாருங்கள். பிறகு அதை மிகவும் ஆச்சரிய மாகவும் அழகாகவும் அச்சிடுதல் அவசிய மென்பது தங்களுக்கே விசதமாகும்.

புதுச்சேரியில் (பாடிய) பாட்டுக்கள் அனைத்தையும் இங்கு குழந்தை தங்கம்மா தன்னுடைய நோட் புக்குகளில் எழுதி வைத்திருக்கக் கண்டு, அதைப் புதையல் போல் எடுத்து வைத்திருக்கிறேன்."

(குமரி மலர் : அக்டோபர் 1973)

மேலே கண்ட கடிதத்தின்படி, பாரதி மிக்க ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் நூல்கள் வெளிவர வில்லை.

இங்கே ஒரு செய்தியை நாம் எண்ணிப்பார்க்க வேண்டுவது மிக அவசியம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி தம் நூல்கள் வெளிப்பட வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டவராக இருந்ததைப் போன்றே, வெளிப்படும் நூல்கள் சிறந்த முறையில் அமைந்திருக்க வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறை காட்டினார்.

1906ஆம் ஆண்டில் 'சிவாஜியின் படையழைப்பு' என்னும் நூல் எப்படி அச்சிடப்பட வேண்டும் என்று விரும்பினாரோ அதே எண்ணத்தை 1919 ஆம் ஆண்டிலும் கொண்டிருந்தார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேனாடுகளில் எப்படி நூல்கள் அச்சிடப் படுகின்றனவோ அவைகளுக்கு இணை சொல்லும் பான்மையில் இங்கும் தம் நூல்கள் அச்சிடப் படவேண்டும் என்பது பாரதியின் தெளிவான கருத்து.

பாரதி விரும்பி எதிர்பார்த்தபடி நூல் பணிகளில் முன்னேற்றம் ஏதும் காணப்பட வில்லை.

தாம் மிக ஆசை ஆசையாக எதிர்பார்த்து நம்பியபடி வாக்குறுதியளித்த அன்பர்களின் உதவி உரிய காலத்தில் கிடைக்காதபோதும், பாரதி தம் நூல் பிரசுர சிந்தனையை ஒருபோதும் மறந்தா ரில்லை; முன் எப்போதைக் காட்டிலும் மிகத் தீவிரமாகத் திட்டங்களை வகுக்கலானார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தம் நூல்களை அச்சிடக் கையில் பணம் இல்லாத காரணத்தால், தம் நூல் வெளியீட்டுத் திட்டத்தை அறிக்கையாகத் தயாரித்து, அதைத் தமக்கு நன்கு அறிமுகமானவர்களுக்கு எல்லாம் அனுப்பி வைத்துப் பாரதி பண உதவி கோரினார். அந்த அறிக்கை ஆங்கிலத்தில் அமைந்திருந்தது.

1920 ஜூன் மாதத்திலிருந்து அந்த அறிக்கை நண்பர்களுக்கு அனுப்பப்பட்டது.

ஆங்கிலச் சுற்றறிக்கையின் தமிழாக்கத்தை இங்கே காண்போம்.

அன்புள்ள நண்பருக்கு,

நான் பன்னிரண்டு வருட காலம் சுதேசத்தினின்று அகன்றிருக்கையில் எழுதிய என்னுடைய எல்லாக் கையெழுத்துப் பிரதிகளும் புதுச்சேரியிலிருந்து இங்கு வந்து சேர்ந்திருக்கின்றன. அவற்றை நாற்பது புத்தகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு புத்தகமும் முதற் பதிப்பாகப் பதினாயிரம் பிரதிகள் விகிதம் அச்சிடுகிறேன். இதற்கு எனக்கு ஆரம்பச் செலவாக இருபதினாயிரம் ரூபாய் ஆகிறது. புத்தகங்கள் வெளியான ஒரு வருடத்திற்குள் - அதிக பட்சம் போனால் இரண்டு வருடத்திற்குள் - நிகர லாபமாக ஒன்றரை லட்சம் ரூபாய் கிடைக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளியிடுவதற்காக நான் தேர்ந்தெடுத்திருக்கும் நூல்களில் பெரும்பாலவை, உரைநடையிலான கதைகள்; நெஞ்சை கொள்ளை கொள்ளும் பான்மை வாய்ந்தவை; அதே சமயம் இலக்கிய நயம் வாய்ந்தவை; எளிய, தெள்ளிய, இனிய நடையில் அமைந்தவை. ஜனங்களுக்குப் பிடித்தமான நடையழகும் சொல்லழகும் கொண்டவை. அதே சமயம் பரிசுத்தமானவை; காவிய ரசனை பொருந்தியவை; எக்காலத்திலும் இருக்கக் கூடியவை. இது தவிர (2) தமிழ் நாட்டிலும், வெளிநாடுகளிலும் நாள்தோறும் தமிழைப் படிக்கின்ற ஆண் - பெண் குழந்தைகள் அதிகப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். (3) மற்றும், சரித்திரபூர்வமான என்னுடைய நூல்கள் தமிழ்நாட்டின் புனருத்தாரணத்துக்கு மிகவும் அத்தியாவசியமானவை. உடனடியாகவும், தெய்வ சங்கல்பப்படியும், தவிர்க்க முடியாததுமான கீழ்த்திசை நாடுகளின் புனருத்தாரணத்துக்குத் தமிழ்நாடு முதற்படியாக மேம்பாடு அடைதல் வேண்டும். (4) இன்னும் என்னுடைய பதிப்புக்களின் அச்சு, அமைப்பு ஆகிய எல்லாவற்றிலும் அமெரிக்க முறையைப் பின்பற்றி அநேக அபிவிருத்திகளைச் செய்ய உத்தேசித்திருக்கிறேன். மேலும், கதைகளில் வரும் சம்பவங்களை யொட்டி, இடை யிடையே அழகான படங்களைப் புத்தகங்களில் சேர்க்கப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போகிறேன். இவை, பொது ஜனங்களுக்கு ஆச்சரியமாகவும் அதே சமயத்தில் கவர்ச்சிகரமாகவும் இருக்கும். (5) இவற்றோடு, புத்தகங்களின் விலையும் குறைவாக இருக்கும். எப்படியென்றால், வசன நூல்கள் ஒவ்வொன்றும் எட்டணா விகிதமும், கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் கூடிய மட்டில் நான்கணா விகிதமும் விலை வைக்க உத்தேசித்திருக்கிறேன். (6) ஏற்கெனவே, நான் வெளியிட்டிருக்கிற நூல்களினால் தமிழ்நாட்டில் எனக்கு நிகரில்லாத கீர்த்தி ஏற்பட்டிருக்கிறது. இவையெல்லாம் சேர்ந்திருக்கின்ற காரணத்தினால் என்னுடைய நூல்கள் நிறைய விற்பனையாகி வெற்றி கிட்டும் என்பது நிச்சயம்.

ஆகையால், தயைசெய்து, அச்சுச் செலவு வகைகளுக்காக உங்களால் முடிந்த ஒரு தொகையைக் கடனாக அனுப்புங்கள். உங்களிடமிருந்து குறைந்த பட்சம் நூறு ரூபாய் எதிர்பார்க்கிறேன். உங்களுடைய நண்பர்களில் இருபது பேரையாவது இந்தத் தொகையையோ, முடிந்தால் இன்னும் அதிகமான தொகையையோ அனுப்புமாறு செய்யுங்கள்.

உங்களிடமிருந்தோ, உங்கள் நண்பர்களிடமிருந்தோ நான் பெறும் தொகைகளுக்கு ஸ்டாம்பு ஒட்டின 'புரோ நோட்' எழுதிக் கொடுக்கிறேன். எனக்குக் கிடைக்கக் கூடிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அபரிமிதமான லாபத்தைக் கருதி, நான் பெறும் தொகைகளுக்கு, மாதத்திற்கு இரண்டு சதவிகிதம் தாராள வட்டி கொடுக்கிறேன். உங்களுடைய அன்பான பதிலையும், உங்கள் மூலமாக பல மணியார்டர்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். உங்களுக்கு நீண்ட, இன்பகரமான வாழ்நாட்களை அளிக்குமாறு ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

பின்குறிப்பு: என்மீது அரசாங்கம் விதித்திருந்த தடைகள் யாவும் நீக்கப்பட்டுவிட்டன. குற்றச் சாட்டுகளும் வாபஸ் பெறப்பட்டுவிட்டன. எனவே அரசு உத்தியோகஸ்தர்களைக் கூட இந்தக் கடனுக்கு உதவி செய்யும்படி கேட்கலாம். எவருடைய பெயரும் இது சம்பந்தமாய் வெளியிடப்படமாட்டாது. கடன் தருகிறவர்கள் யாவரும் தனிப்பட்ட முறையில் கடன் தந்தவர்களாகவே கருதப்படுவார்கள். இக் கடன்கள் யாவுமே இரண்டே இரண்டு வருடங்களில் தீர்க்கப்படும்.

மேற்குறித்த சுற்றறிக்கையினால் யாதொரு பயனும் விளைந்ததாகத் தெரியவில்லை. என்றாலும், இச் சுற்றறிக்கை வெளியான சமயத்தில், சுதேச மித்திரன் புத்தகசாலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


பாரத ஜன சபை

"பாரத ஜன சபை" யின் இரண்டாம் பாகத்தை வெளியிட்டது. இந்நூலில் காங்கிரசின் இரண்டாவது பத்து வருட நடவடிக்கைக் குறிப்புகள் இடம்பெற்றிருந்தன.

நூலைப் பதிப்பித்து வெளியிட்ட சுதேசமித்திரன் புத்தகசாலை பின்னொரு சமயம் நூல் குறிப்புரையாக,

> தென்னாட்டு தேசாபிமானிகளுக்கு உபயோகப்படும்படி ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியால் எழுதப்பட்ட நூலாகும்"

என்றே குறித்துள்ளது.

தம்முடைய நூல் வெளியீட்டுத் திட்டத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாத நிலையில், திரும்பவும் 'சுதேச மித்திர'னில் உதவியாசிரியராகப் பணியாற்றப் பாரதி சென்னை நகருக்கே வந்துவிட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சுதேச மித்திரன்' இதழில் பணியாற்றிய காலத்தும், தம் நூல் பிரசுரத் திட்டங்களை விளக்கி மீண்டும் மீண்டும் கடிதங்களைத் தம் நண்பர்களுக்குப் பாரதி எழுதிக் கொண்டே இருந்தார்.

சென்னை தமிழ் வளர்ப்புப் பண்ணையின் செயலாளர் நீண்டதோர் அறிக்கை தயாரித்து, பாரதியின் நூல் வெளியீட்டுத் திட்டத்திற்கு ஆதரவு தேட முற்பட்டார்.

தமிழ் வளர்ப்புப் பண்ணையின் அறிக்கையில், பாரதியின் புகழ் பூ மண்டலம் நிறைந்த கீர்த்தியாக வருணிக்கப்பட்டுள்ளது; பாரதியின் நூல் முயற்சிகளுக்குப் பொருள் கொடுத்து, எக்காலத்திலும் அழியாத புண்ணியம் அடையும் படியும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தமிழ் வளர்ப்புப் பண்ணை விடுத்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு :

ஓம் சக்தி

தமிழ் வளர்ப்பு—ஒரு வேண்டுகோள்

(ஸ்ரீமான் சி.சுப்பிரமணிய பாரதியின் புது நூல்கள்)

அன்பர்களே,

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியின் தமிழ் புதுமை, தெளிவு முதலிய பல குணங்களுடையதாய்த் தமிழ்நாட்டில் எல்லா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜனங்களாலும் மிகவும் அன்புடனும் ஆதரவுடனும் போற்றப்பட்டு வருகிறதென்ற விஷயம் உங்களுக்குத் தெரியாத தன்று.

இவர் இயற்றிய 'ஞானரதம்' என்ற கதையைப் பற்றி எழுதுகையில், மிகவும் கீர்த்தி பெற்ற ஆசிரியராகிய மஹேச குமார சர்மா, இதைப்போல் அற்புதமான கதை தமிழ் பாஷையில் வேறு கிடையாதென்று சொல்லுகிறார். அங்ஙனமே ஸ்ரீமான் பாரதி இயற்றிய 'கண்ணன் பாட்டு' முதலிய நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கும் தேசபக்தன் உதவிப் பத்திராதிபராகிய ஸ்ரீமான் நெல்லையப்ப பிள்ளை நமது பாரதியாரைத் தெய்விகப் புலவரென்றும், தமிழ்நாட்டின் தவப்பயனென்றும், ஜீவன் முக்தரென்றும் கொண்டாடுகிறார். இவர் நூல்களில் ஏற்கெனவே வெளிப்பட்டிருக்கும் பகுதிகளைப் படித்தவர்களனைவரும் மேலே காட்டிய வியப்புரைகளை எளிதில் அங்கீகாரம் செய்வார்கள்.

பூ மண்டல நிறைந்த கீர்த்தி

ஆனால், இவருடைய கீர்த்தி தமிழ் நாட்டில் மாத்திரமே பரவி யிருப்பதாக நினைத்துவிடக்கூடாது. இவருடைய பாட்டுக்கள் பல தெலுங்கு பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டு ஆந்திர தேசத்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாரால் கொண்டாடப்படுகின்றன. ஐர்லாந்து தேசத்து மஹா கவிகளில் ஒருவரும், ஜப்பான் தேசத்தின் ராஜதானியாகிய டோக்யோ நகரத்திலுள்ள (Imperial University) இம்பீரியல் யூனிவர்ஸிடி என்ற ஸாம்ராஜ்ய ஸர்வ கலா ஸங்கத்தில் இங்கிலீஷ் ஆசிரியராக விளங்கியவருமாகிய ஜேம்ஸ் எச். கஸின்ஸ் (James H. Cousins) என்பவர் இவருடைய தமிழ்ப் பாட்டுக்கள் சிலவற்றை இங்கிலீஷில் மொழி பெயர்த்து மேல்நாட்டார் வியப்புறும் படி செய்திருக்கிறார். 'மேலும், ஷை கஸின்ஸ் என்ற வித்வான் 1916 டிஸம்பர் 8ஆம் தேதி யன்று பிரசுரமான "காமன் வீல்" பத்திரிகை யில் வெர்ஹேரன் (Verhaeren) என்ற பெல்ஜியம் தேசத்துக் கவிச் சக்ரவர்த்தியைப் பற்றி எழுதி யிருக்கும் நீண்ட வ்யாஸத்தினிடையே, ஷை வெர்ஹேரனையும் நம் இந்தியா தேசத்துப் புலவர் சிலரையும் சீர்தூக்கிப் பார்க்கு மிடத்தே பின்வருமாறு சொல்லுகிறார் :

("The Seeing eye apprehends Beauty not only in the thing seen but through it; and the more faithfully the thing is seen as channel and symbol, the more certainly will both it and the seer be dignified, not degraded. Verhaeren came within sight of imaginative freedom; but it is in the poerty of Tagore and Naidu, Ghose and Bharati, and their spiritual comrades of the Irish School that the purest and truest expression of realised Beauty can be found")

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதன் பொருள் பின்வருமாறு :

"ஒரு வஸ்துவின் புறத்தே காணப்படும் ஸௌந்தர்யத்தை மட்டுமன்றி அதனை ஊடுருவிப் பார்த்து (அதில் மறைந்து கிடக்கும்) உள்ளழகையும் உணரும் சக்தி ஞான திருஷ்டிக்குரிய தாகும். புறத் தோற்றம் வெறுமே வாய்க்கால் போன்றது; வெறும் அடையாள மென்பதை ஒரு புலவன் எத்தனைக் கெத்தனை தெளிவாகக் காணுகிறானோ, அத்தனைக் கத்தனை அந்த வஸ்துவுக்கும் அந்தப் புலவனுக்கும் அதிக மஹிமை யேற்படும். இங்ஙனம் விமோசனம் படைத்த ஞான திருஷ்டி யெய்தும் பருவத்தை வெர்ஹேரன் கவி மிகவும் நெருங்கி வந்தார். ஆனால் ரவீந்த்ரநாத டாகுர், ஸரோஜினி நாயடு, அரவிந்த கோஷ், சுப்பிரமணிய பாரதி இவர்களுடைய கவிதையிலும், இவர் களைப் போன்ற ஞானத் தெளிவு கொண்ட ஐரிஷ் கவிஞர் சிலரின் கவிதையிலேயுந்தான் ஸௌந்தர்ய தெய்வத்தை ப்ரத்தியக்ஷமாகக் கண்டு, அதை உண்மையாகவும், சுத்தமாகவும் உணர்த்தும் சக்தி காணப்படுகிறது" என்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இங்ஙனம் கீர்த்தி வாய்ந்த கவியரசர் ஒருவர் தமிழ்நாட்டில் இருப்பது நமக்கெல்லாம் சாலமிகப் பெருமையன்றோ? இவர் தமிழ்நாட்டையும் தமிழ் பாஷையையும் மேம்படுத்தியதற்கு நாம் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்? எனினும், இவருக்கு நாம் செலுத்த வேண்டிய கடமையில் ஒரு சிறிதளவு செலுத்துதற்குரிய சந்தர்ப்பம் இப்போது வாய்த்திருக்கிறது. அது யாதெனில் சொல்லுகிறேன்.

ஸ்ரீமான் பாரதியார் பன்னிரண்டு வருஷம் ப்ரிட்டிஷ் இந்தியாவை விட்டுப் புதுச்சேரியில் வனவாஸம் செய்து கொண்டிருந்தார். அந்தக் காலத்தையெல்லாம், அவர் அங்கு வீணே கழிக்கவில்லை. ஏராளமான நூல்களெழுதிக் குவித்துக் கொண்டிருந்தார்.

பாரதியார் நூல்களை அச்சடிக்கிற மாதிரி

அவற்றையெல்லாம் இப்போது அச்சிடப் போகிறார். அவற்றை 40 புஸ்தகங்களாகப் பிரித்து ஒவ்வொரு புஸ்தகத்திலும் 10,000 பிரதிகள் அச்சிட உத்தேசிக்கிறார். $40 \times 10,000$ (நாற்பதைப் பத்தாயிரத்தால் பெருக்கும்போது) 4 லக்ஷம் சுவடிகளாகின்றன. இந் நான்கு லக்ஷம் புஸ்தகங்களும் தமிழ்நாட்டில், மண்ணெண்ணெய் தீப்பெட்டி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களைக் காட்டிலும் அதிக ஸாதாரணமாகவும் அதிக விரைவாகவும் விலைப்பட்டுப் போகுமென்பதில் சிறிதேனும் ஸந்தேஹத்துக்கிடமில்லை. இங்ஙனம் நிச்சயமாக அறிந்து கொள்ள எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. இவற்றுள் முக்யமான சில காரணங்களை இங்கு குறிப்பிடுகிறேன்.

முதலாவது :இந் நூல்களிலே பெரும் பகுதி வசன நூல்கள்; நேர்த்தியான, ஆச்சர்யமான, ரஸமான, வாசிக்க வாசிக்கத் தெவிட்டாத கதைகளடங்கிய வசன கிரந்தங்கள்; மிகவும் தெளிவான, இனிய, எளிய தமிழ் நடையில் குழந்தைகளுக்குக்கூட நன்றாக விளங்கும்படி எழுதப்பட்டன. எனவே, இந் நூல்கள் லக்ஷக்கணக்காக விலையாகுமென்பதில் ஸந்தேஹமில்லை.

இரண்டாவது : தமிழ்நாட்டிலும் தமிழர் சென்று குடியேறி யிருக்கும் வெளித் தீவுகளிலும், தமிழ் வாசிப்பவரின் ஜனத்தொகை நாளுக்கு நாள் ஒன்று, பத்து, நூறு, ஆயிரமாகப் பெருகிக் கொண்டு வருகிறது.

மூன்றாவது : இந்த நூல்கள் அச்சிடப்படும் மாதிரியே இவை ஏராளமாக விலைப்படுவதற் கொரு ஸாதனமாகும். அமெரிகா, ஐரோப்பா கண்டத்துப் பதிப்புக்களைப் போல் நேர்த்தியாகவும், மனோரம்ய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாகவும், நல்ல காயிதத்தில், தெளிவான எழுத்துக்களில், தெளிவாகப் பதம் பிரித்து ஆச்சர்யமான தகுந்த சித்திரங்கள் பதிப்பித்து வெளியிடுவதால், இந் நூல்கள் ஜனங்களுக்குள்ளே மிகுந்த வியப்பையும், பிரியத்தையும் விளைவித்து லக்ஷக்கணக்காக விலையாகுமென்பதில் ஸந்தேஹமில்லை.

நான்காவது: ஏழை, எளியவர் உட்பட ஸகல ஜனங்களும் வாங்கும்படி இவற்றின் விலை மிகவும் குறைவாக ஏற்படுத்தப்படும். சராசரி ஒரு புஸ்தகத்தின் விலை அரை ரூபாய்.

ஐந்தாவது: 'கீழ்த்திசை முன்னேற்றம் பெறக்கடவது, புனர் ஜன்மம் எய்தக்கடவது' என்று காலசக்தி விதித்திருக்கிறது. தமிழ் நாடும் ஆசியாவின் பகுதியாதலால், இதற்கும் அந்தப் புனர் ஜன்மம் உண்டு. இப் புனர் ஜன்மத்தை ஏற்படுத்துவதற்கு ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியின் நூல்களே தகுந்த கருவிகளாவன. ஆதலால், தெய்வ பலத்தைக் கருதுமிடத்தேயும் இந் நூல்கள் லக்ஷக்கணக்காக விலையாகுமென்பது தெளிவாக விளங்குகிறது.

ஆறாவது: ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியாருக்குத் தமிழ் நாட்டில் நிகரற்றுயர்ந்த கீர்த்தி ஏற்பட்டிருக்கிறது. இவர் நூல்களை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாங்காமல் ஜனங்கள் யாருடைய நூல்களை வாங்கப் போகிறார்கள்? இந்த நூல்கள் மிகவும் நீண்ட பக்ஷம் 2 வருஷங்களில் விலையாகி விடும். அதற்குள்ளேயே இரண்டாம் பதிப்புக்களுக்கும் புதிய நூல்களுக்கும் வேண்டுதல் ஏற்படுமென்பது மிகவும் நிச்சயம்.

வரவு — செலவு கணக்கு

இவற்றை இவர் விரும்புகிறபடி அச்சிட 20,000 ரூபாய் பிடிக்கும். விளம்பரச் செலவு 10,000 ரூபாய். ஷ 30,000 ரூபாய்க்கு மாஸம் 1க்கு 2 ரூபாய் வீதம் இரண்டு வருஷத்து வட்டி ரூபாய் 14,400. ஆக மொத்தம் செலவு ரூபாய் 44,400.

புஸ்தகம் ஒன்றுக்கு அரை ரூபாய் வீதம் மொத்தப் புஸ்தகத்துக்கு வரவு ரூபாய் 2 லக்ஷம். ஆகவே, மிச்ச லாபம் ரூ. 1,56,000. ஒன்றரை லக்ஷத்தாராயிர ரூபாய் ஸித்தமாகக் கிடைக்கிறது. இத்தனை நல்ல லாபம் கிடைப்பதை உத்தேசித்தே ஸ்ரீமான் பாரதியார் மாஸம் 1க்கு ரூபாய் 2 வீதம் வட்டி கொடுக்கத் துணிந்தார்.

பிரார்த்தனை

இதற்குத் தாங்களும் தங்கள் நண்பர்களும் தலைக்குக் குறைந்த பக்ஷம் ரூ.100

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீதம் இயன்ற தொகை கடனாகவேனும் இனாமாகவேனும் கொடுத்துதவும்படி பிரார்த்திக்கிறேன். இனாமாகக் கொடுப்போர் ஸ்ரீமான் பாரதியாரால் மேன்மேலும் நடத்தப்படும் தமிழ் வளர்த்தலாகிய மஹா புண்ணிய கர்மத்திற்குப் பொருள் கொடுத்து, எக் காலத்திலும் அழியாத புண்ணிய மடைவார்கள். கடனாகக் கொடுப்போர்க்கு அங்ஙனமே உயர்ந்த புண்ணியம் கிடைப்பதுடன் மிகவும் லாபகரமான வட்டியும் கிடைக்கிறது. கடன் கொடுப்போர்க்கு ஆறு மாஸங் கழிந்தவுடன் மாஸந்தோறும் வட்டி கொடுக்கப்படும். முதலும் வட்டியும் இரண்டு வருஷ காலத்தில் முழுதும் கொடுத்துக் கணக்குத் தீர்த்து விடப்படும். கீர்த்தியை விரும்புவோர்க்கு இதில் கீர்த்தியும் கிடைக்கும். உத்தம கார்யம். எந்த வகையில் யோசித்தாலும் செய்யத்தக்கது.

தாங்களும் தங்கள் நண்பர்களும் அனுப்பக் கூடிய தொகையை உடனே மணியார்டர் செய்தனுப்புங்கள். கீழே ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியின் விலாஸம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவருடைய விலாஸத்திற்குப் பணம் அனுப்பினால் அவர் கடனாகக் கிடைக்குந் தொகைகளுக்கு ஓரணா ஸ்டாம்பு ஒட்டிக் கடன் பத்திர மெழுதிக் கையெழுத்துச் சார்த்தி உங்களுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கனுப்புவார். தகுந்த லாபம் கிடைக்கும். ஸமயத்தை மதி மயக்கத்தாலே தவறவிட்டு விடாதீர்கள்.

அன்பர்களே! உடனே உடனே உடனே தத் தம்மால் இயன்ற தொகைகளை அடியிற் கண்ட ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியாரின் விலாசத்துக் கனுப்புங்கள். உங்களுக்கு மஹாசக்தி அமர வாழ்க்கை தருக.

உங்களன்பு மிக்க
காரியதரிசி
தமிழ் வளர்ப்புப் பண்ணை
சென்னை

குறிப்பு : பணம் அனுப்ப வேண்டிய விலாஸம்:

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி
சுதேச மித்திரன் உதவிப் பத்திராதிபர்
சென்னை

இவ்வாறு வெளியிடப்பட்ட தமிழ் வளர்ப்புப் பண்ணையின் அறிக்கையையும் இணைத்து, தமக்கு நன்கு அறிமுகமானவர்களுக்கும், இலக்கிய அன்பர்களுக்கும், பிறர்க்கும் பாரதி கடிதம் எழுதினார்.

ஈரோட்டைச் சார்ந்த கருங்கல் பாளைய நண்பர் — தேசபக்தர் — பிரபல வக்கீல் தங்கப் பெருமாள் பிள்ளைக்கு எழுதிய ஆங்கிலக் கடிதத்தில் தம் நூல்கள் சிறப்புப் பற்றிப் பாரதி விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். அந்தக் கடிதத்தில் பாரதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெளிவுற எழுதிய பகுதிகளின் தமிழாக்கம் வருமாறு:

அன்புள்ள சகோதரருக்கு,

ஐரிஷ் மொழியின் மறுமலர்ச்சிக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழும் மிஸ்டர் கஸின்ஸ் என்பவர் என்னைக் கவியரசர் டாகூருடன் ஒப்பிட்டு இணைத்து எழுதியிருப்பதை நீங்கள் 'வேண்டுகோள்' அறிக்கையைப் படித்தபொழுது உணர்ந்திருக்கலாம்.

ஒருவேளை, இதனுடைய பொருள் என்னுடைய தமிழ் நூல்கள் அச்சாகி வெளிவந்தால், உலக இலக்கியத்தில் தமிழ் இலக்கியத்தின் நிலை உயர அந்நூல்கள் பயன்படும் என்பதாம். இதன் விளைவாக, மானிட சமுதாயத்தின் கண்ணோட்டத்தில் தமிழ் இனத்தின் பெருமையும் உயரும். உண்மையில், அக் கவியரசர் டாகூருடைய நூல்கள் வங்க நாட்டிற்கு எத்தகைய உயர்வையும், சிறப்பையும் அளித்தனவோ, அத்தகைய உயர்வையும் சிறப்பையும் என்னுடைய நூல்கள் தமிழ் நாட்டிற்கு அளிக்கும்.

ஆகையால், என்னுடைய நூல்களை வெளியிடுவதானது. மிகப் பெரிய உடனடித் தேவையான தேசியத் திருத்தொண்டாகும். ஈரோட்டில் பல தனவணிகர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம், இந்த வேண்டுகோள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விண்ணப்பத்தைப் பயன்படுத்தி, மேலே நான் குறித்துக் காட்டியுள்ள என்னுடைய நூல்களை வெளியிடும் பணிக்கு எந்த அளவு அதிக பட்சம் பணம் திரட்ட முடியுமோ, அந்த அளவுக்குத் திரட்டி யனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன். இல்லையெனில், நண்பர்களிடமும், தெரிந்தவர்களிடமும், அவர்கள் மூலமாகப் பிற அன்பர்களிடமிருந்தும் கடனாகவோ வேறு வகையிலோ பெற்று அனுப்ப வேண்டுகிறேன். இதுவும் சுதேசத்திற்கு உழைக்கிற ஒரு தேசிய திருப்பணி என்பதால், அந்தக் காரணத்தை முன்னிட்டு, தங்களுக்கு இந்த வகையில், இவ்விஷயத்தில் தொந்திரவு கொடுக்கத் துணிந்தேன். அன்பு கூர்ந்து இந்தச் சேவையை உடனே உண்மையுடன் தொடங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்".

இப்படிப்பட்ட பல்வகையான முயற்சிகளைப் பாரதி மேற்கொண்டார் என்றாலும், அந்த முயற்சிகள் யாவுமே பாரதிக்குக் கைகொடுக்கவில்லை. ஆம்; பல்வேறு காலப் பகுதிகளில் மிகத் தீவிரமாகவும், அதேவேளையில் மிகமிக ஆசையாகவும், மனந்தளராமலும் பொருளாதார புள்ளி விவரக் கணக்குகளை யெலாம் அலசி ஆராய்ந்து, தெளிந்து மேற்கொண்ட நூல் முயற்சிகள் மக்களின் போதிய ஆதரவின்மை காரணமாக நிறைவேறவில்லை. சொல்லப்போனால், பாரதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக எந்த வொரு நூலுமே வெளியாகவில்லை.

ஆனால், *1920* நவம்பர் மாதத்தில் சுதேச மித்திரன் புத்தகசாலைப் பிரிவானது "கதா மாலிகா" என்னும் தலைப்பில் நூல் ஒன்றை வெளியீடு செய்தது. 'சுதேச மித்திரன்' இதழில் அவ்வப்போது பாரதியும் பிறரும் எழுதிய கதை களையும், கட்டுரைகளையும் தொகுப்பாகக் கொண்டது இத் தொகுதி.

"இஃது புதுவது புனைந்ததோர் நூல்" என்றுள்ள இந்நூலில் இடம்பெற்றுள்ள முகவுரை வருமாறு:

> "இந்நூலுக்கு முகவுரை யாதும் வேண்டிய தில்லை; ஆயினும் பதிப்பைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டியதா யிருக்கிறது. நமது பழய "சுதேச மித்திரன்" பத்திரிகையில் சில காலங்களுக்கு முன் வெளிவந்த, மனோரம்மியமான கதைகளும், மற்றும் சில விநோதங்கள், குறிப்புகள், உற்றுணர்ந்த அனுபவங்கள் முதலானவை களை கோர்வையாக ஒருங்கே சேர்த்து புத்தக ரூபமாக்கி, 'கதா மாலிகா'வெனப் பெயரிட்டு, இந்நூலை வெளியிட்டிருக்கிறோம். இது முற்றிலும் அகமகிழ்ச்சியைத் தரக் கூடியதாலும், இத்தகைய கதைக் களஞ்சியம் மனதுக்கு கவலையை நீக்கி உற்சாகத்தைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தருவதாலும், தமிழபிமானிகள் இதனை ஏற்று, போற்றுவார்களென பெரிதும் நம்புகின்றனம்.

சுதேச மித்திரன்

10.11.1920

இந்நூலில் அடங்கியுள்ள கதை-கட்டுரைகளுக்கான விவர அட்டவணை:

ஸரஸ்வதி ஸ்தோத்ரம்

1. குதிரைக் கொம்பு
2. அருவி
3. கதவு
4. நதியில் கப்பல் பிரயாணம்
5. சன்னியாசி
6. பிராயச் சித்தம்
7. சங்கர நயினார் கோயில் யாத்திரை
8. நெல்லிக்காய் கதை
9. பக்தி
10. கடற்கரை யாண்டி
11. கடல்
12. அருணகிரியின் கவிதை
13. நவதந்திரம்
14. தராசு
15. மதிப்பு
16. அபிநயம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

17. அஜாக்கிரதை
18. விடுதலை முத்தம்மா
19. மலையாளம்
20. வேணு முதலி
21. ஆவணி அவிட்டம்
22. மஹாலக்ஷ்மி
23. விசேஷக் குறிப்புகள்
24. சிதம்பரம்
25. ரத்ன மாலை
26. விடுதலை
27. பிழைத்தோம்
28. காமதேனு
29. விளக்கு
30. வேலன் பாட்டு
31. பிங்கள வருஷம்
32. அபயம்
33. வேணு முதலி விசித்திரம்

இவற்றுள் அருவி, சங்கர நயினார் கோயில் யாத்திரை-ஆகிய இரு கட்டுரைகளிலும் "ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியின் பத்தினி ஸ்ரீமதி செல்லம்மா எழுதியது" என்ற குறிப்பு காணப்படு கின்றது.

மற்றும் ஸ்ரீமதி எல்.சுந்தராம்பாள் 'நதியில் கப்பல் பிரயாணம்' என்ற கட்டுரையையும், திரு. டி. எஸ். வைத்தியநாதன் 'சன்னியாசிக் கலகம்' என்ற கதையையும், ஒரு ஸ்திரீ நிருபர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'விசேஷக் குறிப்புகள்' என்கிற செய்திக் குறிப்புகளையும் எழுதியதாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. மற்றவை பாரதி பெயராலும், பாரதியின் புனைபெயர்களான சக்திதாசன், காளிதாசன் ஆகிய பெயர்களாலும் காணப்படுகின்றன.

நூல் வெளியான சமயத்தில் நூலில் பாரதியின் பெயர் பதிப்பிக்கப் பெறவில்லை. ஆனால் பாரதி காலமானவுடன் (1921 செப்டெம்பர்) சுதேசமித்திரன் புத்தகசாலையினர் வெளியிட்ட விளம்பரம் ஒன்றில்,

> "காலஞ்சென்ற கவிராயர் சுப்பிரமணிய பாரதியார் எழுதிய அநேக விஷயங்கள் நமது கதா மாலிகா என்னும் நூலில் வெளியிடப் பட்டிருக்கின்றன. சுமார் 33 பிரிவுகளுடன் கூடியது. கதைகளும், ரஸமான குறிப்புக்களும் பொதிந்து கிடக்கின்றன. விலை ரூ.1".

என்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பாரதி காலத்தில் வெளியான இறுதி நூல் இதுவே யாகும்.

நாற்பது புத்தகங்களை மிக நேர்த்தியாக, மலிவான விலையில் வெளியிடத் திட்டம் வகுத்த பாரதியால் எந்தவொரு சிறு நூலையுங்கூட வெளியிட இயலவில்லை; வாழுங் காலத்தில் பொழுதை வீணே கழிக்காமல், ஏராளமான நூல்களை எழுதிக் குவித்த அவரால் விரல்விட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்ணிவிடக்கூடிய நூல்களை மட்டுமே காண நேர்ந்தது.

நிகரில்லாத கீர்த்தி பெற்ற கவியரசர் வெளியிடத் திட்டம் வகுத்த நாற்பது நூல்களுக்கான விவரம்கூட நமக்குக் கிடைக்கவில்லை.

குறிப்பாக, அவருடைய வசன நூல்கள் - 'நேர்த்தியான, ஆச்சர்யமான, ரஸமான, வாசிக்க வாசிக்கத் தெவிட்டாத கதைகளடங்கிய' வசன நூல்கள் - எவையெவை என்றுகூட நமக்குத் தெரிய வழியில்லாமல் போய்விட்டது.

தம் ஆயுட் காலத்தில், பாரதி தம்முடைய நூல்கள் 'மண்ணெண்ணெய் தீப்பெட்டிகளைக் காட்டிலும் சர்வ சாதாரணமாகவும் அதிசீக்கிரமாகவும் விற்பனை'யான காட்சியைக் காண முடியவில்லை.

தம்முடைய நூல்கள் வெளிப்படுமானால், தமிழ்நாட்டின் - தமிழ் இலக்கியத்தின் நிலை உலக இலக்கியத்தில் உயரும் என்றே நம்பிப் பிரசுர முயற்சியில் ஈடுபட்ட பாரதி தம் நூல் தொகுதிகளைப் பொறுத்தமட்டில் சில தலைப்புகளைத் தெரிவு செய்திருந்தார் என்பது அவ்ருடைய கைப்பிரதிகளைப் பரிசோதித்தபோது தெரிந்தது. அப்படி அவர் தம் கவிதை - வசன நூல்களுக்குச் சூட்டிய பெயர் விவரம் வருமாறு:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குயில்
பாடல் திரட்டு
சக்திப் பாடல்கள்
பாட்டுக் கொத்து
ஸ்தோத்ரப் பாட்டுக்கள்
காட்சி
ஜகத் சித்திரம்
பதஞ்சலியோக ஸூத்ரம்
சந்திரிகை
விடுதலை

மேற்குறித்த நூல்களின் பொருளடக்க—உள்ளடக்கச் செய்திகளை இங்கே ஓரளவு காண்போம்.

'செந்தமிழ்த் தென்புதுவையெனும் திருநகரின் மேற்கே, சிறு தொலைவில் மேவுமொரு மாஞ் சோலை'யில் பிறந்த காதற் கதை "குயில்" ஆகும்.

"பாடல் திரட்டு" கைப்பிரதி பாடல் நூலில் மொத்தம் இருபத் தொன்பது பாடல்கள் பார்வைக்குக் கிட்டுகின்றன. அவையாவன:

தீ - அக்நி ஸ்தோமம்
லக்ஷ்மி ப்ரார்த்தனை - திருவேட்கை
திருக் காதல்
திருமகள்
காணி நிலம்
புதுமைப் பெண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்ணம்மா - என் காதலி
பகைவனுக் கருள்வாய்
லக்ஷ்மிதேவி - சரண்புகுதல்
பெண்மை
கேட்பன
கண்ணன் — என் காதலன்
சக்திக் கூத்து
விடுதலை
சொல்
நிலாவும் வான்மீனும் காற்றும்
(மனத்தை வாழ்த்துதல்)
பராசக்தி
அழகுத் தெய்வம்
ஆத்ம ஜெயம்
தொழில்
மூன்று காதல்
பொய்யோ? மெய்யோ?
உப்பளம் கோயிலில்
எழுந்தருளி யிருக்கும்
தேசமுத்துமாரி
பிழைத்த தென்னந் தோப்பு
வேண்டும்
புயற்காற்று
பக்தி
முருகன் பாட்டு
நெஞ்சோடு சொல்வது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"சக்திப் பாடல்கள்" கைப்பிரதியில் கிடைத்துள்ள பாட்டுகளுக்கான விவரம் வருமாறு:

சிவசக்தி புகழ்
சக்தி திருப்புகழ்
சக்திக்கு ஆத்ம ஸமர்ப்பணம்
வைய முழுதும்
மஹாசக்தி வெண்பா
சக்தி விளக்கம்
வேள்விப் பாட்டு
போற்றி யகவல்

மேற்குறித்த எட்டுப் பாடல்களே "சக்திப் பாடல்கள்" என்னும் தலைப்பிட்ட கைப்பிரதியில் காணப்படுகின்றன.

"பாட்டுக் கொத்து" என்னும் தலைப்பிட்ட கைப்பிரதியில் காணப்பெறும் பாடல்களுக்கான விவரம் வருமாறு:

சந்திரமதிப் பாட்டு
வேலன் பாட்டு
அந்திப் பொழுது (காதற் பாட்டு)
காற்றுவெளி (காதற் பாட்டு)
வரங்கேட்டல்
முத்துமாரி
ஜயமுண்டு
ஜயபேரிகை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிளித்தூது
வண்டிக்காரன் பாட்டு
கற்பனை யூர்
அழகுத் தெய்வம்
பெண்மை
சொல்
விடுதலை
பக்தியினாலே
காளிப் பாட்டு
ஞாயிறு - ஸூர்ய ஸ்துதி
கிளிப் பாட்டு
கோவிந்தன் பாட்டு
விடுதலைப் பாட்டுக்கள்
அம்மாக்கண்ணு பாட்டு
கண்ணம்மா - அங்க வர்ணனை
விடுதலை விடுதலை விடுதலை
வள்ளிப் பாட்டு
சாகாவரம்
செல்லம்மா பாட்டு
பூலோக குமாரி
வாழ்க திலகன் நாமம்
எந்த நேரமும்
செல்லம்மா பாட்டு
ஓம் சக்தி
மூன்று காதல்
ஊழிக் கூத்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேட்பன
வேள்விப் பாட்டு
வைய முழுதும்
ஸோமதேவன் புகழ்

மேற்குறித்த பாடல்களில், சில பாடல்களுக்குப் பாரதி சுரவரிசையும் அமைத்துள்ளார் என்பது மனங் கொள்ளத்தக்கது.

பாரதியே இக் கொத்திற்காக எழுதியுள்ள முற்குறிப்பில்,

> "ஹார்மோனியம், வீணை முதலிய வாத்யங்களில் கற்றுக்கொள்ள விரும்பும் ஜனங்களுக்கு உதவியாக இந்நூலில் கொடுக்கப்படும் ஸ்வர வரிசைகள் முதலியனவற்றை மாதிரியாகக் கொண்டு பாடவேண்டும். பாட்டின் சந்த மாறுதல்களுக்குத் தக்கபடி ஸ்வரங்களை மாற்றிக் கொள்க"

எனக் குறித்துள்ளார்.

மற்றும், இத் தொகுதியில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கையும், பக்க எண்களும் தொடர்ச்சியாகவு மில்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டிய தவசியம்.

"ஸ்தோத்ரப் பாட்டுக்கள்" என்னும் தலைப்பிட்ட பாடல் நூலில் என்னென்ன பாடல்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்தன என்பதைத் தெளிய இயலவில்லை. "காளிப் பாட்டு" என்றொரு பாடல் மட்டுமே கிடைத்துள்ளது.

"காட்சி" என்னும் பகுதியில் அடங்கிய பொருள் அடக்க விவரமாவது :

முதற் கிளை — காட்சி

இரண்டாம் கிளை — புகழ் — ஞாயிறு
சக்தி
காற்று
கடல்

"ஜகத் சித்திரம்" என்பது சிறு நாடக வடிவில் அமைந்த தாகும். இதில் ஐந்து காட்சிகள் உள்ளன.

51 சூத்திரங்கள் கொண்ட முதல் பாகமான சமாதி பாதத்திற்கு, 50 சூத்திரங்களுக்குப் பாரதி எழுதிய விளக்கவுரை கொண்ட நூலே "பதஞ்சலி யோக ஸூத்ரம்" என்பதாகும்.

பெண் உரிமை, விதவைத் திருமணம், காதல் திருமணம் — ஆகிய முற்போக்கான கருத்துகள் பூத்துக் குலுங்கும் கதை நூல் "சந்திரிகையின் கதை" என்பதாகும். இக் கதை முற்றுப் பெறாத நிலையிலேயே கிடைத்துள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"விடுதலை" என்பது இரு காட்சிகள் கொண்ட சிறு நாடக மாகும்.

இவையும், இவைபோன்ற நூல் வெளியீடு களும் வெளியிடத் தீவிரமாகத் திட்டம் வகுத்த பாரதி தம் வாழ்நாளின் ஆசை நிறைவேறாத நிலையில் 1921ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் தேதி மரணமடைந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7

செல்லம்மாள் பாரதியின் முயற்சிகள்

பாரதி மரணமுற்ற சமயத்தில் தம்முடைய இரங்கற் செய்தியில் திரு. எஸ். சத்தியமூர்த்தி அவர்கள்,

> "......அவருடைய குடும்பம் நிர்க்கதியா யிருப்பது பலருக்குத் தெரியும். தமிழ்நாடு அதைச் சகித்திருக்கக் கூடாது. அவருடைய கவிகளை அச்சிட்டு விற்று, பெரிய நிதி சேர்த்து, அவரது மனைவி மக்களைக் காப்பாற்ற நாம் கடமைப்பட்டிருக்கிறோம்"

என்று குறிப்பிட்டிருந்தார்.

அதாவது சத்தியமூர்த்தி அவர்கள் பாரதியின் குடும்பத்தைக் காப்பாற்ற, அவருடைய கவிதை களை அச்சிட்டு விற்று நிதி சேர்த்தளிக்க வேண்டும் என்று நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

திரு. கே. வி. ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள் 28-10-1921இல் "ஹிந்து'' பத்திரிகைக்கு ஓர் கடிதம் எழுதி யிருந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர் எழுதிய அக் கடிதத்தில்,

"மகாகவியும், தேச பக்தருமாகிய சுப்பிரமணிய பாரதி இள வயதில் மரண மடைந்ததானது தமிழ் நாட்டிற்கே பெருத்த தொரு இழப்பாகும்.

அவர் தம் கவித்திறமையை இந்தியாவின் முன்னேற்றத்திலும், இந்திய மக்களின் முன்னேற்றத்திலும் உபயோகப் படுத்தி வந்தார்....அன்னார் நினைவைப் போற்ற வேண்டுவது நாட்டு மக்களின் கடமையாகும்.

பாரதியின் நூல்கள் என்றும் நிலைத் திருக்கும். அவர் தம் உறவினர்களில் யாரேனும் அவர் நூல்களைச் சேகரித்து வெளியிடுவார்களா?''

என்று குறிப்பிட்டிருந்தார்.

சத்தியமூர்த்தி, ரெங்கசாமி அய்யங்கார் போன்ற அறிஞர் பெருமக்களின் வேண்டுகோள்கள் உடனடியாகவே பலன் தந்தன.

கவியரசர் பாரதியின் மனைவியாரான செல்லம்மாள் அவர்களே, கவிதைகளை ஒன்று திரட்டிப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டார். அவ் வம்மையார் தாம் மேற்கொண்ட பணி குறித்து விரிவான அறிக்கை ஒன்றைத் தயாரித்து,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பத்திரிகைகளுக்கு அனுப்பினார். அவ்வாறான அறிக்கை 30-9-1921 "நவசக்தி" இதழில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் ஆதரவோடு பிரசுரமானது.



திரு. வி. க.

"காலஞ் சென்ற பாரதியாரின் நூல்கள்" என்றே தலைப்பிட்டு, துணைத் தலையங்கம் எழுதித் தமிழ்த் தென்றல் திரு. வி.க. அவர்கள் பாரதி நூல்கள் பிரசுர முயற்சிக்கு ஆதரவு அளித்தார்.

அத் துணைத் தலையங்கத்தில், திரு.வி.க. அவர்கள் மிகத் தெளிவாக,

"தென்னாட்டுத் தாகூரெனப் போற்றப்பட்டு வந்த ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியின் மனைவியார் நமக்கு அனுப்பியுள்ள ஒரு நிருபத்தை மற்றோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். காலஞ் சென்ற பாரதியாரின் பாடல்களும், வசனங்களும் ஒழுங்காக வெளியிட முயற்சி செய்யப்படுகிறது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதை யறிந்து நாம் பெரிதும் சந்தோஷிக்கிறோம். இதற்காகப் பொருளுதவி செய்யும்படி தமிழ்நாட்டாரை ஸ்ரீமான் பாரதியாரின் மனைவியார் கேட்கிறார். இவ் வேண்டுகோளுக்குத் தமிழ்நாட்டார் எவ்விதத்திலும் பின்வாங்க மாட்டார் என்று நம்புகிறோம். ஸ்ரீமான் பாரதியார் ஐரோப்பாவிலேனும் அமெரிக்காவிலேனும் பிறந்திருப்பாராயின் அவருக்கு இதுகாலை எத்தனை ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கும் என்பதை நாம் கூறவேண்டுவதில்லை. தமிழ் நாட்டாரிடமிருந்து அவ்வளவு பெரிய நன்றியறிதலை நாம் எதிர்பார்க்கவில்லை யாயினும், அவருடைய நூல்கள் நல்ல முறையில் வெளிவருதற்கேனும் போதிய துணை புரிவார்கள் என்று நம்புகிறோம்''

என்று தம் கருத்தை வெளியிட்டிருந்தார்.

இனி, "நவசக்தி''யில் பிரசுரமாகி யிருந்த செல்லம்மாள் அவர்களின் அறிக்கையைப் பார்ப்போம் :

'தேசாபிமானப் பெருங்கவி'யான எனது அரிய கணவர் ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியாரின் அகால மரணத்தைக் குறித்து, எனக்குப் பல வகைகளில் அனுதாபம் காட்டிய எண்ணிறந்த நண்பர்களுக்குப் பகிரங்கமாக நன்றி கூறுவதற்காக நான் இந்தக் கடிதத்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுதலானேன். தமிழ் நாட்டிலுள்ள பல சங்கத்தார்களும், சபையார்களும், நண்பர்களும் என்பால் அனுதாபம் காட்டிக் கடிதங்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தனித்தனிக் கடிதம் எழுதுவதற்கு நான் தற்சமயம் இயலாதவளா யிருக்கிறேன். எனவே, இப் பத்திரிகை வாயிலாக அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியை அறிவித்துக் கொள்கிறேன்.

பாரதியார் எனக்குப் பெரிய ஆஸ்தியாக வைத்துவிட்டுப் போயிருப்பது அவரது அரிய பாடல்களும், வசன காவியங்களுமேயாம். அவற்றையெல்லாம் அச்சிட்டு வெளியிடுவதற்குரிய ஏற்பாடுகளை நானும், எனது நண்பர்களும் செய்து வருகிறோம். இந்த முயற்சியில் எனக்குப் பொருள் உதவி புரிவதாகச் சில நண்பர்கள் முன் வந்திருக்கிறார்கள். பாரதியாரின் நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு நிதி சேர்க்குமாறு அங்கங்கே சில இடங்களில் பஞ்சாயத்துகள் (கமிட்டி) ஏற்பட்டிருப்பதாகவும் அறிகிறேன். எனவே இந்த விஷயத்தில் எனக்கு உதவி செய்ய விரும்புவோரெல்லாம் அடியிற்கண்ட எனது விலாஸத்திற்குத் தங்கள் உதவிகளைத் தாமதமின்றி அனுப்பவேண்டுகிறேன். எனக்கு உதவி செய்ய முடியாதவர்கள், தங்களால் இயன்ற சிறு தொகையை அனுப்பினால்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புஸ்தகம் வெளியானவுடன் அந்தத் தொகைக்குரிய புஸ்தகங்களை அனுப்பச் சித்தமாயிருக்கிறேன். (பாரதியார் பாடல்கள் அடங்கிய முதல் பகுதி நவம்பர் மாத இறுதிக்குள் வெளிவரும்). இவ் விஷயத்தில் எனக்கு எவ்வளவு சிறிய உதவி செய்பவர்களும் எனது குடும்பத்திற்கு உதவி செய்பவர்கள் மட்டுமல்ல—'தமிழ் நாட்டிற்குப் புத்துயிர் அளிக்கக்கூடிய' பாரதியாரின் அரிய பாடல்களும், பிறவும் உலகத்தில் வெளிவரச் செய்யும் பெரிய முயற்சிக்குத் துணை புரிபவர்களும் ஆவார்கள்...

செல்லம்மாள் பாரதி

இந்த அறிக்கையைக் கண்ட அன்பர்களில் ஒருசிலர் பாரதி நூல்கள் வெளிவர வேண்டுவதன் அவசியத்தைக் கருதி பண உதவி செய்தனர். இரங்கூன் பொது மக்கள் அளித்த நன்கொடைகள், திலகர் ஸ்வராஜ்ய நிதி உதவி ஆகிய நிதி வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு பாரதியின் மனைவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செல்லம்மா அம்மையார் தம்முடைய சகோதரர் அப்பாதுரை அவர்களுடைய துணையுடன் சென்னைத் திருவல்லிக்கேணியில் பாரதி ஆச்ரமம் என்ற பெயருடன் பிரசுர நிலையத்தைத் தொடங்கினார்.

பாரதி ஆச்ரமம் என்கிற பிரசுர நிலையத்தின் சார்பில், பாரதியின் நூல்கள் முழுமையும் பன்னிரண்டு பகுதிகளாக வெளியிடத் திட்டமும் வகுக்கப்பட்டது.

பாரதி ஆச்ரமம் வெளியிட இருந்த பன்னிரண்டு பகுதிகளுக்கான விவரம் வருமாறு :

1. சுதேச கீதங்கள் (முதற் பாகம்)
2. சுதேச கீதங்கள் (இரண்டாம் பாகம்)
3. குயில் பாட்டு — கண்ணன் பாட்டு — பாரதி 66
4. பாஞ்சாலி சபதம்
5. ஞானரதம்
6. வேதரிஷிகளின் கவிதை
   வேதப் பொருள் (காட்சி)
7. பகவத் கீதை (அரிய பெரிய முகவுரையுடன்)
8. பதஞ்சலி யோக ஸூத்ரம்
9. சந்திரிகையின் கதை
10. கதைக் கொத்து
11. 12. வியாசங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்குறித்த தொகுதிகளுள், முதல் கட்டமாக 1922 ஜனவரியில் சுதேச கீதங்களின் முதற்பாகமும், இரண்டாம் பாகமும் வெளிவந்தன.

முதல் பாகத்தில் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் எழுதிய பாரதியின் சரித்திரச் சுருக்கம் இடம் பெற்றது. செல்லம்மாள் அவர்களும் உருக்கமான முகவுரை ஒன்றை எழுதி யிருந்தார். இந் நூலில் இடம் பெற்றிருந்த பாடல்களின் எண்ணிக்கை மொத்தம் 90 ஆகும். முன்னரே பாரதியும் நெல்லையப்பரும் பிரசுரம் செய்து இருந்த "ஸ்வதேச கீதங்கள்", "ஜன்மபூமி," "நாட்டுப் பாட்டு" ஆகிய நூல்களில் காணப் பெற்ற பாடல்களும், முன்னுரைகளும், சமர்ப்பணங்களும் இந்தப் புதிய பதிப்பு நூலில் இடம் பெற்றன.



மற்றும், கைப்பிரதிகளாக இருந்த பாடல்களும் பாரதி ஆச்ரமப் பதிப்பில் பதிப்பிக்கப் பட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இனி, நூலுக்கான முகவுரை, பாரதியின் சரித்திரச் சுருக்கம், பாடல்களின் விவரம் ஆகிய பிற செய்திகளையும் இங்குக் காண்போம்.

முதலில், நூலில் செல்லம்மா அவர்கள் எழுதிய முகவுரை வருமாறு:

தமிழ்நாட்டு மக்களே!

நான் படித்தவளல்ல. இந்த நூலுக்கு முகவுரை எழுத நான் முன்வரவில்லை. அதற்கு எனக்குச் சக்தியுமில்லை. என்னைப் போல் இந்தத் தமிழ் நாட்டில் லக்ஷக் கணக்கான ஆணும் பெண்ணும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்.

எனது புருஷன் ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதி இந்த நாட்டில் பிறந்தார்; வளர்ந்தார்; வாழ்ந்தார்; இறந்தார். அவருடைய ஸ்தூல தேகத்திற்கு முடிவு நேரிட்டு, ஆத்மா விண்ணுலகம் சென்றுவிட்டது. கடவுளின் திருவிளையாடலில் இப்படி ஒரு ஆத்மா இவ்வுலகத்தில் ஜனித்து, சொற்ப காலந் தங்கி, சிற்சில காரியங்களைச் செய்துவிட்டு, திரும்பப் போய்விட வேண்டுமென்ற கட்டளையின்படி என் புருஷனும் ஜனித்து, செய்ய வேண்டிய காரியங்களை அவசரம் அவசரமாகச் செய்துவிட்டு, காலம் சமீபித்தவுடன், இறப்பதுவும் ஒரு அவசரமான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடமையாகக் கொண்டு, அதனையும் செய்து முடித்தார். 1904-ம் வருஷத்தில் சுதேச மித்திரன் பத்திரிகையில் உப பத்திராதிபராக அமருமுன்பே, நம் நாட்டைப் பற்றிய கவலை அவருக்கு அதிகம் ஏற்பட்டுவிட்டது. எட்டையபுரம் சமஸ்தானாதிபதியின்கீழ் தான் ஏற்றுக்கொண்ட வேலையைத் திரணமாக நினைத்துத் தள்ளினார்; மதுரை ஸேதுபதி வித்யாசாலையில் தமிழ்ப் பண்டிதர் வேலையையும் அற்பமாக எண்ணித் தள்ளினார். சுதேச மித்திரன் பத்திரிகைக்கு உழைக்க ஆரம்பித்தவுடன் அவரது உள்ளம் மலர்ச்சி அடைய ஆரம்பித்தது. சுமார் இரண்டு வருஷம் கழிந்த பின் "இந்தியா" என்னும் வாராந்தரப் பத்திரிகையை ஆரம்பித்தார். உடல், பொருள், ஆவி மூன்றையும் தேச கைங்கர்யத்திற்கு முழு மனதுடன் அர்ப்பணம் செய்தார். ஸரஸ்வதிதேவி அவர் வாக்கில் நிர்த்தனஞ் செய்ய ஆரம்பித்தாள். "வந்தே மாதரம்" என்ற சப்தம் அவரது ஹிருதயத்திலிருந்து முழுத் தொனியுடன் கிளம்பிற்று; தமிழ் நாடெங்கும் பரவிற்று. வீடு, வாசல், மனைவி, பிள்ளை, குட்டி, ஜாதி வித்தியாசம், அகந்தை முதலியவை முற்றும் மனதினின்று விட்டு அகன்றது. தேசப் பிரஷ்டமானார். புதுவையில் தேசபக்தி விரதத்தைப் பல விதமாக அனுஷ்டித்தார். திரும்ப வந்து தந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டை ஒருமுறை பார்க்க வேண்டுமென்ற அவா அதிகரித்தது. அதற்காகச் சில நிபந்தனைகளை ஒப்புக்கொண்டார். மறுபடியும் சுதேச மித்திரனில் ஒரு வருஷம் உழைத்தார். தான் வந்த காரியம் முடிவடையவே, விண்ணுலகஞ் சென்ற தேசபக்தர் கூட்டத்தில் தானும் போய்ச் சேர்ந்துகொண்டார்.

நமது நாடு இன்னது; நமது ஜனங்கள் யாவர்; நமது பூர்வோத்திரம் எத்தகையது; இன்று நமது நிலை யென்ன; நமது சக்தி எம்மட்டு; நமது உணர்ச்சி எத் தன்மையது? — இவைகளைப் பற்றிய விவகாரங்களும், சண்டைகளும், தீர்மானங்களும் அவருடைய ஜீவனுக்கு ஆதாரமாக விருந்தன. எதுவும் யோசித்தாக வேண்டியதில்லை. திடீர் திடீர் என்று எண்ணங்கள்—புதிய புதிய கொள்கைகள் — புதிய புதிய பாட்டுக்கள் — அப்பாட்டுக்களுக்குப் புதிய புதிய மெட்டுக்கள் — எனது இரு காதுகளும் மனமும் ஹிருதயமும் நிரம்பித் ததும்பும். இந்த ஒரு பாக்கியம் நான் பெற்றேன். இம் மாதிரி பாக்கியம் பெற, எத்தனை கோடி ஜன்மம் வேண்டுமானாலும், திரும்பத் திரும்பப் பெறத் தயாராக இருக்கிறேன். அவரது தேகத்தின் ஜீவன் போய் விட்டது. அவரது ஜீவனுக் காதாரமாக விருந்த பாரதமாதாவின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜீவசக்தி என்றென்றும் அழியாதது. தமிழ்நாடு உள்ளளவும், தமிழ்நாட்டில் ஒரு மனிதனோ அல்லது ஒரு சிறு குழந்தையோ தமிழ் பேசிக்கொண்டிருக்குமளவும் பாரதியின் மூலமாக நமக்குக் கிடைத்த ஜீவசக்தி நிலைத்திருக்குமென்று என் ஹிருதயம் சொல்லுகிறது. இதனை நீங்களும் உணர்ந்திருக்கிறீர்கள். இஃதொன்றுதான் நான் உங்களுக்குச் சொல்ல முன் வந்தேன். நீங்கள் நீடூழி வாழ்க!

பாரதியாரின் நூல்கள் முழுமையும் அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை என் ஜீவன் இருக்கும் வரை நான் வகித்து, பிற்பாடு, தமிழ்நாட்டிற்குத் தத்தம் செய்துவிட்டுப் போகத் தீர்மானித்திருக்கிறேன். வந்தே மாதரம்.

நெஞ்சை நெகிழச் செய்யும் செல்லம்மா அவர்களின் முகவுரையில் சொன்னபடி தமிழ் மக்கள் அனைவரும் பாரதியின் பாடல்கள்வழி புதிய விழிப்புணர்ச்சியைப் பெற்றனர் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை.

செல்லம்மாள் பாரதி கேட்டுக் கொண்டதற்கிணங்கவே பாரதியின் சரிதத்தை நாவலர் சோமசுந்தர பாரதியார் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் தம் கட்டுரையில் பாரதியின் வாழ்க்கைக் குறிப்புகளையும் நிகழ்ச்சிகளையும் சுருக்கமாகத் தந்த துடன், அப்பெருங் கவிஞருடைய புலமை நலம், ஒரு சில பாடல்கள் எழுந்த சூழல், குண நலன்கள், தமக்கிருந்த நட்புமுறை ஆகியன பற்றியும் அருளி யுள்ளார்.

சோமசுந்தர பாரதியார்

பாரதியாரின் வாழ்க்கைச் செய்திகளை வழங்கிய பெருமைக்கு உரியவர்களில் நாவலர் பாரதியாரும் ஒருவர் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டுவது மிகமிக அவசியம்.

நாவலர் பாரதியார் வரைந்த வரலாற்றுத் தொடர்பான சரிதையை இனி படிப்போம் :

சமீபத்தில் காலஞ்சென்ற புலவர் திலகர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரைத் தமிழகமே யன்றிப் பிறிதுலகும் சிறிதறியும். இவர் புகழ் எம்மனோர் போற்றப் பெருகுஞ் சிறுமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யுடைத்தன்று. புகழிற்போலவே வயதிலும் இவர் நண்பக லெய்தாக் காலை ஞாயிறே யாவர். நாடு மூடிய கால மேகங்களிலும், நடுநிலை யிறந்த ஓர் உணர்ச்சி யிருளிலும் மறைந்து மாசற்ற விண்பெறாத் தற்காலத் தமிழ் நாட்டில் வெயில் செய வெள்கி இவர் பெரிதும் ஒளிந் தொளிர்ந்தார்.

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் மதித்தற் குரியவும் அரியவுமாம் குணம் பல வுடையார். இவரை நயப்பார் பலர்; வெறுப்பவர் சிலர்; இவர்மாட்டு இவ்விரு திறத்தாரும் வியக்குங் குணமும் பலவாம். இவரைத் தமிழ்நாடு செய்த தவமென்பார் உளர்; வாணாளை வீணாக்கி, பல கற்றும் உலகத்தோடொட்ட வொழுகும் நலங் கல்லாராகக் கருதும் பிறரும் உளர். பலர் இவரைத் தமிழகத்தே தலைநின்ற தேசபக்தராக வந்திப்பர்; தன்னலம் பேணாதார், பிறர் நலமும் அறிய வொண்ணா ரென்று இவரை நிந்திப்பாருமுண்டு. அறிவை அடிமைப்படுத்தி, உணர்வைக் கொள்ளை கொண்டு, 'நெஞ்சை அள்ளும்' அருங்கவி விரைந்தியற்ற வல்ல அமுதவாய்ப் புலவர் இவரெனப் பலர் பாராட்டுவர்.

இப் பெரியார், ஜீவியத்தில் ஒரு பகுதி எழுதுவதற்கு நான் உரியனென்று இவர் மனைவியார் விரும்பியது ஒருவாறு பொருந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துவதாகும். உற்ற சுற்றத்தின் புறம்பே, இளமைப் பருவத்து இவரோடு நெருங்கிப் பழகிய பலருள்ளும், விரும்பத்தகும் இவர் இனிய குணங்கள் பலவற்றை அறிதற் குதவுங் காலத்தானும் அணிமையானும் நான் சிறிது அதிக உரிமை பாராட்டற் கிடமுண்டு. சென்ற பதினைந்தாண்டுகளாகச் சிறிதுஞ் சல்லாபத்திற் கிடமின்றி அறப்பிரிந்தே மாயினும், அதற்குமுன் இளமையில் தொடர்ந்த நெருக்கமும் சிறிதிடைப் பிரிந்து பின்னிடையறா துடன் பயின்று சோராது வளர்ந்த நேசமும் எனக்கு இவரிடத்துண்டு. இவர் சென்னையில் வசிக்கச் சென்ற கால முதற்றான் இவர் வாழ்க்கை அத்துணையாக நான் நேரில் அறியாததாம். இவ்வாறு பிரிந்த இப் பின் காலத்தும், வெளிவந்த இவர் பாடல் களும் பத்திரிகை வியாசங்களும் பெரும்பாலும் நான் படியாதன இரா. இவர் சமுதாய வாழ்வையும் இயன்ற வரை கவனித்து வந்துளேன். உழுவலன்பு காரணமாக இவர் தம் விழுமிய நூல்கள் பற்றி இடையிடையே எனக்கெழுதுவதும் உண்டு. இவைகளிலிருந்து முன் இவர்பால் நான் நேரிலறிந்த பெருங் குணங்களொன்றேனும் மாறுபட்ட சான்று கிடைத்ததில்லை. ஒருவர்க்குரிய குணங்கள் மாறாது வேறூன்றும் பருவங் கழிந்த பின்னரே, இவர் தம்மூரையும் உற்றோரையும் விட்டுச் சென்னை சென்றார். ஆகவே இவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டு ஒருவாறு இப் புலவர் திலகர் ஜீவியத்தில் பிறரறிய விரும்புவனவும் தகுவனவுமாய சிலவற்றை யீண்டு விளக்க விடைகொள்வேன்.

இவர் தந்தையாரை யான் அறிவேன். முயற்சி திருவினை யாக்கும் என்ற முதுமொழிக்கு இலக்கியமானவர். எட்டைய புரம் சமஸ்தானத்தில் உத்தியோகஸ்தரும் வித்வானுமா யிருந்து சிறந்த ஸ்ரீ சின்னசாமி அய்யரவர்களை அவர் காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் அறியாதவரில்லை. இவர் பிரகசரண பிராமணோத்தமர். அக் காலத்திலேயே இவர் கலாசாலை யுதவியின்றி ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார். தமிழில் அதி பண்டிதர். மேல் நாட்டுக் கணித முறைகளில் கைகண்ட நிபுணர். தருக்கத்தில் தன்னிகரற்றவர். இவரது கூரிய மதிநுட்பமும், நாவன்மையும் இவரன்பை விரும்பாப் பண்டிதர் யாவருக்கும் அச்சம் விளைத்தது போலவே, இவரது பெருங்குணமும் விரிந்த உள்ளமும் இவர்பால் அழுக்காறு கொள்ளாத யாவருடைய மதிப்பையும், நேசத்தையும் உரிமையாக்கின. முப்பது வருடங்களுக்கு முன்னரே, ஏழைகள்மீது இரக்கத்தாலும் நம்மவர் நலங் கருதியும் இவர் எட்டைய புரத்தில் யந்திர மணைச்சாலை யேற்படுத்த முன்னின்று முயன்று முடித்தார். இந்தப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரதேசத்தில் பருத்தி யந்திர மணைச்சாலை முதலில் ஏற்படுத்தத் துணிந்தவர் இவரே. தற்காலம் எட்டையபுரம் சமஸ்தானாதி பதியா யிருக்கும் பண்டித அரசருக்கு இவர் ஆப்த நட்பாளர். தனிகரும் பொதுநலப் பிரியரும் அருகிய வூரில் இவர் முயன்று ஸ்தாபித்த பருத்தியறவைச்சாலை தற்காலம் பராதீனப்பட்டு நடப்பதன் சரிதமும், தொழிலபிவிருத்தி முதலிய நம்மவர் முன்னேற்ற முயற்சிகளால் இவர் கைப்பண மிழந்து வறுமையுற்று வருந்திய விருத்தாந்தங் களும் இக் கதைக்கு அவசியமற்றவை. இத்தகைய அருள், அறிவு, ஆற்றல் நிறைந் திருந்த ஸ்ரீ சின்னசாமி அய்யர் அவர்களுக்கு அவர்களின் முதல் மனைவியார் வயிற்றுதித்த ஔரச புத்திரரே நம் வரகவி. பாரதியாரின் அன்னையாரை நான் நேரில் அறியேன். அந்த அம்மையாரை அறிந்த அனைவரும் அவர் அழகிலும் அருளிலும் அவர் இயற்பெய ரொப்ப லக்ஷ்மியே யென்பர். இந்த தம்பதி களின் தவப் பயனாய் பாரதியார் 1882-வது வருஷம் கார்த்திகை மாதத்தில், சுபதினத்தில் நல்ல வேளையில் எட்டையபுரத்தில் அவதரித்தார். பெற்று மகிழ்ந்த தாயார் இவர் புகழ் கேட்டுப் பின்னும் மகிழப் பெறுமுன்னே, நமது கவியின் ஐந்தாவ தாண்டிலேயே பரமபதம் எய்தினர். அது முதல் இவர் தந்தையாரே தாயுமாயிருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாந்திப் பரிந்து பராமரிக்க, பாரதியார் அறிவிலும் உருவிலும் ஒப்புயர்வற்று வளர்ந்து ஊர் உவலை சொல்ல யாவரும் அதிசயிக்கத் திகழ்வதானார்.

நமது மகாகவியின் தந்தையார் தமது குலாசாரத்தை அநுஷ்டித்து, சௌளம், உபநயனமாதி ஸமஸ்காராதிகளைக் காலக் கிரமத்தில் செய்து வைத்து, ஐந்தாவதாண்டில் அக்ஷராப்பியாசமும் செய்து வைத்தார். பள்ளிக்கூடங்களில் சென்று பயின்றதன் பிரயோஜனத்தை இக் காலப் பள்ளிக்கூடங் களில் அநுபவ முள்ளவர்கள் அறிந்து கொள்ளலாம். பாரதியார் தமது ஏழாவது பிராய முதலே அருமையான தமிழ்க் கவிகளை விளையாட்டாக விரைந்து கவனஞ் செய்வதைக் கண்ட வித்வான்கள் நமது கவியின் தந்தையாரைப் புகழ்ந்திருப்பதை நான் நேரில் அறிவேன். எட்டு, ஒன்பதாவது ஆண்டுகளில் சர்வ சாதாரணமாய், கொடுத்த ஸமஸ்துக்களை வைத்து அற்புதமான கவிகளைப் பூர்த்தி செய்து பெரிய புலவர் கூட்டங்களைப் பிரமிக்கச் செய்த பல காலங் களிலும் நான் கூட இருந்திருக்கிறேன். காளிதாசன், கம்பன் முதலிய வரகவிகளுக்குக் காளி வாக்கில் எழுதிய கால முதல், அநாயாசமாய்க் கவிசொல்ல வாய்ந்ததென்று நாம் கேட்கும் கதைகளையும், குமரகுருபரர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐந்தாவதாண்டில் அரும்பாக்கள் இயற்றினர் என்ற கதையினையும் அபூர்வ கற்பனைக ளென்று புறக்கணித்த நான் பாரதியார் ஏழாவது வயது முதல் எளிதில் பாடலியற்றித் தமிழ்வாணர்கள் மெச்சும்படி காட்டிய திறமையை நேரில் கண்டபொழுதுதான் கேவலம் படிப்பினால் பாவன்மை வராது, கவிகள் பிறப்பிலேயே அமைய வேண்டுமென்று அறிந்தேன். பாரதியார் பதினோராவது ஆண்டில், புலவர்கள் கூடியதோர் பெருஞ் சபையில், புதிது புதிதாகக் கொடுத்த அடிகளைக் கொண்டே பூர்ண கவிகளை விரைந்தியற்றிச் சபையோரை வியப்பித்த போது, அவருடைய கவித்திறமையையும், அமிர்த வாக்கையும் கண்டு சந்தோஷப்பட்ட புலவர்களால் முதல் முதல் "பாரதியார்" என்ற பட்டமும் கொடுக்கப் பெற்றார். அன்று முதல், இவரை யாவரும் பாரதியா ரென்றே அழைக்க ஆரம்பித்தார்கள். தற்கால முறைப்படி, இவர் ஆரம்ப முதல் ஆங்கில கலாசாலைகளிலேயே படிப்பிக்கப் பெற்றாரே யன்றித் தனித்தமிழ் ஆசிரியர் களிடத்தில் தமிழ்ப் பாடம் கேட்கவில்லை. இவர் தந்தையார் இவருடைய கல்வியில் விசேஷ கவனஞ் செலுத்தியதுண்டு. இளம் பருவத்திலேயே பாஷையிலும் கணித முதலிய சாஸ்திர பாடங்களிலும் சமமாகச் சிறந்து விளங்கினார். அதிகமாகப் பேசுகிறதில்லை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குழந்தைகள் எல்லோரோடும் சேர்ந்து விளையாடுவதிலும் பிரியப்படார். தனக்குற்ற தோழராகிய இரண்டொரு சகபாடிகளோடு மட்டும் பூராக்காலத்தையும் போக்கி வருவார். தேகப்பயிற்சியில் இவர் குழந்தை முதலே லக்ஷியமில்லாதவர். ஒழிந்த நேரமெல்லாம், ஜனப் பழக்கங் குறைந்த கோவில் மூலைகளிலும், தோட்டங்களிலும், குளக்கரைகளிலுமே தனித்தும், தம் உற்ற தோழரோடும் கழித்து வந்தார். ராமாயணம், பாரதம் முதலிய இதிகாசக் கதைகளில் அதிகப் பிரேமை யுள்ளவர். இவ்விதம், பதினைந்தா மாண்டளவில் இவர் காலம் எட்டையபுரத்தில் கழிந்தது.

1897-ம் வருஷம் ஆனி பதினைந்தில் பாரதியாருக்குக் கடையத்தில் ஸ்ரீ செல்லப்பா ஐயரவர்கள் குமாரத்தி ஸ்ரீமதி செல்லம்மாளுடன் விவாகம் நடந்தது. அங்கு வந்திருந்த அரிகேசவ நல்லூர் முதலிய பலவூர்த் தமிழ் வித்வான்களும் இவர் புலமை கண்டு, அளவற்ற சந்தோஷமடைந்தார்கள். விவாகமான மறுவருஷமே இவர் தந்தையார் தேக வியோகமானார். அதன் பயனாக பாரதியார் 1898-ம் வருஷம் காசிவாசியாக நேர்ந்தது. இடையில், திருநெல்வேலியில் ஹிந்து கலாசாலையில் சுமார் மூன்று வருஷம் மாணாக்கராக இருந்தார். அப்பொழுது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏற்பட்டிருந்த வகுப்பு முறைப்படி மூன்று முதல் ஐந்து பாரம் வரையும் அக் கலாசாலையில் படித்தார். அக் காலத்தில், கலாசாலைத் தமிழாசிரியருடனும், காலஞ் சென்ற ஸ்ரீ நெல்லையப்பன் கவிராயரவர்கள் வீட்டில் ஓயாது கூடும் வித்வான்களுடனும் இவர் இட்ட தமிழ்ப் போர்களின் தொகைக்கு அளவில்லை. இவர் சல்லாபத்தை மிகவும் விரும்பிய கவிராயரவர்கள் இவரை மிகவும் பரிவாக ஆதரித்து வந்தார்கள். அந்தக் காலங்களில் இவருடைய அருமையான கவிதா சக்தியையும், மாற்றலரை வாயடக்கும் புத்திக் கூர்மையையும், பேச்சு வன்மையையும் காட்டக்கூடிய கதைகள் பல உண்டு. அவற்றை யெல்லாம் விரிக்கில் பெருகு மென்றஞ்சி விடுக்கின்றேன். இரண்டு சந்தர்ப்பங்களில், எதிர்பாராதவண்ணம் இவர் தன்னை ஏழனம் பண்ணிய வயது முதிர்ந்த இரண்டு தமிழ்வாணர்களைத் தலைகுனியச் செய்தார். அப்போது யப் ஏ. பிரதம (ஸீனியர்) வகுப்பில் படித்துக் கொண்டிருந்தவரும், தமிழ்ப் பழக்கமுள்ள சோணாசலம் பிள்ளையவர் களின் குமாரருமாகிய காந்திமதி நாத பிள்ளை யென்றவர்கள் முருகதாச சுவாமி களின் பழக்கமுள்ளவர்களும், விசேஷமாகத் தமிழ்ப் பயிற்சியுள்ளவர்களுமா யிருந்தார் கள். அதுபற்றி அடிக்கடி பாரதியாரும் நானும் அவர்கள் வீட்டிற்குப் போவதுண்டு. ஒரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமயம், பலர் கூடியிருக்கும்போது, கூடியவர்கள் எல்லாருள்ளும் இளைஞரான பாரதியாரை அடக்க நினைத்துக் காந்திமதி நாதபிள்ளையவர்கள், "பாரதி சின்னப்பயல்" என்ற கடை யடியைக் கொடுத்து, அதை வைத்து ஒரு வெண்பாவைப் பூர்த்தி செய்யும்படி நமது புலவரைக் கேட்டார். அவர் சொல்லி வாய் மூடுமுன், கேட்டவர் வியக்க, காந்திமதி நாத பிள்ளை தலை குனிய, அங்குள்ள யாவரும் இவர் என்ன சொல்லப் போகிறாரென்று யோசித்துக்கொண்டிருக்கும் போதே தனக்குக் கொடுத்த அடியைக் கடை யடியாக வைத்து வெண்பாவைப் பூர்த்தி பண்ணினார். அதன் மூன்றாமடியின் இறுதி "காந்திமதி நாதனை" என்று வைத்து,

"... காந்திமதி நாதனைப்
பா ரதி சின்னப் பயல்"

என்று பாட்டை முடித்தார். அனைவரும் அதிக ஆச்சரிய மடைந்தார்கள். மற்றொரு நாள் கலாசாலையில் இவர்பால் அசூயை கொண்ட தமிழ்ப் பண்டிதர் வகுப்பில், 'காலரி'யில் உயர்ந்த இடத்தில் உட்கார்ந் திருந்த நமது பாரதியார் தம் கேள்விக்கு விடை சொல்லாததற்காக, "மேகம்போல் கவிகள் பொழிவதாக ஊரிலே புகழப்படுகிறீர். நேரான இடத்திலும் இருக்கின்றீர். காளமேகம்போல் பொழியாமல் சும்மா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருப்பதேன்?'' என்று கேலி பண்ணினார். உடனே நமது கவி, உட்கார்ந்தபடியே, "பண்டிதரவர்களுக்கு மேகத்தின் சாமான்ய குணம்கூடத் தெரியாமல் இருக்கிறதே? காளமேகம் தனக்குத் தோன்றிய பொழுது மழை பொழிவதன்றிப் பண்டிதர் உத்தரவுக்குப் பயந்து பெய்வதில்லையே. இஃதறியாமல், தன்னைப் பேசும்படி கட்டாயப்படுத்தும் பண்டிதரிடத்தில் பரிவு காட்டுவதெப்படி?'' என்று விடை கூறினார். அதுகேட்ட வகுப்பு மாணாக்கர் அனைவரும் கைகொட்டி நகைக்கப் பண்டிதர் வெட்க மடைந்தார். இப்படியே பல சமயங்களிலும் தன்னோ டெதிர்த்த புலவர்களை இவர் அதி சமர்த்தாய் அடக்கிய சந்தர்ப்பங்க ளெல்லாம் இவருடைய ஆச்சரிய புத்தியை யும், தமிழ்த் திறத்தையும் நன்கு விளக்கக் கூடியவை.

தந்தையார் இறந்த பிறகு தனக்கு ஆதரவும் துணையும் இல்லாமல் தன் தகப்பனுடன் பிறந்த அத்தையார் அழைக்க 1901ம் வருஷம் காசிக்குப் போனார். அங்கே ஒரே வருஷம் இருந்தார். அலகாபாத் சர்வ கலா சாலையில் தமிழ்ப் பாடம் இல்லாமைபற்றி அங்கே இவர் ஸமஸ்கிருதம் புதிதாக எடுத்துப் படிக்க நேர்ந்தும், அந்த ஒரு வருஷத்திலேயே மேற்படி சர்வ கலா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாலையில் பிரவேசப் பரீக்ஷைக்கு ஆஜராய் முதல் வகுப்பில் தேறினார். சில அசௌகரியங்களால், அங்கிருந்து மேற்படிக்க முடியாமல், திரும்ப எட்டையபுரத்திற்கு வர நேர்ந்தது. வந்தபிறகு 1904-ம் வருஷம்வரை கலாசாலையில் சென்று படிக்க மார்க்கமன்னியில், அப்பொழுது எட்டையபுரத்தில், யுவராஜாவாயிருந்த அரச வித்வானிடம் தமிழ்ச் சல்லாபம் செய்தும், அரண்மனையில் அபிமானித்துக் கொடுத்துவந்த சொற்பப் பணத்தைக் கொண்டு காலங் கழித்தும் வந்தார். அக்காலங்களில் எட்டையபுரம் சமஸ்தானாதிபதியின் மேலும் அவர்கள் முற்கூடும் புலவர் சபைகளில் எழும் போட்டி காரணமாக, பல்வேறு விஷயங்களைப் பற்றியும், பாரதியார் பாடிய பாடல்களுக்கு அளவில்லை. முக்கியமாக ஒரு சந்தர்ப்பத்தை நான் மறக்கமுடியவில்லை. ஒருநாள் காலையில், சில புலவர்கள், "பாரதியார் விழுமிய கருத்துக்க ளடங்கிய தமிழ்க் கவிகளைப் புலவர் மெச்ச விரைவாக இயற்றினாலும் அண்ணாமலை ரெட்டியாரைப் போலப் பாமரரும் ரசிக்கும்படியாக சங்கீத அமைப்புடன், சிந்துகள் முதலிய இசைத் தமிழ்ப் பாக்களை இயற்ற முடியா" தென்று சொன்னார்கள். அப்போது அரசரும் அதை ஆமோதித்து, தமிழுலகத்திலேயே அண்ணாமலை ரெட்டியாரைப்போல இனி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாரும் கவி சொல்ல முடியாது என்று கூறினார்கள். அதைக் கேட்ட நமது வரகவி சிரித்தார். உடனே அந்தச் சபையார் இவர் ரெட்டியாரைப்போலக் கவி சொல்ல முடியு மானால் செய்துகாட்ட வேண்டுவதன்றி வீணாகச் சிரிப்பது பெருமை யில்லை யென்று ஏழனம் பண்ணினார்கள். பாரதியார் அன்றே ஒரு சிந்தியற்றிக் கொண்டு வருவதாகச் சொல்லி விடையேற்று வீடு சென்றார். அன்று மாலை அரண்மனைக்குப் பாரதியார் போனபொழுது வித்வான்கள் ஒருவரும் வரவில்லை. ஆனால் இவர் தான் பாடிக் கொண்டு வந்த பாடலை அரசர்முன் சமர்ப்பித்தார். உடனே ஆளனுப்பிப் புலவர்கள் அழைக்கப்பட்டார்கள். வந்த வர்கள் பாரதியார் காலையில் சொன்ன போது விளையாட்டுப் பேச்சாக நினைத்தது மன்றி, குறைந்தது ஒரு வாரத்திற்குள் யாராலும் எவ்வித நூலும் செய்ய இயலாதென்று நினைத்ததனால் திரும்பத் தாங்கள் வரவில்லை யென்று சொன்னார்கள். அப்போது நமது பாரதியாரின் சிந்து படிக்கப் பட்டது. அது அச்சாகாததால் அநேகர் அதனைக் கேட்டிருக்க மாட்டார்கள். அந்தச் சிந்தைப் படிக்கக் கேட்டவர்கள் ஒரே அபிப்பிராயந்தான் சொன்னார்கள். ரெட்டியார் காவடிச் சிந்து பாமரர் பாட்டுத்தான். ஆனால் பாரதியார் சிந்தோ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதன் சுவைகள் ஒன்றும் குறையாமல், மிக மேன்மையான ஒரு தமிழ்ப் புலவரின் பாட்டு என்று எல்லோரும் நமது பாரதியாரை மெச்சி வாயாரப் புகழ்ந்தார்கள்.

1904-ம் வருஷத்தில் பாரதியார் எட்டையபுரம் அரசருடன் சிறிது ஒற்றுமை குறைந்து, ஊரையும் உற்றாரையும் விட்டு வெளியேறக் கருதி மதுரைக்குச் சென்றார். அங்கே சுமார் மூன்று மாத காலம் சேதுபதி உயர்தர வித்யாசாலையில் தமிழ்ப் பண்டிதரா யிருந்தார். பின் சென்னைக்குச் சென்றார். அங்கே 'சுதேச மித்திரன்' உதவிப் பத்திராசிரி-யரா யிருந்ததும், 'பால பாரதம்', 'இந்தியா' முதலிய தேசீயப் பத்திரிகைகளுக்குத் தானே அதிபரும் ஆசிரியருமா யிருந்து மிகவும் செவ்வைபெற நடத்தித் தமிழ் நாட்டில் தேச உணர்ச்சியையும், ஒரு புது ஆதர்சத்தையும் முதன் முதல் உண்டுபண்ணித் தேசபக்தராய் விளங்கியதும், அதியற்புதமான தேசப் பாட்டுகளை இயற்றி வெளியிட்டுப் புகழ் நிரப்பியதும் யாவரும் அறிந்த விஷயம். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை யவர்கள் சிறையிடப் பட்டபோது அவர்களுக்கும் கலெக்டருக்கும் நடந்த சம்வாதமாகச் சில புதிய கருத்துக் களுடன் கீர்த்தனைகள் இயற்றித் தமிழ்மக்கள் மனதில் தூங்கிய ஒற்றுமை யுணர்ச்சியையும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேச நேசத்தையும் உயிர்ப்பித் தெழுப்பி உலவச் செய்தது உலகம் அறியும்.

"ஜன்ம பூமி" முதலிய சில வெளியில் வந்த பாட்டுக்களே யன்றி, அச்சேறாமல், இவர் பாடிப் பயின்று பரவப்பெற்ற பல தேசப் பாட்டுக்களும், தமிழில் ஒரு புது நடையும், புதிய ஆவேசமும் உருவெடுக்கச் செய்தன. ஆயிரக்கணக்கான இளைஞரும், மாணாக்கரும் இவர் பாட்டுக்களையே பாடத் தலைப்பட்டனர். இவரது தேசாவேச ஓசை தமிழ் நாட்டில் பரவ ஆரம்பித்தபோது, தேசபக்தி தமிழ் மக்களாலேயே அவமதிக்கப் பட்டதா யிருந்தது. 1908-ம் வருஷம் பிறந்த அரசாங்கத்தாரின் வெறியாட்டின் பயனாக, அநேகர் சிறைப்பட நேர்ந்தது கண்டு பாரதியார் தனக்கும் சிறைவாசம் நேரு மென்றஞ்சிப் புதுச்சேரிக்குப் போயினர். அங்கே பத்து வருஷம் அரணில்லாது தானே சுமத்திக் கொண்ட சிறையில், விலங்கற்ற கைதியாய், வறுமை, நோய் முதலிய துன்பங் களுக்காளாய் வெளியில் புகழ்பவ ரன்றி, நெஞ்சில் நேசிப்பாரும் ஆதரத்துடன் ஆதரிப்பாரும் இன்றிப் பலவாறு வருந் தினர். துன்பம் நிறைந்த இக் காலத்தில் தான் இவர் அளவற்ற நூல்களை இயற்றிக் குவித்து வைத்தார். அவைக ளெல்லாம் கையெழுத்துப் பிரதியாகவே யிருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருகின்றன. அவைகளேயன்றி, அழகிய வசன நூல்களும் சிறுகதைகளும் பல செய்துள்ளார். இவர் வசனநடை எளிதில் யாவரும் உணர ஒழுகுவதுடன் இனிய, எளிய நடையும், வடித்த சுவை நிறைந்தும், யாப்பற்ற கவிகளென்று சொல்லும்படி அதி மாதுர்யமாயிருக்கும். ரவீந்திர நாதரின் சிறுகதைகளுக்கு இவர் செய்துள்ள தமிழ் மொழிபெயர்ப்பு படிக்கும்போது மொழிபெயர்ப்பாய்க் காணாமல், தானே முதனூலும் ரவீந்திரர் ஆங்கிலமே மொழிபெயர்ப்பாயும் தோற்றும்படி அத்துணை அழகு பெற்று அமைந்துள்ளது. இவரது "ஞானரத"த்தைப் படித்தவர்களுக்குத் தமிழ் நடையில் இவருக்குள்ள ஆதிக்கமும், நடைச் சிறப்பத் திறமும் இனிது விளங்கும். கடைசியாக 1918-ம் வருஷம், இவர் தாமாகப் புதுச்சேரிக்குப் போனது போலவே, அங்கிருந்தும் தாமே வெளியேறினார். எல்லை கடந்ததும், இவரைப் போலீஸார் கடலூரில் பிடித்துக் கைதியாக்கினர். ஆனால், யாதொரு குற்றமும், இவர்மேல் வெளியாகாத நிலையில் விரைவில் விடுதலை செய்யப்பட்டு மனைவி மக்களுடன் கடையம் சென்றார். கடையத்திற்கு வந்தது முதலே இவரது உடல்நிலை இவரது நண்பர்களுக்கு மிகுந்த வருத்தத்தை விளைத்தது. இவர் மிக மெலிந்து, வலி குறைந்து, நைந்த உருவத்தோடு மனவலியும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எய்த்து வருவது நாள்தோறும் சிநேகிதர் களுக்குக் கவலை தந்தது.

இறுதியாக, மறுபடியும் இவர் 1920-ம் வருஷத்தில் சென்னைக்குச் சென்று, 'சுதேச மித்திரன்' பத்திரிகைக்கு மீண்டும் துணையாசிரியராய் அமர்ந்தார். பத்திரிகை களில் இவர் பாக்களும், தேசீய வியாசங்களும் அடிக்கடி வெளிவந்ததை அனைவரும் அறிவர். ஆனால், நாள்தோறும் இவர் தேகபலம் குறைந்துகொண்டே வந்து, கடைசியாக 1921-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 11உ சென்னை திருவல்லிக்கேணியில் இவர் உயிர் துறந்தார். இனி எவ்விதத்திலும் இவர் உதவி வேண்டாதா ராயினவுடன் அவர் இருக்கும் வரை அவரை அலக்ஷியஞ் செய்த தமிழுலகம் திடீரென்று அவர் புகழில் மோகமுற்று மூழ்கி யிருக்கிறது.

பாரதியாரின் கவித்திறமும், நடை நலனும், நான் எடுத்து விரிப்பது அநாவசியம். இத்தோடு வெளியாகும் அவரது இனிய பாக்களே அவர் திறமைக்கு இறவாத சான்றாகும். இவருடன் நெருங்கிப் பழகாதவர்கள் இவர் இயற் பெருமையை அறிவது அருமை. இவர் இயற்கை யழகிலும், பௌதிக அமைப்புகளிலும் மிகவும் ஈடுபட்ட மனமுடையவர். சிவந்து மலர்ந்த பொன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொதிந்த மாலை ஞாயிற்றைக் கண்டு மகிழ்வதிலும், அழகிய மனோகரமான மலைத் தோற்றங்களிலும் நெடிது நேரம் தமது மனசை இழந்து அவசமாகி அநுபவித்து நிற்பதைக் கண்டிருக்கிறேன். எல்லா உயிர்களிடத்திலும் ஒப்ப நிரம்பிய இரக்க முடையவர். சர்வ ஜந்துக்களுக்கும் சிநேகிதர். சமீபத்தில், சென்னையில் யானைக்குப் பழமருந்தப் போய், மிதியுண்டு, பலநாள் வருந்தியது பத்திரிகை படிக்கும் பலருக்கும் தெரியும். இவர் தமக்கு சர்வ ஜீவராசி களோடும், பகையற்ற நேசமுண்டென்று வற்புறுத்தி வாதிக்கக் கேட்டிருக்கிறேன். பாம்பும், புலியும் தன்னொத்த விரிந்த மனசுடன் நேசிப்பவரைப் பகையா தென்றும், எல்லோரும் இறவாதிருக்க முடியுமென்றும், தேசகால வர்த்தமானங்களால் வேறுபாடு கிடையா தென்றும், உலக முழுவதும் ஒரு குலமே யென்றும் இக் கருத்துக்கள் கேவலம் விவகார திசையில் விசாரிக்கப்படுவது பிரயோஜனமில்லை யென்றும், தற்போதத் தால் அவைகளின் உண்மையை அறிந்து அநுபவிப்பதே அறிவுடைமைக்கு அழகென்றும் தன் உற்ற தோழருக்கு ஓயாது உபதேசிப்பார். நமது உபநிடதங்களில் ஒப்பற்ற நம்பிக்கையும், வியப்பும் கொண்ட இவர் உலகத்திலுள்ள சகல மதங்களிலும், சம திருஷ்டியும் ஒத்த மதிப்பும் உடையவராயு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிருந்தார். ஜாதி மத பேதங்கள் இவர் அகராதியில் அர்த்தமற்ற சொற்கள். மற்றவர் களைப்போல், ஆசார சீர்திருத்தங்கள் சம்பந்தமாய், கேவலம் புகழுக்காகப் பிரசங்கம் பண்ணித் திரிகிறவரல்ல. எப்போதும் எந்த விஷயத்தையும் ஆழச் சிந்திப்பார். சிந்தித்துக் கண்ட முடிவில் துணிவு கொள்வார். துணிந்தவழி என்றும், யாண்டும் ஒழுக முயல்வார். இதுவே இவரது இயல்பு. சாந்தமும், மோனமும் பெரும்பாலும், இவர் விரும்பிக் கையாண்ட குணங்கள்.

சங்கீதத்திலும் நல்ல ஞானமுள்ளவர். அதனால் இவர் கவிகள் இனிய இசையில் பாட அமைக்கப்பட்டன. இவரது குணங்களில் பலமுறை இவர் அன்பர்களை அலமறச் செய்தது இவர் தன்னல மறதி. பிறர்க்கன்றித் தனக்குழையாத் துறவி இவர். பத்துநாள் பட்டினிக்குப் பின் பத்து ரூபாய் கிடைத்தாலும், பணம் கையில் இருக்கும் பொழுது, குறை சொல்லி இரப்பாரைக் கண்டால், உள்ளதை அப்படியே கொடுத்துவிட்டு, பழம்பட்டினி விரதத்தைச் சிரமமின்றி மேற்கொள்வர். பெரியோர் — சிறியோர் என்ற வேறுபாடின்றி வருத்தமுறும் யாரிடத்தும், அளவற்ற அநுதாபம் காட்டுவர். கடன் வாங்கியும் பிறர் நோயகற்ற விரைவார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ள உடைகளையும் கொடுத்துவிட்டு, உடுத்த வழியின்றிப் பல்காலும் இடர்ப் படுவார். பைசாக்கள் முயற்கொம்பா யிருக்கும்பொழுது நூற்றுக்கணக்காகப் பிறர்க் களிக்கப் பரபரப்பார். தன் மனைவி மக்கள், மற்றவர்களைவிடத் தன் ஆதரவுக்கு அதிக உரிமையுடையவர்களென்பது இவர் அறியாத பாடம். இந்தக் குண மேலீட்டால் பல அவசரங்களில் இவர் பட்ட பாடுகளை அறிந்த பலரும் இவரைப் பித்தனென்று கூசாமல் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால், இவர் தனக்கு மிக அவசியமான சமயத்தில், இவருக்கு உதவக் கடமைப்பட்ட சிலரும் இவர் உதவியால் நலமடைந்த சிலரும், இவரைப் புறக்கணித்து இவர் வருத்தமுற்ற போதும் கூட இவர் தன் ஔதாரியத்தையும், தன்னல மறுப்பையும் ஒருகாலும் வெறுத்த தில்லை.

தமிழர் மறந்தாலும், தமிழ் மறவாத இப் புலவர் பெருமான் பாக்கள் என்றும் இறவாது நின்று நிலவும். இவர் மூட்டிய தேசநேச நெருப்பு அவியாது வளர்ந்து, தமிழக முழுதும் இருளகற்றி, ஒளிரச் செய்து நிற்கும் ஜோதியாய் விட்டது. மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயரவர்களுக்கு அப் பட்டம் கிடைத்ததற்காக விழவெடுத்த சென்னைச் சபையொன்றில் என் வேண்டுகோளுக்காக,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவர் உடன் பாடிப் படித்த மறக்கொணாக் கவிகளின் கருத்துக்களைக் கொண்டே இவரைத் தமிழகம் அநாதரவு செய்தது இவர்க்குக் குறையு மில்லை; தமிழர்க்குப் புதுமையு மில்லையென்று சமாதானப்படுத்திக் கொள்கிறேன். புதுச் சிறு விளக்குகளைக் கண்டு அதிசயிக்கும் மாந்தர் செம்பரிதியொளி கண்டு புகழ்வதில்லை. சிற்றுண்டிச் சுவைக்கு மகிழ்பவர் அமிர்தம் சிறந்த ருசியுடைய தென்று அதிசயிப்பதில்லை. வெயிலிடுவது பரிதிக்கும், சுவையினால் உயர்வது அமிர்தத் துக்கும் இயற்கையாகி, அவைகள் அந்தந்தக் குணத்தில் ஒப்பற்றுயர்ந் திருப்பதால், ஒருவரும் அது கண்டு வியப்பதில்லை. சிறிது குறைந்த உயர்வளவில் மட்டே மாந்தர் கண்டு வியந்து, நயப்பது வழக்கம். சாமானிய மாக, பரிசுக்குப் பாடாமலும், பணமுடை யோர் குற்றங்களை மறைத்துப் பொய்யாகப் புகழாமலும் உண்மையில் வாழ்ந்த இவ்வுயர் புலவரை, அளப்பரிய அவர் தலைமைப் புலமைப் பெருமித மிகுதியால் மட்டுமே நமதுலகம் அறிய முடியாதாயிற்று போலும்.

பாரதியார் ஏனைப் புலவர் போலாது, புதுமுறைகளையே சிருட்டித்தார். தமிழ் மொழியில் பாக்களும் பாவினங்களும் மலிந்து கிடந்தும், அவைகளை விட்டு, புதுக் கருத்துக் களும், புதிய உணர்ச்சிகளும் மலிந்து விளங்க,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவைகளுக்குப் பொருத்தமான புதிய நடைகளையும் புதிய யாப்புக்களையும் உண்டு பண்ணி யிருக்கிறார். அநாயாசமாய், இயற்கை யியல்புகளிலிருந்து, உருவகங்கள் உண்டுபண்ணிக் கையாளுவதும், எளிய உவமைகளால், பெரிய விஷயங்களை விளக்கத் துணியும் தனித்திறலும், முன்னைய புலவரிடத்தில்லாத இவரது அரிய குணங்கள். வாய்மை, வீரம், பெண்களைப் பேணல், எளியாரை ஏற்றல், ஓரமில்லா ஒற்றுமை யுணர்ச்சி, சுதந்திரம் முதலிய இவர் பாராட்டிப் பாடிய பல குணங்களும் இவர்க்கு இயல்பானவை. இவை யெல்லாம் இவர் பாக்களில் இனிது காணலாம். இவரது "கண்ணன் பாட்"டையும், "பாஞ்சாலி சபத"த்தையும் படித்தவர்களுக்கு, இவரது குணங்களும் திறமையும் விசதமாகும். இவரை உள்ளபடி அறிய விரும்புவோர்க்கு இவர் கவிகளைவிடச் சிறந்த கருவி கிடையாது. ஆதலால், இவர் நூல்களைப் படித்து, நடுநிலையில் சிந்திப்பார்க்கு உள்ளத்தனைய திவர் உயர்வு என்பது தெளிவாகும்.

வரிக்கு வரி வாய்மை மணக்கும் நாவலர் சோமசுந்தர பாரதியின் முகவுரையை யடுத்து, நூலில் அடங்கியுள்ள பாடல்களுக்கான விவரத்தைக் காண்போம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. வந்தே மாதரம்
2. வந்தே மாதரம்
3. பாரத நாடு
4. நாட்டு வணக்கம்
5. புது வருஷம்
6. பாரததேசம்
7. ஜய பாரத
8. செந்தமிழ் நாடு
9. எங்கள் நாடு
10. ஜாதீய கீதம் (வங்காளி)
11. ஜாதீய கீதம் (மொழிபெயர்ப்பு)
12. ஜாதீய கீதம் (புது மொழிபெயர்ப்பு)
13. எங்கள் தாய்
14. மாதாவின் துவஜம்
15. பாரத மாதா திருப்பள்ளி யெழுச்சி
16. பாரத தேவியின் திருத்தசாங்கம்
17. சுதந்திரப் பெருமை
18. சுதந்திர தாகம்
19. சுதந்திர தேவியின் துதி
20. சுதந்திரப் பள்ளு
21. தமிழ்மொழி வாழ்த்து
22. தமிழ்
23. நவராத்திரிப் பாட்டு
24. தமிழ்த் தாய்
25. வெற்றி
26. நவராத்திரிப் பாட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

27. ஸரஸ்வதி ஸ்தோத்திரம்
28. ஸரஸ்வதி தேவியின் புகழ்
29. லக்ஷ்மிதேவி — சரண் புகுதல்
30. லக்ஷ்மி பிரார்த்தனை
31. ஸ்ரீ தேவி ஸ்துதி
32. ஸ்ரீ கிருஷ்ணன்மீது ஸ்துதி
33. ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்
34. பாரத ஸமுதாயம்
35. தொழில்
36. வெறிகொண்ட தாய்
37. அல்லா
38. யேசு கிறிஸ்து
39. வேண்டும்
40. நடிப்புச் சுதேசிகள் (கிளிக்கண்ணி)
41. தொண்டு செய்யும் அடிமை
42. மேத்தா திலகருக்குச் சொல்வது
43. நிதானக் கட்சியார் — சுதேசியத்தைப் பழித்தல்
44. பாரத தேவியின் அடிமை
45. ஆங்கிலேயன் ஒரு தேச பக்தனுக்குக் கூறுவது
46. தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி
47. லாஜ்பத்ராய் துதி
48. லாஜ்பத்ராய் பிரலாபம்
49. தாதாபாய் நவுரோஜி
50. பூபேந்திர விஜயம்
51. அபேதாநந்த ஸ்வாமிகளின் மீது ஸ்தோத்திரக் கவிகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

52. (ஓவியர்மணி) ஸ்ரீ ரவிவர்மா
53. மாஜினி
54. ஆரிய தரிசனம் — ஓர் கனவு
55. மாயையைப் பழித்தல்
56. அச்சமில்லை
57. சங்கு
58. அறிவே தெய்வம்
59. அழகுத் தெய்வம்
60. பக்தி
61. ஜீவன் முக்தி
62. ஜய பேரிகை
63. முருகன் பாட்டு
64. முருகன் பாட்டு
65. வேலன் பாட்டு
66. முருகக் கடவுள்மீது கிளித்தூது
67. புதிய ருஷியா
68. 'பெல்ஜிய' நாட்டிற்கு வாழ்த்து
69. சொல்
70. இறைவனை வேண்டுதல்
71. மனைத் தலைவிக்கு வாழ்த்து
72. ஆத்ம ஜயம்
73. மூன்று காதல்
74. கடமை
75. மனப் பெண்
76. நெஞ்சொடு சொல்வது
77. பகைவனுக் கருள்வாய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

78. மனமே
79. நிலாவும் வான்மீனும் காற்றும்
80. விடுதலை வெண்பா
81. விடுதலை
82. விடுதலை
83. விடுதலை
84. விடுதலை
85. பெண்கள் விடுதலைக் கும்மி
86. ஸூர்ய தர்சனம்
87. ஞாயிறு — ஸூர்ய ஸ்துதி
88. வெண்ணிலா
89. பரசிவ வெள்ளம்
90. பொய்யோ? மெய்யோ?

முதல் பாகத்தில் இடம் பெற்ற முகவுரை, சரிதச் சுருக்கம், பாடல்களின் விவரம் ஆகிய வற்றை இதுவரை கண்டோம்.

அடுத்து, முதல் பாகத்தைத் தொடர்ந்து வெளிப்பட்ட இரண்டாம் பாகம் பற்றிய செய்தி களைப் பார்ப்போம். இரண்டாம் பாகத்தில் எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் எழுதிய ஆங்கில முகவுரையும், சக்கரைச் செட்டியார் அவர்கள் எழுதிய பாரதியின் அரசியல் வாழ்க்கை பற்றிய ஆங்கிலக் கட்டுரையும் பதிப்பிக்கப்பெற்று இருந்தன; 80 கவிதைகள் தரப் பெற்றும் இருந்தன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சக்கரைச் செட்டியார் அவர்கள் தம்முடைய கட்டுரையில் முழுக்க முழுக்கப் பாரதியின் அரசியல் பிரவேசம், அரசியல் பணி — ஆகியன பற்றிய விரிவான செய்திகளைக் குறித்துள்ளார்.

சீனிவாச அய்யங்கார் தம் முகவுரையில் பாரதி பாடல்களின் சிறப்பைப் பாராட்டி யுள்ளார்.

ஆங்கிலத்தில் அமைந்துள்ள முகவுரை, பாராட்டுரை கட்டுரைகளுக்கான தமிழ் மொழி பெயர்ப்புகளையும், பாடல்களுக்கான விவரத்தை யும் இங்கே காண்போம்.

ஸ்ரீனிவாச அய்யங்கார்

முதலில், எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் எழுதிய முக வுரை வருமாறு:

நம் மிந்தியரின் குணங்களையும் சுபா வங்களையும் யாவரும் பார்த்து அதிசயிக்கும் படி முற்றிலும் மாற்றி வருகிற ஒரு நவீன ஆதர்சம் — தேசபக்தி நம் தமிழ் நாட்டில் காலஞ்சென்ற ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியாரிடம் உருப்பெற்று சாக்ஷாத்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரமாக விளங்கிற்று. இவ் வரகவி தமது அன்பு நிறைந்த கரங்களால் அழிவற்றதும் மிகுந்த அழகும் வாசனையும் பொருந்தியது மான மலர்களால் நம்மவர்களின் உண்மை களையும் தத்துவங்களையும் ஒருங்கே சேர்த்துத் தொடுக்கப்பட்ட பாமாலை ஒன்றை இயற்றி நமது பாரத தேவியின் பாதார விந்தத்தில் ஸமர்ப்பித்திருக்கிறார்.

தமிழ்மொழியில் இவரைப்போல அவ்வளவு இனிமையாகவும், சுத்தமாகவும் மிகச் சிலரே பாடி யிருக்கின்றன ரென்பதை நோக்கும்போது இவருடைய கவித்திறம் ஸரஸ்வதி தேவியாருடைய பிரஸாதமென்றே சொல்லவேண்டும். நமது கவியைப்பற்றி எனது நண்பர் ஸ்ரீமான் ஸோமசுந்தர பாரதியார் சுருக்கமாய் எழுதியுள்ள சரிதையி லிருந்து இவருக்குக் கவிபாடும் திறமை எவ்வளவு அழகாயும் சுலபமாயும் அமைந் திருக்கிற தென்பது எளிதிற் றெரியும். இவருக்குக் கவி பாடுவதில் அடக்க முடியாத உற்சாகமும் ஊக்கமும் இருந்திராவிட்டால் இவரைத் தொடர்ந்து பற்றியிருந்த தாரித் ரியமும் வாழ்க்கைக் கஷ்டங்களும் இவருடைய மனோபாவங்களை அடியோடே கெடுத் திருக்கும்.

இவருடைய பாட்டுக்கள் மலை யருவி போல நேர்மை யுடையதாயும் கடல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போலவும் மாலையில் காணும் மலையின் உச்சியைப் போலவும் ஆழமும் அற்புதமுமுடையனவாகவு மிருக்கின்றன. வானத்தில் அதிவேகமாய்ப் பறக்கும் பறவை யொன்று சற்றுநேரம் உலகைப் பார்த்து நின்று தனது வனப்பு மிகுந்த சிறகை விரித்து, கேட்டோர் மனமுருகப் பாடினாற்போலிருக்கின்றன கவியினுடைய ஒப்புவமை யில்லாத கானங்கள்.

நமது தமிழ்நாட்டில் ஒவ்வொருவரும் பாடிக் கொண்டிருக்கிறதும், முக்கியமாக ஸ்திரீகளும் குழந்தைகளும் எப்போதும் வாய்விடாது பாடிக் கொண்டிருக்க வேண்டியதுமான இவருடைய கனிந்த பாட்டுகள்தான் நமது நாட்டிற்கு இவர் செய்துள்ள மிகப் பெரிய கைங்கர்யமாகும். தேசபக்தி யென்னும் வெறிபிடித்தபோது எல்லா பக்தர்களும் (எத்தேசத்தவர்களாயிருந்த போதிலும்) பாட்டின் மூலமாகவே தாங்கள் நுகரும் ஆனந்தத்தை மற்றவர்களுக்குக் காட்டி யிருக்கிறார்க ளென்பதற்கேற்ப நமது பாரதியாரும் தம்முடைய இனிய ஒப்புவமை யில்லாத பாக்களால், தமது தேசபக்தியின் முதிர்ச்சியை அவர் தேசத்தவர்களாகிய நமக்கும் காட்டி யிருக்கிறார். இந்த விஷயத்தில் அவருடைய அனந்த அபூர்வ பாட்டுக்கள் மிகவும் சிலாகிக்கத்தக்கன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருநெல்வேலியிலேயோ, மதுரையிலேயோ உள்ள ஒரு தூர குக்கிராமத்து, ஏழை ஜனங்களும், ஜனம் நிறைந்த பட்டணங்களில் வசித்து ஒழிவில்லாத வேலைகளில் ஆழ்ந்து கிடக்கும் உழைப்பாளிகளும், அதிக வேலையுள்ள சாதாரண ஜனங்களும், மற்றும் எப்பொழுதும் சுகத்தையே விரும்பும் தனவந்தர்களும் நமது கவியின் பாட்டைப் பாடுவதாலே இதுவரை அடைபட்டிருந்த தங்களுடையவும் தங்கள் நாட்டினுடையவும் ஆனந்த இன்ப சாகரத்தின் கதவுகளைத் திறக்கும் ஒரு பொன் திறவுகோலெனக் காண்பார்கள்.

நமது நற்குணங்களை விருத்தியடையச் செய்து மனோபாவங்களை எழுப்பி, மனோ நிலையை உறுதிபெறச் செய்து, ஆத்ம சுத்தத்தை அடையச் செய்யும் வித்தையே தேசீயக் கல்வி. இதன் ஸ்தானம் முதன்மையானது. இவைகளல்லாதன தேசீயக் கல்வியாக மாட்டா.

“இது நம்முடைய தேசம்” என்று நினைக்கும்போதெல்லாம் நமது மனதில் அடங்காது கிளர்ந்துவரும் ஆனந்தத்தையும் ஆத்திரத்தையும் பாட்டாகப் பாடி நம்முடைய தாபத்தை அறிவுறுத்தும் கீதங்களும் கானங்களும் இருந்தும் அவைகளைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடவேண்டியது ஒவ்வொருவரின் முக்கிய கடமையென்று எண்ணாமல் அவைகளைப் புறக்கணித்திருப்பவனை வல்லவனென்றாவது, மதிவாண னென்றாவது கொள்வது தகாது.

நாம் இதுவரைக்கும், யாரும் பார்த்துப் பரிதவிக்கும்படியாக, கெட்டிக்காரர்களென்றும், புத்திசாலிகளென்றும் பெருமை பாராட்டிவந்தோம். ஒற்றுமையாயிருப்பதை விட்டு நமக்குள் நாமே விரோதப்படுவதில், நமக்கிருக்கும் சாமர்த்தியத்தைப் பற்றி இதுவரையும் சந்தோஷித்து வந்தோம். ஆங்கிலம் முதலிய அன்னிய பாஷைகளை எவ்வித பிழையுமில்லாமல் பேசுவதிலும் எழுதுவதிலும் நமக்குள்ள வன்மையைப்பற்றி நாமே நம்மைச் சிலாகித்துக் கொண்டோம். அந்தோ! என்ன பரிதாபமான நிலை!

அமிழ்தினும் இனிய தமிழன்னையின்மேல் நமக்கிருக்க வேண்டிய பற்றையும், அன்பையும் விட்டு, அந்த தேவிக்கு நாம் செய்ய வேண்டிய கடமையையும் ஒழித்து, அன்னிய மொழிகளில் ஆசை வைத்து அநியாயமாகப் போனவர்கள் நம்மைப்போல் யாருளர்? கம்பன், காளிதாசன் முதலிய மகாகவிகளுடைய பாட்டுக்களைக் கேட்டு சிரவணஞ் செய்த காதுகள் ஷேக்ஸ்பியர், ஓர்ட்ஸ்வர்த் என்னும் மேனாட்டுப் பாவலர்கள் பாட்டைக் கேட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாத்திரம் ஆனந்திக்க வேண்டியதாயின. இவ்விதமாக, தமிழுக்குக் கலி பிடித்த காலத்தில் நமது சுப்பிரமணிய பாரதியினுடைய கர்ணானந்தகரமான பாட்டுக்களை எல்லோரும் வாசித்து ஸந்தோஷமடையக்கூடிய சிறு புஸ்தகங்களாக அச்சுவாகனமேற்ற இயல்வது ஒரு பெரிய புண்ணியமான காரியமாகும்.

இப் பிரசுரங்கள் ஒரு பெரிய தமிழ்க் கவியினுடைய அழியாப் புகழுக்கு அறிகுறியாயிருப்பது மல்லாமல் பாரதச் செல்வர்களுடைய மனதை அப் பாரத தேவியின் பொற்பாத கமலங்களுக்கு ஆற்றுப்படுக்கும் ஒரு மார்க்கமுமாகும். இப்போது ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் 'கற்று வரும்' நமது தமிழ் நாட்டுச் சிறுவர்களனைவரும் இந்த கீதங்களை நாள்தோறும் பாராயணம் செய்து பாடுவது தங்களுடைய பிரதான தர்மமாகக் கைக்கொள்வார்களென்று நான் மிகவும் எதிர்பார்த்திருக்கிறேன்.

இனி, சக்கரைச் செட்டியார் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையைப் பார்ப்போம்:

> "அவன் இறந்தனன்; எனினும் தன் வைராக்கிய
> மதனால் அவன் நம்முடன் இன்னமும் உரையாடி
> வருகிறான்."
>
> — விவிலியம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார், தமிழ் மறுமலர்ச்சியினை முன்கொண்டு கட்டியங் கூறிய பெருமான்; எழுச்சிமிக்க தேசீய கவி இறந்துவிட்டார்: ஆயினும் காலாந்தகாரத்துள் மறைந்த வீரபுருஷர்களைப் போன்று, அவர் தமது கவிதைகளின் குழலிசையால் இன்னமும் நம்மோடு உரையாடியவாறிருக்கின்றார். அவர் என்றுமழியாப் புகழுக்கு உரிமை பெற்றிருப்பது, அவர்தம் வாழ்வில் ஒரு சமயம் பல ராஜீய சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருந்தபோதிலும் அவை காரணம் பற்றியோ, அதிகார வர்க்கத்தினரோடு சேர்ந்துகொண்டோ அவருக்குக் கீழ்ப்பட்டோ ராஜீய மகாநாடுகளிலும், கமிட்டிகளிலும் பிரதம ஸ்தானங்கள் ஏற்றிருந்தாரென்பது பற்றியோ அல்ல; ஆனால், அவரது ஓய்விலா ஊக்க உணர்ச்சி அவர் தமிழ் நாட்டிற் களித்துள்ள இன்னிசைக் கீதங்களுள் என்னாளும் தகதக


சக்கரைச் செட்டியார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெனத் ததும்பி நிற்கின்ற தன்மையால்தான் ஆகும். நான் ஒரு தமிழ் வல்லுநனல்ல; ஆகவே அவரது கவிதையைப் பற்றி இலக்கிய மதிப்பு வரைவதற்கு நான் திறனுடையேனா எனுங் கேள்விக்கு இடமுண்டாகும். எனினும், பாரதியாரின் உயிர்த் துணைவியால் அவரது சென்னை வாழ்க்கையைப் பற்றிய எனது சில ஞாபகங்களை வெளியிட அழைப்புப் பெற்றமையின், அதனை நான் ஓர் பெரும் பாக்கியமாகக் கொள்வதன்றி, அவருடன் எனது இறந்த கால உறவினின்று நான் சேகரிக்கக்கூடிய நட்பின் மலர்களால் அவரது சமாதியை அலங்கரித்தல் அந் நண்பரது ஞாபகார்த்தமாக நான் செய்ய வேண்டிய தோர் தலைமையான கடமை யென்றுங் கொள்கிறேன்.

ஆங்கில கவி உவிலியம் வோர்ட்ஸ் வொர்த் என்பார், 'பிரஞ்சு ராஜீய புரட்சியின் சமயம் இளமை யுற்றிருந்தோர் சொர்க்க போகமே பெற்றவரானார்" என்று கூறு கிறார். அவ்வணந்தான் யுவகர்களாகிய நாங்கள் உணர்ந்தோம். இந்தியர் விடுதலை யென்னும் காலை ஞாயிற்றின் கிரணங்களை நாங்கள் கண்டுகொண்டோம். ஆனால் அது சமயம் நாங்கள் ஓர் புண்ணிய நதியின் கரையில் ஓங்கியெழுங் கதிரவனைக் கவர்ச்சி மிகுந்து மேனோக்கியவாறான முகத்துடன் தரிசித்து நிற்கும் பக்தர்களைப் போன்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்தோம் என்னலாம். கர்ஸன் பிரபு வங்காளப் பிரிவினை யியற்றியபோதும், ஸ்ரீ சுரேந்திரநாத் பானர்ஜீ தமது இனிமை யான குரலில் செய்த சட்டரீதியான கண்டனங்க ளெல்லாம் விழலுக்கிறைத்த நீராகியபோதும் நாங்கள் உணர்ந்த இருளை மையிருள் என்றே சொல்ல வேண்டும். அடிமைத் தன்மையின் மனச்சோர்வும் சட்ட ரீதியான இயக்கமெனப்படுவதன் பயனின்மை யும் எங்கள் மனதை முறித்து விட்டன வென்றாலும், உடன் புதிய ஊக்கத்தையும் எழுப்பின. காசியில் 1905-ம் ஆண்டில் நடந்த காங்கிரஸிலும், பின்னர் 1906-ம் ஆண்டில் தாதாபாயின் தலைமையில் நடந்த காங்கிரஸிலும் எங்களது போர் ஆரம்பிக்கப் பட்டது. இந்தப் போராட்டத்தின் பயனாக லோகமான்ய திலகரை முக்கியமான தலைவருள் ஒருவராகக் கொண்டு 'புதிய கட்சி' எழுந்தது. சென்னையில் இந்திய விடுதலை இயக்கத்தின் கொடியின்கீழ் பிரபல மாக வந்த யுவகர்களுள் பாரதியாரே கவித்துவம் படைத்தவரா யிருந்தார். இன்று பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் அவரைப் பற்றிய எனது ஞாபகங்கள் இன்றே நடந்தனபோலச் செம்மையாக இருக்கின்றன. பாரதியார் பேச்சில் சங்கோசமும், கண்களில் ஒளியும், அபிநயங்களில் சிரத்தை யின்மையும் கொண்டவர்; அவர் வாக்கியங்களை மிகத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துணிவுடனும், தாட்சண்யமின்றியும் வெளியிடுவார். அவர் உலகில் வதிபவரெனினும் அவரை இவ் வுலகத்தவ ரென்று கூறல் பொருந்தாது; ஏனெனில், இவ் வுலகின் நிலையற்ற சுகபோகங்களுக்கு ஆசை கொண்டிருப்பின் அவர் அதிக மனோரம்மியமான ஸ்தானங்களில் அமர்ந்திருக்கக்கூடும். பிற்காலத்தில் அவருக்கேற்பட விருந்த துரதிஷ்டங்க ளெல்லாம் நடைபெறாமலிருந்திருக்கக் கூடும்.

அவரோ நாளையைப் பற்றிய கவலை கொண்டவரல்லர்; ஜனங்களுடைய ஆமோதிப்பையும் கோரியவரல்லர்; பிரதானமாக அவரை வீரர் புகழ்பாடுங் கவி யென்றே சொல்ல வேண்டும். கால வித்தியாசமின்றேல் அவர் புறநானூறு எழுதிய கவிகள் தமிழ் வேந்தரின் சமஸ்தானங்களில் பெற்ற புகழும் பொருளும் பெற்றிருக்கக்கூடும். ஆனால், அவரோ ஓர் துர்பிட்ச காலத்தில் வாழ நேர்ந்தமையின், அவர் தனது தாய்நாட்டின் வீழ்ச்சியைப் பற்றியும் புதிய கட்சியின் அவா அம்சங்களைப் பற்றியும் பாடினார்.

1904-ம் ஆண்டில் அவர் சென்னை சேர்ந்து புகழ் பெற்ற தலைவரும், பழந்தேசாபிமானியுமான சொர்க்கவாசி ஸ்ரீயுத ஜீ. சுப்பிரமணிய ஐயரின்கீழ் உப ஆசிரியராக 'சுதேசமித்திரன்' பத்திரிகாலயத்தி லமர்ந்து ராஜீய ஞானத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயிற்சி யடைந்தார். அந்தோ! புதிய கட்சி யேற்பட்டபொழுது, அவர் ஒருவரே பழைய ராஜீயவாதிகளுள் கடைசிவரை உறுதியுடன் நின்றவர். அவர்பால் தீவிரமும் ஊக்கமும் ஆவேசமும் தகப்பன்பால் அடைவதுபோல் போயடைந்தன. சென்னையிலே மிகக் கூர்த்த மதியினரெனப் பெயர் படைத்த வக்கீல் ஒருவர் வெகுண்டபோதிலும், சென்னை மிதவாதிகள் எங்கு எங்களோடு சேர்ந்து (ராஜீயத்) தீட்டுப் பட்டுவிடுமோ வென்று ஆடைகளைத் தூக்கிக்கொண்டு விலகி நின்ற போதிலும், பாரதியார் எங்களை மேலே நடத்திச் சென்றார். பாரதியாருடன் எனது நட்பு 1907-ம் ஆண்டு துவக்கத்தில் துவங்கியது. அப்போது ஸ்ரீ விபினசந்திரபாலர் கலவர மான காங்கிரஸ் முடிவெய்தியதும் சென்னை வந்து புதிய கட்சியின் சித்தாந்தத்தை வியாக்கியானம் செய்து கம்பீரமான பிரசங் கங்கள் புரிந்தார். அச் சமயம் சில யௌனர்கள் சேர்ந்து சென்னை ஜனசங்க மென்ற பெயருடன் ஒரு ராஜீய சபை ஏற்படுத்தினர். இந்த யுவகர்களின் கூட்டத்தை ஸ்ரீயுத ஸ்ரீ சுப்பிரமணிய அய்யரும், டாக்டர் நஞ்சுண்ட ராயரும் உத்ஸாகப்படுத்தி வந்தனர். இவர்களே ஸ்ரீயுத பாலரை வரவழைத்தனர். பாரதியார் பாலர் பெஜவாடாவில் பிரசங்கம் புரிந்து வருகையில், சென்னைக்கு யௌவன தேசீயவாதிகளின் பெயரால் வரக் கோர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எங்களால் அனுப்பப்பட்டார். அவரது சென்னை விஜயம் இந்திய சரித்திரத்திலேயே ஓர் பெரிய சம்பவமெனலாம்; இந்நாளைய தேசீய வாதத்திற்கு அதுவே அடிகோலிய தென்று கூறவேண்டும். இதனைப் பெயர் போன ரௌலட் கமிட்டியும் உணர்ந்து கொண்டு, இம் மாகாணத்தில் கண்ட அராஜகச் செயல்களுக்கு ஸ்ரீ பாலரின் விஷமஞ் செய்யத் தூண்டுவதெனப்பட்ட பிரசங்கங்களே என்று கூறி யிருக்கிறது.

அச் சமயம் இனி வருங்காலம் அதிக நற்காலமே யென்று எதிர்பார்க்க இடந் தருவதாய் நிற்க, இருந்தாற்போலிருந்து ஸ்ரீ பாலர் இங்கு பிரசங்கம் புரிந்து வருகையில் அந்தரத்து இடி இடித்து அடிவயிற்றில் விழுந்தது என்னும்படி ஆயிற்று, லாலா லஜபதியும் அஜித சிங்கமும் பாஞ்சாலத்தி னின்று நாடு கடத்தப்பட்டது. இது ஒழுங்குப் பாடான அடக்கு முறையை மேற்கொண்ட கவர்ன்மென்டின் முதல் பிரயோக மென்னலாம். விபினபாபு சாட்சியங் கொடுக்க மறுத்ததற்காகச் சிறைக்கு அனுப்பப் பட்டார். அடுத்த டிஸம்பரில் சூரத்தில் அந்த துரதிஷ்டமிக்க காங்கிரஸ் கூடியபோது வங்காளத்தில் அராஜகக்காரர்கள் முதல் வேட்டு சுட்டு முடித்தனர். பாரதியாரும் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையும் உள்ளடங்கிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னை யுவகர் கூட்டமொன்று சூரத்திற்குச் சென்றது. மிகக் கலவரத்துடன் அக் காங்கிரஸ் கலைந்தது. ஆயினும், ஸ்ரீயுத பாரதியார் எங்கள் துயர் ஆற்ற தமது கீதங்களைப் பாடி விகடமும் புரிந்தார். காங்கிரஸில் மிதவாதி களின் கை மேலானது. அடக்கு முறையும் சிறையிடுதலும் புதிய உரு பெற்றெழுவதற்கு முன் குறியாயிற்று; 1908-ம் ஆண்டில் திருநெல்வேலிக் குழப்பம் நடந்தது; ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையும், எளிய சுப்ரமணிய சிவமும் கைது செய்யப்பட்டனர். பாரதியார் திருநெல்வேலி கோர்ட்டில் சாட்சியங் கொடுக்கச் சென்றார். இதைத் தொடர்ந்து விரைவில், ஸ்ரீ சுரேந்திரநாத் ஆரியா சென்னை மூர்மார்க்கெட்டில் ராஜ துவேஷமூட்டுவ தென்று கூறப்பட்ட பிரசங்கங்களைப் புரிந்த தற்காக செஷன்ஸ் கோர்ட்டில் விசாரிக்கப் பட்டு தண்டனை பெற்றார்.

இச் சம்பவங்களுக்கு ஈராண்டு முன்னர் அதாவது 1906-ல் இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸ் என்னும் இந்தியா அச்சியந்திரச் சாலை, திருவல்லிக்கேணி ஸ்ரீ திருமலாசாரி யாரால் ஆரம்பிக்கப்பட்டது; ஸ்ரீ பாரதியார் 'இந்தியா' வெனும் பெயர் பூண்ட புதிய தமிழ் வாரப் பத்திரிகைக்கு ஆசிரியரானார். அஃது அவரது விசேஷமான வன்மை பொருந்திய நடையில் புதிய தேசீய வாதத்தின் கட்சியை எதிரொலித்து வந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1908-ல் 'இந்தியா'வின் பிரசுரகர்த்தர் ராஜ துவேஷத்திற்காகக் கைது செய்யப் பட்டார். 'இந்தியா' நின்றுவிட்டது. பாரதியாரின் ஆவேசத்தின்கீழ் அல்பாயுசே யெனினும், அதியற்புதமான பிரகாசத்துடன் அப் பத்திரிகை விளங்கி யொடுங்கியதென்ன வேண்டும். புதுவை நகர் பாரதியாரைக் கைவிரித்து வரவேற்றது. பாரதியாரும் அதனிடம் அடைக்கலமானார். அப் பிரஞ்சுப் பிரதேசத்தில் அவரது நீண்ட வாசத்தை விவரிப்பது என்னால் கூடாது; அப் புதுவை பாரதியாருக்குப் புதுமை கழிய பெருஞ்சிறை யெனவே தோற்றலாயிற்று. தமது பழைய இடங்களையும் தோழர்களையும் மீட்டும் சேர வேண்டுமென்ற அடங்கா ஆவலெழவும் அதிகார வர்க்கத்தின் பிடிவாதத்தை இளக்க முயற்சிகள் செய்தார். ஸ்ரீயுத சேலம் பி.வி. நரசிம்ம ஐயர் சிதம்பரம் ரகசியம் போல் இருந்துவந்த கவர்ன்மெண்டாரின் உள்ளக் கிடக்கையை வெளியாக்கச் சட்டசபையில் ஒரு கேள்விமூலம் முயன்றார். வழக்கம் போல் அதற்கு சாமர்த்தியமாக மழுப்பிய விடையே கிடைத்தது. 1918-ல் பாரதியார் சென்னை திரும்பினார். ஆனால், அவர் தன்னைச் சுற்றி நின்ற காட்சி ஓர் புதிய உலகாகவே மாறி நிற்கக் கண்டார். பழைய தேசீய உணர்ச்சியின் ஜ்வாலை லோகமான்ய திலகர்பால் பிரகாசித்து நின்றது. ஹோம்ரூல் கிளர்ச்சியின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவராயும், 1917-ம் வருஷத்திய கல்கத்தா காங்கிரஸின் அக்ராசனராகவும் ஸ்ரீமதி பெசண்ட் செலுத்தி வந்த செல்வாக்கு தேய்ந்து வரலாயிற்று. மிஸ்டர் மாண்டேகு விஜயஞ் செய்ததும், அவர் அடுத்தபடியாக மாண்ட் போர்டு ரிபோர்டில் கர்டிஸின் தந்திரத்தை நுழைத்ததும் காங்கிரஸ்காரர் களிடை பிளவுண்டாக்க வுற்றனவாயின. புதுவையினின்று பாரதியார் திரும்பியதும் நான் அவரைச் சந்தித்தபோது தாம் விவிலிய வேதத்தை நூதன முறையில் மொழிபெயர்க்க உத்தேசித்திருப்பதாகக் கூறினார். அப் பணிக்கு ஸ்ரீமான் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் முதலான வேறு தமிழறிஞர்களுடன் நமது பாரதியாரும் பெரிதும் யோக்யதை படைத் தவரென்று கூறுவேன். அவர் மட்டும் இன்னும் சில காலம் உயிரோடு இருந்திருப்பின், அத்தகைய ஓர் பணியை தேசீய உணர்ச்சி யுள்ள இந்திய கிறிஸ்துவர்கள் அவர்பால் ஒப்புவித்திருப்பார்களென்பதில் ஐயமில்லை. அன்றி, அவர் தமிழ்மொழியின் அழகுக்கும் தமது பாண்டித்தியத்திற்கும் பொருந்திய வாறு மொழிபெயர்ப்புச் செய்திருப்பாரென்ற நம்பிக்கை எனக்குண்டு. பாரதியாரின் கடைசித் தோற்றம் கடற்கரையில் நடந்த ஓர் ஒத்துழையாமைக் கூட்டத்திலாகும். அவரைத் தமது பாடல்களி லொன்றைப் பாடும்படி ஜனங்கள் கேட்டபோது முதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாகத்தில் 60-வது பக்கத்தில் உள்ள "பாரத ஸமுதாயம்" என்ற பாடலைப் பாடினார். அப் பாடல் துணிவான கருத்தும், உயர்ந்த மனயெழுச்சியும் பொருந்தியதாகும். அதில் பின்வரும் அடிகள் என் மனதை மிக மிக இளக்கின:

இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித் திடுவோம்

வாழ்க பாரத ஸமுதாயம்

பின்னர் அவர் நோயுற்றார். 1921-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 11-ம் தேதி இருள்மிகுந்த இவ் வுலகினின்று உண்மையும் ஒளியும் நிலவும் உலகில் ஏகினார். ஆங்கு அவரது பிறவியின் அரிய ஆதர்சம் மஹோன்னதமாய் ஸபலமடையுமென நம்புகிறேன். மயானத்தில் நான் அவரது உடலத்தைக் கேவலம் ஓர் எலும்புக் கூடாகவும் தீக்கிரை யாவதையும் கண்டேன். ஆயினும், ஒருகால் அஃது அவரது எழுச்சிமிகுந்த ஆத்மாவுக்குற்ற கருவியாக இருந்த தன்றோ? ஆனால், இந்த மாமிசத் தோற்றம் அழிவதே யாகும். ஆத்மாவோ அழிவின்றி விளங்குவதாகும். அதிர்ஷ்ட லக்ஷ்மியின் வலைக்கும் அகங்காரிகளுடைய ஏளனத்திற்கும் உட்படாமல் விலகி நிற்பது அதுவே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந் நாட்களில் அவர் கடற்கரையில் ஜனக்கூட்டத்தின் முன் நின்று பாடிய அநேக சந்தர்ப்பங்கள் இதுபோழ்தும் என் நினைவிற்கு வருகின்றன. எனக்குச் சரியான தேதி ஞாபகத்திற்கு வரவில்லை. கடற்கரையில் பல்லாயிரம் ஜனங்கள் சேர்ந்த பொதுக் கூட்டமொன்று நடந்தது. ஸ்ரீயுத ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் தலைமை வகித்தார். மிஸ்டர் நெவின்ஸன் என்ற ஆங்கிலப் பத்திரிகைக்காரரும் வந்திருந்தார். ஸ்ரீயுத பாரதியாரும் அச்சமயம் பாடினார். அவரைப் பற்றி அவ் வாங்கிலேயன் "இந்தியாவின் நூதன உணர்ச்சி" என்ற தன் நூலில் பின்வருமாறு பாரதியாரை வர்ணிக்கிறான்:

அந்த சென்னையின் தமிழ்க்கவி லஜபதிராய் தேச பிரஷ்டஞ் செய்யப்பட்ட போது தாம் எழுதிய புலம்பலைப் பாடினார். அது தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்களுக் கெல்லாம் பொதுவான புலம்ப லென்னலாம். வீட்டைப் பற்றிய இன்ப நினைவுகள், சிறு வயதில் விளையாடிய நாட்டினிடம் ஆழ்ந்த பற்று, அன்னியர்களிடையும் விளங்காத பாஷைகளிடையும் வாழ்க்கையின் ஏகாந்தமான தன்மை — இவை யெல்லாம் வெகு சாந்தமுடனும், எளிதாகவும் சொல்லப் பட்டிருந்தன. பின்னர் திடீரென்று மாறி அக் கவி ஏளனஞ் செய்யப் புகுந்து சுயராஜ்யம் (அல்லது ஹோம்ரூலைப்) பற்றி மிஸ்டர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மார்லிக்கும் இந்தியாவுக்குமிடை ஓர் சம்பாஷணையை விவரிக்கத் தொடங்கினார்.

* * *

அதற்கு இந்தியா அழுத்தமாகவும் கம்பீர மாகவும் விடை கொடுத்து வருகிறது. இந்தியத் தாய் சுதந்திரத்தின் உருசி கண்டு கொண்டாள்; இங்கிலாந்திடமிருந்தே சுதந்திரமென்பது யாது என்பதை உணர்ந்து கொண்டு விட்டாள்; ஜான் மார்லியும் அவளுக்குக் குருவாகினா ரென்று கூற வேண்டும். அவள் சுயராஜ்யத்திற்கெனத் தொடர்ந்து போராடுவாள். மற்ற தேசத் தினர் அடைந்த உரிமைகளையே அவளும் கோருகிறாள். அவ் வுரிமைகளுக்குத்தானே இங்கிலாந்தும் போராடி யிருக்கிறது. அதே தனிப்பட்ட சுதந்திரத்தையும், வாக்குச் சுதந்திரத்தையுந் தான் அவ் விந்தியத் தாய் உரிமை பாராட்டுகிறாள். எனவே அவள் சுயராஜ்யத்திற்குப் பாடுபட ஒரு கணமும் சோம்பியிராள்; வடகோடி முதல் தென்கோடி வரை அவளது புத்திரர்கள் ஒற்றுமைப்பட்டு வருகிறார்கள்; கிழக்கினின்றும் மேற்குவரை 'வந்தேமாதரம்' என்ற கோஷம் வானத்தை அளாவி நிற்கிறது. மெதுவாக சுதந்திர சூரியன் உதயமாகி வருகிறான்; அவன் தாமசமாக எழினும் இந்தியா சுயராஜ்யத் திற்கென இடைவிடாது உழைத்து வருமென்பதில் ஐயமில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலஞ்சென்ற ஸ்ரீயுத வி. கிருஷ்ணசாமி ஐயரும் கூட ராஜீய அபிப்பிராயங்களில் நாங்களும் அவரும் இரு துருவங்களைப் போலும் ஒட்டாது நின்றாலும் பாரதியாரின் பாடல்களால் பரவசமானார். அன்றி அவரது பெயர்பெற்ற பாடல்களுள் சில வற்றைச் சிறு புத்தகவளவில் ஆயிரக் கணக்காக அச்சிட்டு இனாமாக வினியோகிக்கச் செய்தார். பாரதியாரது கவிதையின் உருக்கந்தான் ஓர் ராஜீய எதிரியிடமும் இந்தப் புகழ்ச்சியை வெளி யாக்கியது.

இரண்டு விசேஷ சந்தர்ப்பங்களில் ஸ்ரீமான் பாரதியாரும் நானும் மற்றவரும் மேற்கொண்ட காரியங்கள் நுண்ணறிவுடைய மிதவாதிகளால் போக்கிரித்தன மென்று எப்போதும் கண்டிக்கப்பட்டு வந்திருக் கின்றன. என்றாலும், அவை எனது அபிப்பிராயத்தில் யுவகரிடம் எப்போதும் காணும் உத்சாகத்திற்குச் சிறப்பானவைகளே யாகும். நிற்க.

இதுபோழ்து பாரதியாரின் பாடல்களை நால்வரின் பாடல்களைப்போல் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் பாடும்படி செய்வித்தல் எப்போதும் நல்ல பாடல்களைப் போற்றுவதான தமிழ்நாட்டின் கடமை யாகும். இந்தப் பாடல் தொகுதிகளை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளிவரும்போதே அவற்றை ஆயிரக் கணக்காகத் தமிழ் படிக்கும் ஜனங்கள் வாங்க வேண்டும் பாரதியாருக்குத் தமது பாடல்களை ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளும் எளிய வீடுகளிலும், பணக்காரர் மாளிகைகளிலும், ராஜீய மேடைகளிலும், நிம்மதி நிலவும் இல்லங்களிலும் பாடக் கேட்பதன்றி வேறொன்றும் மனச்சாந்தி உண்டாக்கக் கூடியதல்ல. என் நாட்டவரே! இந்திய நாட்டையும் தமிழ் மொழியையும் போற்றுபவரே! பாரதியாரின் ஞாபகார்த்தமாக எனது இச் சிறு மாலையைச் சமர்ப்பித்திருக்கிறேன். நான் செய்வீர்களென்று நம்புகிறபடி நீவிர் உங்கள் கடமையைச் செய்வீர்களா?

இனி, நூலில் காணப்பட்ட பாடல்களுக்கான விவரத்தைப் பார்ப்போம். அது வருமாறு:

1. பாரத மாதா
2. பாரதமாதா நவரத்ந மாலை
3. வாழ்க திலகன் நாமம்
4. மஹாத்மா காந்தி பஞ்சகம்
5. நாட்டுக் கல்வி
6. தமிழ்மொழி வாழ்த்து
7. பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்
8. புதுமைப் பெண்
9. பெண்மை
10. முரசு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11. பாப்பா பாட்டு
12. காலைப்பொழுது
13. அந்திப்பொழுது
14. கண்ணம்மா
15. திருக்காதல்
16. வள்ளிப் பாட்டு
17. வள்ளிப் பாட்டு
18. கண்ணம்மா
19. கண்ணம்மா
20. சுந்திரமதிப் பாட்டு
21. பூலோக குமாரி
22. கிளிப் பாட்டு
23. கோவிந்தன் பாட்டு
24. சாகா வரம்
25. சித்தாந்தச்சாமி கோயில்
26. கண்ணன் பிறப்பு
27. கண்ணன் வரவு
28. கண்ணம்மா - அங்க வர்ணனை
29. கண்ணன் துதி
30. ஆறு துணை
31. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை
32. மனத்திற்கு
33. நிகழ்கின்ற ஹிந்துஸ்தானமும், வருகின்ற ஹிந்துஸ்தானமும்
34. புயற்காற்று
35. கற்பனை யூர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

36. பிழைத்த தென்னந் தோப்பு
37. ஒளியும் இருளும்
38. காரைக்குடி ஹிந்து மதாபிமான சங்கத்தின் மீது வாழ்த்துப் பாக்கள்
39. ஸூர்ய ஸ்தோமம் - ஞானபாநு
40. புதிய ஆத்திசூடி
41. ஸோமதேவன் புகழ்
42. வேள்விப் பாட்டு
43. அக்நி ஸ்தோமம் (தீ)
44. வண்டிக்காரன் பாட்டு
45. அக்னி பகவான்
46. காளிப் பாட்டு
47. காளி ஸ்தோத்ரம்
48. ஹே காளி
49. மகாகாளியின் புகழ்
50. முத்துமாரி
51. புதுவை உப்பளங் கோயிலில் எழுந்தருளி யிருக்கும் தேசமுத்துமாரி
52. யோக சித்தி
53. போற்றி யகவல்
54. காணி நிலம்
55. மகாசக்தி வெண்பா
56. ஓம் சக்தி
57. கேட்பன
58. பராசக்தி
59. சக்திக் கூத்து
60. சக்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

61. வைய முழுதும்
62. சக்தி விளக்கம்
63. சக்திக்கு ஆத்ம ஸமர்ப்பணம்
64. சக்தி திருப்புகழ்
65. மஹாசக்தி பஞ்சகம்
66. மஹாசக்தி வாழ்த்து
67. சிவசக்தி புகழ்
68. ஊழிக்கூத்து
69. மகாசக்தி
70. மஹாசக்திக்கு ஸமர்ப்பணம்
71. மஹாசக்திக்கு விண்ணப்பம்
72. புடைபெயர் பாட்டு*
73. நந்தலாலா
74. மறவன் பாட்டு
75. மனத்திற்குக் கட்டளை
76. தெளிவு
77. லோகமான்ய பால கங்காதர திலகர்
78. அக்கினிக் குஞ்சு
79. மழை
80. கோமதி மஹிமை

குறிப்பு: 12 முதல் 22 வரையும் உள்ளவை காதற் பாட்டுக்களாகவும், 41 முதல் 43, 45 வரையும் உள்ளவை வேள்விப் பாட்டுக்களாகவும், 52 முதல் 71 வரையும் உள்ளவை சக்திப் பாட்டுக்களாகவும் குறிக்கப் பட்டுள்ளன.

* இக் குறியிட்ட பாடல் மகாகவி பாரதியார் பாடிய பாடல் இல்லை என்ற குறிப்பு 1937ஆம் வருடப் பாரதி பிரசுராலயப் பதிப்பில் உள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதலிரு தொகுதிகளும் நல்ல முறையில் அமைந்திருந்தன; இத்தொகுதிகளுக்குப் பத்திரிகை உலகில் வரவேற்பும் இருந்தன. நவசக்தி, தன வைசிய ஊழியன், இந்து போன்ற இன்ன பிற பத்திரிகைகள் புதிய நூல் தொகுதிகளைப் பாராட்டி மதிப்புரைகளும் எழுதியிருந்தன. அவை நூல்கள் பற்றிய மதிப்புரைகளாக மட்டுமாக அமையாமல் பாரதி பற்றியும், அவர் ஊட்டிய தேசபக்தி பற்றியும் குறிப்பிட்டுப் பேசும் வகையில் அமைந்திருந்தன.

பத்திரிகைகள் பாராட்டி எழுதிய போதிலும், நூல் வெளியீடுகளுக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு ஓரளவு கிடைத்தபோதிலும் எதிர்பார்த்த அளவு நூல்களின் விற்பனை இல்லை.

பன்னிரண்டு நூல்கள் வெளியிடப் போவதாக அறிவிப்புச் செய்த பாரதி ஆச்ரமத்தால் பதிப்புத் துறையில் தொடர்ந்து தன் பணியை ஆற்ற முடியாத நிலை தோன்றிவிட்டது.

புத்தக வியாபாரம் உற்சாகம் தருகின்ற நிலையில் அமையாத காலத்தும், 1923 மார்ச்சு மாதத்தில் அச்சான மூன்றாம் நூலான "குயில் பாட்டு - கண்ணன் பாட்டு - பாரதி அறுபத்தாறு" என்பது பின்னர் பாரதி பிரசுராலயத்தின்வழி விற்பனை செய்யப்பட்டது. இந் நூலுக்கான முகவுரையைப் பரலி சு. நெல்லையப்பர் எழுதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்தார். அவர் எழுதிய முகவுரை சிந்திக்கத்தக்கு தாகும். அது வருமாறு:

கலியை ஒழிக்குமாறும் கிருதயுகத்தை உண்டுபண்ணுமாறும் பூலோகத்தின் பல பகுதிகளிலும் பல கடவுளர்கள், பல தேவர்கள் தோன்றினார்கள்; தோன்றுகிறார்கள். சுப்பிரமணிய பாரதி என்ற பெயருடன் விளங்கிச் சில காலத்திற்கு முன் பூதவுடம்பு நீத்த எனது நண்பர் அவர்களில் ஒருவர். அவரது பாடல்களுக்குஸ்தூல சூக்ஷ்ம அர்த்தங்கள், புறப் பொருள், அகப் பொருள் உண்டு.


பாரதி நூல்கள்

பகுதி - 3

1. குயில் பாட்டு
2. கண்ணன் பாட்டு
3. பாரதி அறுபத்தாறு

ஸி. ஸுப்ரமண்ய பாரதி

பாரதி பிரசுராலயம்

திருவல்லிக்கேணி, சென்னை.

1928.

(முதற்பதிப்பு 3000) [விலை அணா 10.

எனவே, அவர் பாடலுக்கு வியாக்யானஞ் செய்தல் சாதாரண மனிதர்களால் இயல்வதன்று. இம்மட்டே எனது முகவுரை.

பாரதியார் இறந்தபின் அவரது பாடல்களை அச்சிட்டு வெளியிடும் கடமையை அவர் மனைவியாரே வகித்திருந்தார். அந்தக் கடமையைச் சில நண்பர்களின் விருப்பப்படி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த மூன்றாவது பகுதி முதல் இப்பொழுது நான் உள்ளிட்ட ஒரு பஞ்சாயத்தார் ஏற்றுக் கொண்டோம். பாரதியார் கருத்துக் கிசையவும், எங்கள் கருத்துக்கிசையவும் அவரது பாடல்களை நாங்கள் வெளியிடுவோம்.

பாரதியார் பாடல்கள் இந்த நாட்டுக்கு மட்டுமல்ல; இந்த ஞாலத்திற் கெல்லாம் ஆத்ம சுயராஜ்யத்துடன், அகில சுயராஜ்யமும் அளிக்க வல்லவை. பாரதியார் பாடல்களை வாயுள்ள மக்களெல்லாம் பாடும்படி செய்ய வேண்டுமென்பது எங்கள் கருத்து. இவ் விருப்பம் நிறைவேறுமாறு பாரதியும், பரமசிவனும் திருவருள் புரிக என்பது எங்கள் பிரார்த்தனை.

பாரதியின் உடன்பிறவாத தம்பி பரலி நெல்லையப்பர் குறித்தபடி, செல்லம்மாள் அவர்கள் நிறுவிய பாரதி ஆச்ரமம் பாரதி நூல்களை வெளியிடும் பணியை முதலிரண்டு பகுதிகளைப் பதிப்பித்ததோடு நிறுத்திக் கொண்டது. மூன்றாம் பகுதி முதல் பதிப்புப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நெல்லையப்பர் உள்ளிட்ட பஞ்சாயத்தாரும் மேற்கொண்டு பாரதி நூல் பதிப்புப் பணியில் ஈடுபட்டுப் புதிய நூல்களைக் கொணர்ந்ததாகவும் செய்தி இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆக, 1923ஆம் ஆண்டின் முற்பகுதியிலேயே பாரதி நூல்களின் பதிப்புப் பணிகளில் தேக்கநிலை ஏற்பட்டு விட்டது.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் 1922-1923ஆம் ஆண்டுகளின் காலப் பகுதியில் பாரதி நூல் வரிசையில் மூன்று தொகுதிகளே பிரசுரமாயின.

மூன்றாம் தொகுதியில் காணப்பெறும் "கண்ணன் பாட்டு" நூல் பகுதி பாரதி காலத்தி லேயே இரு பதிப்புகள் வெளியான செய்தி முன்னரே சொல்லப்பட்டிருக்கிறது.

பாரதியால் 'குயில்' என்றே தலைப்பிடப்பட்ட கைப்பிரதி நூலாக்கம் பெறும்போது "குயில் பாட்டு" என்று பதிப்பிக்கப் பெற்றது.

சொற் சுவை, பொருட் சுவை, நகைச் சுவை, கற்பனை வளம், ஆழ்ந்த சிந்தனை, தத்துவக் கருத்துச் செறிவு—ஆகிய அனைத்தும் நிறைந்த விந்தைச் சிறு காப்பியம் 'குயில்' ஆகும்.

காதற்கதைதான் என்றாலும், பட்சிகளையும், விலங்குகளையும் கொண்டே பாரதி கதை நடத்திச் செல்கிறார்.

கவி பாரதியின் உள்ளத்தே பூத்ததோர் கற்பனையின் சூழ்ச்சியேயானாலும், மாயமந்திரங் களையும் மறு பிறப்பையும் இக் குயில் கூவுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீதிப் பாடல்கள் என்றே கருதத்தகும் தன்மை கொண்டது "பாரதி அறுபத்தாறு". பாரதி காலமானபின் நூல் வெளியானதால் நூலுக்கான பெயர் பதிப்பாளரால் இடப்பட்டதாகும்.

66 செய்யுள்களைக் கொண்டது இத்தொகுதி. ஆன்மீகப் பார்வையுடன் கூடிய இச் செய்யுள் திரட்டில், பாரதி ஆங்காங்கே தம் வரலாற்றுச் செய்திகளையும் குறிப்பிட்டுள்ளார்.

முற்றுப் பெறாத நூல் இது. பல விஷயங்கள் குறித்துப் பாரதி இதில் தம்முடைய கருத்துகளைப் புலப்படுத்தி யுள்ளார்.

பாரதி இறந்த பின், அவரது கவிதைகளை அச்சிட்டு வெளியிடும் கடமையை நண்பர்களின் விருப்பப்படி, செல்லம்மாள் அவர்களிடமிருந்து இந்த மூன்றாம் பகுதி முதல் பரலி சு. நெல்லையப்பர் உள்ளிட்ட ஒரு பஞ்சாயத்தார் ஏற்றுக்கொண்டாலும் இக் குழு பதிப்பித்த "குயில் பாட்டு—கண்ணன் பாட்டு—பாரதி அறுபத்தாறு" என்னும் இந்த நூல் உடனடியாக விற்பனைக்கு வரவில்லை. இதன் பின் நூல்கள் வெளியிடுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

வெளியிட்ட முதலிரு தொகுதிகளில் பெரும் அளவு விற்பனையாகவில்லை; மூன்றாம் தொகுதி அச்சிடப்பட்டும் விற்பனைக்கு வராத நிலை. அது சமயம், செல்லம்மா அம்மையார் சென்னைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருவல்லிக்கேணியில் வசித்து வந்தார். அவருடைய இல்லத்தில் விற்பனையாகாமல் தேங்கிக்கிடந்த நூல்களுடன், அச்சில் வெளிக் கொணரத் திட்ட மிட்டிருந்த பாரதியின் கையெழுத்துப் பிரதிகளும் முடங்கிக் கிடந்தன. இந் நிலையில் செல்லம்மாள் செய்வதறியாது திகைத்தார்.

பாரதியின் குடும்பத்தின்பால் பேரன்பு கொண்ட ஒருசிலர், பாரதியின் முதலிரு தொகுதி களையும் திருநெல்வேலி தாலுகா போர்டு மூலம் இயங்கும் பள்ளிகளில் பாட நூல்களாக வைக்க முயற்சித்தனர்.

1923 ஆம் ஆண்டு, திருநெல்வேலி தாலுகா போர்டு கமிட்டியினரும், இப் புத்தகங்களின் வாயிலாக மாணவச் செல்வங்களுக்குத் தேச பக்தி யூட்டும் பொருட்டு, தங்கள் ஆதரவிலுள்ள பள்ளி களில் வைக்க முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால், இம் முயற்சிகளும் பயனளிக்கவில்லை. அரசின் கல்வித்துறை இச் செயலைச் சட்ட விரோதம் என்று கூறித் தடுத்துவிட்டது.

தாலுகா போர்டார் மேற்கொண்ட முயற்சி களின் பலனாக,' ஒருவேளை பாரதி நூல் தொகுதிகள் பாட நூல்களாக அங்கீகாரம் பெற்றிருந்தால், நூல்களின் விற்பனைக்கு வாய்ப்பு கிடைத்திருக்கும். புதிய நூல்களும் வெளிவர வசதியும் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவற்றிற்குச் சூழ்நிலை சாதகமாக அமையவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசின் செயலை அன்றைய சட்டப் பேரவையில் திரு. எஸ். சத்திய மூர்த்தி அவர்கள் 1923

சத்திய மூர்த்தி

நவம்பரில் கண்டித்துக் குரல் கொடுத்தார். அவர் மிகவும் ஆழமாக - அதே சமயத்தில் ஆணித்தரமாகப் பேசிய தன் ஒரு பகுதி வருமாறு:

"........ பாரதி என்ற பெயர் கொண்ட ஒரு மாமனிதர் தமிழ் நாட்டில் இருந்தார். அவர் இங்கிலாந்தில் பிறந்திருந்தால், அங்கு அவர் அரசவைக் கவிஞராக ஆகியிருப்பார். அவர் பாடல்கள் அவ்வளவு உன்னதமானவை; தேசபக்தி யூட்டும் தன்மையுடையவை. கனம் சட்ட உறுப்பினர் அவர்களே அவற்றை அறிவார். நம் மொழியிலுள்ள மிகச் சிறந்த உருக்கமான பாடல்கள் இவை என்று நான் சொல்வதை அவரும் ஏற்பார்.

இப்படி யிருக்க, திருநெல்வேலி தாலுகா போர்டு, தனது ஆளுகையிலுள்ள பள்ளிக் கூடங்களில் இப் பாடல்களைப் பாடத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திட்டத்தில் சேர்த்தபொழுது, கனம் முதலமைச்சரின் கோபம் கிளறப்பட்டிருக்கிறது. அப் பாடல்களில் அவர் காண்பது புரட்சி".

திரு. சத்தியமூர்த்தி அவர்கள் சட்டப் பேரவையில் பேசியதன் பின்பும் அரசு தன் கொள்கையை விட்டுக் கொடுக்கவில்லை.


ஹரிஹர சர்மா

நிலைமைகளைப் புரிந்து கொண்ட செல்லம்மா அம்மையார் தம் குடும்பத்தைப் பொருளாதார சிக்கல்களின்றும் விடுபட வழி தேடலானர். அப்பொழுது அதே திருவல்லிக்கேணி பகுதியில் வசித்து வந்த பாரதியின் உறவினரான திரு. ஹரிஹர சர்மா அவர்களிடம் புத்தக விற்பனைக்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார். திரு. ஹரிஹர சர்மா அவர்கள் தட்சிண பாரத் ஹிந்தி பிரசார சபையின் செயலாளராகப் பொறுப்பு வகித்த காரணத்தால், பாரதி நூல்களில் விற்பனையாகாமல் இருந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரதிகளைத் தம் அலுவலகக் கட்டிடத்தின் ஓர் அறையில் இருப்பு வைத்துக் கொண்டு, நூல் பிரதிகளைச் சிறிது சிறிதாக விற்று, கிடைத்த தொகையைச் செல்லம்மாளின் குடும்பச் செலவு களுக்காகக் கொடுத்து வந்தார்.

ஆனால், புத்தக விற்பனையினால் கிடைத்த தொகை குடும்பச் செலவிற்குப் போதுமான அளவினதாக இல்லை. தவிர, தம்முடைய இரண்டாம் மகளான சகுந்தலாவுக்குத் திருமணம் செய்து முடிக்கவும் விரும்பினார் செல்லம்மாள்.


விசுவநாத அய்யர்

குடும்ப நிலைமை களையெல்லாம் விளக்கி, மானா மதுரையில் பள்ளி ஆசிரியராகப் பணி யாற்றிக் கொண் டிருந்த பாரதியின் இளைய சகோதர ரான திரு. சி. விசுவ நாத அய்யருக்குச் செல்லம்மாள் கடிதம் எழுதினார்.

கடிதம் பெற்ற பாரதியின் இளைய சகோதரர் தம்முடைய குடும்பக் கஷ்ட நிலை யிலும் செல்லம்மாள் அம்மையாருக்கு உதவி செய்ய முன்வந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விசுவநாத அய்யர் அவர்கள் சென்னையிலிருந்த திரு. ஹரிஹர சர்மாவுடன் கலந்து யோசனை செய்து, பாரதியின் நூல்களை ஈடாக வைத்து, ரூ.2,000 கடன் வாங்கி, 1924இல் மானாமதுரையில் சகுந்தலாவின் திருமணத்தை நடத்தினார்.

ஒருவகையில், செல்லம்மாள் அவர்களின் மகளின் திருமணம் நடைபெற்று முடிந்தது அவருக்கு நிம்மதியைக் கொடுத்தது.

பாரதியின் நூல்களை ஈடாக வைத்தும், கடன்வாங்கியும் சகுந்தலாவின் திருமணத்தை நடத்தி முடித்துவிட்ட நிலையிலும், நூல்களின் விற்பனையில் முன்னேற்றம் ஏதும் இல்லை; நூல்களை வாங்குதற்கோ புதிதாக வெளிக் கொணரவோ எவரும் முன்வரவில்லை. இந்த நிலையில் புதிய திருப்பம் ஏற்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8

பாரதி பிரசுராலயம் ஆற்றிய அரும் பணிகள்

தமிழ்நாட்டுக்குப் புத்துயிர் அளித்துத் தமிழ் மொழிக்கு என்றும் மாறாத இளமையைத் தந்த



நடராஜன்

மகாகவி பாரதியின் படைப்புகள் அச்சு வடிவில் கிடைக்காமலேபோய்விடுமோ என்று பலரும் அஞ்சிய நேரத்தில், திரு. சி. விசுவநாத அய்யர் துணிச்சலாக ஒரு முடிவை மேற்கொண்டார். சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் அவர் தமக்கு வாய்த்த வாய்ப்புகளைக் கொண்டு பாரதி நூல்களின் பதிப்புப் பணிகளை ஏற்க முடிவெடுத்தார். திரு. ஹரிஹர சர்மா அவர்களையும், சகுந்தலாவின் கணவர் நடராஜன் அவர்களையும் கூட்டாளிகளாகச் சேர்த்துக்கொண்டு "பாரதி பிரசுராலயம்"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற பெயரில் வெளியீட்டு நிறுவனத்தைத் தோற்றுவித்தார்.

பாரதி நூல்களின் உரிமை பாரதி குடும்பத்தாரிடமே இருக்க, பின்னர் உரிமத் தொகை கொடுத்துப் பதிப்புரிமையைப் பெறுவது என்ற அடிப்படையில் ஆரம்பக் கட்டத்தில் பாரதி பிரசுராலயம் இயங்கியது.

பாரதியின் நூல்களை வெளிக்கொணரும் மாபெரிய பொறுப்பைச் சந்தர்ப்பவசத்தால் ஏற்க நேர்ந்தாலும் அப் பணியைத் தேசிய திருப்பணியாகவே கருதிச் செயற்பட்டது பாரதி பிரசுராலயம்.

பாரதி நூல்களை வரிசைப்படி வெளியீடு செய்யவும் திட்டம் வகுத்துக் கொண்டது.

குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால், முன்னர் பாரதியாரே பதிப்பித்து வெளியிட்ட பாடல் தொகுதிகளை வகைப்படுத்தி வெளியிடவும், பரலி சு. நெல்லையப்பர் பதிப்பித்த நூல்கள் மற்றும் பாரதி ஆச்ரம நூல்கள் ஆகியனவற்றைத் தொகைப்படுத்திப் பதிப்பிக்கவுமான உரிய முயற்சிகளில் பாரதி பிரசுராலயம் முனைந்தது.

புதிய நூல்களை வெளியீடு செய்வதிலும் தீவிரம் காட்டியது; மற்றும், அந் நாளில் வெளிவந்த பத்திரிகைகளைத் தேடிப்பெற்று,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவற்றில் காணப்பட்ட பாரதி எழுத்துகளை நூலாக்கம் செய்வதில் மிகுந்த ஆர்வம் காட்டியது; அச்சில் வெளிவராமலும், சிதிலமான நிலையில் கையெழுத்துப் பிரதிகளாக இருந்தவற்றைச் சீர்செய்வதிலும், ஒழுங்குபடுத்துவதிலும் தக்க கவனம் செலுத்தியது; தனிப்பட்டவர்களிடம் இருந்த பாரதியின் கையெழுத்துப் படிகளைப் பெறவும் முயற்சிகளை மேற்கொண்டது.

பாரதியின் கருத்துகள் நாட்டு மக்களிடம் பரவவேண்டும் என்ற காரணத்திற்காகப் பலவித இன்னல்களைப் பாரதி பிரசுராலயம் எதிர்கொள்ள நேர்ந்தது.

1924ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட பாரதி பிரசுராலயத்தின் வெளியீடுகளாக 1923இல் பதிப்பிக்கப்பட்ட குயில் பாட்டு — கண்ணன் பாட்டு — பாரதி அறுபத்தாறு என்னும் நூலும், 1922இல் பாரதி ஆச்ரமத்தாரால் வெளியிடப்பட்ட சுதேச கீதங்கள் (முதல் பாகம்) என்னும் நூலின் மறுபதிப்பும், புதிய நூலாகப் பாஞ்சாலி சபதம் இரு பாகங்களும் இணைந்த தொகுதியாகவும் வெளிவந்தன.

இந் நூல்களில் "சுதேச கீதங்கள்" (முதல் பாகம்) என்ற நூலில் பாரதி பிரசுராலயத்தார் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தனர். அவ் வேண்டுகோள் 1923இல் நிகழ்ந்த நிகழ்ச்சியை நினைவூட்டுவதாக அமைந்ததாகும். அவசியங் கருதி அதனை இங்கே பார்ப்போம்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓர் விண்ணப்பம்

தமிழ் மக்களே!

தங்களில் சிலர் புகழற்குரிய விசேஷ உதவி புரிந்தும் பெரும்பாலர் இன்னும் தாய்பாஷை முன்னேற்றத்தைக் கவனிக்காமல் இருப்பதால்தான் தமிழ்ப் பாஷை இம்மாதிரி நிலையிலிருக்கிறது.

திருநெல்வேலி தாலுகா போர்டு கமிட்டியார் இப் புஸ்தகத்தின் மூலமாய் மாணவர்களுக்கு, தேசபக்தி யூட்டும் பொருட்டு, தங்கள் ஆதரவிலுள்ள பள்ளிகளில் இதை வைக்க முயன்றும் சர்க்கார் கல்வி இலாகா இதைச் சட்டவிரோதமாக எடுத்து விடச் செய்த அவமானத்தைத் தமிழ்நாட்டாராகிய நாம் எவ்வாறு நீக்கப் போகிறோமென்பது முக்கியமான கேள்வி. எமக்கு ஒரு வழியே தோன்றுகின்றது. பள்ளிகளில் திரும்ப வைக்க முயற்சி செய்ய வேண்டியது நம் கடமையாகும். பள்ளிக்கூடங்களில் வைக்காமற் போனாலும் தாய் தந்தையர் தங்கள் குழந்தைகளுக்கு வீடுகளிலாவது அவசியம் கற்றுக் கொடுக்கவேண்டுவது தங்கள் கடமையாக உணர்ந்து அவ்வாறு செய்யவேண்டும்.

இதிலுள்ள முக்கியமான பாடல்களை மாணவர்களுக்குத் தனியாகக் குறைந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விலை வைத்து வெளியிட வேண்டியது அவசியமானாலும் அவ்வாறு செய்யத் தயாராக இருக்கிறோம்."

இவ் வறிக்கையில் பாரதி பிரசுராலயத்தினர் தமிழக மக்களுக்குள்ள கடமையைப் புலப்படுத்திய அதே வேளையில், தங்களுக்குள்ள பொறுப்பு உணர்ச்சியையும் தெரிவிக்கவே செய்தனர்.

பள்ளிகளில் பாடநூலாக வைக்க முடியாமற் போனாலும் குழந்தைகளுக்கு வீடுகளில் பாரதியின் பாடல்களைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று பிரசுராலய நிர்வாகிகள் பெரிதும் ஆவல் கொண்டனர். அவசியமானால் சில முக்கியமான பாடல்களையேனும் குறைந்த விலைப் பதிப்பாக வெளியிடவும் தாங்கள் தயாராக உள்ளனர் எனவும் தெரிவித்ததும் பெரிதும் பாராட்டத்தக்க செயல் ஆகும்.

பாரதி பிரசுராலயத்தின் முதல் புதிய பதிப்பான பாஞ்சாலி சபதத்தில் மொத்தம் ஐந்து சருக்கங்கள் அடங்கி யிருந்தன.

1912இல் பாரதி பதிப்பித்து வெளியிட்ட முதல் பாகத்தில் அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம் ஆகிய இரு சருக்கங்களே இடம் பெற்றிருந்தன. இரண்டாம் பாகத்தில் அடிமைச் சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச் சருக்கம் ஆகிய மூன்று சருக்கங்களும் சேர்க்கப்பட்டு, ஒரே நூலாக வெளிவந்தது குறிப்பிடத் தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி எழுதிய முகவுரையுடன் பாரதி பிரசுராலயத்தாரும் எழுதிய முகவுரை போன்றுள்ள ஓர் பிரார்த்தனைப் பகுதியுடன் நூல் அச்சாகி யுள்ளது.


பாரதி நூல்கள்—பகுதி

பாஞ்சாலி சபதம்

(காவியம்.)

(இரண்டு பாகங்கள் அரும்பதவுரையுடன் கூடியது)

சி. சுப்பிரமணிய பாரதி

பெற்ற தாயும் பிறந்த பொன்னுடுமே
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே.

பாரதி பிரசுராலயம்,

திருவல்லிக்கேணி, சென்னை.

பிரார்த்தனைப் பகுதியில் பாரதி பிரசுராலயத்தார் எழுதியுள்ளமை வருமாறு:

பாஞ்சாலி சபதத்தின் முதல் பாகம் ஸ்ரீமான் பாரதியார் இருக்கும் போதே 1912இல் வெளியாகி யிருந்தது. பொருள் விளக்கமும், குறிப்புகளும் பாரதியாரே எழுதி யிருந்தார். இரண்டாம் பாகம் இப்போதுதான் முதல் தடவை வெளி வந்திருக்கிறது. இதற்குப் பாரதியார் பொருள் விளக்கமோ அல்லது குறிப்போ யாதும் எழுதவில்லை. ஆகையால் நாங்கள் இரண்டாம் பாகத்தை அப்படியே வெளியிட்டிருக்கிறோம்.

இதன் ஸமர்ப்பணம் மிகவும் கவனிக்கத் தக்கது. பாரதியார் தமிழ்மொழிக்கு அழியாத

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உயிரும் ஒளியும் இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள் செய்யப்போகிற 'வரகவி களுக்கும்' அவர்களுக்குத் தக்கவாறு கைங்கரியங்கள் செய்யப் போகின்ற 'பிரபுக் களுக்கும்' இந் நூலைப் பாத காணிக்கையாகச் செலுத்தி இருக்கின்றார். பாரதியாருக்குப் பின்பு இன்னும் வரகவிகள் தமிழ் நாட்டில் யாரும் தோன்றவில்லையா? இதுவரை தோன்றி யிருந்தால் பாரதியார் நூல்கள் இன்னும் இந்த ஸ்நிதியில் அதிக காலம் கதியில்லாம லிருக்காது என்று எண்ணு கின்றோம். எங்கு பார்த்தாலும் மேல்நாட்டின் வழியாக விளம்பரமும் வியாபாரமுமே அதிகமாகத் தோன்றுகிறதே யொழிய உண்மையான விழிப்பு இன்னும் தமிழ் நாட்டில் காணோம். எவனுக்குத் தாய்ப் பாஷையில் உண்மையான அன்பு ஏற்படவில்லையோ அவனிடமிருந்து தேச கைங்கரியம் எதிர்பார்ப்பது வீணே. ஸஹோதர ஸஹோதரிகளே! சீக்கிரம் விழியுங்கள். தாய்ப் பாஷையைக் கவனியுங் கள். அதன் முன்னேற்றத்திற்கு வேண்டிய வழியைத் தேடுங்கள்.

செந்தமிழ்த்தேவியே! பாரதியார் எதிர் பார்த்த வரகவிகளும் பிரபுக்களும் தோன்றி யிருந்தால் அவர்களுக்கு மெய்ஞ்ஞானம் புகட்டி அவர்கள் கடமையைக் கற்பி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்னும் அவர்கள் தோன்றி யிராவிடில் கால தாமதமின்றித் தோற்றுவிப்பாயாக.

நூலின் முன்னுரையாக அமைந்த இப் பகுதியில், பாரதி பிரசுராலயத்தார் தங்கள் உள்ளக் குமுறலை — இல்லை — எதிர்பார்ப்புகளைத் தெரிவித்துள்ளனர் என்பதை நாம் மறத்தற்கு இல்லை; மறுதலிப்பதற்கும் இல்லை.

மேல்நாட்டு நூல்களுக்கு இருந்த வரவேற்புத் தமிழ் நாட்டுத் தமிழ் நூல்களுக்கு ஏற்படாத நிலையிலும், உண்மையான விழிப்பு தமிழகத்தில் காணாத நிலையிலும், பாரதி பிரசுராலயத்தார் தளர்ச்சி கொள்ளாமல் 1924-25 ஆகிய இக் காலப் பகுதியில் பகவத் கீதை முன்னுரை, பகவத் கீதை மூலமும் — உரையும், சுதேசகீத சங்கிரஹம் ஆகிய இம் மூன்று நூல்களைப் பதிப்பித்தனர். சுதேச கீத சங்கிரஹம் என்பது “சுதேச கீதங்கள்” என்னும் நூலில் காணப்பட்ட பாடல் தொகுதியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும்.

பாரதி தாம் எந்தக் கோணத்திலிருந்து கீதையை ஆராய்கிறார் என்பதைப் பகவத் கீதை முன்னுரை நூல் புலப்படுத்துகின்றது. பகவத் கீதைக்குப் பாரதி அணிவித்த முத்தாரமே இம் முன்னுரை நூலாகும்.

பூமண்டலத்தார் அனைவருக்கும் பொதுமையாகவே விடுதலைக்கு உரிய வழிகளை உணர்த்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டுமென்று கருதி எழுதப்பட்டதே கீதை என்று நூலுக்கான முன்னுரையாகப் பாரதி தரும் விளக்கம் படித்து மகிழத் தக்கது.

கீதையின் மூலத்தி லுள்ள கருத்து களைத்தமிழில் வடித் துக் கொடுக்க வேண் டும் என்ற பேராவ லின் அடிப்படையில் எழுந்த நூல்தான் பகவத் கீதை உரை என்பதாகும். பாரதி கீதையை மதியால் மட்டும் அறியாது இதயத்தாலே அறிந் தவர் என்பதை உரை உணர்த்துகின்றது.

1928இல் இந் நூல் கையடக்கப் பதிப்பாக வெளிவந்தபோது காந்தியடிகள்,

"ஸ்ரீமத் பகவத் கீதையின் இத் தமிழ் மொழிபெயர்ப்பு எத்தகையது என உரைக்க எனக்குப் போதுமான தமிழ் ஞானமில்லை. ஆயினும் ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும் ஸ்ரீமத் பகவத் கீதையைப் பாராயணம் பண்ணாது ஒரு நாளாயினும் கடத்தல் கூடாது. இத்தகையோர்க்கு இம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழிபெயர்ப்புடன் கூடிய கீதை பெரிதும் பயன்படும்"

என்று அணிந்துரை யொன்று அளித்தார்.

1924ஆம் ஆண்டு பாரதி பிரசுராலயத்தார் தம்முடைய விண்ணப்பத்தில் குறிப்பிட் டிருந்ததற்கேற்ப, மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் பிரசுரிக்கப் பட்டதே "சுதேச கீத சங்கிரஹம்" என்னும் நூல் ஆகும்.



சுதேச கீத ஸங்கிரஹம்

சி. சுப்பிரமணிய பாரதி.

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவானிலும் நனி சிறந்தனவே.

பாரதி பிரசுராலயம், திருவல்லிக்கேணி

மலிவு விலையில் வெளியான இந்த நூலின் கண்ணும் திரு. எஸ். சீனிவாச அய்யங்கார் அவர்களின் தமிழ் முன்னுரை இடம் பெற்றிருந்தது. மொத்தம் முப்பத்திரண்டு பாடல்கள் பதிப்பிக்கப் பெற்றிருந்தன. அவற்றின் விவரம் வருமாறு :

1. வந்தே மாதரம்
2. வந்தே மாதரம்
3. பாரத நாடு
4. நாட்டு வணக்கம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. புது வருஷம்
6. பாரத தேசம்
7. செந்தமிழ் நாடு
8. எங்கள் நாடு
9. எங்கள் தாய்
10. மாதாவின் துவஜம்
11. பாரத மாதா திருப்பள்ளி யெழுச்சி
12. சுதந்திரப் பெருமை
13. சுதந்திரப் பள்ளு
14. ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்
15. பாரத ஸமுதாயம்
16. வேண்டும்
17. மாயையைப் பழித்தல்
18. அச்சமில்லை
19. ஜீவன் முக்தி
20. ஜய பேரிகை
21. பகைவனுக் கருள்வாய்
22. மனமே
23. விடுதலை
24. வாழ்க திலகன் நாமம்
25. பீஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்
26. பாப்பா பாட்டு
27. கண்ணன் துதி
28. ஆறு துணை
29. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை
30. நிகழ்கின்ற ஹிந்துஸ்தானமும் வருகின்ற ஹிந்துஸ்தானமும்
31. மறவன் பாட்டு
32. மனத்திற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்குறித்த நூலை வெளியிட்டபோது மாணவர்களுக்கு இனாமாக வசதி படைத்தவர்கள் வாங்கி அளிக்கலாம் என்றும் பாரதி பிரசுராலயத்தார் தம்முடைய கருத்தை வெளியிட்டிருந்தனர்.

*1925-26*இல் சந்திரிகையின் கதை என்னும் நவீனகம் வெளியிடப்பட்டது.

அபலைப் பெண்ணொருத்தியின் சோகக் கதையைப் பாரதி இந் நூலில் சித்திரித்துள்ளார்.

பெண் உரிமையையும், விதவைத் திருமணத்தையும், கலப்பு மணத்தையும் வலியுறுத்தப் பாரதி புனைந்த நவீனகம் இந்தச் சந்திரிகையின் கதை ஆகும்.

உள்ளத்தை நெகிழச் செய்யும் இந்தக் கதையை எழுதி முடிக்கு முன்பாகவே பாரதி காலமாகி விட்டார். அதனால் கதை முற்றுப் பெறாத நிலையிலே நூலாக்கம் பெற்றது.

பாரதி பிரசுராலயத்தார் நூலுக்கென முன்னுரை என்று தனிப்பட ஏதும் எழுதாவிடினும், கதை முற்றுப் பெறாத நிலையில் வெளியிட நேர்ந்ததன் காரணத்தைப் பின் குறிப்பாகக் குறித்துள்ளனர். அப் பகுதி வருமாறு :

"ஆசிரியர் இக் கதையைப் பூர்த்தி செய்வதற்குள் காலஞ்சென்று விட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதுவரை விசாலாக்ஷி அம்மாளுடைய சரித்திரம் விரித்துக் கூறப்பட்டது. இரண்டாவது பாகத்திலேதான் சந்திரிகையின் வரலாற்றைச் சொல்வதாக உத்தேசித்திருந்தார். சுமார் பத்துப் பக்கங்கள் மாத்திரமே இரண்டாம் பாகத்தில் எழுதப்பட்டிருந்தன. ஸோமநாதய்யரும் முத்தம்மாளும் ஸமுத்ரக் கரைக்குப் போதல், ஸமுத்ர வர்ணனை, விஸ்வநாத சர்மாவுக்கு பைத்தியம் தெளிதல், சர்மா விசாலாக்ஷி சந்திரிகை முதலியவருடன் வசித்துக் கொண்டிருத்தல் ஆகிய இவையே மேற்படி பத்துப் பக்கங்களின் கதை. மேற்படி பக்கங்கள் சுதேச மித்திரன் பிராஞ்சு பிரஸ் மானேஜர் அவர்களிடம் கொடுத்திருப்பதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. அங்கு பல தடவை விசாரித்தும் கிடைப்பதற் கிடமில்லாமற் போய்விட்டபடியால் "சந்திரிகையின் கதை"யை இப்படியே நிறுத்த வேண்டியதாயிற்று".

ஆக, முற்றுப்பெறாத நிலையில் "சந்திரிகையின் கதை" நூல் அச்சிடப்பட்டது.

1928ஆம் ஆண்டிலே நாடு, மொழி, இலக்கியம், சமயம், விஞ்ஞானம் ஆகிய பல பொருள்கள் பற்றிக் கூறும் தராசு என்னும் நூலையும், கதைக்குள்ளே கதையைச் சொல்லி நீதி புகட்டும் நீதிக் கதையான நவதந்திரக் கதைகள் என்னும் நூலையும், வேத சாஸ்திரங்களின் உட்பொருளை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எடுத்து இயம்பும் வேத ரிஷிகளின் கவிதை என்னும் நூலையும், பதஞ்சலியோக சூத்திரங்களுக்குப் பாரதி செய்தளித்த மொழிபெயர்ப்பான பதஞ்சலி யோக ஸூத்ரம் என்னும் நூலையும் பாரதி பிரசுராலயம் வெளியிட்டது.

1928இல் வெளிப்பட்ட நான்கு நூல்களில் வேத ரிஷிகளின் கவிதை, பதஞ்சலி யோக ஸூத்ரம் என்னும் இரு நூல்களுக்கு மட்டுமே பாரதி பிரசுராலயத்தார் முன்னுரைகளை எழுதி யுள்ளனர். எனவே, அவை மட்டுமே இங்குக் கொடுக்கப் பட்டுள்ளன.



முதலில் 'வேத ரிஷிகளின் கவிதை' என்கிற நூலில் காணப்படும் முகவுரையைக் காண்போம். அம் முன்னுரை வருமாறு:

ஸ்ரீ பாரதியார் பத்திரிகை வாயிலாக எழுதிய வியாஸங்கள் இங்கு தொகுக்கப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டுள்ளன. வேத ரிஷிகளின் கவிதையை விளக்குவனவான சில ஸூக்தங்களை மொழி பெயர்த்து அவற்றிற்கு முன்னுரைகளும் விளக்கங்களும் எழுதி யுள்ளார். வேத ஸூக்தங்களின் உள்ளுறை பொருளாக ஸ்ரீ பாரதியார் கொண்ட கருத்துக்களை இவை நன்கு விளக்குவன.

இரத்தினச் சுருக்கமான முன்னுரையைத் தொடர்ந்து பொருளடக்கம் காணப்படுகின்றது.

நூலின் உள்ளே இடம்பெற்ற பொருளடக்கப் பக்கத்தில் காணப்படும் கட்டுரைகளின் விவரத்தை இனிக் காண்போம்:

1. முகவுரை

2. இந்திரன்
   முன்னுரை
   இந்திரனை ஹிரண்யஸ்தூபர் பாடியது
   இந்திரனை மதுச்சந்தர் பாடியது

3. தீ (அக்கி தேவன்)
   முன்னுரை
   தீயைப் பாடிய பாடல்கள்
   தீயை மதுச்சந்தர் பாடியது
   விளக்கம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. மித்திரன்
   மித்திரனை விசுவாமித்ரர் பாடியது
   விளக்கம்

5. உயிர் (வாயு தேவன்)
   மதுச்சந்தர் பாடியது: உயிர்
   உயிரும் அறிவுச் சுடரும்
   அன்பும், விரிவும் (மித்திர வருணர்)

6. அசுவிநௌ தேவர்
   முன்னுரை
   அசுவிநௌ தேவரையும் இந்திரனையும் வானவர் கூட்டத்தையும் ஸரஸ்வதி தேவியையும் மதுச்சந்தர் பாடியது

7. இந்திரன்
   மதுச்சந்தர் பாடியது
   விளக்கம்

8. இந்திரனும் மருத்துக்களும்
   இவர்களை மதுச்சந்தர் பாடியது
   விளக்கம்.

9. அதிதி

10. வாக்கு
   ஸரஸ்வதி பூஜை — உண்மை வழி
   தேவவாக்கு அவதாரம்: ஸரஸ்வதி
   ஸரஸ்வதியும் இலக்கியமும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11. மருத்து (புயற் காற்று)
    முகவுரை
    மருத்தைக் கண்வர் பாடியது
    விளக்கம்
    மருத்துக்களை கோதமர் பாடியது
    விளக்கம்

12. முடிவுரை

அடுத்து 'பதஞ்சலி யோக ஸூத்ரம்' என்னும் நூலுக்கான முகவுரையில்,

> பதஞ்சலி யோக ஸூத்ரங்களின் முதற் பாகம் ஸமாதி பாதம்; அது 51 ஸூத்ரங்கள் கொண்டது. அவற்றுள் 50 ஸூத்ரங்களுக்கு மட்டுமே பாரதியாரின் மொழிபெயர்ப்பும் வியாக்யானமும் உள்ளன. பாரதியாரின் வியாக்யானம் முன்புள்ள பழைய உரைகளையும், ஸ்வாமி விவேகானந்தர் எழுதிய ஆங்கில உரையையும், மதுரை நாராணய்யர் எழுதிய ஆங்கில உரையையும் எடுத்துக்காட்டுகிறது. ஆயினும் ஸூத்ரங்களுக்குப் பாரதியார் கொண்ட கருத்துக்களையும் நன்கு விளக்குவதால் இந்த வியாக்யானம் தனிச் சிறப்பு வாய்ந்த தாகின்றது

என்று பாரதி பிரசுராலயத்தார் குறித்துள்ளனர்.

வேத ஞானத்திலே பாரதிக்கு இருந்த பெருமதிப்பை மேற்குறித்த இரு நூல்களும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியின் பாக்களும், வசனங்களும் எந்த அளவுக்கு முந்தையர்களின் கருத்துகளிலே தோய்ந்து படைக்கப்பட்டன என்பதைத் தெளிவாகப் புலப்படுத்த மேற்குறித்த இரு நூல்களும் நமக்குத் துணை செய்கின்றன.

இதுதவிர, சமஸ்கிருதத்தில் பாரதிக்கு இருந்த ஆழ்ந்த பயிற்சியின் முதிர்ச்சியைக் காட்டுவன வாகவும் அந் நூல்கள் அமைந்துள்ளன எனக் கொள்ளலாம்.

இவ்வாறாக, புதிய நூல்களுடன் முன்பு வெளிவந்த நூல்களின் மறு பதிப்புகளையும் அச்சிட்டு விற்பனை செய்து கொண்டிருந்த பாரதி பிரசுராலயத்திற்கு 1928 ஆகஸ்டு 7ஆம் நாளன்று எதிர்பாராத வகையில் மாபெரிய சோதனை ஒன்று ஏற்பட்டது. 1924ஆம் ஆண்டு முதலே எதிர்ப் பட்ட இன்னல்களைத் தாங்கிக்கொண்டு பணியாற்றி வந்த பாரதி பிரசுராலயத்திற்கு அரசுத் தரப்பில் தொந்தரவு தரப்பட்டது.

1922இல் பதிப்பிக்கப் பெற்ற — பாரதி ஆச்ரமத்தினால் வெளியிடப் பெற்ற — சுதேச கீதங்கள் — இரு பகுதிகளும் பர்மா மாகாண எல்லைக்குள் விற்பனை செய்யக் கூடாதவகையில் பர்மா கவர்னரால் தடை உத்திரவு பிறப்பிக்கப் பட்டது. இது தவிர அந் நூல்களில் அரசு நிந்தனைக் கருத்துகள் இருப்பதாகச் சொல்லி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூல்களின் பிரதிகளையும் பறிமுதல் செய்வதற்கும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

அப்போது, பர்மா இந்தியாவில் ஒரு மாகாண மாக இருந்த காரணத்தால், பர்மிய அரசின் உத்திரவைச் சென்னை மாகாண அரசும் தன்னுடைய கெசட்டில் 1928 செப்டெம்பர் 11ஆம் தேதி வெளியிட்டது. இதனால், சென்னை இரகசியப் போலீசார் பிரதம மாகாண மாஜிஸ்ரேட்டிடம் உத்திரவு பெற்று, புத்தகங்கள் விற்பனை செய்து வந்த கடைகள், இருப்பு வைத்துக் கொண்டிருந்த இடங்கள் — ஆகியன போன்ற பிற இடங்களைச் சோதனை யிட்டு, பாரதி நூல் பிரதிகளைக் கைப்பற்றிச் சென்றனர். இந்தப் பறிமுதலை எதிர்த்து வழக்கு மன்றத்தில் நீதி கோரி விண்ணப்பமும் தாக்கல் செய்யப் பட்டது.

பாரதி பாடல் நூல்கள் பறிமுதல் செய்த போது, தீரர் சத்தியமூர்த்தி அவர்கள் சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்தார். செய்தியை அறிந்த அவர் மனம் பதைத்து, 1928ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் தேதி சட்டப் பேரவையில் ஓர் ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டு வந்தார். ஒத்திவைப்புப் பிரேரணை மீது விவாதம் நடத்தப் பேரவைத் தலைவரும் ஒப்புதல் அளித்தார். அதன்பேரில் 9.10.1928 இல் விவாதம் நடை பெற்றது. அது சமயம் சத்தியமூர்த்தி அவர்கள்

பா.—18

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உணர்ச்சி மிக்க சொற்பொழிவை ஆற்றி, விவாதத்தைத் தொடங்கி வைத்தார். பறிமுதல் செய்யப்பட்ட பாடல் நூல்களினின்று சில பாடல்களைப் பாடிக் காட்டி, அரசாங்கம் தன்னுடைய உத்திரவை ரத்துச் செய்ய வேண்டும் என்று குரல் கொடுத்தார்.

சத்தியமூர்த்தி அவர்களின் தீர்மானத்திற்கு ஆதரவாக, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, திவான்பகதூர் பி. கேசவபிள்ளை, டி.எம். நாராயணசாமி பிள்ளை, என். சிவராஜ், வி. ஐ. முனுசாமி பிள்ளை, டானியல் தாமஸ், சாமி வெங்கடாசலம் செட்டி, ஹரிஸர்வோத்தம ராவ், முத்துரங்க முதலியார், டி.சி. சீனிவாச ஐயங்கார், டி.கெ. சிதம்பரநாத முதலியார், ராம்நாத் கோயங்கா போன்ற அறிஞர் பெருமக்களெல்லாம் பேசினர். தீர்மானம் ஓட்டுக்கு (வாக்குக்கு)விடப்பட்டு வெற்றியும் கண்டது.

இதனிடையில், வழக்கு மன்றத்தில் தாக்கல் செய்திருந்த அப்பீலும் விசாரணைக்கு வந்தது. இறுதியில் பாரதி பாடல்களில் அரசு நிந்தனைக் கருத்துகள் ஏதுமில்லை என்று தீர்ப்பளித்து, பறிமுதல் செய்யப்பட்ட நூல்பிரதிகளை உரியவர்களிடம் சேர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்திரவிட்டது. இதனால், அரசு பறிமுதல் செய்த பிரதிகளைத் திருப்பித்தர நேர்ந்தது. திரும்பப் பெற்ற பிரதிகளில் "அரசு பறிமுதல் செய்து,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரும்பப் பெற்ற பிரதி" என்று ரப்பர் ஸ்டாம்ப் இட்டுப் பாரதி பிரசுராலயம் விற்பனை செய்தது.

1929ஆம் ஆண்டிலே விநாயகர் நான்மணி மாலை, தேசீய கீதங்கள் ஆகிய இரு நூல்கள் பதிப்பிக்கப்பெற்றன.

பரம்பொருளைக் கணபதியாகத் தொழும் முறையைத் தழுவியது, விநாயகர் நான்மணி மாலை. இந் நூலில் உள்ள பாடல்கள் அனைத்தும் புதுச்சேரியின்கண் எழுந்தருளி யுள்ள மணக்குளப் பிள்ளையாரைக் குறித்துப் பாடப்பட்டன வாகும்.

இந் நூலுக்கெனப் பாரதி பிரசுராலயத்தார் எழுதிய முகவுரையில்,

"இந் நூல் புதுவை மணக்குளப் பிள்ளையாரை உத்தேசித்துச் செய்திருப் பினும் ஷண்மதங்களுக்குள் காணாபத்திய (அதாவது பரம்பொருளைக் கணபதியாகத் தொழும்) முறையைத் தழுவி யிருக்கிறது. இவர் புனைந்துள்ள மற்ற நூல்களிற் காணப் படும் தெளிவுறக் கூறுதல், பக்தி பயக்குதல் என்ற லக்ஷணங்கள் இதிலும் விசேஷமாகக் காணலாம். ஆதலால், இந் நூலின் சிறப்பை இங்கு எடுத்தெழுத வேண்டியது அவசிய மில்லை. ஆனால் விநாயகக் கடவுள் மீது இயற்றி யுள்ள மற்ற நூல்களுக்கும் பாரதியார் கையாளும் திறமைக்கும் உள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வித்தியாசங்களை இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் நன்குணர்வார்''

என்று குறிப்பிட்டெழுதி யுள்ளனர்.

இந் நூலை மறு அச்சு வெளியிட்ட நிலையில்,

"இந் நூல், பாரதியாரின் கையெழுத்துப் பிரதி அபூர்ணமா யிருந்த இடங்களில் ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை யவர்கள், ஸ்ரீ சுத்தாநந்த பாரதியார் அவர்கள் முதலியவர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப் பட்டது. கையெழுத்துப் பிரதியிற் காணாதன நகவளைவு (பிராக்கெட்)களுக்குள் தரப் பட்டுள்ளன"

என்ற குறிப்பையும் தந்துள்ளனர்.

முன்னர் பதிப்பிக்கப்பெற்ற நூல்களான ஸ்வதேச கீதங்கள், ஜன்ம பூமி, நாட்டுப் பாட்டு, மாதா மணி வாசகம் ஆகிய இன்னபிற நூல்களில் இடம்பெற்றிருந்த பாடல்கள் தொகுக்கப்பெற்று, அவை பாரதி நூல் வரிசை—"சுதேச கீதங்கள்" என்னும் தலைப்பெயரோடு கூடிய இரு தொகுதி களில் சேர்க்கப்பட்டிருந்தன வன்றோ? அவ் விரு தொகுதிகளிலே வேறு பலவகைப் பாடல்களும் காணப்பட்டன. அவற்றினின்றும் பாரத நாட்டைப் போற்றிய பாடல்களையும், தமிழ் நாட்டைப் பற்றிய பாடல்களையும், நாட்டு விடுதலையைக் கோரிய பாடல்களையும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசத் தலைவர்கள் பற்றிய பாடல்களையும், பிறநாடுகளின் சுதந்திர எழுச்சியை வருணித்த பாடல்களையும் தனியே பிரித்துத் "தேசிய கீதங்கள்" என்று பெயரிட்டு, தனி நூலாகக் கொணர்ந்தனர் பாரதி பிரசுராலயத்தார்.

தேசிய கீதங்களுக்கான நூல் முன்னுரை பின்வரும் முறையில் அமைந்துள்ளது:

> தமிழ்மொழிக்குப் புதிய சுவையும் தமிழுலகத்துக்குப் புதிய உணர்வும் தமிழ் மக்கட்குப் புதிய உயிருந் தந்து, 'கேட்போர் கன்னங்கள் அமுதூறுந்'* தமதின்னிசைத் தீம்பாடல்களைத் தமிழ்நாடு முழுதும் முழங்கச் செய்த புலவர் கோமான் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் தேசிய கீதங்களுக்கு முன்னுரை அவசியமே யில்லை. எனினும் தேசீய கீதங்களை மாத்திரம் பிரித்து இப் பகுதியில் அச்சிட்டிருப்பதால் இரண்டொரு வார்த்தைகள் எழுத நேர்ந்தது.
>
> தற்சமயம் தமிழகம் மட்டுமன்றி இந்தியா முழுதும் பாரதியாரின் புகழைப் பரவச் செய்யும் பாடல்கள் இவையே.

---

*அன்னங்கள் பொற்கமலத் தடத்தி னூர
அளிமுரலக் கிளிமழலை யரற்றக் கேட்போர்
கன்னங்கள் அமுதூறக் குயில்கள் பாடும்.

[பாஞ்சாலி சபதம்—117]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியாருக்குத் தேசபக்தி உயிர் நிலையாகவே இருந்த தென்பதற்கு இணையற்ற பண், இசை முதலிய லக்ஷணங்கள் பொருந்திய இப் பாக்களே சான்றாகும். இவைகளைப் பற்றிக் கூறுமிடத்து ஸ்ரீமான் எஸ்.ஸ்ரீநிவாஸ ஐயங்கார் "உள்ளங் கொள்ளை கொள்ளும் பாட்டின் மூலமாகத்தான் தேசபக்தியை உள்ளபடி உணர்த்த முடியும்" என்றும், "அதி வேகமாகப் பறக்கும் திறத்தாலும், இறகுகளின் வர்ண வனப்பினாலும் உள்ள முருக்கும் பாட்டின் இனிமையாலும் செருக்குற்ற ஒரு பறவைக்கு இவர் பாட்டை ஒப்பிடலாம்'' என்றும் எழுதுகிறார்.

ஆனால், 'கடற்கரையில், சாந்தி மயமான சாயங்கால வேளையில், உலகனைத்தையும் மோகவயப்படுத்தி நீலக் கடலையும் பாற்கடலாக்கும் நிலவொளியில், புதிதாகப் புனைந்த கீர்த்தனங்களைக் கற்பனா கர்வத்தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியன் தன்னுடைய கம்பீரமான குரலில் பாடினதைக் கேட்டவர்கள்தாம்' இவைகளின் சாரத்தை நன்கு அனுபவித்த பாக்கியத்தைப் பெற்றவராவர்.

நமது நாட்டைப் புகழ்ந்து பாடியிருக்கும் புலவர்களையும் தேசபக்தர்களையும் கணக்கிட முடியாது. என்றாலும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரான் அருள்பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே.

(தேசிய கீதங்கள்: பாடல்—8)

என்றும்,

நீலமுடி தரித்தபல மலைசேர் நாடு,
நீரதமு மெனப்பாய்ந்து நிரம்பு நாடு;
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழுங்
குளிர்காவும் சோலைகளும் குலவு நாடு;
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையும் நறுநெய்யுந் தேனும் உண்டு
பண்ணவர்போல் மக்களெலாம் பயிலும் நாடு

[பாஞ்சாலி சபதம்—116]

என்றும் கூறிய மொழிகளுக்கு இணை சொல்ல முடியுமென்று தோன்றவில்லை.

தேசபக்தி என்னும் உணர்வைக் குழந்தைப் பருவம் முதற்கொண்டே நமது நாட்டார் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனத் தமது 'பாப்பாப் பாட்'டில்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி, பாப்பா!
அமிழ்தி லினியதடி பாப்பா—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி, பாப்பா!

[பாப்பாப் பாட்டு—11]

என்று பாடிய கவிக்கு நாம் செய்யக்கூடிய கைம்மாறு யாதெனில், அவரது பாடல்களைத் தமிழ் நாட்டில் வீடுதோறும் வேதமாகக் கருதி வம்ச பரம்பரையாகப் பாடி வருவதே யாம். பாரதியாரின் பாடல்கள் என்றும் தமிழ்மக்கள் மனத்திற் குடிகொண்டு வாழ்க. வந்தே மாதரம்.

* * *

தேச பக்தியையே உயிர் நிலையாகவும், இணையற்ற பண், இசை முதலிய லக்ஷணங்கள் பொருந்தியதாகவும் அமைந்த இத் "தேசீய கீதங்கள்" நூல் தொகுதியுள் 55 பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றின் விவரமாவது:

1. வந்தே மாதரம்
2. வந்தே மாதரம்
3. நாட்டு வணக்கம்
4. ஜாதீய கீதம் (மொழிபெயர்ப்பு)
5. ஜாதீய கீதம் (புதிய மொழிபெயர்ப்பு)
6. பாரத நாடு
7. பாரத தேசம்
8. எங்கள் நாடு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9. ஜய பாரத
10. பாரத மாதா
11. பாரத மாதா திருப்பள்ளி யெழுச்சி
12. பாரத தேவியின் திருத்தசாங்கம்
13. பாரதமாதா நவரத்ந மாலை
14. மாதாவின் துவஜம்
15. எங்கள் தாய்
16. வெறிகொண்ட தாய்
17. நடிப்புச் சுதேசிகள் (கிளிக் கண்ணிகள்)
18. தொண்டு செய்யும் அடிமை
19. மேதா திலகருக்குச் சொல்வது
20. நிதானக் கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல்
21. ஆங்கிலேயன் ஒரு தேச பக்தனுக்குக் கூறுவது
22. தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி
23. பாரத தேவியின் அடிமை
24. லாஜ்பத்ராய் துதி
25. லாஜ்பத்ராய் பிரலாபம்
26. தாதாபாய் நவுரோஜி
27. பூபேந்திர விஜயம்
28. வாழ்க திலகன் நாமம்
29. லோகமான்ய பால கங்காதர திலகர்
30. மஹாத்மா காந்தி பஞ்சகம்
31. அபேதாநந்த ஸ்வாமிகள் மீது ஸ்தோத்திரக் கவிகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

32. சுதந்திரப் பெருமை
33. சுதந்திர தாகம்
34. சுதந்திர தேவியின் துதி
35. சுதந்திரப் பள்ளு
36. ஸ்ரீ கிருஷ்ணன்மீது ஸ்துதி
37. ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்
38. விடுதலை
39. பாரத ஸமுதாயம்
40. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை
41. நிகழ்கின்ற ஹிந்துஸ்தானமும், வருகின்ற ஹிந்துஸ்தானமும்
42. பீஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்
43. மாஜினியின் பிரதிக்கிளை
44. 'பெல்ஜியம்' நாட்டிற்கு வாழ்த்து
45. புதிய ருஷியா
46. பெண்கள் விடுதலைக் கும்மி
47. புதுமைப் பெண்
48. பெண்மை
49. நாட்டுக் கல்வி
50. தொழில்
51. தமிழ்த் தாய்
52. தமிழ்
53. செந்தமிழ் நாடு
54. தமிழ்மொழி வாழ்த்து
55. புது வருஷம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதே 1929ஆம் ஆண்டில் ஞானரதம், சந்திரிகையின் கதை, பதஞ்சலி யோக ஸூத்ரம், வேத ரிஷிகளின் கவிதை, தராசு - இவற்றைக் கொண்ட தொகுதியைப் "பாரதி நூல்கள் - வசனங்கள்" என்று தலைப்பிட்டுப் பாரதி பிரசுராலயம் வெளியிட்டதும் இங்குக் கருதத்தக்கது.

1930ஆம் ஆண்டளவில் தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், காட்சி, சித்தக் கடல் ஆகிய நூல்கள் வெளிவந்தன.

தெய்வத்தைப் பற்றிப் பாரதி பாடிய பாடல்களின் தொகுப்பே "தோத்திரப் பாடல்கள்" எனப் படுவதாகும். இத் தொகுதியில் 60 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

தோத்திரப் பாடல்கள் நூலுக்கான முன்னுரை வருமாறு :

> பக்தி மலிந்த நம் பரத கண்டத்தில் தங்கள் இஷ்ட தெய்வங்களுக்குப் பாமாலை சூட்டுவது புலவர்களின் இயற்கைக் குணமாம். பாரதியாரும் ஹிந்துக்கள் சாதாரணமாக வணங்கும் எல்லாத் தெய்வங்களைப் பற்றியும் பாடல்கள் இசைத்துள்ளார். இவற்றைப் படிக்கும் ஒவ்வொருவரும் பாரதியாரின் தீவிரமான தெய்வ பக்தியைத் தெரிந்துகொள்வதுடன், பக்தி யில்லாதவருக்கும் இவை பக்தி புகட்ட வல்லன வென்பதையும் ஒப்புக் கொள்ளுவார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முருகனை,

''அறிவாகிய கோயிலிலே
அருளாகிய தாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வா யமரர்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய்''

என்றும், கண்ணனை

பாம்புத் தலைமேலே—நடஞ்செயும்
பாதத்தினைப் புகழ்வோம்
மாம்பழ வாயினிலே—குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம்''

என்றும், வாணியை

தாமரைப் பூவினிலே—சுருதியைத்
தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே—கண்ணிலொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம்''

என்றும் புகழும் பாக்களைக் கேட்டு மனமுருகாதவர் யார்?

தெய்வங்கள் பலவற்றைக் குறித்துப் பாடியிருப்பினும் அவர் சாக்தராக இருந்ததன் காரணத்தால் பராசக்தி மீது பாடிய பாடல்கள் மிகுதியாயிருப்பதைக் காணலாம். பராசக்தியிடம் எவ்வளவு தூரம் ஈடுபட்டிருந் தாரென்பது அவர் எழுதி யிருக்கும் 'சக்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெண்பா', 'சக்திக் கூத்து', 'சக்தி திருப்புகழ்', 'போற்றி அகவல்', 'சக்தி', 'ஓம்சக்தி' என எண்ணிறந்த கீதங்களாலும், முக்கியமாகக் கீழே குறிப்பிட்ட செய்யுட்களாலும் நன்கு விளங்கும்.

யாதுமாகி நின்றாய்—காளீ
எங்கும் நீநி றைந்தாய்.

* * *

துன்னிய நீல நிறத்தள் பராசக்தி
வெண்ணிலாவே!—இங்கு
தோன்று முலகவளே யென்று கூறுவர்
வெண்ணிலாவே!

* * *

இதய மோவெனிற் காலையும் மாலையும்
எந்த நேரமும் வாணியைக் கூவுங்கால்
எதையும் வேண்டில தன்னை பராசக்தி
இன்ப மொன்றினைப் பாடுத லன்றியே

* * *

மூட்டு மன்புக் கனலொடு வாணியை
முன்னு கின்ற பொழுதி லெலாங்குரல்
காட்டி அன்னை பராசக்தி ஏழையேன்
கவிதை யாவுந் தனக்கெனக் கேட்கின்றாள்.

பாரதியாரின் மனத்திற் சதாகாலமுங் குடிகொண்டிருந்த பராசக்தியின் புகழ்பாடித் தமிழ் மக்கள் அவளது பரிபூரண கிருபையைப் பெற்று நீடூழி வாழ்க!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வத்தைப் பற்றிப் பாடிப் பரவிய இத் திரட்டில் காணப்படும் பாடல்களுக்கான விவரம் வருமாறு :

1. ஆறு துணை
2. பக்தி
3. ஸரஸ்வதி ஸ்தோத்திரம்
4. ஸரஸ்வதி தேவியின் புகழ்
5. லக்ஷ்மிதேவி — சரண் புகுதல்
6. லக்ஷ்மி பிரார்த்தனை
7. ஸ்ரீ தேவி ஸ்துதி
8. நவராத்திரிப் பாட்டு
9. நவராத்திரிப் பாட்டு
10. மூன்று காதல்
11. முருகன் பாட்டு
12. முருகன் பாட்டு
13. முருகக் கடவுள்மீது கிளித்தூது
14. வேலன் பாட்டு
15. ஆர்ய தரிசனம்
16. கண்ணன் பிறப்பு
17. கண்ணன் வரவு
18. கண்ணன் துதி
19. கண்ணம்மா - அங்க வர்ணனை
20. கண்ணம்மா
21. திருக்காதல்
22. ஸூர்ய தர்சனம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

23. ஞாயிறு — ஸூர்ய ஸ்துதி
24. வெண்ணிலா
25. ஸோமதேவன் புகழ்
26. சாகா வரம்
27. கிளிப் பாட்டு
28. சந்திரமதி பாட்டு
29. அக்நி ஸ்தோமம் (தீ)
30. அக்நி பகவான்
31. வேண்டும்
32. கோவிந்தன் பாட்டு
33. இறைவனை வேண்டுதல்
34. காளிப் பாட்டு
35 காளி ஸ்தோத்திரம்
36. ஹே காளீ
37. மஹாகாளியின் புகழ்
38. முத்துமாரி
39. தேச முத்துமாரி
40. யோக சித்தி
41. போற்றி யகவல்
42. காணி நிலம்
43. மஹாசக்தி வெண்பா
44. ஓம் சக்தி
45. கேட்பன
46. பராசக்தி
47. சக்திக் கூத்து
48. சக்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

49. வைய முழுதும்
50. சக்தி விளக்கம்
51. சக்திக்கு ஆத்ம ஸமர்ப்பணம்
52. சக்தி திருப்புகழ்
53. மஹாசக்தி பஞ்சகம்
54. மஹாசக்தி வாழ்த்து
55. சிவசக்தி புகழ்
56. மஹாசக்தி
57. மஹாசக்திக்கு விண்ணப்பம்
58. வெற்றி
59. காளிக்கு ஸமர்ப்பணம்
60. பூலோக குமாரி

இந் நூலைத் தொடர்ந்து வெளிவந்த - பாரதியின் ஆழ்ந்த வேதாந்த ஈடுபாட்டை விளக்கமுறத்-தெரிவிக்கும் பான்மையில் ஒழுங்குபடுத்தப்பட்ட பாக்களின் தொகுதியே "வேதாந்தப் பாடல்கள்" என்பதாம். இத் தொகுதியுள் 38 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

நூலுக்கான முன்னுரை பின்வருமாறு அமைந்துள்ளது :

> தாயுமானவர், பட்டினத்துப் பிள்ளை, இராமலிங்க சுவாமிகள் முதலிய ஞானிகளின் பாடல்கள் மூலமாகத் தமிழ்மக்களாகிய நாம் வேதாந்த ஸாரத்தைப் பருகி யிருப்பினும், பாரதியாரின் வேதாந்த கீதங்களையும் செய்யுட்களையும் படிக்கவேண்டியது மிகவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவசியம். ஏனெனில், வேதாந்த சாஸ்திரத்தின் பயன் சித்தத் தெளிவும், மனத்திற்கு ஆறுதலும் உண்டாவதே என்று கருதப்படுமாயின், பாரதியாரின் பாடல்களால் அப்பயனை எளிதில் அடையலாம். வேதாந்த ஆராய்ச்சி செய்பவர்கள் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்காத காரணத்தால், அந்த சாஸ்திரத்தை மிகக் கடினமானதென்று நினைக்க நேரிடுகின்றது. ஆனால், பாரதியார் அதிநுட்பமான விஷயங்களையும் யாரும் அறியும்படி எளிய நடையில் விளக்கிக் காட்டுகிறார். வேதாந்த நூல்கள் பெரும்பாலும் மனித வாழ்க்கையின் அநித்தியத்தையும் மனிதர்களுக்கு நேரிடும் பிணி, மூப்பு முதலிய கேடுகளைப் பற்றி விசேஷமாக முறையிடுவதால் நமக்கு லௌகிக விஷயங்களில் ஊக்கம் குன்றிப் போவதுடன் நம் வாழ்நாளில் வெறுப்பு ஏற்படுகிறது. ஆனால்,

"நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி யுயிர் வாழ்த லறியாமை"

என்றும்,

"எத்தனை கோடியின்பம் வைத்தாய்—எங்கள்
இறைவா, இறைவா, இறைவா"

என்றும்,

"துன்பமே யியற்கை யெனும் சொல்லை மறந்திடுவோம்;
இன்பமே வேண்டி நிற்போம் யாவுமவள் தருவாள்"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றும் பாடிய கவியைப் படிக்கும் யாருக்குத் தான் மனத் தளர்ச்சி ஏற்படும்?

பாரதியார் அத்வைதக் கொள்கையில் பூர்ண நம்பிக்கை யுள்ளவர்.

"முன்னோர்க ளெவ்வுயிருங் கடவு ளென்றார்
முடிவாக அவ்வுரையை நான் மேற்கொண்டேன்
அன்னோர்க ளுரைத்த தன்றிச் செய்கையில்லை
அத்வைத நிலைகண்டால் மரண முண்டோ?"

இக் கொள்கையைக் கைக்கொண்டவர் உலகத்துள்ள எவ் வுயிரிடத்தும் அன்பு பாராட்டுவது வியப்பன்று.

"ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்
எப்போதும் அருளை மனத்திசைத்துக் கொள்வாய்"

* * *

"உள்ளதெ லாமோ ருயிரென்று தேர்ந்தபின்
உள்ளங் குலைவதுண்டோ?—மனமே
வெள்ள மெனப்பொழி தண்ணரு ளாழ்ந்தபின்
வேதனை யுண்டோடா?"

பாரதியாரின் வேதாந்தப் பாடல்களின் பெருமையை இம்மாதிரியான ஒரு சிறு முன்னுரையில் எழுதுவது சாத்தியமன்று. ஆனால் ஒன்று மாத்திரம் உறுதியாகச் சொல்லலாம். அவர் எழுதி யிருக்கும் "சங்கு", "ஒளியும் இருளும்", "பகைவனுக் கருள்வாய்", "தெளிவு" போன்ற பாடல்களைப் படிக்கும் ஒவ்வொருவரும் ஞானிகள் கூட்டத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியார் மிகச் சிறந்தவ ரென்றும், அவர் வாக்கு தெய்வ வாக்கு என்றும் கருதுவார்கள் என்பதும் நிச்சயம்.

அருமையான முன்னுரையை யடுத்து, "வேதாந்தப் பாடல்கள்" தொகுதியில் சேர்க்கப் பட்டிருந்த கவிதைகளுக்கான விவரத்தைக் காண்போம் :

1. மாயையைப் பழித்தல்
2. அச்சமில்லை
3. சங்கு
4. அறிவே தெய்வம்
5. அழகுத் தெய்வம்
6. ஜீவன் முக்தி
7. ஜய பேரிகை
8. அல்லா
9. யேசு கிறிஸ்து
10. கற்பனை யூர்
11. நந்தலாலா
12. சொல்
13. ஸூர்ய ஸ்தோத்திரம் - ஞானபாநு
14. ஒளியும் இருளும்
15. கடமை
16. விடுதலை (1)
17. விடுதலை (2)
18. விடுதலை - சிட்டுக் குருவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

19. விடுதலை வெண்பா
20. மனப்பெண்
21. நெஞ்சொடு சொல்வது
22. மனமே
23. மனத்திற்குக் கட்டளை
24. மனத்திற்கு
25. பகைவனுக் கருள்வாய்
26. தெளிவு
27. ஆத்ம ஐயம்
28. பரசிவ வெள்ளம்
29. பொய்யோ? மெய்யோ?
30. நான்
31. கண்ணன் - என் சற்குரு
32. கண்ணன் துதி
33. கடவுள் எங்கே இருக்கிறார்?
34. குருக்கள் ஸ்துதி
35. குரு தர்சனம்
36. உபதேசம்
37. ஸர்வ மத ஸமரசம்
38. பரம்பொருள் வாழ்த்து

* * *

அடுத்து "காட்சி" என்கிற நூலில் காணப்படும் முன்னுரையாவது :

இயற்கையில் ஸதாகாலமும் நம்மைச் சூழ்ந்து நம்முடன் பழகிக்கொண்டிருக்கும் பொருள்களைப் பற்றி நாம் கவனிப்பது கூடக் கிடையாது. ஆனால், கவிகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரும்பாலும் அவைகளைப் பற்றித்தான் வர்ணிக்கிறார்கள். ஏனெனில், கவிகளின் கண்களுக்கு அவற்றில் விசேஷ குணங்கள் தென்படுகின்றன. இதுதான் கவிகளுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்யாசம். இந் நூலில் சூரியன், சந்திரன், விண்மீன், கடல், காற்று இவைகளைப் பற்றி பாரதியார் எவ்வளவு நேர்த்தியாக வர்ணிக்கிறா ரென்பதைக் கவனித்தால் இந்த உண்மை நன்றாகப் புலப்படும். இவைகளைப் புகழ்ந்து பாடாத கவிகள் இருக்க மாட்டார்கள். என்றாலும் பாரதியார் இவைகளை எவ்விதம் காண்கிறார், அவர் இவற்றிற்குக் கொடுக்கக் கூடிய உட்பொருள் - வெளிப்பொருள் என்ன, இவை மூலமாகத் தம்முடைய வேதாந்தத்தை எவ்விதம் வெளிப்படுத்துகிறா ரென்பது இந் நூலில் நன்கு விளங்குகின்றது.

உதாரணமாக ஞாயிற்றை,

ஒளி தருவது யாது? தீராத இளமை யுடையது யாது?
வெய்யவன் யாவன்? இன்பம் எவனுடையது?
மழை எவன் தருகிறான்? கண் எவனுடையது?
உயிர் எவன் தருகிறான்?
புகழ் எவன் தருகிறான்? புகழ் எவனுக்குரியது?
அறிவு எதுபோல் சுடரும்?
அறிவுத் தெய்வத்தின் கோயில் எது?
ஞாயிறு. அது நன்று

என்றும், வெண்ணிலாவை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காதலர் நெஞ்சை வெதுப்புவை நீயென்பர்
வெண்ணிலாவே - நினைக்
காதல் செய்வார் நெஞ்சிற் கின்னமு தாகுவை
வெண்ணிலாவே
சீத மணிநெடு வானக் குளத்திடை
வெண்ணிலாவே - நீ
தேசு மிகுந்த வெண்டாமரை போன்றனை
வெண்ணிலாவே
மோத வருங் கருமேகத் திரளினை
வெண்ணிலாவே - நீ
முத்தி னொளிதந் தழகுறச் செய்குவை
வெண்ணிலாவே
தீது புரிந்திட வந்திடும் தீயர்க்கும்
வெண்ணிலாவே _ நலஞ்
செய்தொளி நல்குவர் மேலவ ராமன்றோ
வெண்ணிலாவே

என்றும் வர்ணிக்கிறார்.

இவ்வளவு அழகாகப் பாடி யிருக்குங் கவிகளை ஒவ்வொருவரும் தாமே படித்து அனுபவிக்க வேண்டியதே யொழிய அவற்றின் பெருமையை எவ்வளவு கூறியும் பயனில்லை, எளிதில் எடுத்துரைக்கவும் முடியாது.

* * *

பாட்டும் வசனமும் கலந்தவோர் அற்புத நடைச் சித்திரமான 'காட்சி' நூலின் பொருளடக்கம் வருமாறு :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. நிலாவும் வான்மீனும் காற்றும்
2. வெண்ணிலா
3. காட்சி

   முதற் கிளை - இன்பம்

   இரண்டாம் கிளை - புகழ்
4. ஞாயிறு
5. சக்தி
6. காற்று
7. கடல்

ஜகத் சித்திரம், விடுதலை, சித்தக் கடல்—ஆகிய பொருள்கள் கொண்ட தொகுதிக்குச் சித்தக் கடல் எனப் பெயரிடப்பெற்றுப் பதிப்பிக்கப் பட்டது.

இதே 1930ஆம் ஆண்டில் பாரதி நூல்கள்—காவியங்கள் என்ற தலைப்புப் பெயருடன் ஏற்கெனவே பதிப்பித்துச் சிறு சிறு நூல்களாக வெளியிட்டவற்றை ஒரே தொகுதியுள் இணைத்து வெளியிடப்பட்டது. இப் பெருந் தொகுதியுள் தேசீய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்திசூடி, பாப்பா பாட்டு, பாரதி அறுபத்தாறு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் — ஆகியன இடம்பெற்று இருந்தன.

பாரதியின் படைப்புச் செல்வங்கள் ஒவ்வொன்றும் வகைப்படுத்தப்பெற்று,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதிப்பிக்கப்பெற்ற நிலையில், பாரதி படைப்புகளின் முழு உரிமைகளையும் பாரதி பிரசுராலயத்தார் பாரதி குடும்பத்தாரிடமிருந்து 1931 ஆம் ஆண்டில் பெற்றனர். பாரதி குடும்பத்தவர்களும் தங்கள் குடும்ப நன்மைக்கும், மேம்பாட்டுக்கும் உகந்த முறை என்பதைக் கருத்தில்கொண்டு மொத்தத் தொகையாக ரூபாய் நாலாயிரம் பெறச் சம்மதம் தெரிவித்தனர். ஏற்கெனவே, சகுந்தலாவின் திருமணத்திற்காகப் பெற்றுக் கொண்ட ரூபாய் இரண்டாயிரம் போக, எஞ்சிய தொகையான ரூபாய் இரண்டாயிரமும் தவணை முறையில் தரப்பெறும் எனவும் ஒப்புதலளித்தனர், பிரசுராலயத்தின் கூட்டாளிகள்.

பாரதி பிரசுராலயத்தின் கூட்டாளிகள் தங்கள் தொழில்முறை ஒப்பந்தங்களைப் பத்திரப் பதிவும் செய்து கொண்டனர். பத்திரப் பதிவு சென்னையில் 1931ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் நாளன்று செய்யப்பட்டது.

பிரசுரத் தொழில் சென்னைத் திருவல்லிக்கேணியிலுள்ள நெடுஞ்சாலை 567 எண்ணுள்ள இடத்தில் நடத்தப்படும் என்றும், இந்தக் கூட்டுத்தொழில் 1-7-1931இலிருந்து குறைந்தது நான்கு வருடங்களுக்கு நடத்தப் பெற வேண்டும் என்றும், தொழில் இந்தக் காலக்கெடுவுக்கு மேலும் நடந்து வந்தால், தொழிலை ஒழுங்குபடுத்த, தற்போதுள்ள விதிமுறைகளே தொடர்ந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்துவரும் என்றும் ஒப்பந்தப் பத்திரத்தில் கண்டிருந்தது.

இந்த ஒப்பந்தத்தையடுத்து இதே 1931ஆம் ஆண்டில், பாரதி புதுச்சேரியில் இருந்த சமயத்தில் 'சுதேச மித்திர'னுக்குக் காளிதாஸன், சக்திதாஸன் என்னும் புனைபெயர்களால் எழுதி யனுப்பிப் பிரசுரிக்கப்பட்டிருந்த கதைகளில் ஒருசிலவற்றைத் திரட்டி வெளியிடப்பட்டதே "கதைக் கொத்து" என்பதாகும்.

அந்த நூலுக்கான முன்னுரையில்,

"பாரதியார் புதுவையிலிருந்த காலத்து முக்கியமாக 'சுதேச மித்திரன்' பத்திரிகையில் காளிதாஸன் அல்லது சக்திதாஸன் என்ற பெயரால் வெளியிட்ட கதைகளை ஒன்று சேர்த்து இப் புத்தகமாகப் பதிக்கப்பட்டிருக்கிறது.

சாதாரணமாகச் சிறு பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்கும் கட்டுக்கதைகளென்றாவது, தனது கதை சொல்லுந் திறன், பிரதிபா சக்தி முதலியவைகளுக்கு வாயிலாகவாவது ஆசிரியர் இவைகளை எழுதியிருக்கிறாரென்று கருதக்கூடாது. பெரும்பாலும் இக் கதைகளில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் புதுவையில் நிகழ்ந்திருப்பதாலும், அநேகமாக ஒவ்வொரு கதையிலும் கவியின் சம்பந்தமிருப்பதாலும், பாரதியார் தனது சொந்த அனுபவங்கள், அபிப்பிராயங்கள், கனவுகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதலியவற்றை இக் கதைகள் மூலமாக நன்கு விளக்குவதை எளிதில் தெரிந்து கொள்ளலாம். நமது மடமை, மூடபக்தி, ஸ்திரீகளின் நிலைமை, ஜாதிச் சண்டைகள், சமயச் சண்டைகள்—இன்னுமிவை போன்ற சமுதாய வாழ்வின் குறைகளை நாம் அறவே ஒழிக்கு முறையை இவைகளில் எடுத்துரைக்கிறார்.

உதாரணமாக 'மிளகாய்ப் பழச்சாமியார்' என்ற கதையில் பெண் விடுதலையைப் பற்றியும், 'புதிய கோணங்கி', 'கலியுக கடோற்கசன்', 'பிங்கள வருஷம்' என்ற கதைகளில் மூடபக்தி, அர்த்தமில்லாத நம்பிக்கைகள், பழக்கங்கள் முதலியவற்றையும், 'வைசாக்தன்', 'செய்கை', 'சும்மா', 'வண்ணான் தொழில்' இவைகளில் தன் வேதாந்தத்தையும் தெளிவாகக் கூறுவதைக் காணலாம்.

இவ்வாறு விசேஷ நயம் பொருந்திய இக் கதைகளில் மனோபாவங்கள், கதை சொல்லும் புதிய முறை முதலியவை மலிந்து கிடப்பதையும் இந் நூலை வாசிக்கும் ஒவ்வொருவரும் எளிதில் அறிவார்கள்"

என்று பாரதி பிரசுராலயத்தார் குறிப்பிட்டு உள்ளனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளடக்கப் பகுதியில் 28 கதைகள் காணப்படுகின்றன. அவற்றின் விவரமாவது:

1. வைசாக்தன் என்ற பண்டாரத்தின் கதை
2. சிறுகதை
3. சில வேடிக்கைக் கதைகள்
   (1) ஆனைக்கால் உதை
   (2) கவிராயனும் கொல்லனும்
   (3) அமெரிக்காவுக்குப் போன சீன ராஜகுமாரன்
   (4) சாஸ்திரியார் மகன்
   (5) ஓர் வியாதிக்கு ஓர் புதிய காரணம்
4. அந்தரடிச்சான் ஸாஹிப் கதை
5. கிளிக் கதை
6. இருள்
7. குதிரைக் கொம்பு
8. அர்ஜுன சந்தேகம்
9. தேவ விகடம்
10. அபயம்
11. மழை
12. பிங்கள வருஷம்
13. காக்காய்ப் பார்லிமெண்ட்
14. பிழைத்தோம்
15. புதிய கோணங்கி
16. கடல்
17. கடற்கரை யாண்டி
18. செய்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

19. சும்மா - முதற் பாகம்
இரண்டாம் பாகம்

20. காற்று - முதற் பாகம்
இரண்டாம் பாகம்

21. வண்ணான் தொழில்

22. கலியுக கடோற்கசன்

23. கத்திச் சண்டை

24. வளர்பிறை

25. குழந்தைக் கதை

26. உஜ்ஜயினீ

27. மிளகாய்ப் பழச் சாமியார்

28. பேய்க்கூட்டம் - முதற் பாகம்
இரண்டாம் பாகம்

சமுதாய வாழ்வின் பல்வேறு பிரச்சினைகளைக் கொண்ட "கதைக் கொத்து" என்னும் நூல் பிரசுரமான அதே வேளையில், மாணவர்களுக்குப் பயன்படும் முறையில் "சுதேச கீதத் திரட்டு" என்னும் சிறு நூலும் வெளிவந்தது. அதில் பாரதியின் வாழ்க்கைக் குறிப்பு இடம் பெற்றிருந்தது.

இச் சிறு நூலில் பதினொரு பாடல்கள் தரப்பெற்றுமிருந்தன. அவற்றின் விவரம் வருமாறு:

1. வந்தே மாதரம்

2. சுதந்திரப் பெருமை

3. தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும்
மறுமொழி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. மாதாவின் துவஜம்
5. வாழ்க திலகன் நாமம்
6. ஸ்ரீகிருஷ்ண ஸ்தோத்திரம்
7. விடுதலை
8. செந்தமிழ் நாடு
9. அச்சமில்லை
10. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை
11. புது வருஷம்

*　　*　　*

முதல் பதிப்புகளுக்கு மறு அச்சுகள் வெளியான நிலையில், 1935ஆம் ஆண்டில் பாரதி பெரும் பாலும் சுதேச மித்திரன் பத்திரிகையில் எழுதி யிருந்த கட்டுரைகளைச் சேகரித்து, அவற்றை முறையே தத்துவம், மாதர், கலைகள், சமூகம் என்கிற நான்கு பகுதிகளாகப் பிரித்து வெளியீடு செய்தனர், பாரதி பிரசுராலயத்தார். நூல்கள் நான்கு பகுதிகளாக வெளிப்பட்டிருந்தாலும், நூல்களுக்கான முகவுரை மட்டும் கீழ்க்காணும் முறையில் அமைந்திருந்தது:

"ஸ்ரீ பாரதியார் 1910-ம் வருஷத்தி லிருந்து 1920-ம் வருஷம் வரை தமிழ்ப் பத்திரிகைகளில், பெரும்பாலும் "சுதேச மித்திர"னில் வெளியிட்டு வந்த கட்டுரை களைச் சேகரித்து முறையே தத்துவம், மாதர், கலைகள், சமூகம் என்ற நான்கு பகுதிகளாகப் பிரித்து வெளியிட முன்வந்திருக்கிறோம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியாரே காப்பாற்றி வைத்திருந்த செல்லரித்த பத்திரிகைத் துண்டுகளிலிருந்தும், கைப்பிரதிகளிலிருந்தும் பெயர்த்து எழுதி, ஒழுங்கிடவேண்டியிருந்ததாலும், பிற சாதனக் குறைவினாலும், இதுகாறும் இவை வெளிவராது தடைப்பட்டன.

ஏற்கனவே, ஸ்ரீ பாரதியார், 'தேசோபநிஷத்' தெனக் கருதப்படும் தமது வீறுடைப் பாடல்களால் தமிழகத்தில் புதுயுகத்தைப் பிறப்பித்திருக்கிறார். 'அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை' என்ற தமது கொள்கைக் கிணங்க, கவிதையில் மட்டுமன்றி வசன நடையிலும் ஒளியும் தெளிவும் நிலவும்படி செய்து, தற்போது பரவி வரும் எளிய தமிழ் வசன நடைக்கு வழிகாட்டியவராகக் கருதப்படுகிறார். தமிழர் முன்னேற்றத்திற்காகத் தன் வாணாளைச் செலவிட்ட நமது வரகவியின் பேரறிவு, அபூர்வ கருத்துக்கள், விசேஷ அனுபவங்கள் முதலியவை நிறைந்த இக் கட்டுரைகள் 'இருளை நீக்கி ஒளியினைக் காட்டி, இறப்பை நீக்கி, அமிர்தத்தை ஊட்டி,' தமிழ் மக்களை எல்லாத் துறைகளிலும் மேம்பாடுறச் செய்து, 'தமிழ் முன்னேற்றத்தால் தமிழர்களின் முன்னேற்றமும், தமிழர்களின் முன்னேற்றத்தால் கீழ்நாடுகளின் முன்னேற்றமும் எய்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டும்' என்ற பாரதியாரின் கனவை நினைவாக்கும் என்றே நம்புகிறோம்.

"மித்திர''னில் அவ்வப்போது பிரசுரித்த கட்டுரைகளைப் புத்தக வடிவமாக வெளியிடுவதற்கு அனுமதி கொடுத்த காலஞ்சென்ற ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்காரவர்களுக்கும், தற்போது 'மித்திரன்' ஆசிரியரா யிருக்கும் ஸ்ரீமான் சி.ஆர். ஸ்ரீனிவாசன் அவர்களுக்கும், பாரதியார் நூல்களைப் பதிப்பிக்கு முறையில் எங்களுக்குப் பேருதவி செய்துவரும் மற்ற நண்பர்களுக்கும் எங்கள் நன்றியைச் செலுத்துகிறோம்."

* * *

உண்மையில் சொல்லப் போனால், மனித குலத்துக்கு அறிவு விளக்கம் தந்த பாரதியின் அற்புத வசனங்களை இத் தொகுதிகளில் காண்கிறோம்.

முதல் தொகுதியான 'தத்துவ'க் களஞ்சியத்தில் மதம், தர்மம், நம்பிக்கை, உழைப்பு, வழிபாடு—முதலான பொருள்கள் பற்றிய கட்டுரைகள் அடங்கி யிருக்கின்றன. நூலுள் மொத்தம் இருபத்து மூன்று கட்டுரைகள் காணப்படுகின்றன. அவற்றின் விவரம் வருமாறு:

1. யாரைத் தொழுவது?
2. இனி
3. பாரத தேசத்தில் ஒவ்வொருவனும் செய்வதற்குரிய தியானம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. மூட பக்தி
5. சக்தி தர்மம்
6. சிதம்பரம்
7. மஹாலக்ஷ்மி
8. நவராத்திரி (1)
9. நவராத்திரி (2)
10. காமதேனு
11. வாசக ஞானம்
12. அமிர்தம் தேடுதல்
13. தர்மம்
14. உண்மை
15. நம்பிக்கை
16. தைரியம்
17. உயிரின் ஒலி
18. புனர்ஜன்மம்
19. ஓம் சக்தி
20. யேசு கிருஸ்துவின் வார்த்தை
21. இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை
22. லோக குரு
23. அடங்கி நட

மேற்கண்ட கட்டுரைகளில் 'அடங்கி நட' என்கிற கட்டுரை ரவீந்திரநாத் தாகூர் அவர்களால் எழுதப்பெற்ற கட்டுரையின் மொழி பெயர்ப்பாகும். பிற்பட்ட பதிப்புகளில் சில புதிய கட்டுரைகள் சேர்க்கப்பட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடுத்த இரண்டாம் தொகுதியான 'மாதர்' பகுப்பில் பெண்களின் பெருமைகளும், கடமைகளும் விரித்துப் பேசப்படுவதுடன், மாதர்க்கான விடுதலை பற்றியும் வலியுறுத்துப் பெறுகின்றது.

மாதர்களுக்கு அறிவு புகட்ட பாரதி எழுதிய கட்டுரைகளில், ஆண்மக்கள் பெண்களுக்கு அளிக்க வேண்டிய உரிமைகள் பற்றியும் வற்புறுத்தி உள்ளமை கருதத்தக்கது.

பெண்களின் பெருமை பேசும் இத்தொகுதியுள் அடங்கியுள்ள பதினெட்டு கட்டுரைகளுக்கான விவரமாவது:

1. பெண்
2. தமிழ்நாட்டின் விழிப்பு
3. பெண் விடுதலைக்குத் தமிழ்ப் பெண்கள் செய்யத்தக்கது யாது? (1)
4. பதிவிரதை
5. பெண் விடுதலை (1)
6. பெண் விடுதலை (2)
7. பெண் விடுதலைக்காகத் தமிழ்ப் பெண்கள் செய்யத்தக்கது யாது? (2)
8. தமிழ்நாட்டு மாதருக்கு
9. தமிழ்நாட்டு நாகரீகம்
10. பெண்கள் ஸம்பாஷணைக் கூட்டம்
11. 'சியூசீன்' என்ற சீனத்து ஸ்திரீயின் கதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

12. 'சியூசீன்' செய்த பிரஸங்கம்
13. பெண் விடுதலை (3)
14. திருவிளக்கு
15. ரெயில்வே ஸ்தானம் (ஒரு சிறிய கதை)
16. நவீன ருஷ்யாவில் விவாக விதிகள்
17. தென் ஆப்பிரிக்காவில் பெண்கள் விடுதலை
18. இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமை

வாசகர்களின் கவனத்திற்காகப் பதிப்பாளர்கள் மூன்றாம் கட்டுரையும், ஏழாம் கட்டுரையும் "ஒன்றே யாயினும் ஆழ்ந்து பார்ப்பவர்கள் இரண்டிற்கும் சிற்சில வித்தியாசங்கள் காணலாம்" என்ற குறிப்பையும் தந்துள்ளனர்.

மூன்றாம் தொகுப்பான 'கலைகள்' பகுதியில் கவிதை, கதை, மொழிபெயர்ப்பு, விமர்சனம், நற்கலை ஆகிய ஐந்து உட்பிரிவுகளில் பற்பல சுவையான செய்திகள் நூல் வடிவெடுத்துள்ளன.

பலமுறை படித்தாலும் தெவிட்டாத இத் தொகுதியுள் காணப்படும் கட்டுரை - கதைச் செல்வங்களுக்கான விவரம் வருமாறு:

1. கவிதை

1. இன்று
2. தமிழருக்கு
3. தியானங்களும் மந்திரங்களும்
4. சிட்டுக் குருவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. கதை

1. சந்திரத் தீவு
2. நெல்லிக்காய்க் கதை
3. இந்துக்களின் சிறப்பு
4. பலாப்பழம்
5. ராகவ சாஸ்திரியின் கதை
6. மலையாளம் I
7. மலையாளம் II
8. நம்பூரிகளும் தீயரும்
9. மலையாளத்துக் கதை
10. டிண்டிம சாஸ்திரியின் கதை

3. மொழிபெயர்ப்பு

1. ரத்னமாலை I
2. ரத்னமாலை II
3. மாலை I
4. மாலை II

4. விமர்சனம்

1. கவி
2. ஜப்பானியக் கவிதை
3. தமிழின் நிலை
4. நூலாசிரியர் பாடு
5. தமிழ்நாட்டின் விழிப்பு
6. தமிழில் சாஸ்த்ர பரிபாஷை
7. பஞ்சாங்கம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. நற்கலை

1. ஸங்கீத விஷயம்
2. பெண்ணின் பாட்டு
3. அபிநயம்

மூன்றாம் தொகுதியை அடுத்து வெளிப்பட்ட நான்காம் தொகுதியான 'சமூகம்' பகுதியில் பழங் கருத்துகளையும், கோட்பாடுகளையும் மக்களின் அறிவு மேம்பாட்டுக்காகப் பாரதி புது மெருகிட்டு வழங்கிய பான்மையைக் கண்டு இன்புறலாம்.

இத் தொகுதியில் இருபத்தொன்பது கட்டுரை களும், மூன்று கதைகளும் இடம்பெற்றுள்ளன.

நான்காம் தொகுதிக்கான பொருளடக்க விவரம் வருமாறு :

1. ஆறில் ஒரு பங்கு
2. குணமது கைவிடேல்
3 தேசீயக் கல்வி (1)
4. தேசீயக் கல்வி (2)
5. ஹிந்துக்களின் கூட்டம்
6. ஆசாரத் திருத்த மஹாசபை
7. நாற்குலம்
8. பறையர்
9. பஞ்சமர்
10. ஜாதிக் குழப்பம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11. ஜாதிபேத விநோதங்கள்
12. பிராமணன் யார்?
13. எதிர்ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை
14. மதிப்பு
15. வருங்காலம்
16. தொழிலாளர்
17. பருந்துப் பார்வை
18. மாலை
19. உடம்பு
20. செல்வம் (1)
21. செல்வம் (2)
22. பழைய உலகம்
23. விசாரணை
24. நானா விஷயங்கள்
25. மிருகங்களைச் சீர்திருத்தல்
26. மிருகங்களும் பக்ஷிகளும்
27. ஏன்?
28. நகரம்
29. அனந்த சக்தி
30. ஓநாயும் வீட்டு நாயும்
31. ஸ்வர்ண குமாரி
32. வீரத் தாய்மார்கள்

தனித்தனி நூல்களாக வெளிவந்த தத்துவம், மாதர், கலைகள், சமூகம் - ஆகிய இவற்றை ஒருங்கிணைத்துப் பாரதி நூல்கள் — கட்டுரைகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னும் தலைப் பெயரிட்டுப் பாரதி பிரசுராலயம் வெளியீடு செய்தது.

1937 ஆம் ஆண்டில் ஸ்வசரிதையும் பிறபாடல்களும், Agni and other Poems and Translations, Essays and other Prose Fragments-ஆகிய நூல்கள் பதிப்பிக்கப்பட்டன. மற்றும் தராசு நூலின் இந்தி மொழிபெயர்ப்பும் வெளிவந்தது.

"ஸ்வசரிதையும் பிற பாடல்களும்" என்னும் பாடல் தொகுதியுள், 1910ஆம் வருடத்தில் அச்சான கனவு பகுதியும், பாரதி நூல்கள் வரிசைப் பகுதிகளின் பொருள் பாகுபாட்டிற்கு உட்படாத பாடல்களும் இடம் பெற்றன. இந் நூலுக்கான பாரதி பிரசுராலய முன்னுரையில்,

> "முன் பகுதிகளின் விஷய பாகுபாட்டுக்கு உட்படாத 33 செய்யுட்கள் இக் கடைசிப் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் 'ஸ்வசரிதை' யென்பது 1910 நவம்பரில் முதன் முதல் அச்சிடப்பெற்றது....

16-வது பாடலும் இத்துடன் பதிப்பிக்கப் பெற்றது.

2,3,4,18- பாடல்கள் சமீப காலத்திற் பத்திரிகைகளிலே வெளிவந்தன. 21, 22, 23 இவை மூன்றும் இதுவரை வெளிவரவில்லை. 25, 26, 27 இவை கட்டுரைகளினிடையே யுள்ளன. 5,6,7,8,9,10,11,12,13,14,15,24

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகிய பன்னிரண்டு பாடல்களும் 1922-வருஷத்தில் வெளியான 'பாரதி நூல்கள்' இரண்டாம் பாகத்தில் உள்ளன. 17-வது பாடல் பாரதி நூல்கள் முதற் பாகத்திலுள்ளது. அதே பாகத்திலுள்ளதான 19-வது பாடல் முதன் முதல் ஜன்மபூமி என்னும் நூலில் வெளியாயிற்று. 20-வது பாடல் தேசீய கீதங்கள் 1934 வருஷப் பதிப்பிலே முதன் முதல் வெளியிடப்பட்டது. வசன காவியங்களான 28, 29, 30, 31 - ஆகிய நான்கும் காட்சி என்னும் பெயரால் 1930-வருஷத்திலே பதிப்பிக்கப் பெற்ற பகுதி 6இல் உள்ளன. நாடகங்களான 32, 33-இரண்டும் சித்தக்கடல் என்னும் பெயரால் 1930 வருஷத்திலே பதிப்பிக்கப் பெற்ற பகுதி 11இல் உள்ளன''

என்று எழுதப்பட்டுள்ளது.

நூலில் இடம்பெற்ற பாடல்களுக்கான விவரம் வருமாறு:

1. ஸ்வசரிதை
2. கவிதாதேவி அருள் வேண்டல்
3. மது
4. காலனுக் குரைத்தல்
5. காதற் பாட்டுக்கள்—காலைப் பொழுது
6. அந்திப் பொழுது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. வள்ளிப் பாட்டு (1)
8. வள்ளிப் பாட்டு (2)
9. சித்தாந்தச் சாமி கோயில்
10. புயற்காற்று
11. பிழைத்த தென்னந்தோப்பு
12. மறவன் பாட்டு
13. அக்கினிக் குஞ்சு
14. மழை
15. நிலாவும் வான்மீனும் காற்றும்
16. சாதாரண வருஷத்துத் தூமகேது
17. மனைத் தலைவிக்கு வாழ்த்து
18. மகாமகோபாத்தியாய வாழ்த்து
19. ஓவியர் மணி ஸ்ரீ ரவிவர்மா
20. ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் காலஞ்சென்றதைப் பற்றிய இரங்கற் பாக்கள்
21. சீட்டுக்கவிகளும் ஓலைத் தூக்கும்
22. சத்ரபதி சிவாஜி
23. இருதலைக் கொள்ளியினிடையே
24. காரைக்குடி ஹிந்து மதாபிமான சங்கத்தின்மீது வாழ்த்துப் பாக்கள்
25. புதிய கோணங்கி
26. பெண் விடுதலை
27. வேலை
28. காட்சி

முதற் கிளை : இன்பம்

இரண்டாம் கிளை: புகழ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

29. சக்தி
30. காற்று
31. கடல்
32. ஜகத் சித்திரம்
33. விடுதலை

இந்த நூலின் ஆரம்பத்தில் தனிப்பக்கத்தில் "தமது ஞான குருவாகிய ஸ்ரீ. நிவேதிதா தேவியின் துதி" என்ற பாடலும் இடம் பெற்றுள்ளது. ஆனாலும், பாடலுக்கான தனி எண் தரப்பட வில்லை என்பது கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந் நூலைத் தொடர்ந்து பிரசுரமான ஆங்கில நூல்கள் பாரதியின் ஆங்கில மொழிப் புலமைத் திறத்தைப் புலப்படுத்துவனவாக அமைந்தன. திறமான புலமைக்குச் சான்று கூறும் நூல்கள் என அக்காலத்திலேயே அறிஞர் பெருமக்களால் பாராட்டும் பெற்றன அந்த நூல்கள்.

"அக்னி முதலான சில கவிதைகளும் மொழிபெயர்ப்புகளும்" என்கிற நூலில், பாரதி தம்முடைய பாடல்களை மட்டுமே யல்லாது, பக்தி இலக்கியத்தில் தனியிடம் பெற்றுத் திகழும் ஆண்டாள், நம்மாழ்வார், அருணகிரிநாதர் — போன்றோரின் பாடல்களில் ஒருசிலவற்றை மொழிபெயர்த்து அளித்துள்ளதைக் காணலாம். மற்றும், ஐரிஷ் இலக்கிய மறுமலர்ச்சிக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த கஸின்ஸ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பவர் மொழிபெயர்த்திருந்த ஒருசில பாரதியின் பாடல்களும் இந் நூலில் இடம்பெற்றுள்ளன.

"கட்டுரைகளும் வசனத் துணுக்குகளும்" என்னும் நூலில், ஆங்கிலப் பத்திரிகைகளுக்குப் பாரதி எழுதிய கட்டுரைகளும், கையெழுத்து வடிவில் இருந்த கட்டுரைகளும், துணுக்குகளும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.



தனித்தனி நூல்கள் ஒரே தொகுதியாகவும் பிரசுரமானது.

ஆங்கில நூல்களுக்கு, திருவாளர்கள் சி. ஆர். ரெட்டி, கே.எஸ். வெங்கடரமணி ஆகியோர் அணிந்துரை வழங்கி யுள்ளனர்.

நூலுக்காகப் பதிப்பாளர் எழுதிய முன்னுரைப் பகுதி வருமாறு:

A few of these pieces were originally published over twenty years ago in the periodicals New India and common Wealth (Madras) and Arya (Pondicherry). The others are now published for the first time, from

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

the commonplace note-book and other Ms. material of the late Mr. C.S. Bharati, now in the possession of his brother, Mr. C. Viswanatha Ayyar. The thanks of the publishers are due to Sri Aurobindo Ghosh and to Dr. James H. Cousins for permission to reprint 'Love-mad' and 'Liberation'; to Mr. C. S. Murti for the drawings of Agni and the Dawn on the jacket; and to Mr. C.R. Reddi, M.A., M.L.C, Vice-Chancellor, Andhra University and Mr. K.S. Venkataramani, M.A., B.L., Advocate, Madras, for the foreword.

இதனைத் தொடர்ந்த அணிந்துரைப் பகுதி வருமாறு :

For the last one hundred years the Tamil genius has not expressed itself at its real best in any department of life, much less on the creative side, in song and literature. The reasons are many, both political and sociological. This is worth exploring, if only to liberate the stream of creative fancy from the sands of a decorous but false tradition in education and approach to life. Creative artists like B.R. Rajamier and Subrahmanya Bharati are like oases in the desert,- as if the endless waste of sand gets wearied of itself and produces a spot of green for the sheer joy of reaction.

The Tamil genius rejoices in scholarship, in clearness and purity, and in the incisive analysis of its own precious accumulations. Where it is creative it becomes meta-physical, laden with a rapture whose significance and pleasure are only to the chosen few who have transcended the mind-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

consciousness. Our songs even in their most lyrical moments have always the mystic touch. The quest after the Eternal gives our melodies a stellar gleam.

Subrahmanya Bharati's poetical genius is the happy result of a cross fertilisation, the clash and contact between two great cultures. They say the oyster breeds the pearl in a moment of irritation. Subrahmanya Bharati poured forth his patriotic songs in a like moment of conflict, suffering and struggle, when his sensitive and vigorous nature keenly felt the slavery of his country and man's inhumanity to man. His warm emotional temperament and aesthetic nature quickly responded in song to the immense joys of freedom and sunshine, like a lotus bud to the stimulating rays of the dawn.

Subrahmanya Bharati's songs in Tamil have almost a Shakespearean touch in the freshness, spontaneity and suggestive power of the lyrical outbursts. They herald a new epoch in our lives. Bharati is not a summer cloud, but the first expression and descent of the monsoon itself, scattering its pearls of plenty over land and river, over hill and dale.

The authentic Bharati quality, racy and indigenous, persists even in this collection of poems and essays in a foreign language to which we are given the privilege of writing a foreword. When a poetic soul like Bharati's, happy beyond dream in his own mother-tongue, turns to an alien language for the aching joy of self-expression, it is no

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

surprise to find that the art becomes laden with a more serious thought. For the highest aim of self-expression even in art is after all self-realisation. This intense longing for the Divine is visible in every song and every page of this collection. We shall not analyse the qualities of each. Analysis is a kill-joy though the Tamil mind rejoices in it.

We offer this precious book to the reader with the same ecstasy with which a guide greets a caravan marching on desert sand and offers to his friends the pure spring water in the oasis.

இனி நூலில் காணப்படும் பாடல்கள் மற்றும் கட்டுரைகளுக்கான விவரத்தைக் காண்போம் :

POEMS

AGNI, THE GOD WILL

KRISHNA, MY MOTHER

IN EACH OTHERS'S ARMS

LAKSHMI

TIME—A VISION

LOVE THINE ENEMY

THE "KUMMI" OF WOMEN'S FREEDOM

LIBERATION (TRANSLATION BY DR. JAMES H. COUSINS)

UNTO THE MOTHER

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

THE GOSPEL OF SPIRITUAL FREEDOM (FROM NAMMALWAR)

HYMN OF THE GOLDEN AGE (FROM NAMMALWAR)

LOVE-MAD (FROM NAMMALWAR)

TO THE CUCKOO (FROM NACHIAR)

I DREAMED A DREAM (FROM NACHIAR)

YE OTHERS!

HYMNS TO KUMARA (FROM ARUNAGIRI)

THOUGHTS

TRUTH

PEACE

IN THY ARMS AGAIN

NOTES

ESSAYS

TO THE BEING OF THE UNIVERSE

THE SERVICE OF GOD

THE SIDDHA AND THE SUPERMAN

IMMORTALITY

FATALISM

THE DAWN

RASA-THE KEYWORD OF INDIAN CULTURE

BLUNTING THE IMAGINATION

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

THE CRIME OF CASTE

THE PLACE OF WOMEN

WOMEN'S FREEDOM

LOVE AND MARRIAGE

PATRIOTISM AND RELIGIOUS DIFFERENCES

THE NATIONAL CONGRESS

NEW BIRTH

MATRI PUJA

INDIA AND THE WORLD

IN MEMORIAM

THE COMING AGE

REFLECTIONS

SOME POLITICAL MAXIMS

FREE SPEECH

INDIA AND THE WAR

NAMMALWAR

ANDAL

RIGHTS AND DUTIES

VERNACULARS

THE OCCULT ELEMENT IN TAMIL SPEECH

* * *

1938 ஆம் ஆண்டில் அன்பர் பலரின் அன்பு வேண்டுகோளுக் கிணங்கப் "பாரதி கீதத் திரட்டு"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னும் நூலைப் பாரதி பிரசுராலயத்தார் பதிப்பித்து வெளியிட்டனர். நூலுக்கான முகவுரையில்,

"ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் சிறு மாணவர்களுக்குப் படிப்பதற்கேற்ற பாடல் களைத் தொகுத்து ஒரு புத்தகம் அச்சிட்டுத் தர வேண்டுமென சில ஜில்லா போர்டுகளும், முனிசிபாலிடிகளும் எங்களைக் கேட்டுக் கொண்டதன் பேரில், இச் சிறு திரட்டை வெளியிட்டிருக்கின்றோம்.

இதில் அடங்கிய பாடல்கள் ஸ்ரீ பாரதியாரின் தேசீய கீதங்கள், கண்ணன் பாட்டு, தோத்திரப் பாடல்கள் முதலிய அனேக நூல்களிலிருந்து சேகரிக்கப் பட்டிருக்கின்றன"

என்று குறித்திருப்பதினின்றும் இப் பதிப்பு மாணவர் பதிப்பு என்பது புலப்படுகின்றது.

கீதத் திரட்டில் மொத்தம் 22 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :

1. வந்தே மாதரம்
2. வந்தே மாதரம்
3. எங்கள் நாடு
4. நாட்டு வணக்கம்
5. பாரத மாதா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. சுதந்திரப் பெருமை
7. மாதாவின் துவஜம்
8. விடுதலை
9. சுதந்திரப் பள்ளு
10. பெண்கள் விடுதலைக் கும்மி
11. செந்தமிழ் நாடு
12. ஆறு துணை
13. பக்தி
14. ஸரஸ்வதி தேவியின் புகழ்
15. முருகன் பாட்டு
16. சந்திரமதி பாட்டு
17. கண்ணன்-என் விளையாட்டுப் பிள்ளை
18. ஜீவன் முக்தி
19. முரசு
20. பாப்பாப் பாட்டு
21. மஹாத்மா காந்தி (வாழ்த்து)
22. புது வருஷம்

1940ஆம் ஆண்டிலே ஞானரதம், ஆறிலொரு பங்கு- ஆகிய இரு நூல்களுக்கான இந்தி மொழி பெயர்ப்புகள் வெளிவந்தன.

பா.—21

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1941ஆம் ஆண்டில் வேத ரிஷிகளின் கவிதை-தொடர்ச்சி என்னும் நூல் பதிப்பிக்கப்பட்டு, வெளியிடப்பட்டது. இந்நூல் 1928ஆம் ஆண்டிலே பிரசுரிக்கப்பட்ட "வேத ரிஷிகளின் கவிதை" என்ற நூலின் தொடர்ச்சியாகும். தியாகசீலர் சுப்பிரமணிய சிவா அவர்களின் "ஞானபாநு" மாத இதழில் பாரதி 1913-1915 ஆகிய காலப் பகுதிகளில் எழுதிய அக்நிஸ்தோமம், ஈஸாவாஸ்யோபநிஷத், கேநோபநிஷத் ஆகிய உபநிஷத்துக்களின் விளக்கங்கள் இச் சிறு நூலில் அடக்கம்.


வேத ரிஷிகளின் கவிதை

தொடர்ச்சி

ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி

இச் சிறு நூலே பாரதி நூல் வரிசையில் வெளியான புதிய நூல் தொகுதியில் இறுதி நூலாகும். இதன்பின் எந்தப் புதிய வெளியீடும் பிரசுரமாகவில்லை. முன்னர் பதிப்பிக்கப்பட்ட நூல்களுக்கு மறு அச்சுகள் வெளிவந்தவண்ணம் இருந்தன.

இந்த நிலையில், பாரதியின் எழுத்துகளைப் பொதுவுடைமை யாக்க வேண்டும் என்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோரிக்கை எழுந்தது. தனிப்பட்ட அன்பர்களும் பொதுவுடைமைக் கோரிக்கைக்கு ஆதரவளித்து, அறிக்கைகளை வெளியிட்டனர். அரசினர் இப் பிரச்சினையில் தலையிட்டு ஆவன செய்யும்படி தமிழ் அன்பர்கள் பலர் வற்புறுத்தினர்.

பாரதப் பெருநாடு 1947 ஆகஸ்ட் 15இல் விடுதலை பெற்றதும், பாரதி நூல்கள் பொது வுடைமைக் கிளர்ச்சி தமிழகத்தில் உச்ச கட்டத்தை யடைந்தது.


பாரதி
— மணி மலர் —

ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

பாரதி பிரசுராலயம்
திருவல்லிக்கேணி, சென்னை
(காபிரைட் ரிஜிஸ்தர் செய்தது)

[முதற் பதிப்பு] 1948 [விலை அணா 14.

பாரதநாடு விடுதலை யடைந்த பின் 1948இல் பாரதி நூல்கள் பொது வுடைமைக் கிளர்ச்சி கள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், பாரதி பிரசுராலயம் பள்ளி மாணவர்களுக் கேற்ற முறையில் அமைந்த "பாரதி மணி மலர்" என்ற வொரு நூலைப் பதிப்பித்தது. இந் நூலில் மொத்தம் எழுபது பாட்டல்கள் இடம் பெற்றிருந்தன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பாரதி மணி மலர்' என்னும் நூலின் முன்னுரை பின்கண்ட முறையில் அமைந்துள்ளது:

"எத்தனையோ வரகவிகள் இந் நாட்டில் தோன்றி யுள்ளார்கள். என்றாலும், நமது மகா(வர) கவியின் பெருமையோ ஓர் தனிச் சிறப்பு வாய்ந்தது. தமிழ் மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் தந்து, ஓர் புதிய 'சகாப்தம்' சிருஷ்டி செய்து, தமிழ் நாட்டை நித்திரையி லிருந்து தட்டி எழுப்பி விட்டவர் பாரதியார்.

இக் கவியின் எந்த நூலுக்கும் 'முன்னுரை' அவசியமில்லைதான். இருந்தாலும் 'சம்பிரதாயம்' என்ற முறைக்கேற்றவாறு ஒரு சிறு குறிப்பு எழுத முன் வந்துள்ளோம்.

பாரதி பாடல்கள் பலவகைப்பட்டுள்ளன. தேசபக்தி, தெய்வ பக்தி, வேதாந்த ஆராய்ச்சி, கண்ணன் பாமாலை, குழந்தை இன்பம், காதல் உணர்ச்சி, சில்லறைச் சீட்டுக் கவிகள், பாஞ்சாலி சபதம், சரித தத்துவம் முதலியனவாம்.

சாதாரணமாக, சிலருக்குத் தேசியத்தில் அதிகப் பற்று உள்ளதாக இருக்கலாம். இன்னும் சிலருக்குத் 'தெய்வீகம்' என்ற பாடல்களிலேயே அதிக இன்பம் ஏற்படும். சிலருக்குப் பாகவதர்கள் கூறும் சரித்திர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சந்தங்களில் — கதா காலக்ஷேபத்தில் இனிமை பிறக்கலாம். எது எப்படியாயினும் 'ஸங்கீதம்' என்னும் அம்சம் பொருந்தி யிருந்தால் யாருக்குமே எதுவும் ஒருவித நல்லுணர்ச்சியை உண்டுபண்ணும் என்பது உறுதி. எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், யாவரும் விரும்பும் மெட்டுக்கள் கொண்ட பாடல்கள் — அதாவது, சங்கீதத்தில் பூரண ஞானம் இல்லாமற் போனாலும் கேள்வி ஞானம் போன்ற ஒரு (பகுதி) அம்சம் உடையவன்கூட அனுபவிக்கும்படியான பாடல்கள் கொண்ட தொகுதி ஒன்று பதிப்பிக்க வேண்டுமென்ற அபிலாஷையைச் சில நண்பர்கள் எங்களிடம் தெரிவித்து வந்தார்கள்.

பாரதியார்பால் தனிப் பற்றுக்கொண்ட இக் காலத்தில் எந்த இடத்திலும், எந்தச் சமயத்திலும், எந்தக் கொண்டாட்டத்திலும் 'பாரதி பாடல்கள் போட்டி' நடத்துவது நிதர்சனக் காட்சி. பாடக்கூடிய பாட்டுக்கள் யாவையும் ஒன்றுதிரட்டி வெளியிட்டால் ஒரு தனிச் சிறப்பு ஏற்படும்; யாரும் எளிதில் படித்து இன்புறும்படிக்கான வழிக்கு ஓர் தூண்டுகோலாக இருக்கக்கூடும். எவரெவருக்கு எதில் இன்பம் தெவிட்டு கின்றதோ அதைச் சிரவணம் செய்யட்டும் என்று கருதியே இவ்விதம் செய்யத் துணிந்துள்ளோம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பர்கள் இப் பதிப்பையும் ஆதரித்து, பாரதியாரின் பொன்மொழிகளை ஆனந்தத்துடன் அனுபவித்து இம் 'மணிமல'ரை ஆச்ரயித்துப் பாடி மகிழ்ந்து, அவரது ஆசியையும் பெறுமாறு, ஸ்ரீ பராசக்தி யருள் புரிவாளாக.

* * *

பாரதியின் பா இன்பத்தை அனுபவிக்கத் தூண்டும் 'மணி மல'ரில் இடம்பெற்றுள்ள எழுபது பாடல்களுக்கான விவரம்:

1. வந்தே மாதரம்
2. நாட்டு வணக்கம்
3. பாரத நாடு
4. பாரத தேசம்
5. எங்கள் நாடு
6. பாரத மாதா திருப்பள்ளி யெழுச்சி
7. எங்கள் தாய்
8. மஹாத்மா காந்தி பஞ்சகம்
9. சுதந்திர தேவியின் துதி
10. பாரத சமுதாயம்
11. வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்
12. பெண்மை
13. தமிழ்த் தாய்
14. தமிழ்
15. செந்தமிழ் நாடு
16. புது வருஷம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

17. ஆறு துணை
18. பக்தி
19. ஸரஸ்வதி தேவியின் புகழ்
20. லக்ஷ்மி பிரார்த்தனை
21. முருகன் பாட்டு (1)
22. முருகன் பாட்டு (2)
23. முருகக் கடவுள் மீது கிளித் தூது
24. வேலன் பாட்டு
25. கண்ணன் வரவு
26. வெண்ணிலா
27. சந்திரமதி பாட்டு
28. மஹாகாளியின் புகழ்
29. முத்துமாரி
30. யோகசித்தி
31. காணிநிலம்
32. மாயையைப் பழித்தல்
33. அச்சமில்லை
34. அறிவே தெய்வம்
35. ஜீவன் முக்தி
36. ஜய பேரிகை
37. அல்லா
38. யேசு கிறிஸ்து
39. நந்த லாலா
40. ஒளியும் இருளும்
41. விடுதலை
42. விடுதலை - சிட்டுக் குருவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

43. பகைவனுக் கருள்வாய்
44. நான்
45. விநாயகர் நான்மணிமாலை
46. கண்ணன் - என் தோழன்
47. கண்ணன் - என் சேகவன்
48. கண்ணம்மா - என் குழந்தை
49. கண்ணன் - என் விளையாட்டுப் பிள்ளை
50. கண்ணன் - என் காதலன் (1)
51. கண்ணன் - என் காதலன் (2)
52. கண்ணன் - என் காதலன் (3)
53. கண்ணம்மா - என் காதலி (1)
54. கண்ணம்மா - என் காதலி (2)
55. கண்ணன் - என் ஆண்டான்
56. கண்ணம்மா - எனது குலதெய்வம்
57. முரசு
58. பாப்பாப் பாட்டு
59. பாஞ்சாலி சபதம்

பிரம ஸ்துதி
துரியோதனன் சகுனியிடம் சொல்வது
சகுனியின் சதி
திரிதராட்டிரன் பதிற் கூறுதல்
திரிதராட்டிரன் பதில்
தருமபுத்திரன் தீர்மானம்
தருமபுத்திரன் முடிவுரை
தருமனின் பதில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தருமன் இணங்குதல்
சூது மீட்டும் தொடங்குதல்
திரௌபதியை இழத்தல்
திரௌபதி சூதில் வசமானது
பற்றிக் கௌரவர்கள்
கொண்ட மகிழ்ச்சி
துரியோதனன் சொல்வது
திரௌபதியைத் துரியோதனன்
மன்றுக்கு அழைத்துவரச்
சொல்லியது பற்றி ஜகத்தில்
உண்டான அதர்மக் குழப்பம்
துரியோதனன் விதுரனை நோக்கி
உரைப்பது
விதுரன் சொல்வது
வீமன் சொல்வது
அர்ஜுனன் சொல்வது
திரௌபதி கண்ணனுக்குச்
செய்யும் பிரார்த்தனை
வீமன் செய்த சபதம்
அர்ஜுனன் சபதம்
பாஞ்சாலி சபதம்

60. ஸ்வசரிதை

ஆங்கிலப் பயிற்சி
மணம்
தந்தை வறுமை எய்திடல்
பொருட் பெருமை
முடிவுரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

61. வேய்ங் குழல்
62. வள்ளிப் பாட்டு (1)
63. வள்ளிப் பாட்டு (2)
64. மழை
65. ஓவியர்மணி ஸ்ரீ ரவிவர்மா
66. சத்ரபதி சிவாஜி
67. நவராத்திரிப் பாட்டு
68. காளிப் பாட்டு
69. நிலவுப் பாட்டு
70. வேலை

ஓ.பி. இராமசாமி ரெட்டியார்

'பாரதி மணி மலர்' நூலைத் தொடர்ந்து விரல் விட்டு எண்ணி விடக்கூடிய மறு அச்சு நூல்கள் வெளிவந்த நிலையில், 1949இல் அப்போதைய சென்னை மாகாண முதல் மந்திரியாக இருந்த திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் பாரதி நூல்கள் பொதுவுடைமைப் பிரச்சினையில் பெரிதும் ஆர்வம் காட்டினார். அவர் பாரதி பிரசுராலய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உரிமையாளரிடம் கலந்துபேசி, பாரதி நூல்களின் பதிப்புரிமையை அரசுடைமை யாக்கினார்.

1924ஆம் ஆண்டு முதற்கொண்டு 1949ஆம் ஆண்டுவரை பாரதி பிரசுராலயம் பாரதி நூல் பதிப்புப் பணிகளில் ஈடுபட்டது; எதிர்ப்பட்ட எத்தனையோ விதமான சோதனைகளில் எல்லாம் எதிர்நீச்சல் போட்டு, வெற்றி கண்டது; செயற்கரிய சாதனைகளைச் செய்து காட்டியது. பாரதி நூல் பதிப்புப் பணியில் பாரதி பிரசுராலயத்தின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் பெருமை படைத்தது. சோதனைகளைக் கண்டு துவண்டு விடாமல், கொண்ட கருமத்தில் கருத்தைச் செலுத்திய பாரதி பிரசுராலயத்தின் பணியின் பெருமையைச் சொல்லவும் முடியுமோ?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9

தமிழக அரசின் பங்களிப்பு

பாரதியின் படைப்பு இலக்கியச் செல்வங்கள் காலந்தோறும் நூல் வடிவம் கொண்ட நீண்ட நெடிய வரலாற்றில் தமிழக அரசும் தன்னுடைய பங்களிப்பை அளித்துப் பெருமை கொண்டது.

1907இல் மூன்று பாடல்கள் அடங்கிய சிறு பிரசுரத்தை வெளியிட்டுப் பாரதிக்குப் பெருமை யளித்தவர் திரு. வீ. கிருஷ்ணசாமி ஐயர் ஆவார். இச் சிறு பிரசுரத்தால் துணிவு வரப்பெற்று பாரதியே சில நூல்களை வெளியிட்டார்; இதன்பின் பரலி சு. நெல்லையப்பர் பாரதி நூல் பதிப்பாளராகக் காட்சி தந்தார்; 'சுதேச மித்திரன்' புத்தக சாலைப் பிரிவும் தன் பங்குக்கு ஒருசில நூல்களை வெளியிடவே செய்தது.

பாரதியின் அகால மரணத்தை யடுத்து பாரதி நூல் வெளியீட்டுப் பணிகளைப் பாரதி ஆச்ரமும், பாரதி பிரசுராலயமும் ஆற்றின. இந்தப் பெரும் பணியில் காலசக்தியின் அருளால் தமிழக அரசும் பங்கு கொண்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி பிரசுராலயத்தாரிடமிருந்து 1949இல் பாரதி நூல் பதிப்பு உரிமையைப் பெற்றுக் கொண்ட அரசு, நூல்களைப் பதிப்பிக்கக் கருதியது. அது காரணம் பற்றி, குழு ஒன்றையும் அரசு அமைத்தது.

தமிழக அரசு அமைத்த பதிப்புக் குழுவில்,

1. திரு. ரா. பி. சேதுப்பிள்ளை
2. திரு. சி. விசுவநாத ஐயர்
3. திரு. கி. சுவாமிநாதன்
4. திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி)

ஆகியோர் அங்கம் வகித்தனர்.

மற்றும், கவிதைப் பதிப்புக்கென்றே ஓர் ஆலோசனைக் குழுவையும் அரசு ஏற்படுத்தியது. அக் குழுவில்,

1. திரு. பரலி சு. நெல்லையப்பர்
2. திரு. கி. வா. ஜகந்நாதன்
3. திரு. மு. வரதராசன்
4. திரு. ரா. பி. சேதுப்பிள்ளை

ஆகியோர் இடம் பெற்றனர்.

தமிழக அரசு 1953-1963 ஆகிய காலப் பகுதிகளில் கவிதைத் தொகுதிகளையும், கதை — கட்டுரை தொகுதிகளையும் "பாரதி நூல்கள்" என்ற வரிசையில் தொகுத்தும் பகுத்தும் பிரசுரம் செய்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதல் கட்டமாக, 1953இல் பாரதியின் கவிதைத் தொகுதிகள் நான்கு பாகங்களாக வெளிவந்தன. அவை தேசீய கீதங்கள், தெய்வப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், முப்பெரும் பாடல்கள் எனப்பட்டன. 1954இல் நான்கு பாகங் களையும் உள்ளடக்கிய பதிப்பாகப் பாரதி நூல்கள் — கவிதைகள் என வெளியிட்டது.

ஒவ்வொரு பாகத்திற்கும் தனித்தனியே முகவுரை எழுதப் பெறாமல், நான்கு பாகங் களுக்கும் சேர்த்து, ஒட்டுமொத்தமாக, அனைத்துப் பாகங்களுக்கும் பொருந்துமாறு முன்னுரை ஒன்று பதிப்புக் குழுவினரால் எழுதப் பெற்றிருந்தது.

அரசு அமைத்த பாரதி நூற்பதிப்புக் குழுவினர் எழுதிய முன்னுரை தரும் செய்திகள் வருமாறு :

> திருவள்ளுவர், இளங்கோ, கம்பர் முதலிய தமிழ்ப் பெருங்கவிஞர் வரிசையில் வந்தவர் பாரதியார். தமிழ் - இலக்கியத்தில் அவருடைய நூல்கள் சிறந்த ஓர் இடம் பெற்று விட்டன. இக் காலத்தைப் 'பாரதி யுகம்' என்றே நாம் வழங்கலாம்.
>
> நமது மொழிக்கும், நமது சமுதாயத்துக் கும் புத்துயிர் அளித்தவை பாரதியாரின் கவிதைகளே. தமிழின் மறுமலர்ச்சியைக் கவிதையிலும், வசனத்திலும் தோற்றுவித்து, நமக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்குபவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவி பாரதியார். நாம் அனைவரும் அவர் நூல்களைப் படித்து, நமது தனி வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் நற்பயன் பெறுவது நமது கடமையாகும். இந்த முறையிலேதான் பாரதியாரின் புகழைப் பாரத தேசமெங்கும் - உலகெங்குமே பரவச் செய்யமுடியும்.

பாரதியார் நூல்களின் பதிப்புரிமையைச் சென்னை அரசாங்கத்தார் 1949-ல் வாங்கினார்கள். இதற்கு முக்கிய காரணராயிருந்தவர் அப்பொழுது முதலமைச்சராயிருந்த கனம் ஓ.பி. ராமசாமி ரெட்டியார் அவர்களாவர். அவர்களுக்கு நாம் அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

திருவாளர்கள் பரலி சு. நெல்லையப்பர், ரா.பி. சேதுப்பிள்ளை, கி.வா.ஜகந்நாதன், டாக்டர் மு. வரதராசனார் ஆகிய நால்வரைக் கொண்ட ஆலோசனைக் குழுவினரின் உதவியைக் கொண்டு, பாடல்களை வரிசைப்படுத்தியும், சிற்சில தலைப்புக்களை மாற்றி அமைத்தும் இந்தக் கவிதைப் பதிப்பை வெளியிடத் தொடங்கி யிருக்கிறோம். பாரதி பாடல்களின் முற்பதிப்புக்களோடு ஒப்பு நோக்கிப் பிழைகளைத் திருத்திச் செம்மையான பதிப்பாக வெளிக் கொண்டுவரப் பெரிதும் முயன்றுள்ளோம். எனினும், சிற்சில தவறுகள் ஏற்பட்டிருத்தல் இயல்பே. இன்னும் இப் பதிப்பில் திருத்தம் பெறவேண்டிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அம்சங்களைக் குறித்து அறிஞர்கள் பதிப்புக் குழுவினருக்குத் தெரிவிப்பார்களானால், அவற்றை நன்றியுடன் ஏற்று, அடுத்த பதிப்பில் திருத்தி வெளியிட முயலுவோம்.

முந்திய பதிப்புக்களில் பாரதியார் எழுதிய குறிப்புக்கள், பதிப்பாசிரியர்களின் குறிப்புக் கள், முன்னுரைகள், பாட பேதங்கள், புதிய வெளியீடுகளின் தொகுப்பு விவரங்கள் முதலியன வெல்லாம் நூல் இறுதியில் வகைப் படப் பல அனுபந்தங்களாக அமைக்கப் பட்டிருக்கின்றன.

'பாரதியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்' காலமுறைப்படி நூல் இறுதியில் கொடுக்கப் பட்டுள்ளன. அந்த நிகழ்ச்சிகளிலும் காலக் குறிப்பிலும் பிழைகள் இருக்கலாம். பாரதியா ரோடு நெருங்கிய தொடர்புடையவர்கள் இவற்றையும் இன்னும் புதிய செய்திகளையும் பதிப்புக் குழுவினருக்குத் தெரிவித்து உதவி னால், பாரதியாரின் உண்மையான வாழ்க்கைச் சரிதம் உருவாகும்.

இப்பொழுது வெளிவரும் கவிதைத் தொகுதியையும், அடுத்து வெளிவரும் பிற தொகுதிகளையும் தமிழ் மக்கள் விரைவில் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக! இதுவே நாம் பாரதியாருக்கு நம் நன்றியைக் காட்டும் சிறந்த வழியாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற் பாகமாகப் பிரசுரமான "தேசிய கீதங்கள்" நூல் பாரத நாடு, தமிழ் நாடு, சுதந்திரம், தேசிய இயக்கப் பாடல்கள், தேசியத் தலைவர்கள், பிற நாடுகள் — ஆகிய ஆறு உட்பிரிவுகளில் மொத்தம் 53 கவிதைகளை உள்ளுறையாகப் பெற்றது. அவற்றின் விவரமாவது :

1. பாரத நாடு

1. வந்தே மாதரம்
2. வந்தே மாதரம்
3. நாட்டு வணக்கம்
4. பாரத நாடு
5. பாரத தேசம்
6. எங்கள் நாடு
7. ஜய பாரத!
8. பாரத மாதா
9. எங்கள் தாய்
10. வெறிகொண்ட தாய்
11. பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி
12. பாரத மாதா நவரத்தின மாலை
13. பாரத தேவியின் திருத்தசாங்கம்
14. தாயின் மணிக்கொடி
15. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை
16. போகின்ற பாரதமும்-வருகின்ற பார்தமும்
17. பாரத ஸமுதாயம்
18. ஜாதீய கீதம் - I (மொழிபெயர்ப்பு)
19. ஜாதீய கீதம் - II (புதிய மொழிபெயர்ப்பு)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. தமிழ் நாடு

20. செந்தமிழ் நாடு
21. தமிழ்த் தாய்
22. தமிழ்
23. தமிழ் மொழி வாழ்த்து
24. தமிழச் சாதி
25. வாழிய செந்தமிழ்

3. சுதந்திரம்

26. சுதந்திரப் பெருமை
27. சுதந்திரப் பயிர்
28. சுதந்திர தாகம்
29. சுதந்திர தேவியின் துதி
30. விடுதலை
31. சுதந்திரப் பள்ளு

4. தேசீய இயக்கப் பாடல்கள்

32. சத்ரபதி சிவாஜி
33. கோக்கலே சாமியார் பாடல்
34. தொண்டு செய்யும் அடிமை
35. நம்ம ஜாதிக் கடுக்குமோ?
36. நாம் என்ன செய்வோம்!
37. பாரத தேவியின் அடிமை
38. வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்று
39. தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி
40. நடிப்புச் சுதேசிகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. தேசீயத் தலைவர்கள்

41. மஹாத்மா காந்தி பஞ்சகம்
42. குரு கோவிந்தர்
43. தாதாபாய் நவுரோஜி
44. பூபேந்திரர் விஜயம்
45. வாழ்க திலகன் நாமம்
46. திலகர் முனிவர் கோன்
47. லாஜபதி
48. லாஜபதியின் பிரலாபம்
49. வ.உ.சி.க்கு வாழ்த்து

6. பிற நாடுகள்

50. மாஜினியின் சபதம்
51. பெல்ஜியத்திற்கு வாழ்த்து
52. புதிய ருஷியா
53. கரும்புத் தோட்டத்திலே

மேற்குறித்த 53 கவிதைகளில் 18 கவிதைகளுக்கு முந்திய பதிப்புகளில் குறிக்கப்பட்டிருந்த தலைப்புகள் ஆலோசனைக் குழுவினரால் மாற்றம் செய்யப்பட்டன. பொருளமைதியும், கருத்துத் தொடர்ச்சியும் கருதி மாற்றங்கள் செய்யப்பட்டன என்ற குறிப்பும் பதிப்பில் காணப்படுகின்றது. அவசியங் கருதி, மாற்றம் செய்யப்பட்டுள்ள புதிய தலைப்புகளும், முந்திய பதிப்புகளில் குறிக்கப் பட்டுள்ள தலைப்புகளும் இங்கே தரப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	புதிய தலைப்புகள்	முந்திய தலைப்புகள்
14.	தாயின் மணிக்கொடி	மாதாவின் துவஜம்
16.	போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்	நிகழ்கின்ற ஹிந்துஸ்தானமும் வருகின்ற ஹிந்துஸ்தானமும்
24.	தமிழச் சாதி	இருதலைக் கொள்ளி யினிடையே
25.	வாழிய செந்தமிழ்	புது வருஷம்
27.	சுதந்திரப் பயிர்	ஸ்வதந்திர தாகம்
28.	சுதந்திர தாகம்	ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்
35.	நம்ம ஜாதிக் கடுக்குமோ?	மேத்தா திலகருக்குச் சொல்வது
36.	நாம் என்ன செய்வோம்!	நிதானக் கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல்
38.	வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்று	கலெக்டர்வின்ச்-ஸ்ரீசிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லுதல் (பாரதி) ஆங்கிலேயன் ஒரு தேச பக்தனுக்குக் கூறுவது (பாரதி ஆச்ரமம்)
39.	தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை மறுமொழி	கலெக்டர் வின்சுக்கு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை சொல்லிய மறுமொழி (பாரதி) தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி (பாரதி ஆச்ரமம்)
42.	குரு கோவிந்தர்	குரு கோவிந்த ஸிம்ஹ விஜயம்
44.	பூபேந்திரர் விஜயம்	பூபேந்திர விஜயம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	புதிய தலைப்புகள்	முந்தியதலைப்புகள்
46.	திலகர் முனிவர்கோன்	லோகமான்ய பாலகங்காதர திலகர்
47.	லாஜபதி	லாஜ்பத்ராய் துதி
48.	லாஜபதியின் பிரலாபம்	லாஜபத்ராய் பிரலாபம்
50.	மாஜினியின் சபதம்	மாஜினி என்ற இத்தாலி தேசத்து தேசாபிமானி தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட "யௌவன இத்தாலி" என்ற சங்கத்திலே செய்து கொண்ட பிரதிக்கினை (பாரதி) மாஜினி (பாரதி ஆச்ரமம்) மாஜினியின் பிரதிக்கினை (பாரதி பிரசுராலயம்)
51.	பெல்ஜியத்திற்கு வாழ்த்து	பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்து
53.	கரும்புத் தோட்டத்திலே	பீஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்

மற்றும், அரசாங்க வெளியீட்டில் கவிதைகளின் வைப்பு முறையும் மாற்றப்பட்டது.

கவிதைகளின் வைப்பு முறை பற்றிய விளக்கமும் அரசாங்க வெளியீட்டில் பின்வருமாறு காணப்படுகின்றது:

பாரதி பிரசுராலயத்தாரின் தேசீய கீதங்களில் 57 கவிதைகள் இடம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்றிருந்தன. அவற்றுள் எட்டுக் கவிதைகள் இப்பொழுது நீக்கப்பட்டு வேறிடங்களில் சேர்க்கப் பெற்றுள்ளன. அவையாவன: (i) அபேதானந்த சுவாமிகளின் மீது தோத்திரக் கவிகள் (32), (ii) கிருஷ்ணன் மீது ஸ்துதி (37), (iii) பெண்கள் விடுதலைக் கும்மி (47), (iv) புதுமைப் பெண் (48), (v) பெண்மை (49), (vi) ஆங்கிலப் பயிற்சி (50), (vii) நாட்டுக் கல்வி (51), (viii) தொழில் (52).

இவற்றுள் முதற் பாடல் பல்வகைப் பாடல்களின் தொகுதியில் 29-ம் கவிதையாகத் தரப்பட்டுள்ளது. இரண்டாம் பாடல் தெய்வப் பாடல்கள் அடங்கிய இரண்டாம் தொகுதியில் 45-ம் கவிதையாக அமைந்துள்ளது. ஆங்கிலப் பயிற்சி என்ற பாடல் பல்வகைப் பாடல்களில் கனவு என்ற 96-ம் பாடலின் ஒரு பகுதியாய் அமைந்துள்ளது. ஏனைய பாடல்களும் பல்வகைப் பாடல்கள் அடங்கிய தொகுதியில் 6,4,5,10,8 என்ற எண்ணுள்ள கவிதைகளாக வைக்கப்பட்டுள்ளன. எனவே, முந்திய தேசீய கீதங்களிலிருந்து 49 பாடல்களே எடுக்கப் பட்டுள்ளன.

மேலும், நான்கு கவிதைகள் புதியனவாக இத் தொகுதியில் அமைக்கப் பட்டுள்ளன. அவற்றுள் மூன்று 'ஸ்வசரிதையும் பிற பாடல் களும்' என முன்பு வெளிவந்துள்ள சிறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொகுதியில் அடங்கியவை. அவையாவன தமிழச் சாதி (24), சத்ரபதி சிவாஜி (32), குரு கோவிந்தர் (42) என்பன. மற்றொன்று ஸ்ரீ பரலி சு. நெல்லையப்ப பிள்ளை யவர்கள் நினைவிலிருந்து வெளிப்படுத்திய வ.உ.சி.க்கு வாழ்த்து (49) என்ற பாடல். இது அவர் களால் எழுதப்பெற்ற வ.உ.சிதம்பரம் பிள்ளை சரித்திரத்தில் வெளியா யிருக்கிறது. எனவே, இப்பொழுது வெளிவரும் புதிய வெளியீடு 53 கவிதைகளை உள்ளுறையாகப் பெற்றுள்ளது.

* * *

தேசிய கீதங்கள் நூலைத் தொடர்ந்து வெளியான இரண்டாம் பாகமான "தெய்வப் பாடல்கள்" நூல் தொகுதி தோத்திரப் பாடல்கள், ஞானப் பாடல்கள் என்னும் இரு பிரிவுகளில் 103 கவிதைகளைக் கொண்டு விளங்குகின்றது.

"தெய்வப் பாடல்கள்" நூல் தொகுதியுள் இடம்பெற்ற கவிதைகளுக்கான விவரம் வருமாறு:

I. தோத்திரப் பாடல்கள்

1. விநாயகர் நான்மணிமாலை
2. முருகா! முருகா!
3. வேலன் பாட்டு
4. கிளிவிடு தூது
5. முருகன் பாட்டு
6. எமக்கு வேலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. வள்ளிப் பாட்டு—1
8. வள்ளிப் பாட்டு—2
9. இறைவா! இறைவா!
10. போற்றி அகவல்
11. சிவசக்தி
12. காணி நிலம் வேண்டும்
13. நல்லதோர் வீணை
14. மஹாசக்திக்கு விண்ணப்பம்
15. அன்னையை வேண்டுதல்
16. பூலோக குமாரி
17. மஹாசக்தி வெண்பா
18. ஓம் சக்தி
19. பராசக்தி
20. சக்திக் கூத்து
21. சக்தி
22. வையம் முழுதும்
23. சக்தி விளக்கம்
24. சக்திக்கு ஆத்ம ஸமர்ப்பணம்
25. சக்தி திருப்புகழ்
26. சிவசக்தி புகழ்
27. பேதை நெஞ்சே!
28. மஹா சக்தி
29. நவராத்திரிப் பாட்டு (உஜ்ஜயினீ)
30. காளிப் பாட்டு
31. காளி ஸ்தோத்திரம்
32. யோக சித்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

33. மஹா சக்தி பஞ்சகம்
34. மஹா சக்தி வாழ்த்து
35. ஊழிக் கூத்து
36. காளிக்கு ஸமர்ப்பணம்
37. காளி தருவாள்
38. மஹா காளியின் புகழ்
39. வெற்றி
40. முத்துமாரி
41. தேச முத்துமாரி
42. கோமதி மஹிமை
43. சாகா வரம்
44. கோவிந்தன் பாட்டு
45. கண்ணனை வேண்டுதல்
46. வருவாய் கண்ணா!
47. கண்ண பெருமானே!
48. நந்த லாலா
49. கண்ணன் பிறப்பு
50. கண்ணன் திருவடி
51. வேய்ங் குழல்
52. கண்ணம்மாவின் காதல்
53. கண்ணம்மாவின் நினைப்பு
54. மனப் பீடம்
55. கண்ணம்மாவின் எழில்
56. திருக்காதல்
57. திரு வேட்கை
58. திருமகள் துதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

59. திருமகளைச் சரண்புகுதல்
60. ராதைப் பாட்டு
61. கலைமகளை வேண்டுதல்
62. வெள்ளைத் தாமரை
63. நவராத்திரிப் பாட்டு (மாதா பராசக்தி)
64. மூன்று காதல்
65. ஆறு துணை
66. விடுதலை வெண்பா
67. ஜயம் உண்டு
68. ஆரிய தரிசனம்
69. ஸூரிய தரிசனம்
70. ஞாயிறு வணக்கம்
71. ஞானபாநு
72. ஸோமதேவன் புகழ்
73. வெண்ணிலாவே!
74. தீ வளர்த்திடுவோம்!
75. வேள்வித் தீ
76. கிளிப் பாட்டு
77. யேசு கிறிஸ்து
78. அல்லா

II. ஞானப் பாடல்கள்

79. அச்சமில்லை
80. ஜய பேரிகை
81. சிட்டுக் குருவியைப் போலே
82. விடுதலை வேண்டும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

83. வேண்டும்
84. ஆத்ம ஜயம்
85. காலனுக்கு உரைத்தல்
86. மாயையைப் பழித்தல்
87. சங்கு
88. அறிவே தெய்வம்
89. பரசிவ வெள்ளம்
90. பொய்யோ? மெய்யோ?
91. நான்
92. சித்தாந்தச் சாமி கோயில்
93. பக்தி
94. அம்மாக்கண்ணு பாட்டு
95. வண்டிக்காரன் பாட்டு
96. கடமை அறிவோம்
97. அன்பு செய்தல்
98. சென்றது மீளாது
99. மனத்திற்குக் கட்டளை
100. மனப்பெண்
101. பகைவனுக் கருள்வாய்
102. தெளிவு
103. கற்பனை யூர்

மேற்குறித்த 103 கவிதைகளில் 34 கவிதை களுக்குத் தலைப்புகள் மாற்றம் செய்யப் பட்டுள்ளன.

இனி, அவற்றுக்கான விவரத்தைக் காண்போம்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	புதிய தலைப்புகள்	முந்திய தலைப்புகள்
2.	முருகா! முருகா	முருகன் பாட்டு—1
4.	கிளிவிடு தூது	முருகக் கடவுள் மீது கிளித் தூது
6.	எமக்கு வேலை	வேலை
9.	இறைவா! இறைவா!	இறைவனை வேண்டுதல்
11.	சிவசக்தி	வேள்விப் பாட்டு
12.	காணிநிலம் வேண்டும்	காணிநிலம்
13.	நல்லதோர் வீணை	கேட்பன
15.	அன்னையை வேண்டுதல்	மஹாசக்திக்கு விண்ணப்பம்
27.	பேதை நெஞ்சே!	நெஞ்சொடு சொல்வது
37.	காளி தருவாள்	ஹே, காளி!
45.	கண்ணனை வேண்டுதல்	ஸ்ரீ கிருஷ்ணன்மீது ஸ்துதி
46.	வருவாய் கண்ணா!	கண்ணன் வரவு
47.	கண்ண பெருமானே!	கண்ணன் துதி
50.	கண்ணன் திருவடி	மனமே
52.	கண்ணம்மாவின் காதல்	காற்றுவெளி (பாரதி) கண்ணம்மா (பாரதி ஆச்ரமம்)
53.	கண்ணம்மாவின் நினைப்பு	செல்லம்மா பாட்டு (பாரதி) கண்ணம்மா (பாரதி ஆச்ரமம்)
54.	மனப்பீடம்	ஸ்ரீ செல்லம்மா பாட்டு (பாரதி) கண்ணம்மா (பாரதி ஆச்ரமம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	புதிய தலைப்புகள்	முந்திய தலைப்புகள்
55.	கண்ணம்மாவின் எழில்	கண்ணம்மாவின் அங்க வர்ணனை
57.	திரு வேட்கை	திருமகள் (பாரதி) லக்ஷ்மி பிரார்த்தனை—திருவேட்கை
58.	திருமகள் துதி	ஸ்ரீதேவி ஸ்துதி (பாரதி ஆச்ரமம்)
59.	திருமகளைச் சரண் புகுதல்	லக்ஷ்மி தேவி—சரண் புகுதல்
61.	கலைமகளை வேண்டுதல்	ஸரஸ்வதி ஸ்தோத்திரம்
62.	வெள்ளைத் தாமரை	ஸரஸ்வதி தேவியின் புகழ்
67.	ஜயம் உண்டு	ஜயம் உண்டு (பாரதி) ஜீவன் முக்தி (பாரதி ஆச்ரமம்)
70.	ஞாயிறு வணக்கம்	ஞாயிறு—ஸூர்ய ஸ்துதி
71.	ஞானபாநு	ஞானபாநு-ஸூர்ய ஸ்தோமம்
73.	வெண்ணிலாவே!	வெண்ணிலா
74.	தீ வளர்த்திடுவோம்	அக்னி பகவான்
75.	வேள்வித் தீ	தீ—அக்னி ஸ்தோமம்
81.	சிட்டுக் குருவியைப் போலே	விடுதலை—சிட்டுக் குருவி
82.	விடுதலை வேண்டும்	விடுதலை
96.	கடமை அறிவோம்	கடமை
97.	அன்பு செய்தல்	விடுதலைப் பாட்டு
98.	சென்றது மீளாது	மனத்திற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெய்வப் பாடல்களுக்கான தொகுப்பு விவரம் பின்கண்டவாறு தரப்பெற்றுள்ளது :

'தோத்திரப் பாடல்கள்', 'வேதாந்தப் பாடல்கள்' என முன்னர்த் தனித்தனியாக வெளியிடப்பட்டிருந்த இரு தொகுதிகளிலு முள்ள நான்கு பாடல்கள் நீங்கலாக எல்லாப் பாடல்களும் இந்த இரண்டாந் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. தோத்திரப் பாடல்களில் அடங்கிய கவிதைகள் 66; வேதாந்தப் பாடல் பகுதியிலுள்ள கவிதைகள் 30. எனவே, இரு தொகுதிகளிலுமுள்ள 96 கவிதைகளில் இத் தொகுதியில் இடம்பெற்றவை 92 கவிதைக ளாகும்.

'விநாயகர் நான்மணிமாலை' என்னும் நாற்பது பாடல்கள் அடங்கிய பிரபந்தம் முன்பு தனி நூலாக வெளியிடப் பெற்றது. இப் பிரபந்தம் இப்பொழுது தெய்வப் பாடல் களில் முதலாவதாக அமைக்கப்பெற்றுள்ளது. இதுவே, இத் தொகுதியின் முதற் கவிதை. தேசீய கீதங்களில் ஒன்றாக இணைக்கப் பெற்றிருந்த 'கிருஷ்ணன் மீது ஸ்துதி' (37) என்ற பாடல், இப்பொழுது தெய்வப் பாடல் களில், 45-வது கவிதையாக அமைந்துள்ளது' இவ் விரண்டும் சேரவே கவிதை எண் 94 ஆகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவை தவிர 'ஸ்வசரிதையும் பிற பாடல்களும்' என்ற பெயரில் வெளியான சிறு தொகுதியிலிருந்து ஏழு கவிதைகள் இவ் இரண்டாந் தொகுதியில் சேர்க்கப் பட்டுள்ளன. அவையாவன: i. காலனுக் குரைத்தல் (4), ii. வேய்ங்குழல் (7), iii. ராதைப் பாட்டு (8), iv. வள்ளிப் பாட்டு—1 (9, v. வள்ளிப் பாட்டு—2 (10), vi. சித்தாந்தச் சாமி கோயில் (11), vii. வேலை (31). இவை தெய்வப் பாடல்களில் முறையே 85, 51, 60, 7, 8, 92, 6 என்னும் எண்ணுடைய கவிதைகளாக அமைக்கப் பட்டுள்ளன.

மேலும் பாரதியாரின் கையெழுத்துப் பிரதியில் காணப்பெற்ற இரண்டு கவிதைகள் (அம்மாக்கண்ணு பாட்டு — 94, வண்டிக் காரன் பாட்டு—95) ஞானப் பாடல்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 'வண்டிக்காரன் பாட்டு' முன்பே பத்திரிகை களில் வெளியானதாகத் தெரிகிறது. அன்றியும், 1922-ல் வெளிவந்த 'சுதேச கீதங்கள்' இரண்டாம் பாகத்தில் 80-ம் பக்கத்தில் வெளியிடப்பெற்றிருக்கிறது. 'அம்மாக் கண்ணு பாட்டு' இதுவரை வெளிவந்ததில்லை. இவ்விரண்டும் சென்னை அரசாங்கப் பொருட்காட்சி சாலையிலுள்ள பாரதியாரின் கையெழுத்துப் பிரதியி லுள்ளபடி இங்குப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகவே, 'தெய்வப் பாடல்கள்' எனப் பெயர் அமைந்த இத் தொகுதியில் 103 கவிதைகள் அமைந்துள்ளமை புலனாம்.

* * *

பாரதி நூல்கள் — கவிதை வரிசையில் மூன்றாம் பாகம் "பல்வகைப் பாடல்கள்" எனப் பெயர் பெற்றது. இத் தொகுதியுள் மொத்தம் 43 கவிதைகள் இடம்பெற்றன. நீதி, சமூகம், தனிப் பாடல்கள், சான்றோர், சுயசரிதை, வசன கவிதை என்னும் ஆறு உட்பிரிவுகளில் கவிதைகள் தரப் பெற்றன. அவற்றின் விவரம் வருமாறு:

1. நீதி

1. புதிய ஆத்திசூடி
2. பாப்பாப் பாட்டு
3. முரசு

2. சமூகம்

4. புதுமைப் பெண்
5. பெண்கள் வாழ்க!
6. பெண்கள் விடுதலைக் கும்மி
7. பெண் விடுதலை
8. தொழில்
9. மறவன் பாட்டு
10. நாட்டுக் கல்வி
11. புதிய கோணங்கி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. தனிப்பாடல்கள்

12. காலைப் பொழுது
13. அந்திப் பொழுது
14. நிலாவும் வான்மீனும் காற்றும்
15. மழை
16. புயற்காற்று
17. பிழைத்த தென்னந்தோப்பு
18. அக்கினிக் குஞ்சு
19. சாதாரண வருஷத்துத் தூமகேது
20. அழகுத் தெய்வம்
21. ஒளியும் இருளும்
22. சொல்
23. கவிதைத் தலைவி
24. கவிதைக் காதலி
25. மது
26. சந்திரமதி

4. சான்றோர்

27. தாயுமானவர் வாழ்த்து
28. நிவேதிதா
29. அபேதாநந்தா
30. ஓவியர்மணி இரவிவர்மா
31. சுப்பராம தீட்சிதர்
32. மகாமகோபாத்தியாயர்
33. வெங்கடேசு ரெட்டப்ப பூபதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

34. ஹிந்து மதாபிமான சங்கத்தார்
35. வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு

5. சுய சரிதை

36. கனவு

முன்னுரை
பிள்ளைக் காதல்
ஆங்கிலப் பயிற்சி
மணம்
தந்தை வறுமை யெய்திடல்
பொருட் பெருமை
முடிவுரை

37. பாரதி அறுபத்தாறு

கடவுள் வாழ்த்து-பராசக்தி துதி
மரணத்தை வெல்லும் வழி
அஸுரர்களின் பெயர்
சினத்தின் கேடு
தேம்பாமை
பொறுமையின் பெருமை
கடவுள் எங்கே இருக்கிறார்?
குருக்கள் ஸ்துதி—குள்ளச்சாமி புகழ்
குரு தரிசனம்
உபதேசம்
கோவிந்த ஸ்வாமி புகழ்
யாழ்ப்பாணத்து ஸ்வாமியின் புகழ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குவளைக் கண்ணன் புகழ்
பெண் விடுதலை
தாய் மாண்பு
காதலின் புகழ்
விடுதலைக் காதல்
ஸர்வ மத ஸமரசம்

6. வசன கவிதை

38. காட்சி

முதற்கிளை : இன்பம்
இரண்டாங் கிளை: புகழ் - ஞாயிறு

39. சக்தி
40. காற்று
41. கடல்
42. ஜகத் சித்திரம்
43. விடுதலை

மேற்கண்ட 43 கவிதைத் தலைப்புகளில் 12 கவிதைகளின் தலைப்புகள் வெளியீட்டின் அமைப்புக் கருதி மாற்றம் கண்டன. அவற்றின் புதிய — முந்திய தலைப்பு விவரங்களைப் பார்ப்போம் :

எண்	புதிய தலைப்புகள்	முந்திய தலைப்புகள்
5.	பெண்கள் வாழ்க	பெண்மை
13.	அந்திப் பொழுது	அந்திப்பொழுது-காதற் பாட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	புதிய தலைப்புகள்	முந்திய தலைப்புகள்
23.	கவிதைத் தலைவி	மனைத் தலைவிக்கு வாழ்த்து
24.	கவிதைக் காதலி	கவிதாதேவி-அருள்வேண்டல்
26.	சந்திரமதி	சந்திரமதிப் பாட்டு
28.	நிவேதிதா	தமது ஞான குருவாகிய ஸ்ரீநிவேதிதா தேவியின் துதி
29.	அபேதாநந்தா	அபேதாநந்த ஸ்வாமிகளின் மீது ஸ்தோத்திரக் கவிகள்
30.	ஓவியர் மணி இரவிவர்மா	ஓவியர் மணி ஸ்ரீ ரவிவர்மா
31.	சுப்பராம தீட்சிதர்	ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் காலஞ் சென்றதைப் பற்றிய இரங்கற் பாக்கள்
32.	மகாமகோ பாத்தியாயர்	மஹாமஹோபாத்தியாய சாமிநாதய்யர் (பாரதி)
		மகாமகோபாத்தியாய வாழ்த்து (பாரதி பிரசுராலயம்)
33.	வெங்கடேசு ரெட்டப்ப பூபதி	ஸ்ரீமான் எட்டயபுரம் மஹாராஜா அவர்கள்மீது சீட்டுக்கவிகள் (பாரதி)
		சீட்டுக்கவிகளும் ஓலைத் தூக்கும் (பாரதி பிரசுராலயம்)
34.	ஹிந்துமதாபிமான சங்கத்தார்	காரைக்குடி ஹிந்து மதாபிமான சங்கத்தின் மீது வாழ்த்துப் பாட்டுக்கள் (பாரதி)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இனி, "பல்வகைப் பாடல்கள்" நூல் தொகுப்பு முறை பற்றிய செய்திக் குறிப்பு வருமாறு:

"இப் பகுதியில் 'புதிய ஆத்திசூடி', 'பாப்பாப் பாட்டு', 'முரசு', 'பாரதி அறுபத்தாறு" என்பனவும், 'ஸ்வசரிதையும் பிற பாடல்களும்' என்ற தொகுதியில் வெளிவந்த பாடல்களில் பெரும்பாலனவும் இடம் பெற்றுள்ளன. இவற்றோடு பழைய வெளியீடுகளாகிய 'தேசிய கீதங்கள்', 'தோத்திரப் பாடல்கள்', 'வேதாந்தப் பாடல்கள்' ஆகிய தொகுதிகளில் வெளிவந்த சிற்சில பாடல்களும் இப் பகுதியில் தரப்பட்டுள்ளன.

'புதிய ஆத்திசூடி', 'பாப்பாப் பாட்டு', 'முரசு' என்ற மூன்றும் ஒன்றாகச் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டுத் தனி நூலாக முன்னர் வெளிவந்தது. இவை இத் தொகுதியில் 'நீதி' என்ற முதற் பகுதியில் முறையே வைக்கப் பட்டுள்ளன. 'பாரதி அறுபத்தாறு' மேற் குறித்த மூன்று பாடல்களோடும் பிறவற்றோடும் சேர்த்து வெளியிடப்பட்டது. பின் சில சமயங்களில் இது தனி நூலாகவும் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்ததுண்டு. இது இத் தொகுதியிலுள்ள சுயசரிதைப் பகுதியில் 37-ம் கவிதையாகத் தரப்பட்டுள்ளது. இங்குக் குறித்த இரு தனித் தொகுதி நூல்களினின்றும் இத் தொகுதியில் சேர்க்கப் பெற்ற கவிதைகள் நான்கு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பழைய 'தேசீய கீதங்கள்' தொகுதியிலிருந்து இப் பகுதியில் சேர்க்கப்பட்ட பாடல்கள் ஆறு. (i) அபேதாநந்த சுவாமிகள் மீது ஸ்தோத்திரக் கவிகள் (32), (ii) பெண்கள் விடுதலைக் கும்மி (47), (iii) புதுமைப் பெண் (48), (iv) பெண்மை (49), (v) நாட்டுக் கல்வி (51), (vi) தொழில் (52). இவை இத் தொகுதியில் முறையே 29, 6, 4, 5, 10, 8 எண்ணுக்குரியனவாக அமைந்துள்ளன.

முந்திய தோத்திரப் பாடல்களிலிருந்து இப் பகுதியில் சேர்ந்தது 'சந்திரமதிப் பாட்டு' (30) என்னும் 26-ம் கவிதை. இதுபோன்றே முன்பு வேதாந்தப் பாடல்களில் அடங்கியிருந்த 'அழகுத் தெய்வம்' (5), 'ஒளியும் இருளும்' (14), 'சொல்' (12) என்ற மூன்று கவிதைகளும் இப்பொழுது பல்வகைப் பாடல்களில் 20, 21, 22-ம் கவிதைகளாகத் தரப்பட்டுள்ளன. எனவே முந்திய தேசீய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள்—தொகுதிகளிலிருந்து பல்வகைப் பாடல்களுக்கு வந்துள்ள கவிதைகள் 10 ஆகும். இதுவரையில் குறித்த 14 கவிதைகளைத் தவிர ஏனைய வெல்லாம் "ஸ்வசரிதையும் பிற பாடல்களும்" என்ற தொகுதியில் வெளி வந்தவை.

"ஸ்வசரிதையும் பிற பாடல்களும்" அடங்கிய தொகுதியில் சேர்க்கப்பெற்றிருந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிதைகள் 37. இவற்றுள் மூன்று கவிதைகள் இப்பொழுது வெளியிடப்பெற்ற அரசாங்க வெளியீட்டுத் தேசீய கீதங்களிலும், ஏழு பாடல்கள் புதிய வெளியீடாகிய தெய்வப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளன. தேசீய கீதங்களில் சேர்க்கப்பெற்றவை: சத்ரபதி சிவாஜி (25), குரு கோவிந்த ஸிம்ஹ விஜயம் (26), இருதலைக் கொள்ளியினிடையே (27). இவை புதிய தேசீய கீதங்கள் வெளியீட்டில் முறையே 32, 42, 24-ம் எண்ணுள்ள கவிதைகளாக அமைந்துள்ளன.

தெய்வப் பாடல்களில் இடம் பெற்ற ஏழு கவிதைகளாவன: (i) காலனுக்கு உரைத்தல் (4), (ii) வேய்ங்குழல் (7), (iii) ராதைப் பாட்டு (8), (iv) வள்ளிப் பாட்டு - 1 (9), (v) வள்ளிப் பாட்டு -2 (10), (vi) சித்தாந்தச் சாமி கோயில் (11), (vii) வேலை (31). இவைகள் தெய்வப் பாடல்களில் முறையே 85, 51, 60, 7, 8, 92, 6 என்னும் எண்களுக்குரியனவாகத் தரப்பட்டுள்ளன.

இங்ஙனமாகப் பிற தொகுதிகளுக்கு மாற்றப்பட்ட கவிதைகள் போக எஞ்சியவை 27. 'ஸ்வசரிதையும் பிற பாடல்களும்' தொகுதியின் முதலில் எண்ணின்றிக் கொடுக்கப்பட்டிருந்த 'தமது ஞான குருவாகிய நிவேதிதா தேவியின் துதி' என்ற பாடலும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பல்வகைப் பாடல்களில் 28-ம் கவிதையாகச் சேர்க்கப் பெற்றுள்ளது. ஆகவே, 'ஸ்வசரிதையும் பிற பாடல்களும்' தொகுதியிலிருந்து இதன்கண் இடம்பெற்ற பாடல்கள் 28 ஆகும்.

'வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு' என்ற பாடல் (35) புதிதாக முதன்முதல் இத் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இவை யாவும் சேர்ந்து பொதுப் பாடல்களின் எண்ணிக்கை 43-ஆக அமைந்துள்ளது".

* * *

நான்காம் பாகமாக "முப்பெரும் பாடல்கள்" என்ற பெயரில் கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு ஆகியன உள்ளடங்கிய தொகுதி வெளிவந்தது.

1954ஆம் ஆண்டில் முன்னர் வெளிவந்த தேசீய கீதங்கள், தெய்வப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், முப்பெரும் பாடல்கள் ஆகிய நான்கு பாகங்களையும் ஒருங்கிணைத்து ஒரே தொகுதியாக அரசு பதிப்பித்து வெளியிட்டது.

1954ஆம் ஆண்டுப் பதிப்பில் தந்துள்ள குறிப்புகள் நம் கவனத்திற்குரியன. அதனால் அவற்றை இங்கே பார்ப்போம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"...இந் நூல் அச்சாகி வருங்காலத்து நேர்ந்த பல ஐயங்கள் குறித்துப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களிடத்தும், கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை அவர்களிடத்தும் கேட்ட போது, அவர்கள் இருவரும் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து உதவினார்கள். கவிமணி திருத்தங்கள் பல குறித்து வைத்திருந்த தமது பாரதி நூல்களின் முதற் பதிப்புப் பிரதியையும் தந்தார்கள். இவற்றால் பல இடங்கள் மூல பாடத்தில் திருத்தம் பெற்றன"


பாரதி நூல்கள்

கவிதை

சி. சுப்பிரமணிய பாரதி

சென்னை அரசாங்க வெளியீடு

(முதற் பதிப்பு : 1954)

விலை ரூ. 7-8-0

என்ற குறிப்பால் அரசாங்கப் பதிப்புக்குப் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களும் பெரிதும் உதவி செய்துள்ளனர் என்பது புனலாகிறது. மற்றும் கவிதைகளின் பல இடங்கள் மூல பாடத்தில் திருத்தம் பெற்றன என்பதும் தெளிவாகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறிதொரு இடத்தில், அனுபந்தப் பகுதியில் "பதிப்பிற்கு உதவிய அச்சுப் பிரதிகள்'' என்ற பிரிவில்,

"பாரதி பிரசுராலய வெளியீடுகளிலேயே ஒரு பதிப்பிற்கும் பின்வந்த மறு பதிப்புக்கள் சிலவற்றிற்கும் பேதங்கள் காணப்படுகின்றன. பாரதியார் வாழ்ந்த காலத்தில் வெளிவந்த நூல் — பிரதிகளையும், அவர் காலத்திற்குப் பின் பாரதி பிரசுராலயத்தார் வெளியிட்ட பழம் பதிப்புக்களையும் ஒருங்கு திரட்டி இன்னும் பாரதி பாடல்களைப் பரிசோதனை செய்தல் அவசியம். அதோடு பாரதியார் எழுத்துக்களைத் தாங்கி வெளிவந்த ''சுதேச மித்திரன்'', "இந்தியா'' முதலிய பத்திரிகை களில் இப்பொழுது கிடைக்கும் பழம் பிரதி களை யெல்லாம் தேடி ஆராய்தலும் அவசியம். பாரதியார் கைப்பட எழுதிய காகிதப் பிரதிகள் சில அரசாங்கப் பொருட் காட்சிச் சாலையி லுள்ளன. வேறு கை யெழுத்துப் பிரதிகள் ஒருசிலரிடம் இருத்த லும் கூடும்''

என்று குறித்துள்ள வாசகங்கள் பொருள் பொதிந்தவை. 1954இல் பாரதியார் கவிதை களுக்குத் திருத்தமான பதிப்பு ஒன்றை வெளிக் கொணரும் முயற்சிகளில் ஈடுபட்ட அரசு அமைத்த ஆலோசனைக் குழுவினரின் மேற்கண்ட கருத்துரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பணியின் தன்மையையும், பெருமையையும் தெளிவாகப் புலப்படுத்துகின்றது அன்றோ? அரசுப் பதிப்பு பெரும்பாலும் பாரதி பிரசுராலயம் வெளியிட்ட நூற் பதிப்புகளை யொட்டியே பதிப்பிக்கப்பட்டது என்பது தெளிவு. பாரதி காலத்திய நூல் பிரதிகளையோ — பழைய இதழ் பிரதிகளையோ ஒருங்கு திரட்டிப் பரிசோதனை செய்து பதிப்பிக்கவும் படவில்லை; ஏதோ சில கவிதைக் கைப்பிரதிகளை மட்டும் பார்வை யிட்டுப் பதிப்பிக்கப்பட்டது மாகும்.

கவிதைகளை வெளியிட்டுச் சுமார் ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்னர் பாரதியின் கதை — கட்டுரை நூல்களை அரசு பதிப்பித்தது. அதாவது, 1959 முதல் 1963 வரையிலான காலப் பகுதியில் பாரதியின் வசனங்களை — முன்னரே வெளிவந்த வற்றைப் பாகுபாடு செய்து கதைகள், தத்துவம், சமூகம் — சமயம், அரசியல் என நான்கு பகுதிகளாக வெளியிட்டது.

1959இல் முதற்பகுதி வசனம் (கதைகள்) என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்தது.

அந் நூலில் காணப்படும் முகவுரைப் பகுதி பின்வரும் முறையில் எழுதப்பட்டிருந்தது :

"பாரதியாரின் கதைகள் அனைத்தையும் தொகுத்து வெளியிட விரும்பிய முயற்சியின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பலனே இந் நூல். இதில் பாரதியார் எழுதிய சிறுகதைகளும், சந்திரிகை, சின்னச் சங்கரன் கதை ஆகிய முற்றுப் பெறாத சிறு நவீனங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. திரு. ம. ப. பெரியசாமித் தூரன் அவர்கள் அரிதின் முயன்று தொகுத்த "பாரதி தமிழ்" எனும் நூலிலே கதைகளாகக் காணப்பட்டவைகளையும் இந் நூலிலே சேர்த்திருக்கிறோம். சின்னச் சங்கரன் கதையை 'ஞானபாநு' இதழ்களிலிருந்து முதலில் திரட்டிய பெருமை திரு. வி. ஜி. சீனிவாசன் அவர்களைச் சாரும். இவர்கள் இருவருக்கும் தமிழ் மக்களின் நன்றி உரியதாகும்.

பாரதியார் எழுதிய கதைகளில் இதுவரை கிடைத்தவற்றை யெல்லாம் இத் தொகுதி கொண்டுள்ளது. பாரதியாரின் கதைகளைக் கோவையாகப் படிக்க விரும்புபவர்களுக்கு இத் தொகுதி பெரிதும் உதவும் என நம்புகிறோம்."

* * *

முதல் தொகுதியில் காணப்பெறும் பாரதியார் கதைகளுக்கான விவர அட்டவணை வருமாறு :

வைசாக்தன் என்ற பண்டாரத்தின் கதை

சிறுகதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சில வேடிக்கைக் கதைகள்

ஆனைக்கால் உதை
கவிராயனும் கொல்லனும்
அமெரிக்காவுக்குப் போன சீன ராஜ குமாரன்
சாஸ்திரியார் மகன்
ஓர் வியாதிக்கு ஓர் புதிய காரணம்

பிற கதைகள்

அந்தரடிச்சான் ஸாஹிப் கதை
கிளிக் கதை
இருள்
குதிரைக் கொம்பு
அர்ஜுன சந்தேகம்
தேவ விகடம்
அபயம்
மழை
பிங்கள வருஷம்
காக்காய்ப் பார்லிமெண்ட்
பிழைத்தோம்
புதிய கோணங்கி (அதாவது குடுகுடுப்பைக்காரன்)
கடல்
கடற்கரை யாண்டி
செய்கை
சும்மா I
சும்மா II

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வண்ணான் தொழில்

கலியுக கடோற்கசன்

கத்திச் சண்டை

''வளர்பிறை'' குழந்தைக் கதை

குழந்தைக் கதை

உஜ்ஜயினீ

மிளகாய்ப்பழச் சாமியார்

பேய்க் கூட்டம் I

பேய்க் கூட்டம் II

சந்திரிகையின் கதை

நவதந்திரக் கதைகள்

பாரதி தமிழ் என்னும் நூலினின்று எடுக்கப்பட்ட கதைகள்

வேப்பமரம்

காந்தாமணி

கோபந்நா

பூச்சித் தேவன்

புதுப்பேய்

சின்னச் சங்கரன் கதை

* * *

1960இல் பாரதி நூல்களின் இரண்டாம் பகுதி "தத்துவம்" என்ற தலைப்புடன் வெளிவந்தது. அது போது, அதில் இடம்பெற்ற முன்னுரை பின்கண்ட முறையில் அமைந்திருந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"பாரதியாரின் எழுத்திலே தத்துவ கருத்துக்கள் அமைந்த கட்டுரைகளும் கதைகளும் பல உண்டு. பதஞ்சலி யோக ஸூத்ரங்கள், வேத ரிஷிகளின் கதை, ஈஸாவாஸ்யோப நிஷத் ஆகியவை வடமொழியிலிருந்து தமிழுக்கு அவர் தந்த தத்துவச் செல்வங்கள். ஞானரதம் எனும் அவரது மிகச் சிறந்த கற்பனைக் கருவூலம் அற்புதமான உண்மைகளைத் தாங்கி நிற்கிறது. தொடர் பாகத் தத்துவக் கருத்துக்களைக் காட்டும் அவர் எழுத்து ஓவியங்களை மட்டும் இத் தொகுதியில் சேர்த்திருக்கிறோம்."

* * *

இவ் விரண்டாம் தொகுதியில் காணப்படும் தத்துவச் செல்வங்களாவன :

1. பதஞ்சலி யோக ஸூத்ரங்கள்
2. பகவத் கீதை
3. ஞானரதம்
4. வேத ரிஷிகளின் கதை
5. ஈஸாவாஸ்யோபநிஷத்

*1961*இல் பிரசுரமான மூன்றாம் பகுதி சமூகம் — சமயம் என்று பெயர் பெற்றது. பாரதி பிரசுராலயக் கட்டுரைகளும், 'பாரதி தமிழ்' நூல் கட்டுரைகளும் இந் நூல் தொகுப்பில் இடம் பெற்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந் நூலுக்கான முன்னுரை வருமாறு :

"பாரதியாரின் வசனங்கள் மூன்றாம் தொகுதியில் சமூகம், சமயம் என்னும் இரு பகுதிகள் இடம்பெற்றிருக்கின்றன. இவை பெரும்பான்மையும் பொருள் பற்றியே தொகுக்கப்பட்டவை. முன்னர் வெளிவராத பல கட்டுரைகளும் இத்தொகுதியில் உள்ளன. பாரதியார் எழுதிய கட்டுரைகளில் இது வரையிலும் கிடைத்தவற்றுள் சமூகம், சமயம் ஆகிய பொருள்களை ஒட்டி எழுதப்பெற்றவை அனைத்தும் இதன்கண் காணலாம். இத் தொகுதி உருவாக திரு. பெரியசாமித் தூரன் அவர்கள் தொகுத்த 'பாரதி தமிழ்' எனும் நூல் பேருதவியாக இருந்தது."

* * *

மூன்றாம் பகுதி வசனத்தொகுதியான சமயப் பகுதியில் 64 கட்டுரைகளும், சமூகப் பகுதியில் 35 கட்டுரைகளும் பொருள்வழி தொகுத்துத் தரப் பட்டுள்ளன.

"சமூகப்" பகுதியில் உள்ள கட்டுரைகள் :

தேசீயக் கல்வி I
தேசீயக் கல்வி II
தமிழன் நிலை
நூலாசிரியர் பாடு
தமிழ்நாட்டின் விழிப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் சாஸ்த்ர பரிபாஷை
கல்வி கற்பிக்கும் பாஷை
ஜப்பான் தொழிற்கல்வி
ஜப்பானியக் கவிதை
ரிஷிகள் கடன்
என் ஈரோட்டு யாத்திரை
தொழிலாளர் கிளர்ச்சி
ட்ராம் வண்டியில் ராஜிய வாதம்
வெண்மை நிறத்தோரின் ஆட்சி விஸ்தாரம்
ஜாதி
காலக் கண்ணாடி
ஜப்பானில் ஜாதிபேதம்
உடம்பு
எதிர் ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை
விசாரணை
மிருகங்களை நாகரீகப்படுத்தும் வழி
மிருகங்களும் பக்ஷிகளும்
ஓநாயும் வீட்டு நாயும்
புதிய உயிர்
ஜெர்மனியில் ரவீந்திர நாதரின் நாடகம்
கார்ல் ஸ்பித்தலர்
நட்ஹாம்ஸன்
ஸ்ரீ ரவீந்திர திக்விஜயம்
பழைய உலகம்
கொள்கைக்கும் செய்கைக்கும் உள்ள தூரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்கள் சர்வ கலாசாலை

பல.........

(1) ஸ்ரீமான் காந்தி
(2) ஸ்ரீமதி மங்களம்மா
(3) தமிழ்
(4) ஹிந்து - மகம்மதிய ஒற்றுமை

நானா விஷயங்கள்

(1) குரு
(2) இதன் பெயரென்ன?

ஆறில் ஒரு பங்கு
புதுச்சேரியில் புயற்காற்று

"சமய"ப் பகுதியில் அடங்கி யுள்ள கட்டுரைகள் :

ஹிந்துக்களின் கூட்டம்
ஆசாரத் திருத்த மஹாசபை
நாற் குலம்
ஜாதிக் குழப்பம்
பிராமணன் யார்?
இந்துக்களின் சிறப்பு
ஹிந்து தர்மம்
லோகோபகாரம்
கடற்பாலத்தில் வருணாசிரம சபை
சக்தி தர்மம் !
காலம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சக்தி தர்மம் !!
காமதேனு
சிதம்பரம்
மகாலக்ஷ்மி

(1) நவராத்திரி I
(2) நவராத்திரி II

சிட்டுக் குருவி
சந்திரத் தீவு
யாரைத் தொழுவது?
பாரத தேசத்தில் ஒவ்வொருவனும் செய்வதற்குரிய தியானம்
மூட பக்தி
வாசக ஞானம்
அமிர்தம் தேடுதல்
உண்மை
தைரியம்
உயிரின் ஒலி
புனர் ஜன்மம் I
ஜனவகுப்பு
புனர் ஜன்மம் II
லோக குரு
புராணங்கள்
மகாமகம்
தியானங்களும் மந்திரங்களும்
அனந்த சக்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழருக்கு
நெல்லிக்காய் கதை
ராகவ சாஸ்திரியின் கதை
மலையாளம் I
மலையாளம் II
கொட்டைய சாமி
உலக வாழ்க்கையின் பயன்
உழைப்பு
யேசு கிருஸ்துவின் வார்த்தை
இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை
அடங்கி நட
மதிப்பு
மாலை
அலங்கார சாஸ்திரம்
குண்டூசி வியாபாரம்
தூற்றல்
வசன நடை
மாலை
கவி
ரத்ன மாலை
தர்க்கம்
ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார்
பிராயச் சித்தம்
பசு
ஸ்வாமி அபேதானந்தர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆலயங்கள்

கண்கள்

விதி

தொழில்

விக்டர் ஹ்யூகோ என்ற

பிரஞ்சு ஞானியின் வசனங்கள்

பஞ்சாங்கம்

* * *

1963ஆம் ஆண்டு வெளிப்பட்ட நான்காம் பகுதி "அரசியல்" என்ற தலைப்புப் பெயர் பெற்றது. பாரதி பிரசுராலயம் வெளியிட்ட வசன நூல்களும், பெ. தூரன் அவர்களின் "பாரதி தமிழ்" நூலும் இந்த நான்காம் பகுதி தொகுக்கப் பயன்பட்டன.

இப் பகுதிக்கான முன்னுரை கீழ்க்கண்ட வகையில் அமையப் பெற்றது :

> "பாரதியார் வசனத்தின் நான்காவது பகுதியை அரசியல் என்ற தலைப்பில் வெளியிடுகிறோம். மகாகவி பாரதியார் அவ்வப்போது பத்திரிகைக்கு எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இது. எனவே, அரசியல் அல்லாத ஏனைய கருத்துக்களையும் இங்கு ஓரளவு காணலாம். 'தராசு', 'சித்தக் கடல்' என்பவற்றையும் இறுதியில் இத் தொகுப்பில் சேர்த்திருக்கிறோம்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆக, முன்னுரையில் அரசின் பதிப்புக் குழுவினர் தெரிவித்திருக்கிறபடி அரசியல் கருத்து களைப் பிரதிபலிக்கும் கட்டுரைகளே அல்லாமல், கலை, பெண்கள் பற்றிய கருத்துகளைப் புலப் படுத்தும் கட்டுரைகளும் இந்த நான்காம் பகுதி யில் இடம் பெற்றமை கருதத்தக்கது.

நான்காம் பகுதியில் காணப்பெறும் கட்டுரை களுக்கான விவரம் வருமாறு :

செல்வம் 1
செல்வம் 2
தொழிலாளர்
குணமது கைவிடேல்
தொழிற் கக்ஷியின் உதவி
தெலுங்கு மஹாசபை
தமிழ்
சிறிதும் பெரிதும்
ஜப்பானுடைய ஆவி
ஸ்வராஜ்யம்
நேசக் கக்ஷியாரின் மூடபக்தி
பூகோள மஹாயுத்தம்
பொழுதுபோக்கு
ரங்கூன் ஸர்வகலா ஸங்க பஹிஷ்காரம்
சென்னை வாசிகளின் நிதானமும்,
விபின சந்திரபாலரின் சந்நிதானமும்
கிச்சடி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உல்லாச சபை
திருவல்லிக்கேணி சுதேசிய கிருஷியம்
வந்தே மாதரம்
ஐர்லாந்துக்கு ஸ்வதந்திரம் கொடுக்கமாட்டோம்
ஐர்லாந்தும் இந்தியாவும்
சுதேச மித்திரன் பத்திரிகையும் தமிழ்நாடும்
சுய ஆட்சியைப் பற்றி ஒரு யோசனை
ஒரு கோடி ரூபாய்
விடுதலை
குழு
நகரம்
தாதாபாய் நௌரோஜி
குடிப்பாங்கு
சோவியத் ருஷ்யாவில் பணம் தொலைந்தது
ராஜாங்கப் பணம் தொலைதல் கமிஷன்
ஆரம்பங்கள்
ஸென்ட் நிஹல்ஸிங் சொல்வது
எளிதாக ஸம்ஸ்க்ருதம் படிக்கும் வழி
ரஸத் திரட்டு
குறிப்புகள்
ஹாஸ்யம்
சில குறிப்புகள்
மணித்திரள்
தீப்பொறிகள்
புதுமைகள் (1)
புதுமைகள் (2)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலக நிலை

கால விளக்கு

விநோதத் திரட்டு

கிரேக்க தேசத்தின் ஸ்திதி

விநோதக் கொத்து

விநோத விஷயங்கள்

உலக விநோதங்கள்

பருந்துப் பார்வை

கலை

பெண்ணின் பாட்டு

ஸங்கீத விஷயம் (1)

ஸங்கீத விஷயம் (2)

அபிநயம்

உள்ளுருத்த கலை விளக்கம்

இந்தியப் பத்திரிகைத் தலையங்கம்

விண்ணப்பம்

தமிழ்நாட்டில் நாடகம்

பெண் (1)

பெண் (2)

தமிழ்நாட்டின் விழிப்பு

பதிவிரதை

பெண் விடுதலை (1)

பெண் விடுதலை (2)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் நாட்டு மாதருக்கு

தமிழ்நாட்டு நாகரீகம்

பெண்கள் ஸம்பாஷணைக் கூட்டம்

சியூசீன் என்ற சீனத்து ஸ்திரீயின் கதை

பெண் விடுதலை (3)

திருவிளக்கு

ரெயில்வே ஸ்தானம்

நவீன ருஷ்யாவில் விவாக விதிகள்

தென் ஆப்பிரிக்காவில் பெண்கள் விடுதலை

இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமை

ஸ்வர்ண குமாரி

தராசு

சித்தக் கடல்

* * *

இங்ஙனம், அரசும் வசனப் பகுதிகளை நான்கு தொகுதிகளாக வெளியிட்ட பின்னர் பாரதி நூல் களைத் தொடர்ந்து பிரசுரிக்கவில்லை; அச்சில் வெளிவந்தும் நூல் வடிவம் பெறாதனவற்றைத் தேடிப் பதிப்பிக்கும் முயற்சிகளையும் மேற் கொள்ளவில்லை.

1953ஆம் ஆண்டில் தொடங்கிய பாரதி நூல் வெளியீட்டுப் பணிகளை 1963ஆண்டோடு தமிழக அரசு முடித்துக் கொண்டு விட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

10

தற்கால பதிப்பாசிரியர்களின் சீரிய பணிகள்

பாரதி நூல் பதிப்புகளைப் பற்றி எண்ணும் போது, அடிப்படைச் செய்திகள் சிலவற்றை நாம் நினைவில் கொள்ள வேண்டுவது மிகவும் அவசியம்.

பல்வேறு காலப் பகுதிகளில் மேற்கொள்ளப் பட்டு, பெருகி வளர்ந்த பாரதி நூல் பதிப்புப் பணிகள் வரலாற்றில் பதிப்பாசிரியர்களுக்கும் சிறப்பான இடம் உண்டு.

பதிப்புப் பணிகளில் ஈடுபட்டுச் செயற்கரிய சாதனைகளைப் புரிந்தோர் வரிசையில் பத்திரிகை ஆசிரியர்களும், பதிப்பாசிரியர்களும் ஒருசேர வைத்து எண்ணத்தக்கவர்களாவர்.

1906ஆம் ஆண்டிலிருந்தே பாரதி தம்முடைய நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தப் பெரிதும் ஆவல் கொண்டிருந்தார். நூலின் அச்சு, அமைப்பு ஆகியன பற்றியும் அவர் திட்டவட்டமான முடிவையும் கொண்டிருந்தார். இறுதிநாளில், தம்முடைய நூல்கள் வெளியிடும் பணியை அவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசியத் திருப்பணியென்றே கருதினார். ஆனால், அவர் எதிர்பார்த்த அளவு அவருடைய நூல் முயற்சிகளுக்குக் காலம் கை கொடுக்கவில்லை. அவர் உயிர் வாழ்ந்த காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவிலான நூல்களே வெளி வந்தன.

1907இல் திரு. வி. கிருஷ்ணசாமி அய்யர் மூன்று பாடல்களைக் கொண்ட சிறு நூலை இலவசப் பிரசுரமாக வெளியிட்டார்; இதன்பின் பாரதியே சென்னையிலும், புதுச்சேரியிலும் சில நூல்களை வெளியிட்டார். பரலி சு. நெல்லையப்பர் அவர்களின் பெருமுயற்சியால் பாரதியின் இலக்கியச் செல்வங்கள் அச்சு வாகனம் ஏறின. பாரதியின்பால் அன்பு மிகக் கொண்டிருந்த தென்னாப்பிரிக்க அபிமானிகள் ஒரு நூலை வெளியிட்டு உதவினர். சுதேச மித்திரன் புத்தக சாலைப் பிரிவும் சில நூல்களை வெளியிட்டுப் பாரதிக்குப் பெருமை தேடியது.

ஆனால், பாரதி இறந்தபின்னர்தான் நூல்கள் பெருமளவில் வெளிவர ஆரம்பித்தன.

பாரதி காலமான 1921ஆம் ஆண்டின் இறுதியில் செல்லம்மாள் பாரதியின் முயற்சிகளை யடுத்து இரு நூல்கள் மட்டுமே விற்பனைக்கு வந்தன. நூல்களின் விற்பனையும், வேறு சில காரணங்களும் சேர்ந்து நூல் வெளியீடுகளைப் பாதித்தன. இதன் பின்னர் 1924இல் தோன்றிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி பிரசுராலயம் திட்டமிட்டுச் செயற்பட்டது. தொடர்ச்சியாகப் பல நூல்கள் வெளிவந்தன. 1949இல் பாரதி நூல்களின் பதிப்புரிமை அரசுடைமையான பின்னர், தமிழக அரசின் சார்பில் கவிதைகளும் வசனங்களும் தொகுதி தொகுதிகளாக வெளியிடப்பட்டன.

இத்தகைய நிலையில், பாரதி யுகத்தைப் படைக்கும் சீரிய இலக்கியப் பணிகளில் பத்திரிகை ஆசிரியர்களும், பதிப்பாசிரியர்களும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

பாரதி எழுதிப் பல காலம் தெரியப்படாமல் இருந்த எழுத்தோவியங்களைத் தேடிக் கண்டு பிடித்து வெளியிட ஒருசிலர் முன் நின்றனர். பாரதி தேடலில் கிடைத்த புதிய புதிய கவிதைகளையும், கட்டுரைகளையும், கதைகளையும் 'கலைமகள்' பத்திரிகையில் திரு.கி.வா. ஜகந்நாதன் அவர்களும், 'குமரி மலர்' பத்திரிகையில் திரு.ஏ.கே. செட்டியார் அவர்களும், 'தாமரை' யில் சிதம்பர ரகுநாதன் அவர்களும் வெளியிட்டுப் பாரதியின் இலக்கியப் பரப்பை விரிவாக்கினர்.

பாரதி ஆய்வாளர்கள் மேற்கொண்ட தொடர்ந்த முயற்சிகளின் விளைவாக, அச்சில் வெளிவந்தும் நூலாக்கம் பெறாத கவியரசரின் எழுத்துகள் நூல் உருவம் பெற்றன.

மறைந்த அறிஞர்களான திரு.பெ.தூரன், திரு.வி.ஜி.சீனிவாசன் ஆகியோர் பாரதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வாளர்களில் முதன் நிலையில் வைத்து மதிக்கப் படவேண்டியவர்கள். அடுத்த வரிசையில் திருவாளர்கள் ரா. அ. பத்மநாபன், இளசை மணியன், சி.எஸ். சுப்பிரமணியம், இந் நூலாசிரியர் திரு. சீனி. விசுவநாதன், டி.வி.எஸ். மணி ஆகியோர் முன்னணியில் திகழ்கின்றனர்.

திரு. தூரன் அவர்கள் பழைய 'சுதேச மித்திரன்' இதழ்ப் பிரதிகளினின்றும், ஓரளவு 'இந்தியா' இதழ்ப் பிரதிகளினின்றும் முந்திய நூல் தொகுதிகளில் சேராமல் விடுபட்டுப் போய் இருந்த பாரதியாரின் கவிதை; கதை, கட்டுரைகளைச் சேகரித்து, கால வரிசைப்படி தொகுத்து, 'பாரதி தமிழ்" என மகுடமிட்டு 1953இல் பதிப்பித்தார். அரசுப் பதிப்புகளில் இந் நூலில் இடம்பெற்ற அத்தனை கட்டுரை, கதைகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முற்றுப்பெறாத நிலையில் காணப்பட்ட 'சின்னச் சங்கரன் கதை'யை 'ஞானபாநு' இதழில் பாரதி தம் சொந்தப் பெயரால் எழுதாமல், 'சாவித்ரி' என்ற புனைபெயர் கொண்ட 'நேய நிருப' ராக எழுதியதை முதன்முதலாகக் கண்டு பிடித்துப் பதிப்பித்தவர் திரு. வி.ஜி. சீனிவாசன் ஆவார். இவரே 1941இல் பாரதி பிரசுராலயம் வெளியிட்ட "வேத ரிஷிகளின் கவிதை — தொடர்ச்சி" நூல் பதிப்பிக்கப்பட உதவினார்.

திரு ரா. அ. பத்மநாபன் அவர்கள் தம்மிட மிருந்த 'இந்தியா' இதழ்ப் பிரதிகளின் கட்டுரை கள், குமரி மலர், கலைமகள் ஆகிய இதழ்களில் பிரசுரமான கதை, கவிதை, கட்டுரை கள் ஆகியனவற்றைத் தொகுத்ததுடன், மிக நீண்ட நெடுங் காலமாகக் கிடைக்கப் பெறாமலும், மறுபதிப்புகள் வெளிவராமலும் இருந்த நூல் பிரதிகளைத் தேடிப்பெற்று

1958, 1959, 1975ஆம் ஆண்டுகளில் "பாரதி புதையல்" என்ற தலைப்பெயருடன் மூன்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொகுதிகளாகப் பதிப்பித்தார். நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட வேளையில் அம் மூன்று தொகுதிகளும் "பாரதி புதையல் — பெருந்திரட்டு" என்ற பெயரில் வெளிவந்தது.

திரு. இளசை மணியன் என்பவர் 1906—1907 ஆகிய ஆண்டுகளின் 'இந்தியா' இதழ்ப் பிரதிகளில் காணப்பட்ட கட்டுரைகளில் பாரதி எழுத்துகளெனத் தமக்குப் பட்டன வற்றைத் தெரிவு செய்து "பாரதி தரிசனம்" என்ற தலைப்பில் தொகுக்க அவற்றை இரு தொகுதிகளாக திரு.சி.எஸ். சுப்பிரமணியம் பதிப்பித்தார். இத் தொகுதிகள் 1975, 1977 ஆம் ஆண்டுகளில் வெளி வந்தன.



முதல் தொகுதி சற்று விரிவாக்கப்பட்ட நிலையில் மறு பதிப்பாக 1986இல் வெளிவந்துள்ளது.

திரு.சி.எஸ். சுப்பிரமணியம் அவர்கள் புதுச்சேரி 'இந்தியா' இதழில் "ரஷியாவிலுள்ள 'மேத்தா' கட்சியாருக்கு 'டால்ஸ்டாய்' என்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞானி எழுதுவது" என்ற தலைப்பில் வெளிவந்த ஐந்து இதழ்க் கட்டுரைகளைத் தொகுத்து 1978 ஆம் ஆண்டிலே "மிதவாதிகளுக்கு டால்ஸ்டாயின் கடிதம் — பாரதியின் ஒப்புநோக்கு" என்று பெயரிட்டுப் பதிப்பித்தார்.

பெண்ணின் பெருமையையும், சீரையும், தமிழ் உணர்வையும் அபிவிருத்தி செய்வதையே நோக்கமாகக் கொண்ட "சக்ர வர்த்தினி" இதழில் 1905 — 1906 ஆகிய காலப் பகுதியில் பாரதி எழுதிய எழுத்துகளைச் சீனி. விசுவநாதன் குழித்தலை தமிழ் கா.சு. பிள்ளை நூலகப் பெரியவர் இளமுருகு பொற்செல்வி அவர்களிடமிருந்து கேட்டுப் பெற்று அன்பர் திரு. டி.வி. எஸ். மணி அவர்களுடன்



சேர்ந்து 1979இல் "சக்ரவர்த்தினி கட்டுரைகள்" என்ற பெயரில் நூலாகப் பதிப்பித்தார்.

இதே 1979ஆம் ஆண்டிலே பாரதியின் இளைய சகோதரர் திரு. சி. விசுவநாத ஐயர் அவர்கள் 'இந்தியா' இதழில் தொடர்ந்து பாரதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுதிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய கட்டுரைகளை "மும்மணிகள்" என்ற பெயரில் நூலாக்கம் பெறத் துணை நின்றார். இந்த நூலும் திரு. சீனி. விசுவநாதன், திரு. டி.வி.எஸ். மணீ ஆகிய இருவரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு வெளிவந்தது.

1980-1981 ஆகிய இவ்விரண்டு ஆண்டுக் காலப் பகுதியில் பாரதியின் புதிய நூல் எதுவும் பிரசுரமாகவில்லை.

இதன் பின்னர் இந் நூலாசிரியர் சில முயற்சிகளை எடுத்துக் கொண்டு, மிகுந்த பிரயாசைப் பட்டு, பாரதியின் 'சக்ரவர்த்தினி', 'இந்தியா', 'கர்மயோகி', 'கதா ரத்னாகரம்' ஆகிய இதழ்ப் பிரதிகளையும், 'ஜீவ வாக்கு' என்ற நூலையும் தேடிப் பெற்றார். அவ்வாறு அரிதின் முயன்று தேடிப்பெற்ற பாரதியின் கருத்துக்



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருவூலங்களை நூலாக்கம் செய்கிற பணியிலும் ஈடுபட்டார்.

1982, 1984, 1985ஆம் ஆண்டுகளின் காலப் பகுதியில் "கட்டுரைக் கொத்து", "மணிவாசகம்", "பாரதியின் 'இந்தியா' கட்டுரைகள்" என்னும் பெயர்கள் சூட்டி, நூல்களாகப் பதிப்பித்தார்.

என்றாலும், பாரதி தொடர்பு கொண்ட - நடத்திய இதழ்கள் இன்றளவும் முழுமையாகக் கிடைக்கப் பெறாத நிலையே நீடிக்கின்றது. எவ்வெப்போதோ அத்தி பூத்தாற்போன்று சில இதழ்கள் கிடைக்கவே செய்கின்றன.

எனவே, எந்த வகையில் எப்படிப் பார்த்தாலும், பாரதி எழுதியன யாவும் நூல் வடிவம் பெற்றுவிட்டன என்று கூறுவதற்கில்லை.

காலப்போக்கில், பாரதியின் கருத்துச் செல்வங்கள் கிடைக்கப்பெற்று, அவையும் நூலாக்கம் பெறுமானால், பாரதி ஆய்வுகள் மென்மேலும் ஆழமாகவும், விரிவாகவும் நடைபெற வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

* * *

பாரதி இயல் என்னும் ஆய்வுப் பரப்பை விரிவாக்கிய ஒருசிலருள் இலங்கைப் பேராசிரியர் டாக்டர் கைலாசபதி அவர்கள் குறிப்பிடத்தக்கவர் ஆவார். அப் பேராசிரியர் 1974ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே "பாரதி நூல்களுக்குத் 'திருத்தப்' பதிப்பு தேவை" என்ற கருத்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வலியுறுத்திக் கட்டுரைகள் பல எழுதினார் 'சுத்தமான' ஆராய்ச்சிப் பதிப்பு மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்திய அவ் வறிஞர் "பாரதி கவிதைகள் யாவும் அவை இயற்றப்பெற்ற கால அடைவில் வெளியிடப்படவேண்டும்" என்று தம்முடைய எதிர்பார்ப்பையும் தெளிவுபடுத்தி வந்தார்.

பாரதியின் கவிதை நூல்கள் பல்வேறு பதிப்பு களாக வெளிவந்த நிலையில், அவை பாரதியின் மூல பாடத்தினின்று வெவ்வேறு வகையில் வேறுபட்டு, பதிப்பிக்கப்பட்டதை ஊன்றிக் கவனித்த டாக்டர் கைலாசபதி அவர்கள் "பாரதி யின் பாடல்களையும் (ஏனைய எழுத்துக்களையும்) பவித்திரமாகச் சேகரிப்பதோடு, பாட பேதங் களையும் பழுதற ஆராய்ந்து உண்மைப் பாடங் காண்பது இன்றைய தலைமுறையினரின் தலையாய கடமை யாகும்" என்ற தம் எண்ண எழுச்சியையும் வெளியிட்டிருந்தார்.

1981 டிசம்பர் மாதம் 11, 12 ஆகிய நாட்களில் எட்டயபுரத்தில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டுத் தொடக்க விழாவில், அன்றைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் மகாகவியின் நூல்கள் முறையாக, பிழையின்றிப் பதிப்பிக்கப்பட வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தார். அதற்கிணங்கத் தமிழகப் பல்கலைக்கழகத் துணை வேந்தர்களின் குழு, பாரதி நூல்கள் பதிப்புப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பணியைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்தது.

பாரதி நூல்களின் பதிப்புப் பணிகளை ஏற்றுக் கொண்ட தமிழ்ப் பல்கலைக் கழகம் பணிக் கென்றே பதிப்புக் குழு ஒன்றையும் நியமித்தது. அக் குழுவில்,

திரு. சு. செல்லப்பன்
மாண்புமிகு ப. சிதம்பரம்
திரு. சீனி. விசுவநாதன் (இந் நூலாசிரியர்)
திரு. டி. என். இராமச்சந்திரன்
திரு. டி. வி. எஸ். மணி

ஆகியோர் இடம் பெற்றனர்.

இந் நூலாசிரியர் பாரதி நூற் பதிப்புப் பணி களில் பல காலமாக ஈடுபட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, பாரதி கவிதைகளைக் கால நிரல்படுத்தி, தக்க ஆய்வுக் குறிப்புகள் எழுதி, ஆதாரபூர்வமான வரலாற்றுச் செய்திகளை இணைத்துப் பிரதியைத் தயாரித்தளிக்கும் பொறுப்பைப் பதிப்புக் குழுவினர் இந் நூலாசிரியரிடம் ஒப்படைத்தனர்.

இந் நூலாசிரியரும் தாம் பல காலங்களில் அரிதின் முயன்று சேகரம் செய்து வைத்திருந்த பாரதி வரலாற்றுக் குறிப்புகளை இணைத்து, பாரதி காலத்திய நூற் பிரதிகளுடனும், பழைய இதழ்ப் பிரதிகளுடனும் ஒப்பிட்டுப் பார்த்து, இயன்ற வரை பாடல்களைக் கால வரிசைப் படுத்திக் கைப்பிரதியை உருவாக்கி யளித்தார். குறிப்பிட்டுச் சொல்வதானால், சரியான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடத்தை உணரவும், எந்த ஆண்டில், எந்த இதழில், எந்த நூலில் பாடல் பிரசுரமானது என்பதைக் கண்டுகொள்ளவும், பாடபேத — பிரதிபேத மாறுபாடுகள் எப்பொழுது, யாரால் செய்யப்பட்டன என்பதைக் கண்டு தெளியவும், பாரதி தம் பாடல்களுக்கும் நூல்களுக்கும் சூட்டிய பெயர் விவரங்களைத் திடமாக உறுதி கொள்ளவுமான முறையில் பயனுள்ள பின்னிணைப்புகள் பலவற்றுடன் கைப்பிரதி உருவாக்கப்பட்டது.

உருவாக்கப்பட்ட பிரதியில் பதிப்புக் குழுவினர் வழங்கிய கருத்துரைகளும் இடம் பெற்றன. இப்படி அரும் பாடுபட்டு அமைத்துக் கொடுத்த ஆய்வுப் பதிப்புக்குப் பதிப்பாசிரியராக அமைந்தவர் திரு. ம.ரா.போ. குருசாமி அவர்களாவார். அவரும் சில திருத்தங்கள் செய்து, சிற்சில செய்திகளையும் பின் இணைப்புப் பகுதிகளையும் சேர்த்துப் பதிப்பிற்கான முறை



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யில் பாடல்களை யாப்பிற்கேற்பச் சீர்ச் செம்மை செய்து பதிப்பித்துள்ளார்.

''பாரதி பாடல்கள் [ஆய்வுப் பதிப்பு]'' என்ற முத்திரையுடன் நூல் 1987ஆம் ஆண்டில் வெளி வந்தது.

இதுவரை வெளிவந்துள்ள பதிப்புக்களிலிருந்து இப்பதிப்பு முற்றிலும் வேறுபட்ட தன்மையில் அமைந்துள்ளது.

இப் புதிய பதிப்பு 1987 ஏப்ரல் 14ஆம் நாளன்று தஞ்சையில் அந்நாள் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. இராமச் சந்திரன் அவர்களால் வெளியிடப்பட்டது.

முதலமைச்சர் வாழ்த்துரையுடன் கூடிய இப் பதிப்பிற்கு, அந்நாள் தமிழகக் கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு சி. பொன்னையன் அவர்களும், அந்நாள் தமிழ் வளர்ச்சித் தனி நபர் உயர்மட்டக் குழுத் தலைவர் சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களும் அணிந்துரைகள் வழங்கி யுள்ளனர்.

பாரதி கவிதைகள் தோன்றிய கால அடிப்படை யில் இந்நாள் வரையும் எந்தவொரு பதிப்பும் இல்லாத குறையை ஓரளவேனும் இப் பதிப்பு நீக்குகின்றது. மற்றும், ஆராய்ச்சிப் பதிப்பு என்று சொல்லத்தக்க முறையில் விரிவான வரலாற்றுச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்திகளைப் பல்கலைக் கழகப் பதிப்பு கொண்டிருத்தலால், எதிர்காலத்தில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ள இப் புதிய பதிப்பு துணை செய்கிறது.

பாரதி நூல் பதிப்பாசிரியர்கள் தொடர்ந்து ஆற்றி வருகின்ற அரும் பணிகளினால், பாரதியின் புகழும் பெயரும் நாளும் பெருகி வருகின்றன என்பது பெருமைப்படத்தக்க சேதியாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11

முடிவுரை

1906ஆம் ஆண்டிலே பாரதி மேற்கொண்ட நூல் பதிப்புப் பணி இதுகால வரையும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பதை இதுவரை கண்டோம்.

சமுதாயத்தின் பலராக உள்ள பாமர மக்களுக்காக எழுதிய பாரதியின் படைப்புச் செல்வங்கள் பொதுவுடைமையானதன்பின், வேறு பல நூல்களை வெளியிட்டு வந்த பதிப்பாளர்களும் பாரதியின் நூல்களை வெளியிடுவதில் பெரிதும் ஆர்வம் காட்டினர்.

தனிப்பட்ட வெளியீட்டாளர்கள் 1955ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே பாரதியின் நூல்களை வெளியிட ஆரம்பித்துவிட்டனர்.

பாரதியின் நூல்கள் பல்வேறு பதிப்புகளாக வெளிவந்து கொண்டே யிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியே யெனினும், அப் பதிப்புகள் பதிப்புக்குப் பதிப்பு வேறுபாடு கொண்டனவாக இருப்பது வேதனைக் குரியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரும்பாலான பதிப்பாளர்கள், தாங்கள் வெளியிடும் கவிதை நூல்களுக்கு அரசுப் பதிப்புகளையும், வசன நூல்களுக்குப் பாரதி பிரசுராலயப் பதிப்புகளையும் முன்மாதிரியாகக் கொண்டுள்ளனர். குறிப்பிட்ட ஒருசில பதிப்பாளர்கள் இம் முறைக்கு விதிவிலக்கானவர்களாகவும் உள்ளனர்.

சமீப காலங்களில், பாரதி நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பாளர்களிடையே போட்டியும் எழுந்துள்ளது; தத்தம் பதிப்புகளுக்குத் தனிச் சிறப்புகளைத் தேடுவதில் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றனர்.

மொழி நடை, இலக்கண அமைதி என்கிற பெயரால் பாரதியின் மூலத்தை மாற்றிய பதிப்புகள் உண்டு; பொருள் எளிதில் விளங்கும்படி செய்தல்வேண்டும் என்னும் காரணத்தால் சொற்களைப் பிரித்து அச்சிட்டுள்ள பதிப்புகளும் உண்டு; இவ்வளவுக்கும் மேலாக, பாடல்களை அடி பிரித்து அச்சிடும் முறையிலும் பதிப்புக்குப் பதிப்பு வேறுபாடு காணப்படும் நிலையை இன்று காண்கிறோம்.

இப்படி பல்வேறு வகைகளில் பதிப்பிக்கப் படும் நிலை தவிர்க்கப்படவேண்டும். தக்க பதிப்பாசிரியர்களின் ஒத்துழைப்புடன் திட்டமிட்டு மூலபாடத் திறனாய்வு முறையில் அமைந்த பதிப்பு பாரதி நூல்களுக்கு மிகவும் தேவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதை உணர்ந்து பதிப்பாளர்கள் செயற்படவேண்டும்.

பாரதி கவிதைகளுக்கு நல்லதொரு பதிப்பு வெளிக் கொணர முயற்சிகளை மேற்கொண்ட தமிழ்ப் பல்கலைக் கழகமும், தான் பதிப்பித்து வெளியிட்ட பதிப்பில் யாப்பு நெறியைக் கடைப் பிடித்துள்ளது.

எனவே, பாரதி பாடல் நூலைப் பொறுத்த மட்டில் அவர் காலத்தில் பதிப்பித்த முறையில் பதிப்பிக்கப்படல் வேண்டும்.

ஓரளவிற்கேனும், பாடல்கள் கால ஒழுங்கில் பதிப்பிக்கப்பட்டு இருப்பதுபோல, பாரதியின் கட்டுரைகளையும் கால நிரலில் பதிப்பிக்கப் பெறும் முயற்சிகளை மேற்கொள்ளல்வேண்டும்.

இப்படி பாரதி நூல் பதிப்புப் பணிகளில் மேற்கொள்ளவேண்டியன நிரம்ப உண்டு.

இறுதியாக, பாரதி நூல் பதிப்பாளர்களும், பதிப்பாசிரியர்களும் மேற்கொண்டு ஆற்ற வேண்டிய அரிய பணிகள் குறித்து இலங்கைப் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தெரிவித்துள்ள கருத்துகள் வருமாறு:

> ... பாரதி படைப்புக்களை அவை எழுந்த கால ஒழுங்கில் வைத்துக் காட்டும் பதிப்பு ஒன்று அத்தியாவசியம், கவிஞனது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆத்ம விகசிப்பைப் புரிந்துகொள்ள அத்தகைய பதிப்பு பெரிதும் பயன்படும். அமெரிக்க ஜனநாயகக் கவி வால்ட் விட்மனின் ஆக்கங்களின் பதிப்பு ஒன்றிற்கு முன்னுரையும் பதிப்புரையுமாக எழுதிய அபேகப்பெக் (Abecapek) என்னும் விமர்சகர் குறிப்பிட்டது போல, "கால அடைவிலே ஒரு கவிஞனின் கவிதைகளையும், கட்டுரைகளையும் தொகுத்து அளிக்கும்போதே அவனது கருத்தும் கலையும் பரிணமித்த நுட்பம் நன்கு புலனாகும்.

ஆயினும், கால ஒழுங்கில் அமைந்த பதிப்பு மாத்திரம் போதாது. உண்மையில் பாரதியின் கவிதைகளிலும், கட்டுரைகளிலும் காணப்படும் பாடபேதங்கள் அனைத்தையும் கொடுக்கும் பாடபேத வளப்பதிப்பு ஒன்றே ஆராய்ச்சிக்கு இன்றியமையாதது. ஆங்கிலத்தில் Variorum Readings எனக் குறிப்பிடுவர். உதாரணமாகக் கவிஞரே சில திருத்தங்களைச் செய்திருக்கிறார். அவை ஆராயப்படுவதற்குப் பாடபேத வளப் பதிப்பு இருத்தல் அவசியம்.

கவிதைகளைப் போலவே கவிஞனின் உரைநடை ஆக்கங்களும் முழுமையாகப் பதிக்கப் பெறல் வேண்டும்...

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிதைகள், வசனங்கள் என்பன முறை யாகப் பதிப்பிக்கப் பெறுகையில், முந்திய பதிப்புக்கள் மட்டுமின்றி, கையெழுத்துப் பிரதிகள், கவிதைகள் வெளிவந்த பத்திரிகை கள், பாடல் சேகரிப்போர் பிரதிகள், மேற்கோள்களாய் எடுத்தாண்டோர் பாடங் கள், வாய்மொழி வழக்குகள் முதலிய பல்வேறு பாடாந்தரங்களையும் பலவாறு நுணுகி ஆராயப்பட வேண்டியுள்ளது. இலக்கண, யாப்பு அமைதிகள் முதலியனவும் கவனிக்கப்பட வேண்டியுள்ளன. இவற்றை யெல்லாம் எல்லா வேளைகளிலும் தனி நபர்கள் சாதித்துவிட இயலாமற் போகலாம். பல ஆய்வாளரது கூட்டு முயற்சியில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் பல உண்டு. பாரதி நூற் பதிப்பில் முறையான கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறமுடியாது.

பாரதி போன்ற ஒரு யுகக் கவிஞனின் எழுத்துக்கள் பல நிலைகளில் பயன் படுத்தப்படுவன. எனவே, பல வகையான பதிப்புக்கள் வேண்டப்படும். ஆராய்ச்சி யாளருக்குக் கால அடைவுப் பதிப்பு, பாடபேத வளப் பதிப்பு வேண்டும்; பொருளடிப்படையில் பதிப்புக்கள் வேண்டும். இலக்கியச் சுவைஞருக்குத் தேர்ந்தெடுத்த பதிப்பு (Selected Works) வேண்டும். பொதுவாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மக்களுக்கு ஏற்றவாறு பொருள் எளிதில் விளங்கும்படியான பதிப்பும் வேண்டும். சங்க இலக்கியம் இப்பொழுது வெளியிடப் பட்டிருக்கும் முறை கவனித்தற் குரியது. ஆயினும், இவை யாவற்றுக்கும் மூலாதார மாக 'சுத்தப் பதிப்பு' ஒன்று முதலிலே மிகமிக அத்தியாவசியமாகும்... பாரதி நூல்கள் நல்ல முறையில் விஞ்ஞான பூர்வமாக பதிக்கப் பெறுவது இன்றைய முதல் தேவையாகும்.

இக் கருத்துரை வழி ஆக்கபூர்வமான முயற்சி களை மேற்கொள்ள வேண்டுவது பாரதி ஆய்வாளர்களின் கடமை யாகும்.

பாரதி நூல் பதிப்புப் பணிகள் சீராகவும், செம்மையாகவும் நடைபெறக் கூட்டு முயற்சி களை அவசியம் மேற்கொண்டு, பாரதி விரும்பி எதிர்பார்த்தவண்ணமாக அவருடைய நூல்களை அழகாக, திருத்தமாக, நேர்த்தியாக, தெளிவாகப் பதிப்பிக்கப்படல் வேண்டும். இது காலத்தின் தேவையாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சில முக்கிய நினைவுக் குறிப்புகள்

- தற்கால வழக்கில் "பாரதியார் கவிதைகள்" என்று வழங்கப்படும் தொகுதிக்குப் பாரதி பிரசுராலயத்தார் "பாரதி நூல்கள் காவியங்கள்" என்றே தலைப்பிட்டு வெளியிட்டனர்.
- 1953-1954ஆம் ஆண்டுகளில் பதிப்புப் பணிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட தமிழக அரசினர் பதிப்பித்தபோது, "பாரதி நூல்கள் - கவிதை" என்னும் பெயர் வழக்கிற்கு வந்தது.
- பாரதியார் பாடல்களைத் தனிப்பட்ட வெளியீட்டு நிறுவனங்கள் பதிப்பிக்க முற்பட்ட நிலையில் "பாரதியார் கவிதைகள்" என்பது நடைமுறைக்கு அறிமுகமாகியது. இதுவே தற்போது நிலைத்துவிட்டது.
- 1917ஆம் ஆண்டிலே பரலி சு. நெல்லையப்பர் பதிப்பித்த கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, முரசு ஆகிய நூல்கள் 'பாரதி ஆச்ரம'த் தொகுதிகளிலும் இடம் பெற்றன. 1923-1930க்கும் இடைப்பட்ட காலப் பகுதிகளில் பாரதி பிரசுராலயம் தனித் தனி நூல்களாகவும், ஒரே தொகுதியாகவும் அவற்றை வெளியிட்டதும் உண்டு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

- பாரதியாரே பதிப்பித்து வெளியிட்ட கவிதை நூல்களான "ஸ்வதேச கீதங்கள்"- முதற் பாகம், "ஜன்ம பூமி" (ஸ்வதேச கீதங்கள் - இரண்டாம் பாகம்) ஆகியனவும், தென்னாப்பிரிக்க டர்பன் சரஸ்வதி விலாஸ அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்ற "மாதா மணிவாசகம்" என்னும் நூலும், பரலி சு. நெல்லையப்பர் பதிப்பித்த "நாட்டுப் பாட்டு" என்னும் நூலும் பாரதி பிரசுராலயம் இத் தலைப்புப் பெயர்களால் பிரசுரம் செய்யவில்லை.

- ஆனால், மேற்குறித்த கவிதை நூல்களிலே இடம் பெற்றிருந்த பாடல்களை வகைப்படுத்தியும், வரிசைப்படுத்தியும் "தேசீய கீதங்கள்", "தோத்திரப் பாடல்கள்", "வேதாந்தப் பாடல்கள்" ஆகியன போன்ற பல்வேறு தலைப்புப் பெயர்களால் வெளியீடு செய்தது.

- பாரதி பதிப்பித்து வெளியிட்ட வசனம் மற்றும் மொழிபெயர்ப்பு, ஆங்கில நூல்களான "புதிய கட்சியின் கொள்கைகள்", "The fox withthe golden Tail" (பொன்வால் நரி), "எங்கள் காங்கிரஸ் யாத்திரை"— ஆகியன வற்றையும், சுதேசமித்திரன் புத்தக சாலைப் பிரிவு வெளியிட்ட "மகாகவி ஸர் ரவீந்திரநாத தாகூர் அருளிய பஞ்ச வியாஸங்கள்", "பாரத ஜன சபை" (முதலிரு பாகங்கள்) "கதா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாலிகா", "ஜீவ வாக்கு" ஆகிய நூல்களையும், புதுச்சேரி இந்தியப் பதிப்புச் சாலை பதிப்பித்த ரவீந்திரநாத் தாகூர் எழுதிய சிறு கதைத் தொகுதி (முதல் பாகம்) யில் பாரதி மொழிபெயர்த்து அளித்த ஆசாபங்கம், நஷ்ட பூஷணம் அல்லது காணாமற் போன நகைகள், மானபங்கம், நள்ளிரவிலே — ஆகிய சிறுகதைகளையும் பாரதி பிரசுராலயம் மறு பதிப்புச் செய்யவில்லை.

- கமல நிலையம் என்னும் நிறுவனம் சிறு சிறு வெளியீடுகளாக 1937இல் ஆசாபங்கம் என்ற சிறுகதையையும், நஷ்டபூஷணம் என்ற சிறு கதையையும் வெளியிட்டதுடன், 1939இல் பத்திராதிபர் என்ற சிறுகதை நூலையும் பிரசுரம் செய்தது.

- பாரதி ஆச்ரமம் 1922இல் வெளியிட்ட 'சுதேச கீதங்' களின் முதலிரு பாகங்களையும் முறையே 1924-1925, 1927ஆம் ஆண்டுகளில் பாரதி பிரசுராலயம் மறு அச்சுகளாகப் பதிப்பித்தது.

- கவியரசர் பாரதி தலைப்பிடாத—ஆனால், கையெழுத்துப் பிரதிகளாகவும், பத்திரிகை ஏடுகளாகவும் காணப்பட்ட பாரதி எழுத்து களைத் தொகுத்த நூல்களுக்குப் பாரதி பிரசுராலயத்தாரே பெயர் சூட்டினர். எடுத்துக்காட்டாக, "பாரதி அறுபத்தாறு",

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"வேத ரிஷிகளின் கவிதை", "விநாயகர் நான்மணிமாலை", "தத்துவம்", "மாதர்" "கலைகள்", "சமூகம்", "கதைக் கொத்து", "ஸ்வசரிதையும் பிற பாடல்களும்", "Agni and other Poems and Translations, Essays and other Prose Fragments" ஆகியனவற்றைக் குறிப்பிடலாம்.

பாரதி பிரசுராலயத்தார் வெளியிடாத — அதாவது, அவர்கள் காலத்தில் கிடைக்காத— பாரதியின் கருத்துச் செல்வங்களைப் பிறர் தேடி 1953ஆம் ஆண்டு முதலே பதிப்பிக்க முற்பட்டு விட்டனர். அவ் வகையில் பதிப்பிக்கப்பட்ட நூல்களுக்கும் பதிப்பு ஆசிரியர்களோ தொகுப்பாசிரியர்களோ அல்லது பதிப்பாளர்களோதாம் பெயர் சூட்டினர்.

- மகாகவி பாரதியாரின் கவிதை (காவ்ய) நூல்களினின்று தொகுக்கப்பட்டவை "சுதேச கீத ஸங்கிரஹம்", "சுதேச கீதத் திரட்டு", "பாரதி கீதத் திரட்டு", "பாரதி மணிமலர்" என்னும் பெயர்களால் வெளியிடப்பட்டன.
- "ஞானரதம்", "சந்திரிகையின் கதை", "நவதந்திரக் கதைகள்", "பதஞ்சலி யோக ஸூத்ரம்", "வேத ரிஷிகளின் கவிதை", "தராசு"—இவற்றை உள்ளடக்கியதான ஒரு தொகுதியைப் பாரதி பிரசுராலயம் 1929இல் **"பாரதி நூல்கள் — வசனங்கள்"** என்று தலைப்பிட்டுப் பிரசுரம் செய்திருந்தது. இத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொகுதியையே சற்று விரிவாக்கப்பட்ட தொகுதியாகக் "கீதை முன்னுரை", "கதைக் கொத்து", "stray Thoughts" — ஆகிய இப் பகுதிகளையும் இணைத்து 1941இல் வெளி யிட்டது.

- புதுமையும், புரட்சி மனப்பான்மையு முடைய "கனவு", "ஆறிலொரு பங்கு" ஆகிய இரண்டு நூல்களும் புதுச்சேரியில் அச்சிடப்பட்டு வெளியீடு செய்யப்பட்டபோதிலும், பிரிட்டிஷ் அரசால் 1911ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் தேதியன்று தடை விதிக்கப்பட்டது.

- பாரதி ஆச்ரம வெளியீடுகளான "சுதேச கீதங்க"ளின் முதலிரு தொகுதிகள் 1923ஆம் ஆண்டில் ஜில்லா போர்டு, தனது ஆளுகையில் உள்ள பள்ளிக்கூடங்களில் பாட நூல்களாக வைக்க முயற்சித்தபோது, அரசின் கல்வித் துறை இச் செயலைச் சட்டவிரோதம் என்று கூறித் தடுத்துவிட்டது.

அரசின் கல்வித்துறை மேற்கொண்ட செயலைச் சத்தியமூர்த்தி 1923 நவம்பரில் சட்டப் பேரவையில் கண்டித்துப் பேசினார். 1928இல் மேற்குறித்த நூல்களில் அரசு நிந்த னைக் கருத்துகள் இருப்பதாகச் சொல்லி, நூல்களின் பிரதிகள் பறிமுதல் செய்த காலத்தில், சத்தியமூர்த்தி சட்டப்பேரவையில் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம்கொணர்ந்து, தீர்மானத்தை வெற்றி பெறச்செய்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

- 1929இல் பிரசுரமான ''தேசீய கீதங்கள்'' நூல் தொகுதியுள் 55 பாடல்கள் இடம் பெற்றிருந்தன. இதன்பின் மறு அச்சுகளாக வெளிப்பட்ட தொகுதிகளில் "கோக்கலே சாமியார்'' பாடலும், கனவு என்ற நூலில் காணப்படும் 36 ஆம் எண் கொண்ட பாடலின் ஒரு பகுதியான ''ஆங்கிலப் பயிற்சி''ப் பாடலும் சேர்க்கப் பெற, பாடல்களின் எண்ணிக்கை 57 ஆக உயர்ந்தது.

- 1930இல் முதற் பதிப்பாக வெளிப்பட்ட "தோத்திரப் பாடல்கள்'' நூல் தொகுதியுள் 60 பாடல்களே காணப்பட்டன. பிற் பட்ட பதிப்புகளில் 1. கண்ணம்மா (2); 2. கண்ணம்மா (3); 3. திருக்காதல்; 4. வேள்விப்பாட்டு; 5. கோமதி மஹிமை; 6. மஹாசக்திக்கு விண்ணப்பம் ஆகிய ஆறு பாடல்கள் சேர்க்கப்பட்டன. எனவே, அறுபத்தாறு பாடல்களே மறு பதிப்புகளில் அச்சிடப் பெற்றன.

- "வேதாந்தப் பாடல்கள்'' நூலின் முதற் பதிப்பு 1930இல் பதிப்பிக்கப் பெற்று வெளி வந்தபொழுது, அந் நூலில் 38 பாடல்கள் இடம்பெற்றிருந்தன. பொருத்தம் கருதி எட்டு பாடல்கள் இரண்டாம் பதிப்பு அச்சேறுங்கால் நீக்கப்பட்டன. அவ்வாறு நீக்கப்பட்ட பாடல் களாவன: 1. 'கண்ணன் பாட்'டிலுள்ள கண்ணன்—என் சற்குருவும், 2. தோத்திரப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாடலிலுள்ள கண்ணன் துதியும், 'பாரதி அறுபத்தாறு' என்னும் பகுதியில் அடங்கிய 3. கடவுள் எங்கே இருக்கிறார்?, 4. குருக்கள் ஸ்துதி (குள்ளச்சாமி புகழ்), 5. குரு தர்சனம், 6. உபதேசம் 7. ஸர்வமத ஸமரஸம் என்னும் பகுதிகளும், 8. புதிய ஆத்திசூடியின் காப்புச் செய்யுளான பரம்பொருள் வாழ்த்தும்.

எட்டுப் பாடல்கள் நீக்கப்பட்டதால், பிற்பட்ட பதிப்புகளில் முப்பது பாடல்களே அச்சிடப் பெற்றன.

- 1937ஆம் ஆண்டில் பிரசுரமான Agni and other Poems and Translations & Essays and other Prose Fragments என்னும் ஆங்கில நூல் 1980இல் மறு பதிப்பானபோது கவிதைப் பகுதியில் ''Courage Terrible", "Toil, Toil, Toil" ஆகிய இரு கவிதைகளும், கட்டுரைப் பகுதியில், The 'Ahana' of Shri Aurabindo Ghose, Mr. Tilak and the British Government, Home and War, Rights and Duties—II, National languages as Media of Instruction, The Political Evolution in the Madras Presidency, A Letter to Mr. Ramsay Macdonald- ஆகிய ஏழு கட்டுரை களும் புதியனவாகச் சேர்க்கப்பட்டு உள்ளன.

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்புகள்

எண் : 1

பாரதி காலத்தில் வெளியான நூல்கள்

வ. எண்	நூலின் பெயர்	பதிப்பாண்டு
1.	ஸ்வதேச கீதங்கள் (முதல் பாகம்)	1908
2.	புதிய கட்சியின் கொள்கைகள்	1908
3.	எங்கள் காங்கிரஸ் யாத்திரை	1908
4.	ஜன்ம பூமி (ஸ்வதேச கீதங்கள்-இரண்டாம் பாகம்)	1909
5.	ஞானரதம்	1910
6.	கனவு	1910
7.	ஆறிலொரு பங்கு	1910
8.	பாஞ்சாலி சபதம் (முதல் பாகம்)	1912
9.	புதிய ஆத்திசூடி	1913
10	மாதா மணிவாசகம்	1914
11.	The Fox with the Golden Tail	1914
12.	கண்ணன் பாட்டு	1917
13.	நாட்டுப் பாட்டு	1917

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

14.	பாப்பா பாட்டு	1917
15.	முரசு	1917
16.	மகாகவி ஸர் ரவீந்திரநாத் தாகூர் அருளிய பஞ்ச வியாஸங்கள்	1918
17.	ஜீவ வாக்கு	1918
18.	பாரத ஜனசபை (முதல் பாகம்)	1919
19.	பாரத ஜனசபை (இரண்டாம் பாகம்)	1920
20.	கதா மாலிகா	1920

குறிப்பு : "The Fox with the Golden Tail" என்னும் ஆங்கில நூலின் இரண்டாம் பதிப்பைப் பாரதியே பதிப்பித்தார்.

கண்ணன் பாட்டு, நாட்டுப் பாட்டு, பாப்பா பாட்டு, முரசு — ஆகிய நான்கு நூல்களும் பரலி சு.நெல்லையப்பர் அவர்களால் 1919இல் மீண்டும் அச்சிடப் பெற்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண் : 2

பாரதி காலமானபின்னர் வெளிப்பட்ட பாரதி ஆச்ரம — பாரதி பிரசுராலய நூல்களுக்கான விவரம்

வ. எண்	நூலின் பெயர்	பதிப்பாண்டு
1.	சுதேச கீதங்கள் (முதற் பாகம்)	1922
2.	சுதேச கீதங்கள் (இரண்டாம் பாகம்)	1922
3.	குயில் பாட்டு-கண்ணன் பாட்டு-பாரதி அறுபத்தாறு	1923
4.	பாஞ்சாலி சபதம்	1924
5.	பகவத் கீதை முன்னுரை	1924—1925
6.	பகவத் கீதை மூலமும்-உரையும்	1924—1925
7.	சுதேச கீத சங்கிரஹம்	1925
8.	சந்திரிகையின் கதை	1925—1926
9.	தராசு	1928
10.	நவதந்திரக் கதைகள்	1928
11.	வேத ரிஷிகளின் கவிதை	1928
12.	பதஞ்சலி யோக ஸூத்ரம்	1928
13.	விநாயகர் நான்மணிமாலை	1929
14.	தேசீய கீதங்கள்	1929

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

15. தோத்திரப் பாடல்கள் 1930
16. வேதாந்தப் பாடல்கள் 1930
17. காட்சி 1930
18. சித்தக் கடல் 1930
19. கதைக் கொத்து 1931
20. சுதேச கீதத் திரட்டு 1931
21. கட்டுரைகள் - 1. தத்துவம் 1935
22. கட்டுரைகள் - 2. மாதர் 1935
23. கட்டுரைகள் - 3. கலைகள் 1935
24. கட்டுரைகள் - 4. சமூகம் 1935
25. ஸ்வசரிதையும் பிற பாடல்களும் 1937
26. Agni and other Poems and Translations 1937
27. Essays and other Prose Fragments 1937
28. பாரதி கீதத் திரட்டு 1938
29. வேத ரிஷிகளின் கவிதை - தொடர்ச்சி 1941
30. பாரதி மணிமலர் 1948

★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்: 3

பாரதி
அருளிய
அருட்கொடைகள்

(தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்குப் பாரதி அருளிய அருட் கொடைகளான அவர்தம் படைப்புச் செல்வங் களைப் பின்கண்ட முறையில் பாகுபாடு செய்யலாம்)

கவிதைகள்

1. ஸ்வதேச கீதங்கள்
2. ஜன்ம பூமி
3. கனவு
4. பாஞ்சாலி சபதம்
5. கண்ணன் பாட்டு
6. * நாட்டுப் பாட்டு
7. * சுதேச கீதங்கள் - முதலிரு தொகுதிகள்
8. குயில் (பாட்டு)
9. பாரதி அறுபத்தாறு
10. * சுதேச கீத சங்கிரஹம்
11. விநாயகர் நான்மணிமாலை
12. * தேசீய கீதங்கள்

---

* நட்சத்திரக் குறியிட்டவை வகைப்படுத்தப்பட்ட தொகுதிகள் ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

* 13. தோத்திரப் பாடல்கள்

* 14. வேதாந்தப் பாடல்கள்

* 15. சுதேச கீதத் திரட்டு

16. ஸ்வசரிதையும் பிற பாடல்களும்

* 17. பாரதி கீதத் திரட்டு

* 18. பாரதி மணிமலர்

உரைநடை : கட்டுரைகள்

1. பகவத் கீதை முன்னுரை
2. தராசு
3. காட்சி
4. சித்தக் கடல்
5. தத்துவம்
6. மாதர்
7. கலைகள்
8. சமூகம்

நெடுங் கதைகள் - புனைகதைகள்

1. ஞானரதம்
2. ஆறிலொரு பங்கு
3. சந்திரிகையின் கதை
4. நவதந்திரக் கதைகள்
5. சின்னச் சங்கரன் கதை

---

* நட்சத்திரக் குறியிட்டவை வகைப்படுத்தப்பட்ட தொகுதிகள் ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறுகதைகள்

1. கதா மாலிகா
2. கதைக் கொத்து

நீதி இலக்கியம்

1. புதிய ஆத்திசூடி
2. பாப்பா பாட்டு
3. முரசு

பிரயாண இலக்கியம்

எங்கள் காங்கிரஸ் யாத்திரை

மொழிபெயர்ப்புகள்

ஆங்கிலத்திலிருந்து :

1. புதிய கட்சியின் கொள்கைகள்
2. மகாகவி ஸர் ரவீந்திரநாத தாகூர் அருளிய பஞ்ச வியாஸங்கள்
3. ஜீவ வாக்கு
4. பாரத ஜனசபை - முதலிரு பாகங்கள்
5. தாகூர் சிறுகதைகள்

ஸமஸ்கிருதத்திலிருந்து :

1. பகவத் கீதை
2. வேத ரிஷிகளின் கவிதை
3. பதஞ்சலி யோக ஸூத்ரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆங்கில நூல்கள்

1. The Fox with the Golden Tail
2. Agni and other Poems and Translations
3. Essays and other Prose Fragments

பிற்காலத்தில் பதிப்பிக்கப்பட்ட
பாரதியின் இலக்கியச் செல்வங்கள்

வ எண்	நூலின் பெயர்	பதிப்பாண்டு
1.	பாரதி தமிழ்	1953
2.	சின்னச் சங்கரன் கதை	1956
3.	பாரதி புதையல் - முதல் தொகுதி	1958
4.	பாரதி புதையல்—இரண்டாம் தொகுதி	1959
5.	பாரதி புதையல்—மூன்றாம் தொகுதி	1975
6.	பாரதி தரிசனம்—முதல் பாகம்	1975
7.	பாரதி தரிசனம்—இரண்டாம் பாகம்	1977
8.	மிதவாதிகளுக்கு டால்ஸ்டாயின் கடிதம் பாரதியின் ஒப்புநோக்கு	1978
9.	சக்ரவர்த்தினி கட்டுரைகள்	1979
10.	மும் மணிகள்	1979
11.	கட்டுரைக் கொத்து	1982
12.	மணிவாசகம்	1984
13.	பாரதியின் 'இந்தியா' கட்டுரைகள்	1985

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூலாசிரியரைப் பற்றிய பாராட்டுரைகளில் ஒருசில

அன்புள்ள திரு. சீனி. விசுவநாதன் அவர்களுக்கு,

ஆசிகள் பல.

"என் பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்திட வேண்டும்" என்ற கவியின் கனவை நனவாக்குவது தமிழ் மக்கள் அன்னாருக்குச் செலுத்தும் நன்றியாகும். தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் ஏன், உலகத்தாருக்குமே செய்யும் அரிய சேவையுமாகும். இந்த மாபெரும் பணிக்குத் தங்கள் வெளியீடுகள் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

தாங்கள் செய்துவரும் பணி மிகப் பெரியது; புனிதமானது. தங்கள் பாரதிப் பணி மேன்மேலும் வெற்றி பெற வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சி. விசுவநாத ஐயர்
பாரதியின் இளைய சகோதரர்
பாரதி பிரசுராலய நிறுவனர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதோ ஒரு மனிதன்!

பாரதியையே படித்து, பாரதி நூல்களையே தொகுத்து, அச்சிட்டு, வெளியிட்டு, இரவு பகலாக அதே வேலையில் இருக்கிறான்.

இந்தப் பத்தாண்டு காலமாக இந்த மனிதனுக்கு அதே வேலைதான். பாரதி நடத்திய பத்திரிகைகளின் பிரதிகளையே கண்டுபிடித்து விட்டான். (அன்பின் மிகுதியால் ஏகாரத்தில் அழைக்கிறேன்).

பாரதி தொகுப்பில் வராத அத்தனை கட்டுரைகளையும் தேடி எடுத்துவிட்டான்....

இதுவரை வெளிவந்துள்ள பாரதியாரின் கவிதைத் தொகுப்புக்கள் அத்தனையும் சரியானவைதானா?

இந்த மனிதனைக் கேளுங்கள்.

மொத்தத்தில் இவன் ஒரு பாரதி லைப்ரரி!

இந்த மனிதனின் பெயர் சீனி. விசுவநாதன்.

பாரதிக்கு மகத்தான சேவை செய்து கொண்டிருக்கும் விசுவநாதன் 'எழுதுகோல் தெய்வம், என் எழுத்தும் தெய்வம்' என்று வாழ்பவர்.

பாரதிக்கு இவர் ஒரு ரெடி ரெக்கனர்.

கவியரசு கண்ணதாசன்
"குமுதம்" வார இதழில்—
இந்த வாரம் சந்தித்தேன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரு. சீனி. விசுவநாதன் மகாகவி பாரதியாரிடம் தெய்வீக பக்தி கொண்டவர். அவர் மகாகவி பாரதியாரின் கவிதைகளில்— கருத்துக்களில் ஊறித் திளைத்தவர். அதனால் மிகுந்த பக்தி சிரத்தையுடன் நூல்களைத் தொகுத்து அளிக்கிறார்.

மகாகவி பாரதியார் நூல்களை நல்ல முறையில் அழகாக வெளியிடுவது என்பது நாட்டுக்குச் செய்யும் நல்ல தொண்டாகும். திரு. சீனி. விசுவநாதன் நல்ல தொண்டர்; பாரதியின் தொண்டர். தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ?

சின்ன அண்ணாமலை

பாரதி நூல்களையும் அவர் பற்றிய குறிப்புகளையும் தேடிக் கண்டுபிடித்துத் தொகுத்து வருபவர்களில் திரு. சீனி. விசுவநாதன் தலையானவர் எனில், அது மிகையாகாது. கால் நூற்றாண்டுக்கு மேலாக அவர் தம்மை இப் பணியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். பாரதி பற்றிய ஒரு சிறு குறிப்பு கிடைக்கிறதென்றால், எவ்வளவு தொலைவு என்றாலும் நேரிடும் பொருட் செலவையும், உடல் அலுப்பையும் பொருட்படுத்தாது சென்று அறிந்து வருபவர். அமைதியாக ஆயினும் அரிய பணியினைச் செய்து வரும் திரு. சீனி. விசுவநாதன் அனைவருடைய பாராட்டுக்கும் உரியவராவார்.

டாக்டர் சு. செல்லப்பன்,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருபதாம் நூற்றாண்டின் ஒப்பற்ற மகாகவி பாரதியாருடைய இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் திரு.சீனி. விசுவநாதன்.

பாரதியார் பற்றிய நூல்களை வெளியிடுவதையே இவர் தம் வாழ்நாள் பணியாகக் கொண்டுள்ளார். மகாகவி எழுதிப் பலகாலம் நூலாக்கம் பெறாத எழுத்துக்களைக் கண்டறிந்து, அவற்றை நல்ல முறையில் இவர் பதிப்பித்து வருவது அரிய தொண்டாகும்.

நா. கிருஷ்ணபாரதி ஐ.ஏ.எஸ்.

இயக்குநர், செய்தி—மக்கள் தொடர்புத்துறை

7973

ஓர் அன்பான வேண்டுகோள்

விமர்சனங்களுக்கல்லாது
வேறு வகையில் இந் நூலின்
பகுதிகளையோ செய்திகளையோ
எடுத்தாள விரும்புவோர்
நூலாசிரியரின் முன் அனுமதி
பெறுதல் வேண்டும்.

Forwarded free of cost,
and with the compliments
of the Department of
Education, Government
of India, NEW DELHI.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY
Accession 72183
Class
Cat.
Tag etc.
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நூல்

நவீன தமிழ் இலக்கிய உலகில் பாரதி பல்வகைத் துறைகளிலும் வழிகாட்டியாகவே விளங்கியுள்ளார் என்பது எவரும் ஏற்கும் உண்மை. அந்த வகையில் நூல் பதிப்புத் துறையிலும் புதுமை காண முற்பட்டவர் அப் புரட்சிக் கவிஞர்.

இந் நூலில், பதிப்புத் துறையில் பாரதியார் கொண்டிருந்த ஈடுபாடு, அக்காலப் பகுதிகளில் அவரடைந்த அனுபவங்கள், அவருடைய எதிர்பார்ப்புகள் ஆகியனவற்றைக் காணலாம்.

சுமார் முக்கால் நூற்றாண்டுக்கும் மேலாக வளர்ச்சி பெற்றுவரும் பாரதி நூல்கள் பதிப்புப் பணிகள் பற்றிய அரிய செய்திகளைக் கொண்டது இந்த நூல்.

MK Color Process, Madras-14. Phone : 848311

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar